**பெருநகர சென்னை மாநகராட்சி மன்றம்**
**திருவள்ளுவராண்டு 2056, புரட்டாசி மாதம் 13 – ஆம் நாள்,**
**2025-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29-ஆம் நாள்**
**திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு ரிப்பன் கட்டிடத்தில்**
**உள்ள மன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரண மன்ற கூட்ட நிகழ்ச்சிகள்**

**மாண்புமிகு மேயர்**

முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து.

**(அவையில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது)**

திருக்குறள். 39 – “இறைமாட்சி” என்கிற அதிகாரம். குறள் எண்.387.

“ இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு. ”

வாக்கில் இனிமையும், பிறர்க்கு வழங்கி காத்திடும் தன்மையும் கொண்டவர்க்கு இவ்வையகமே வசப்படும்.

2025-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 29-ஆம் நாள் திங்கட்கிழமை இம்மன்றத்தின் சாதாரண கூட்ட நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன.

**(தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை மாண்புமிகு மேயர் அவர்கள் படிக்க மன்ற உறுப்பினர்கள் அனைவரும் திரும்ப சொல்லுதல்)**

**தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்திய குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாக கொண்டு எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார

உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படை கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற, சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழு பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

**இரங்கல் தீர்மானம்**

கரூரில் 27.09.2025 அன்று நடைபெற்ற அரசியல் பரப்புரை கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட 41 நபர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்கள். விலைமதிக்க முடியாத அந்த உயிரிழப்புகள் நம் அனைவரின் நெஞ்சத்தையும் உலுக்கியுள்ளது. மேலும், இந்த உயிரிழப்பு செய்தி அறிந்து இம்மாமன்றம் ஆழ்ந்த துயரமும் அதிர்ச்சியும் அடைகிறது. ஈடு செய்ய முடியாத பேரிழப்பை எதிர்கொண்டுள்ள அவர்களது குடும்பங்களுக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபங்களையும் இம்மாமன்றம் தெரிவித்து கொள்வதுடன், இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்து முகமாக மன்ற உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் அமைதி கடைபிடிக்கும்படி கேட்டு கொள்கிறேன்.

**(மன்றத்தில் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிடம் அமைதி கடைபிடித்தல்)**

**அனைவருக்கும் வணக்கம்.**

எல்லோருக்கும் எல்லாம் என்கிற அடிப்படையில் செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில், கடந்த நான்கு ஆண்டுகளில் அரசு பணிகளில் 1 லட்சத்து 8 ஆயிரத்து 111 பேர் போட்டி தேர்வுகள் மூலம் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள். அதே போல், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை மூலம் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி 2 இலட்சத்து 65 ஆயிரத்து 223 நபர்களுக்கு தனியார்

துறையில் வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. விளையாட்டு துறையின் மூலம் வேலைவாய்ப்பு, நான் முதல்வன் திட்டம் மூலம் வேலைவாய்ப்பு, மாணவர்களுக்கு வழங்கப்பட்ட திறன் பயிற்சியின் மூலம் 6 லட்சத்து 41 ஆயிரத்து 661 நபர்களுக்கு கடந்த நான்கு ஆண்டுகளில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதே போல், பல்வேறு தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடுகள் செய்துள்ளன. அதன் மூலம் 2 இலட்சத்து 30 ஆயிரத்து 856 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும், தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் தன்னிறைவு பெற வேண்டும், தமிழ்நாடு வளர்ச்சி பாதையில் செல்ல வேண்டும் என்பதை ஒரே குறிக்கோளாக கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டதன் வாயிலாக அங்குள்ள 26 தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்ததன் மூலம் ரூபாய் 7 ஆயிரத்து 20 கோடி முதலீடு செய்யப்பட உள்ளது. இதன் மூலம் 15 ஆயிரத்து 320 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க பெற உள்ளது என்பதை தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் நாளேடுகளும், இந்திய அளவில் வெளிவரும் நாளேடுகளும், ஊடகங்களும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் செயல்பாடுகளை போற்றி பாராட்டி வருகிறது என்பது தந்தை பெரியார் வழியிலும், பேரறிஞர் அண்ணா வழியிலும், தலைவர் கலைஞர் அவர்களின் வழியிலும் செயல்பட்டு வரும் திராவிட மாடல் அரசிற்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

இந்திய திருநாட்டின் சுதந்திர போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலு நாச்சியாரின் புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையிலும், பெண்ணாக பிறந்து, தனது கணவரை கொன்றவர்களை பழி தீர்த்து ஆங்கிலேய ஆட்சிக்கு சிம்ம சொப்பனமாக விளங்கி, சிவகங்கை சீமையை ஆட்சி செய்த வீரமங்கை இராணி வேலு நாச்சியாருக்கு, வருங்கால சமுதாயம் அவரது வீரத்தை அறிந்து

கொள்ளும் வகையில் சென்னை- கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் ரூபாய் 50 இலட்சம் செலவில் அவரது தியாக வாழ்வை நினைவு கூறும் வகையில் திருவுருவச்சிலை அமைத்தும், அதே போல், வேலூரில் உள்ள காவல் பயிற்சி பள்ளிக்கு வீரமங்கை வேலு நாச்சியார் பெயர் சூட்டியும், பெண்ணுரிமை போராளிக்கு மகுடம் சூட்டிய " திராவிட முதல்வர் தளபதி" அவர்களுக்கு எனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்து கொள்கிறேன்.

தமிழ்நாட்டின், எங்கோ ஒரு குக்கிராமத்தில் ஏழை குடும்பத்தில் பிறந்து, தனது இசைமொழியால் தமிழர்களின் நெஞ்சங்களை அரை நூற்றாண்டு காலமாக தனது இசையாலும், பாடல்களாலும் மகிழ்ச்சி கடலில் ஆழ்த்தி வரும் தலைவர் கலைஞர் அவர்களால் இசைஞானி என்று போற்றப்பட்ட இளையராஜா அவர்கள், உலக அளவில் போற்றப்படும் சிம்பொனி இசை அமைத்து உலக புகழ் பெற்று தமிழரின் அடையாளமாக திகழும் இசைஞானி இளையராஜா அவர்களை கௌரவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பாக சென்னையில் பிரம்மாண்டமாக ஒரு பாராட்டு விழாவை நடத்தியதோடு மட்டுமல்லாமல், தமிழரின் பெருமைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இளையராஜாவுக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என்கிற தனது வேண்டுகோளையும் ஒன்றிய அரசுக்கு வைத்துள்ளார் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

அதே போல், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகளை பெற்று, மகளிர் சுய உதவி குழுக்களை சார்ந்த மகளிர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு அவர்கள் தயாரிக்கும் பொருட்களை 100 கிலோ மீட்டர் தொலைவுக்கு பேருந்துகளில் கட்டணமில்லாமல் எடுத்து செல்லலாம் என்கிற அறிவிப்பு, மகளிர் தன் வாழ்க்கையில் யாரையும் எதிர்பார்த்து இல்லாமல் தனது உழைப்பின் மூலம் முன்னேறலாம் என்பதை உணர்த்துகிறது.

அதே போல், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் என்பதை கருத்தில் கொண்டு அனைத்து நிலையில் உள்ள மாணவர்களுக்கும் / இளைஞர்களுக்கும் தங்களை போட்டி தேர்வுக்கு தயார்படுத்தி கொள்ள கொண்டு வரப்பட்ட, “நான் முதல்வன் திட்டம்” பயன்படுகிறது. “நான் முதல்வன் திட்டத்தில்” போட்டி தேர்வுகளில் அரசு பணிகளில் பணி வாய்ப்பு பெறுபவர்களின் தேர்ச்சி எண்ணிக்கையை அதிகப்படுத்திட இலக்கு நிர்ணயிக்க வேண்டும், அதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று தெரிவித்திருப்பது, ஏழை, எளிய குடும்பங்களை சார்ந்தவர்களின் நலன் பேணப்பட வேண்டும் என்பதை காட்டுகிறது.

இந்தியாவிலேயே முதன் முதலாக அனைத்து போக்குவரத்தையும் இணைக்கும் வகையில் பேருந்து, புறநகர் இரயில், மெட்ரோ இரயில், ஆட்டோக்களை ஒரே QR பயணச்சீட்டு மூலம் ஒருங்கிணைந்து பொதுமக்கள் சிரமமின்றி செல்லும் வகையில், வழி காணப்பட்டுள்ளது என்பது தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பத்தில் முன்னிலையில் உள்ளது என்பதற்கு ஒரு உதாரணமாகும் என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன், நன்றி. **(கைதட்டல்)**

**அடுத்து, கேள்வி நேரம்.**

கேள்வி எண்:1. மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. உ.கணேசன் (எ) நேதாஜி உ.கணேசன் அவர்கள், வார்டு எண்- 38.

**திரு. உ. கணேசன் (எ) நேதாஜி உ கணேசன்**

**கேள்வி:**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

இரவென்றும், பகலென்றும் பாராமல் ஓடி சென்று, கரூர் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், பாசத்திற்குரிய தளபதியார் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், என்னுடைய அரசியல் ஆசான், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கரூர் மாவட்டத்தில் நிகழ்ந்த கூட்ட நெரிசலில் பாதிக்கப்பட்டு உயிரிழந்த நபர்களுக்கு, மண்டலம்-4 பொதுமக்கள் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4. வார்டு-38ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சுமார் ரூ. 70 கோடி மதிப்பீட்டில் எண்ணூர் நெடுஞ்சாலை நேரு நகர் அருகில் 2A தென்னக இரயில்வே தண்டவாளம் கடக்கின்ற பகுதியில் உயர் மேம்பாலம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு வெளியாகி பல மாதங்கள் ஆகியும் இதுவரை பெருநகர சென்னை மாநகராட்சியால் எந்த ஒரு பணியும் நடைபெறவில்லை. பொதுமக்களின் நலன் கருதி 2A எண்ணூர் நெடுஞ்சாலை மேம்பாலம் பணி எப்போது நடைபெறும்? என்பதை மாண்புமிகு மேயர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேயர்**

**பதில்:**

மண்டலம்-4, வார்டு-38ல் எண்ணூர் நெடுஞ்சாலை சந்திக்கடவு எண்.2Aக்கு மாற்றாக Infrastructure & Amenities Fund மூலம் ரூ.75 கோடி மதிப்பீட்டில் மேம்பாலம் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இந்த மேம்பாலம் Design Engineering Procurement and Construction முறையில் கட்டுவதற்கு ஒப்பந்ததாரர் திருவாளர்கள். EKK

Infrastructure Limited நிறுவனத்திற்கு ஒப்ப ஏற்பு கடிதம் 24.07.2025 அன்று வழங்கப்பட்டுள்ளது.

தற்போது வடிவமைப்பு பணிகள் (Design Work) நடைபெற்று வருகிறது. வடிவமைப்பு பணிகள் மற்றும் வரைபடங்கள் IIT Madras மூலம் Proof checking செய்யப்பட்ட பின்னர், பாலத்திற்கான கட்டுமான பணிகள் நவம்பர் மாதத்தில் துவங்கப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**திரு. உ.கணேசன் (எ) நேதாஜி உ கணேசன்**

**துணை கேள்வி**

நன்றி. மணலி சாலையில் அமைந்துள்ள 2B மேம்பால பணிகள் மிகவும் மந்த நிலையில் நடைபெற்று வருகின்றன. மேலும், இரயில்வே துறையின் பணிகள் தொடங்கப்படாமலேயே உள்ளன. இதனால் அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, இந்த மேம்பால பணிகளை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

அதே போன்று, கொருக்குபேட்டை கண்ணன் தெருவில் வார்டு எண் 42 மற்றும் வார்டு எண் 40 இடையே அமைக்கப்படவுள்ள மேம்பால பணியும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. சட்டமன்ற தேர்தல் நெருங்கி வரும் நிலையில், இந்த இரண்டு மேம்பால பணிகளும் மிக விரைவில் நிறைவு பெற வேண்டும் என்பதையே பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். எனவே, மேம்பால கட்டுமான பணிகளை உடன் தொடங்கி முடித்து தருமாறு கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

கேள்வி எண்:2. மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. வே. ஆனந்தம் அவர்கள், வார்டு எண்- 176.

**திரு. வே.ஆனந்தம்**

**கேள்வி:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்து அரசு அதிகாரிகளுக்கும், பத்திரிகை மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்களுக்கும் என் மனமார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்து கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-39, எனது 176வது வார்டுக்குட்பட்ட சீனிவாசா நகர் 2வது தெருவின் முடிவில் வீராங்கல் ஓடையின் மத்தியில் பாலங்கள் துறை மூலமாக 200 அடி உள்வட்ட சாலை, MRTS இணைப்பு சாலைக்கும் வீராங்கல் ஓடைக்கும் மத்தியில் சிறுநடை பாலம் அமைக்க மண் பரிசோதனை முடிவடைந்த நிலையில் இன்னும் அதற்கான முதற்கட்ட பணிகள் அந்த இடத்தில் துவங்கப்படவில்லை. எப்பொழுது இந்த பாலப் பணிகள் தொடங்கி முடிக்கப்படும் என்பதை தெரியப்படுத்துமாறு கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

**பதில்:**

மண்டலம்-13, வார்டு-176ல் சீனிவாசா நகர் 2வது தெருவின் முடிவில் வீராங்கல் ஓடையின் மத்தியில் பாலங்கள் துறை மூலமாக 200 அடி உள் வட்ட சாலை, MRTS இணைப்பு சாலைக்கும் வீராங்கல் ஓடைக்கும் மத்தியில் சிறுநடை பாலம் அமைக்க ரூ.1.09 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டது.

இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் 4 முறை கோரப்பட்டதில், ஒப்பந்ததாரர் எவரும் பங்கேற்கவில்லை.

மீண்டும் 5வது முறையாக ஒப்பந்தபுள்ளி கோரப்பட்ட போது, ஒப்பந்ததாரர் அளித்த விலைப்புள்ளி அலுவலக மதிப்பீட்டை விட மிகையாக இருந்ததால், அந்த ஒப்பந்தபுள்ளி ரத்து செய்யப்பட்டது.

தற்போது 2025-26ஆம் ஆண்டின் விலை பட்டியலின்படி திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. உரிய நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**திரு. வே.ஆனந்தம்**

**துணை கேள்வி:**

100 அடி சாலை, லட்சுமி நகர் சந்திப்பில் ஒரு பம்பிங் ஸ்டேஷன் அமைந்துள்ளது. அதை உள்ளே மாற்றி அமைத்து தருமாறு பலமுறை கோரிக்கை விடுத்தும், இதுவரை மாற்றம் செய்து தரப்படவில்லை. இதனால் அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு, பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்கள் நேரில் வந்து பார்வையிட்டு, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

வட்டார துணை ஆணையர் அவர்கள் இந்த விஷயத்தை கவனத்தில் கொண்டு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டு கொள்கிறேன்.

**திரு. வே.ஆனந்தம்**

நன்றி.

**மாண்புமிகு மேயர்**

கேள்வி எண்:3. மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி.க. விமலா கர்ணா அவர்கள், வார்டு எண்- 194.

**திருமதி.க. விமலா கர்ணா**

**கேள்வி:**

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய தெற்கு வட்டார துணை ஆணையர் அவர்களுக்கும், அனைத்து அரசு அதிகாரிகளுக்கும், மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

மண்டலம்-15, வார்டு-194ல் 370 சாலைகள் உள்ளது. இதில் இதுவரை 124 சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. 11 சாலைகள் அமைக்கும் பணி நடைபெற்று கொண்டிருக்கிறது. இன்னும் அண்ணா என்கிளேவ், ராயல் என்கிளேவ், கிளாசிக் என்கிளேவ், அனுமன் காலனி இணைப்பு சாலை என இவற்றில் பாதாள சாக்கடை பணிகள் முடிவடைந்து மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. அது மட்டுமல்ல, பல்லவன் நகர் கார்த்திக் நகர், நியு கணேஷ் நகர், கணேஷ் நகர் என **157** சாலைகள் என முக்கியத்துவம் தர வேண்டிய நிலையில் பல சாலைகள் உள்ளது. 2023ஆம் ஆண்டு பழுதடைந்த சாலைகளுக்கு மொத்தமாக நிதி ஒதுக்கீடு செய்து அளிக்கப்பட்டது போல், 2025 - 2026 ஆம் நிதியாண்டில் பழுதடைந்த சாலைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை மாண்புமிகு மேயர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேயர்**

**பதில்:**

மண்டலம் 15, வார்டு 194 ல் மாமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள 157 சாலைகளில், மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள சாலைகளான பழைய கணேஷ்நகர் 9வது தெரு ரூ.18.20 இலட்சத்திலும், பழைய கணேஷ் நகர் 10வது தெரு ரூ.22.30 இலட்சத்திலும், கார்த்திக் நகர் ரூ.29.80 இலட்சத்திலும், புதிய கணேஷ் நகர் 6வது தெரு ரூ.20.60 இலட்சத்திலும், பல்லவன்நகர் பிரதான சாலை ரூ.20.60 இலட்சத்திலும், நஞ்சுண்டராவ் சாலை

ரூ.60 இலட்சத்திலும், 2வது அவின்யூ 6 வது குறுக்கு தெரு ரூ.30 இலட்சத்திலும், திருவள்ளுவர் சாலை (பகுதி) ரூ.30 இலட்சத்திலும் என எட்டு சாலைகள் சீரமைக்கும் பணிக்கு தோராய திட்ட மதிப்பீடு ரூ.2.31 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெற்று சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மீதமுள்ள சாலைகள் முன்னுரிமை அடிப்படையில் வரும் 2026-27 ஆம் நிதியாண்டில் மேம்படுத்த உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**திருமதி.க. விமலா கர்ணா**

நன்றி.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, கேள்வி எண்.4 மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.கே.பி.கே. சதீஷ்குமார் அவர்கள், வார்டு எண்.182.

இருக்கையில் இல்லை.

அடுத்து, கேள்வி எண்:5. மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. வே. திலகர் அவர்கள், வார்டு எண்- 92.

**திரு. வே. திலகர்**

**கேள்வி:**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, அனைத்து மாமன்ற உறுப்பினர்களே, அனைத்து துறை அதிகாரிகளே, உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.முகப்பேர், நொளம்பூர், மதுரவாயல் பகுதிகளை இணைக்கும் கூவம் ஆற்று பாலத்தினை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்

அவர்கள் திறந்து வைத்ததற்காக, அவருக்கு என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், மாண்புமிகு மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர், காரம்பாக்கம் திரு. கணபதி அவர்களுக்கும், 11வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு. வே. ராஜன் அவர்களுக்கும், எனக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக இருந்து வரும் 7வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு. பி. கே. மூர்த்தி அவர்களுக்கும் என் பகுதி வாழ் மக்கள் சார்பாக நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி, முகப்பேர் கிராமம். 92-வது வார்டில் உள்ள பாரதிதாசன் சாலை, திருவள்ளுவர் சாலை, சீயோன் தெரு மற்றும் வேணுகோபால் தெரு மெயின் ரோடு ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் இல்லாத காரணத்தால் மழைநீர் தேங்கி வெளியேற முடியாமல் உள்ளது. எனவே, மழைநீர் வடிகால்வாய் அமைத்து தர வேண்டும்.

சீதக்காதி சாலை மற்றும் EB ROAD மழைநீர் வடிகால்வாய் சிமெண்ட் சிலாப் அமைக்கப்பட்டுள்ளது. இதனை அகற்றி மழைநீர் வடிகால்வாய் வழிதடம் முழுவதும் கான்கிரீட் அமைத்து தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

**பதில்:**

மண்டலம்-7 வார்டு-92ல் பாரதிதாசன் சாலையில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி 03.10.2025 அன்று திறக்கப்பட உள்ளது.

வேணுகோபால் சாலையில் ரூ.73 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளது. விரைவில் பணி ஆணை வழங்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்படும்.

EB சாலை மற்றும் திருவள்ளுவர் சாலையில் ஏற்கனவே மழைநீர் வடிகால்வாய் உள்ளது. இந்த இரண்டு சாலைகளிலும் உள்ள மழைநீர் வடிகால்வாய் ஆங்காங்கே சேதமடைந்துள்ளது. இதனை சீரமைத்து தருவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட வேண்டும்.

மேலும், திருவள்ளுவர் சாலையில் 100 மீட்டருக்கும், சீயோன் தெரு மற்றும் சீதக்காதி சாலையில் புதிதாக மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கும் மதிப்பீடு தயார் செய்யப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட மழைநீர் வடிகால்வாய் பணிகளுக்கு வரும் 2026-27ஆம் நிதியாண்டில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**திரு. வே.திலகர்**

**துணை கேள்வி**

நன்றி. நியாயவிலை கடை அமைப்பதற்காக, டாக்டர் அம்பேத்கர் விளையாட்டு திடலின் எதிரிலும், செந்தமிழ் நகர் மற்றும் கொங்கு நகர் அருகிலும் என மூன்று இடங்களை தேர்வு செய்து முன் மொழிந்திருந்தேன். ஆனால், இந்த இடங்கள் ஆய்வு செய்யப்பட்டதா என்பது எனக்கு தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

கேள்வி எண்:6. மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. நா.சுந்தரம் அவர்கள், வார்டு எண்- 198.

**திரு. நா.சுந்தரம்**

**கேள்வி:**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, இணை ஆணையர், துணை ஆணையர்கள் மற்றும் வட்டார துணை ஆணையர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, அனைத்து

மாமன்ற உறுப்பினர்களே, ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-15க்கு உட்பட்ட 198வது வார்டு, சோழிங்கநல்லூர் பகுதி காந்தி தெரு, தேவராஜ் நகர், பூபதி நகர், கிராம நெடுஞ்சாலை, நியூ குமரன் நகர் சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளில் சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான விளையாட்டு மைதானம் இளைஞர்கள் பயிற்சி பெறும் வகையில் கிரிக்கெட், கூடைபந்து, கால்பந்து, இறகுபந்து, கபடி, கைபந்து விளையாடுவதற்கு பயன்பெறும் வகையில் நியூ குமரன் நகர் பின்புறம் கிழக்கு பகுதியில் உள்ள எண்.239-ல் உள்ள அரசு காலியிடம் சுமார் 60 ஏக்கர் பரப்பளவில் உள்ள சர்வே நிலத்தில் 30 ஏக்கரில் மெட்ரோ குடிநீர் வாரியம் உள்ளது. மீதமுள்ள 30 ஏக்கரில், 6 ஏக்கரில் தமிழ்நாடு அரசு விளையாட்டிற்கு முக்கியத்துவம் தரும் வகையில் இளைஞர்கள், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் விளையாட்டு திடல் அமைத்து சுற்று சுவர் அமைத்து தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

அதே போல், கங்கையம்மன் தெருவில் ரூ.4 கோடியே 20 இலட்சம் செலவில் விளையாட்டு மைதானம், கிரிக்கெட் மற்றும் கால்பந்து மைதானம், நீச்சல் குளம் ஆகியவற்றை அமைத்து வழங்குவதற்கான பணிகளை துவக்கியுள்ளமைக்கு, பகுதி மக்களின் சார்பாக என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

**பதில்:**

மண்டலம்–15, வார்டு -198 சென்னை மாவட்டம், சோழிங்கநல்லூர் வட்டம் மற்றும் கிராமம் புல எண்.239-ல் 19 ஹெக்டேர் 01 ஏர்ஸ் பரப்பளவு அரசு புறம்போக்கு கழுவெளி வகைப்பாடு கொண்ட மொத்த நிலத்தில் சென்னை குடிநீர் வாரியம் 02 ஹெக்டேர் 02 ஏர்ஸ் நிலத்தினை

பயன்படுத்தியது போக மீதமுள்ள காலி நிலத்தில் பொதுமக்கள் பயன் பெறும் வகையில் விளையாட்டு திடல் அமைக்க பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்ய கோரி படிவம் 1, 2 மற்றும் 3 இணைத்து, ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 24.04.2025 நாளிட்ட கடிதம் மூலம் சென்னை மாவட்ட ஆட்சியரிடம் கோரப்பட்டுள்ளது. சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களிடமிருந்து விவரம் வர பெற்றவுடன் அந்நிலத்தை சுற்றி சுற்றுசுவர் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

**திரு. நா.சுந்தரம்**

**துணை கேள்வி:**

கங்கையம்மன் கோவில் குளம், பெரிய கேணி குளம், கடப்ப கன்னி குளம், சின்ன கேணி குளம் உள்ளிட்ட ஆறு குளங்கள் தூர் வாரப்பட்டு, சுற்றுச்சுவர் அமைத்து தர வேண்டும் என நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வருகிறேன். எனவே, இக் கோரிக்கையை பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுங்க கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, நேரமில்லா நேரம். மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. உமா சரவணன் அவர்கள், வார்டு எண்.9.

**திருமதி. உமா சரவணன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, அலைகடலை போல் ஓய்வின்றி உழைத்து, இரவையும் பகலாக கருதி மக்களோடு மக்களாக செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், சென்னை வடக்கு மாவட்ட கழக செயலாளர் திரு. எஸ். சுதர்சனம் அவர்களுக்கும், திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்களுக்கும், 1-ஆவது மண்டல வார்டுகுழு தலைவர் திரு. தி.மு. தனியரசு அவர்களுக்கும், மாண்புமிகு மேயர் மற்றும் மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆணையர்

அவர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும், நிலைக்குழு தலைவர்களுக்கும், வார்டுகுழு தலைவர்களுக்கும், சக மாமன்ற உறுப்பினர்களுக்கும், பத்திரிகை மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

9-ஆவது வார்டில் பல்வேறு மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, பட்டினத்தார் கோயில் தெருவில் அமைந்துள்ள மார்க்கெட் இடிந்து விழும் அபாய நிலையில் இருந்தது. இந்த இடத்தினை மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர் மற்றும் ஆணையர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு, உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து, கட்டுமான பணிகளை தொடங்கியதற்காக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். மேலும், வரிவிதிப்பு மற்றும் நிதிநிலைக்குழு தலைவர் அவர்களுக்கும் இதற்காக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அதே போன்று, 9-ஆவது வார்டில் உள்ள திருவொற்றியூர் குப்பம் துலுக்காணத்தம்மன் கோயில் அருகில் ஒரு கலையரங்கம் அமைத்து தரவும், அரசு பள்ளி அருகில் ஒரு பூங்கா, நடைபாதை மற்றும் சாலை அமைத்து தரவும் வேண்டுகிறேன், நன்றி.

**மாண்புமிகு மேயர்**

மன்ற உறுப்பினர் அவர்கள் முன் வைத்த கோரிக்கையை ஏற்று, 9வது வார்டிற்குட்பட்ட பகுதியில் பூங்கா அமைக்கக் கூடிய சாத்திய கூறுகள் குறித்து ஆய்வு (Feasibility Study) மேற்கொள்ளப்பட்டு, வரவிருக்கும் நாட்களில் அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன், **நன்றி.**

அடுத்து மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. சுசீலா ராஜா அவர்கள், வார்டு எண்.13.

**திருமதி. சுசீலா ராஜா**

முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களை வணங்கி, எனக்கு பேச நல்வாய்ப்பினை வழங்கியமைக்காகவும், தமிழ்நாட்டின் நலனுக்காக ஓய்வின்றி

உழைத்து வரும் திராவிட மாடல் நாயகன், கழக தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், பெருநகர சென்னை மாநகராட்சியின் மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் மற்றும் ஆணையர் அவர்களுக்கும், சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான திரு. எஸ். சுதர்சனம் அவர்களுக்கும், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி. சங்கர் அவர்களுக்கும், 1-ஆவது மண்டல வார்டுகுழு தலைவரும், திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளருமான திரு. தி.மு. தனியரசு அவர்களுக்கும், அனைத்து நிலைக்குழு தலைவர்களுக்கும், வார்டுகுழு தலைவர்களுக்கும், ஊடகத்துறை நண்பர்களுக்கும், பேச வாய்ப்பினை அளித்த ஆளுங்கட்சி தலைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து கொள்கிறேன்.

13-ஆவது வார்டிற்குட்பட்ட கிராம தெருவில் அமைந்துள்ள அரசு உதவி பெறும் MTM பள்ளியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டம் கடந்த மாதம் தொடங்கப்பட்டது. இதற்காக தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், 13-ஆவது வார்டு பொதுமக்கள் மற்றும் பள்ளியின் சார்பாக எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

13-ஆவது வார்டில் 90 சதவிகித சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பழுதடைந்த மின் கம்பங்கள் மாற்றி அமைக்கப்பட்டு உள்ளன. இதற்காக மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர் மற்றும் ஆணையர் ஆகியோர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். மேலும், மீதமுள்ள சாலைகளை சீரமைத்து தரும்படியும், பழுதடைந்த மின் கம்பங்களை அகற்றி விரைவில் மாற்றி தரும்படியும் கேட்டு கொள்கிறேன்.

13-ஆவது வார்டில் கழிவுநீர் நீரேற்று நிலையம் இல்லாத காரணத்தினால், 12-ஆவது வார்டில் உள்ள கழிவுநீர் நீரேற்று நிலையத்தின் வழியாக கழிவுநீர் வெளியேற்றப்படுகிறது. நான்கு வார்டுகளின் கழிவுநீர் ஒரே நீரேற்று நிலையத்தின் வழியாக வெளியேற்றப்படுவதால், தாழ்வான பகுதிகளான காந்தி நகர், பெருமாள் கோவில் தெரு, வரதராஜன் தெரு மற்றும் அம்பாள் தெரு ஆகிய தெருக்களில் கழிவுநீர் அகற்ற முடியாமல் மறுநாள் சாலைகளில் வழிந்தோடுகிறது. எனவே, 13வது வார்டில் புதிய பம்பிங் ஸ்டேஷன் ஒன்றினை அமைத்து தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். மேலும், ஒரு ஜெட்ராடிங் வாகனமும், ஒரு சில்ட் அகற்றும் வாகனமும் வழங்கப்பட வேண்டும். இதனால் மழைக்காலங்களில் மக்களுக்கு மிகுந்த உதவியாக இருக்கும். இதனை அரசின் கவனத்திற்கு எடுத்து சென்று உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன்.

13-ஆவது வார்டில் எம்.ஜி.ஆர். சாலையில் மழைநீர் வடிகால்வாயின் மேல் முழுவதுமாக தார்சாலை அமைக்கப்பட்டுள்ளதால், மழைநீர் வடிகால்வாயை தூர்வார முடியவில்லை. Silt Catch Pit முழுவதுமாக மூடப்பட்டுள்ளது. இதனால் மழைநீர் செல்லும் பாதை தடைபட்டுள்ளது. எனவே, மேற்படி சாலையை மழைநீர் வடிகால்வாயின் மேல் இருந்து அகற்றி, மழைநீர் வடிகால்வாயை சுத்தம் செய்து தருமாறு கேட்டு கொள்கிறேன்.

13-ஆவது வார்டில் சுகாதார மையம், நூலகம், உடற்பயிற்சி கூடம், சமூக நலக் கூடம் மற்றும் மகப்பேறு மருத்துவமனை போன்ற அடிப்படை வசதிகள் எதுவும் கிடையாது. இதனால், மக்கள் 11 மற்றும் 12-ஆவது வார்டுகளுக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. வரதராஜன் தெருவில் மாநகராட்சி பெயரில் பட்டா பெற்ற சுமார் 8 கிரவுண்ட் நிலம் உள்ளது. ஆனால், அந்த இடம் வழக்கில் நிலுவையில் இருப்பதால் எந்த ஒரு திட்டமும் மேற்கொள்ள முடியாத சூழ்நிலை உள்ளது. இதற்கான முழுமையான தகவல்களை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு மேயர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேயர்**

13-ஆவது வார்டிற்குட்பட்ட பகுதிகளில் Silt Catch Pit-கள் மூடப்பட்டுள்ளதாக மன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார். எனவே, அவற்றை ஆய்வு செய்து, வரவிருக்கும் மழைக்காலத்திற்கு முன்பாக தூர் வாரும் பணி மேற்கொள்ள வேண்டும்.

அதே போல், மன்ற உறுப்பினர் அவர்கள், 13வது வார்டில் சுகாதார மையம், நூலகம், உடற்பயிற்சி கூடம், சமூக நலக் கூடம் மற்றும் மகப்பேறு மருத்துவமனை ஆகியவை அமைத்து தர வேண்டுமென்கிற கோரிக்கையினை முன் வைத்துள்ளார். மன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நிலம் எந்த வகைப்பாட்டில் உள்ளது என்பதை ஆய்வு செய்து, தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திருமதி சுசீலா ராஜா**

சென்ற மன்றக் கூட்டத்தில் இதற்கான விவரத்தினை நான் சமர்ப்பித்துள்ளேன்.

**மாண்புமிகு மேயர்**

அந்த நிலம் மாநகராட்சி சார்ந்த இடமாக இல்லாமல், Society சார்ந்த இடமாக உள்ளது. வழக்கில் இருப்பதால், அதை ஆய்வு செய்து உரிய முடிவுகள் எடுக்கப்படும். 13வது வார்டில் வேறு ஏதாவது இடம் இருந்தால், அதை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரலாம்.

**திருமதி சுசீலா ராஜா**

மேட்டு தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. அந்த மழைநீர் வடிகால்வாய், எம்.ஜி.ஆர். சாலையில் உள்ள Disposal Point-க்கு செல்ல வேண்டும். 11-ஆவது, 12-ஆவது வார்டுகள் மற்றும் மேட்டு தெருவில் உள்ள தண்ணீர் Disposal ஆகி இங்கே வர வேண்டும். ஆனால், தண்ணீர் Reverse-ல் வந்து எல்லையம்மன் கோவில் கிராம தெருவில் Overflow ஆகிறது. இதனால், வீடுகளுக்குள் மழைநீர் புகுகிறது. இதுகுறித்து பலமுறை

மண்டலத்தில் பேசியுள்ளேன். ஆனால், எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு மேயர்**

மழைநீர் வழிமாற்றம் செய்யப்பட்டு, மாற்று இணைப்பு (Alternative Link) வழங்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

**திருமதி சுசீலா ராஜா**

இந்த முறை மழை வந்தால் தான் அதன் விளைவுகள் தெரிய வரும். இரண்டு முறை Overflow ஆகி வீடுகளுக்குள் மழைநீர் புகுந்துள்ளது. ஒரு வருட காலமாக இது தொடர்பாக மாமன்றத்தில் தொடர்ந்து பேசி வருகிறேன்.

**ஆணையர்**

இவை சரி செய்யப்பட்டு விட்டன என தெரிவித்து கொள்கிறேன்.

**திருமதி சுசீலா ராஜா**

நன்றி.

**மாண்புமிகு மேயர்**

மரியாதைக்குரிய நியமனக்குழு உறுப்பினர் திரு. ராஜா அன்பழகன் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.141.

**திரு. ராஜா அன்பழகன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, கொறடா அவர்களே, சக நியமனக்குழு உறுப்பினர் திரு.சொ.வேலு அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, அனைத்து மாமன்ற உறுப்பினர்களே, பத்திரிகையாளர்களே - உங்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியையும், மனமார்ந்த வணக்கத்தையும் தெரிவித்து கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் உண்மையான தொண்டர்களுக்கு அங்கீகாரம் வழங்கும் கழகமாக விளங்கி வருகிறது. அதன் அடையாளமாக, மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகவும், இருபது ஆண்டுகளாக மாவட்ட

கழக செயலாளராகவும் பணியாற்றிய என் தந்தை, தீரர் ஜெ. அன்பழகன் அவர்கள், 2020-ஆம் ஆண்டு கொரோனா பேரிடர் காலத்தில் மக்கள் சேவையில் ஈடுபட்டு நோய் தொற்றால் உயிரிழந்தார். அவருடைய நினைவாக, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூபாய் 162 கோடி செலவில், நான் மாமன்ற உறுப்பினராக உள்ள 141-ஆவது வார்டில் உள்ள முதல் பிரதான சாலையில் தொடங்கி, 133-ஆவது வார்டு வடக்கு உஸ்மான் சாலையில் முடிவடையும் 2.2 கி.மீ. நீளத்திலான, தமிழ்நாட்டில் முதன் முறையாக இரும்பு பாலமாக அமைக்கப்பட்ட மேம்பாலத்திற்கு “தீரர் ஜெ. அன்பழகன் மேம்பாலம்” என பெயரிடப்பட்டுள்ளது.

இப்பாலம் நேற்று திறக்கப்பட வேண்டிய நிலையில், வரும் வாரத்தில் திறக்கப்பட உள்ளது. இதற்காக கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இளந்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், எனது சார்பிலும், தியாகராய நகர் சட்டமன்ற தொகுதி கழக உடன்பிறப்புகள் சார்பிலும் கோடானு கோடி நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

“கழகம் தொண்டனையும் கைவிடாது; தொண்டனின் குடும்பத்தையும் கைவிடாது” என்பதற்கான சான்றாக, இன்று உங்கள் முன்னிலையில் நான் பேசி கொண்டிருக்கிறேன்.

இதுவரை 141-ஆவது வார்டு தொடர்பாக இந்த மன்றத்தில் நான் எந்த ஒரு கோரிக்கையினையும் முன் வைக்கவில்லை. எதுவாக இருந்தாலும், அவற்றை வார்டுக்குழு கூட்டத்திலேயே தெரிவித்து விடுவேன்.

லலிதாபுரம், காமராஜ் காலனி போன்ற குடிசை பகுதிகளில் குப்பை அகற்றும் ஒப்பந்தத்தை Padmavathy Contractors என்கிற நிறுவனத்திற்கு நேர் செய்யப்பட்டுள்ளது. அவர்கள் பணியில் ஈடுபட்ட நாளிலிருந்து இதுவரை எந்தவிதமான சீரான பணியையும் மேற்கொள்ளவில்லை. வயதான இரண்டு பெண் பணியாளர்களை அங்கு உட்கார வைத்துள்ளார்கள்.

நான் நேரில் சென்று கேட்ட போது, மழையிலும், கழிவுநீரிலும் குப்பைகள் ஊறி கிடக்கின்றன. "இதனை முதலில் சுத்தம் செய்து கொடுங்கள்" என அவர்கள் தெரிவித்தனர். எனவே, உர்பேசர் நிறுவனத்தினரை தொடர்பு கொண்டு, நானே நான்கு முறை சுத்தம் செய்து கொடுத்தேன்.

மீண்டும் பத்மாவதி ஒப்பந்ததாரரிடம் சுத்தம் செய்து தருமாறு கேட்ட போது, "குப்பை அதிகமாக உள்ளது; எங்களிடம் உள்ள பணியாளர்களால் அகற்ற முடியாது" என பதிலளித்தனர். அப்படியென்றால், "உங்கள் பணியாளர்கள் அங்கு இருக்க வேண்டாம்; உர்பேசர் நிறுவனத்தின் மூலம் குப்பையை அகற்ற சொல்கிறேன்" என தெரிவித்தேன்.

அதற்கு பத்மாவதி ஒப்பந்ததாரர், "நாங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் ஒப்பந்தம் செய்துள்ளோம்; எங்கள் பணியாளர்களே அங்கு இருப்பார்கள்; ஆனால் வேலை செய்ய மாட்டார்கள்" என்கிற தொனியில் அவர் பதிலளித்தார். இதனை மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும் என்பதற்காகவே இந்த மன்றத்தில் பதிவு செய்கிறேன்.

**ஆணையர்**

சென்னை மாநகரில் மொத்தம் 213 Urban Habitat Development Board திட்ட பகுதிகள் உள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, அனைத்து குடியிருப்புகளிலும் வீடு வீடாக குப்பை சேகரிக்கப்பட வேண்டும். இதற்காக மாநகராட்சி சார்பில் ஒப்பந்தம் கோரப்பட்டு, ஏஜென்சி நியமனம் செய்யப்பட்டுள்ளது.

அதே போன்று, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மெட்ரோ வாட்டர் துறை மூலம் உடைந்த சாக்கடை குழாய்கள் மற்றும் குடிநீர் குழாய்கள் பழுதுபார்க்க ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தங்களால் குறிப்பிட்ட குடியிருப்பு பகுதியின் நடுவே சாக்கடை குழாய் செல்கிறது. அது முழுவதுமாக உடைந்து சாக்கடை பெருக்கெடுத்து ஓடுகிறது. அதனால் தான் குப்பை அகற்றுவதற்கு ஒப்பந்ததாரர்கள் தயங்குகிறார்கள். மெட்ரோ வாட்டர் துறை மூலம் பழுதுகளை

சரி செய்த பிறகு, மாநகராட்சி மூலம் குப்பை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. ராஜா அன்பழகன்**

முன்னதாக உர்பேசர் நிறுவனம் வழக்கமாக குப்பை அகற்றும் பணியை மேற்கொண்டது.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

ஆணையர் அவர்களின் கவனத்திற்கு — பத்மாவதி ஒப்பந்ததாரரின் செயல்பாடுகள் குறித்து தொடர்ந்து புகார்கள் வருகின்றன. அவர்களை அழைத்து, மறு ஆய்வு செய்து, தூய்மை பணிகளை கவனமாக மேற்கொள்ள அறிவுறுத்தல் வழங்கப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

**திரு. ராஜா அன்பழகன்**

141வது வார்டில் இரண்டு சென்னை மேல்நிலை பள்ளிகள் உள்ளன. அவற்றில் பெருக்கி சுத்தம் செய்தல், கழிவறைகளை சுத்தம் செய்தல் போன்ற பணிகளுக்காக பத்து பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு ஜூன் மாத ஊதியம் ஆகஸ்ட் மாதத்திலும், ஜூலை மாத ஊதியம் செப்டம்பர் மாதத்திலும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், ஆகஸ்ட் மாத ஊதியம் இன்னும் வழங்கப்படவில்லை. அவர்கள் ஏழ்மையான குடும்பங்களை சேர்ந்தவர்கள். எனவே, அவர்களுக்கு அந்தந்த மாதத்திற்கான ஊதியம் உடனுக்குடன் வழங்கப்பட வேண்டும்.

**ஆணையர்**

இப்போது நிலைமை சரியாகி விட்டது. அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளோம். இனிமேல் ஊதியம் முறையாக வழங்கப்படும்.

**திரு. ராஜா அன்பழகன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, குடிநீர் மற்றும் கழிவுநீர் தொடர்பாக இதுவரை நான் உரையாற்றியதில்லை. 141வது வார்டில் 12 ஜெட்ராடு வாகனங்கள் உள்ளன. ஆனால், எப்போது கேட்டாலும், அவை FC-க்கு (Fitness Certificate) சென்றுள்ளதாகவே கூறப்படுகின்றது. ஒரு வாகனம் ஆண்டிற்கு

ஒருமுறை மட்டுமே FC-க்கு செல்ல வேண்டும் என்பது நடைமுறை. எனவே, இந்த விவகாரத்தில் தெளிவான விளக்கம் வழங்கப்பட வேண்டும்.

தற்போது பெருநகர சென்னை மாநகராட்சியில் மொத்தம் 12 துறைகளில் 5,594 பணியிடங்கள் காலியாக உள்ளன. இத்துறைகள் General Department, Legal Cell, Health Service மற்றும் பிற துறைகள் ஆகியவற்றை உள்ளடக்கியவையாகும். அதனுள், குறிப்பாக **Conservancy Service** துறையில் மட்டும் 2,348 பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. இது மாநகராட்சியின் அடிப்படை சேவைகளில் ஒன்றாக இருப்பதால், இப்பணியிடங்களை விரைவில் நிரப்புவது அவசியமாகும்.

இக்காலி பணியிடங்கள் எப்போது நிரப்பப்படும். கடந்த நான்கு ஆண்டுகளில் இது நான்காவது முறை இதே கேள்வியை எழுப்புகிறேன். நான் நியமனக்குழுவில் உறுப்பினராக இருப்பதால், பலர் இந்தப் பணியிடங்கள் எப்போது நிரப்பப்படும் என என்னிடம் தொடர்ந்து கேட்டு வருகிறார்கள். எனவே, இந்தப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். இந்த தாமதத்திற்கு காரணம் என்ன என்பதை தெளிவுபடுத்துமாறு கேட்டு கொள்கிறேன்.

மேலும், மேல்நிலை அலுவலர்கள், தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஓய்வூதிய தொகை மற்றும் பண பயன்கள் அவர்கள் ஓய்வு பெறும் நாளிலேயே வழங்கப்பட வேண்டும். தற்போது, அவை கிடைக்க 6 மாதம் வரை ஆகிறது. இது மிகுந்த தாமதமாகும். எனவே, ஓய்வு பெறும் நாளிலேயே உரிய தொகைகள் வழங்கப்படும் வகையில் நடைமுறை மாற்றம் செய்ய வேண்டும்.

தலைமை செயலகத்தில் P & A R துறை 2021 June முதல் HR – Human Resource (மனிதவள மேம்பாட்டு) துறையாக மாற்றப்பட்டுள்ளது. அதே போன்று, பெருநகர சென்னை மாநகராட்சியின் பொது துறையை HR Department என பெயர் மாற்றம் செய்ய வேண்டும். ஏனெனில், வெளிநாட்டு

முதலீட்டாளர்கள் அனைவரும் HR என்றே குறிப்பிடுகிறார்கள். இதன் மூலம் மாநகராட்சி ஒரு புதிய நடைமுறையை ஏற்படுத்தும் வாய்ப்பு கிடைக்கும்.

அத்துடன், அனைத்து துறைகளின் பெயர்களும் தலைமை செயலகத்தில் உள்ளவாறு மாற்றப்பட்டால், நிர்வாக ஒழுங்குமுறை மேலும் மேம்படும்.

மன்றத்துறையில் கண்காணிப்பாளராக பணியாற்றும் திரு. மணிவேலன் அவர்கள் தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவையின் மாநில தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். பணியாளர்களின் நலனில் மேலும் சிறப்பாக செயல்பட அவர் வழிகாட்டுவார் என நம்புகிறேன். அவருக்கு இந்த மன்றத்தின் சார்பில் வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன்.

பேசுவதற்கு வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும் மீண்டும் ஒரு முறை நன்றியை தெரிவித்து கொண்டு, என் உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகுமேயர்**

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மன்ற உறுப்பினர் டாக்டர் திருமதி. கோ. சாந்தகுமாரி அவர்கள், தலைவர், நிலைக்குழு (பொது சுகாதாரம்) / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.81.

**டாக்டர் திருமதி கோ. சாந்தகுமாரி**

அனைவருக்கும் என் அன்பான வணக்கங்கள். தமிழ்நாட்டின் அரணாக திகழ்ந்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை முதலில் வணங்குகிறேன்.

சென்னை நேரு உள்விளையாட்டரங்கத்தில் கடந்த 25.09.2025 அன்று நடைபெற்ற “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” என்ற கருப்பொருளில், தமிழ்நாட்டின் மாபெரும் கல்வி எழுச்சியை கொண்டாடும் விழாவில், ‘நான் முதல்வன்’ திட்டம், ‘புதுமைப் பெண்’ திட்டம், ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம், மாதிரி பள்ளிகள், விளையாட்டு சாதனையாளர்கள், அரசு பள்ளிகளில் இருந்து முதன்மை உயர்கல்வி நிறுவனங்களுக்கு சென்ற மாணவர்கள் ஆகியோர் பாராட்டப்பட்ட

நிகழ்வில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் பாசமிகு தளபதியார் அவர்கள் மாணவ, மாணவியர்களை நேரில் பாராட்டி மகிழ்ந்ததற்கு, அவருக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

மேலும், பெற்றோரை இழந்த 18 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இடைநிற்றல் இல்லாமல் கல்வியை தொடர 'அன்புக் கரங்கள்' திட்டத்தின் மூலம் சமூக நல மற்றும் மகளிர் உரிமை துறை சார்பில் மாதம்தோறும் ரூ.2,000 உதவி தொகை வழங்கப்படும் என்ற அறிவிப்பும், அது போலவே, கடந்த 22.09.2025 அன்று நடைபெற்ற விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் 1231 கிராம சுகாதார செவிலியர்களுக்கு பணியாணைகள் வழங்கிய நிகழ்வும், பாசத்தளபதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலனுக்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

தமிழ்நாட்டின் கடைக்கோடி மக்களும் அரசு துறைகளின் சேவைகளை அரசு அலுவலகங்களுக்கு செல்லாமல், அலுவலர்கள் நேரடியாக அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகாமையில் சேவைகளை வழங்கும் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்டம் போன்றவை, மக்களுக்கான நலத்திட்டங்களை மேலும் நெருக்கமாக கொண்டு சேர்க்கின்றன.

இவ்வாறு ஒவ்வொரு மாதமும் பல்வேறு நல திட்டங்களை தீட்டி, அவற்றை செவ்வனே செயல்படுத்தி, மக்களுக்காக செயலாற்றும் மனித நேயமிக்க மாமனிதர், எங்கள் கழக தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை மீண்டும் வணங்குகிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, பேச வாய்ப்பளித்த ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, நியமனக்குழு உறுப்பினர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே, அதிகாரி பெருமக்களே, ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே உங்கள் அனைவருக்கும் என் காலை வணக்கத்தினை மீண்டும் தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, மக்களின் அச்சத்தை நீக்கும் நோக்கில், வட்டார வாரியாக நாய்கள் பாதுகாப்பு மையங்களை அமைக்க முடியுமா என கேட்டு கொள்கிறேன். தற்போதுள்ள சிகிச்சை மையங்கள் போதுமான அளவில் இல்லை. ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒன்று வீதம் அமைக்கப்பட்டால், மக்கள் நலனுக்கான சிறந்த ஒரு தீர்வாக அமையும். நாளிதழ்களில் தொடர்ந்து வெளிவரும் பிரச்சனைகளில் பெரும்பாலானவை நாய்கள் தொடர்பானவையாகவே உள்ளன. எனவே, இந்த இனிய தருணத்தில், இதற்கான நிரந்தர தீர்வை காண வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

அடுத்து, ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்படும் Nutrition Kits தொடர்பானதாகும். அவற்றின் காலாவதி தேதி (Expiry Date) திறந்து பார்த்தால் தான் தெரிந்து கொள்ள முடிகிறது. இது தவிர, வெளிப்படையாக பாக்கெட்டின் மேல் ஒட்டப்பட்டிருக்க வேண்டும். மேலும், அவை வழங்கப்படுவதற்கு முன்பே சரி பார்க்கப்பட வேண்டும். சில இடங்களில் தொடர்ந்து இது தொடர்பான புகார்கள் எழுகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் சுகாதார துறையில் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில், இவ்வகை புகார்கள் வராமல் தடுக்க, கண்காணிப்பு முறைகள் வலுப்படுத்தப்பட வேண்டும்.

மேலும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் SHN / UHN செவிலியர்கள் ஒரே பணியிடத்தில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றி வருவதால், மருத்துவ பயனாளர்களிடம் அவர்களின் அணுகுமுறை குறித்து பொதுமக்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர். எனவே, அவர்களை மண்டலத்திற்குள் பணியிட மாற்றம் செய்யப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

அடுத்து, ஆங்காங்கே நடைபெறும் மருத்துவ முகாம்கள் தொடர்பாக — அவை யாரிடம் முறையாக முன் அனுமதி பெற்று நடைபெறுகின்றன? அந்த முகாம்களில் உருவாகும் Bio-Waste சரிவர அகற்றப்படுகிறதா? என்பதையும் கண்காணிக்க தேவையான வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும்.

2023–2024-ஆம் ஆண்டிற்கான Health Fund எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது குறித்து மாநகர நல அலுவலர் இதுவரை தெளிவான தகவல்களை வழங்கவில்லை. நிலைக்குழு கூட்டத்திற்கு அரை மணி நேரத்திற்கு முன்பே தகவல்களை வழங்குவது வழக்கமாகியுள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுகளாக இதை தொடர்ந்து கேட்டு கொண்டே இருக்கிறோம். கடந்த ஆண்டு ஒதுக்கீட்டில் பல லட்சங்கள் பயன்படுத்தப்படாமல் திருப்பி செலுத்தப்பட்டுள்ளன. ஏன் அந்தத் தொகைகள் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவில்லை? ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பல தேவைகள் உள்ள நிலையில், அந்தத் தொகைகளை ஏன் அவற்றிற்கு பயன்படுத்த கூடாது? இதற்கான விளக்கத்தை தர வேண்டும் என இந்த மன்றத்தில் கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, நகரில் அமைக்கப்பட்டுள்ள She Toilet கழிப்பிடங்கள் சில இடங்களில் மனவருத்தமளிக்கும் வகையில் பராமரிப்பின்றி உள்ளன. பெண்கள் பயன்பாட்டிற்கான நாப்கின் வசதிகள் சரிவர அமைக்கப்படவில்லை. இந்தக் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும். பல கழிப்பிடங்களில் இவை துருப்பிடித்து, மோசமான நிலையில் காணப்படுகின்றன. எனவே, இயந்திரப் பொறியியல் துறைக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டுகிறேன்.

மேலும், Battery Operated Vehicles (BOV) வாகனங்களுக்கு சார்ஜர் வசதி ஏற்படுத்தி தர வேண்டும். தற்போது வழங்கப்படும் BOV வாகனங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளன. புதிய BOV வாகனங்கள் வழங்கப்பட வேண்டும் அல்லது *Tata Ace* வாகனங்கள் மாற்றி வழங்க மன்றத்தின் வாயிலாக கேட்டு கொள்கிறேன்.

அடுத்து, சக்திமான், காம்பாக்டர், டிப்பர் *லாரிகள் முறையாக* Fitness Certificate (FC) பெறுகின்றனவா என்பது கேள்விக்குறியாக உள்ளது. இவை பெரும்பாலும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. Palfinger எனும் தோட்டக் கழிவுகளை அகற்றும் இயந்திரத்திலும் கோளாறுகள் உள்ளன. இவை

குறித்த நேரத்தில் பழுதுபார்த்து, பயன்பாட்டிற்கு தயாராக வழங்கப்பட வேண்டும். வரவிருக்கும் மழைக்காலத்தில் அனைத்து உபகரணங்களும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

மெரினா கடற்கரையில் உள்ள பொதுக்கழிப்பிடங்கள் சுத்தம் செய்யப்படாமல் உள்ளன. பொதுமக்கள் முகம் சுளிக்கும் நிலை ஏற்படாமல், பராமரிப்பை தீவிரப்படுத்த வேண்டுகிறேன்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

நிலைக்குழு தலைவர், தொடர்புடைய அதிகாரியை அழைத்து, இவற்றை தீர்க்க நடவடிக்கை எடுக்கலாம். இதற்கான அதிகாரம் நிலைக்குழு தலைவருக்கே வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

**டாக்டர் திருமதி கோ. சாந்தகுமாரி**

பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் பெறப்படும் குப்பைகளின் அளவு குறித்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. கிண்டி சிட்கோ எஸ்டேட் பகுதியில் இவ்வளவு டன் குப்பைகள் சேகரமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால், அம்பத்தூர் AIEMA, மாதவரம் Industrial Estate, ICF ஆகிய பகுதிகளில் அகற்றப்படும் குப்பைகளின் அளவு குறித்து எந்தவொரு தகவலும் வழங்கப்படவில்லை. எவ்வளவு டன் குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன, எங்கு கொட்டப்படுகின்றன என்பதற்கான விவரங்கள் தெரிவிக்கப்பட வேண்டும்.
C&D Wastes (கட்டிடக் கழிவுகள்) பாலங்களின் அடியிலும், ஆற்றுப் படுகைகளிலும் கொட்டப்படுவதாக புகார்கள் வருகின்றன. இது கண்காணிக்கப்பட வேண்டும்.

மாநகராட்சி மருத்துவமனைகளில் பகல் மற்றும் இரவு பாதுகாவலர்கள் நியமிக்கப்படாமல் உள்ளனர். இதற்கான நிலவரம் குறித்து தெளிவாக தகவல் வழங்கப்பட வேண்டும்.

சுகாதார துறையின் கைப்புகை தெளிப்பான்கள் பல இடங்களில் பழுதடைந்துள்ளன. அவற்றை இயந்திர பொறியியல் துறையினர் விரைவாக பழுது நீக்கி வழங்க வேண்டும். வாகனத்தின் மூலம் செயல்படும் புகை

தெளிப்பான் இயந்திரங்களில் மொத்தம் 15 இருக்க, அதில் 13 பழுதடைந்துள்ளன. மழைக்காலத்தில் கொசு உற்பத்தியை தடுக்கும் வகையில், இந்த இயந்திரங்கள் விரைவாக பழுதுபார்த்து, செயல்பாட்டிற்கு தயாராக இருக்க வேண்டும்.

வார்டு 1-இல் உள்ள உரத் தொழிற்சாலைக்கு வாகனங்கள் மூலமாக கந்தகம் மற்றும் அமோனியா கொண்டு வரும் போது, அவை சிதறி காற்றில் மாசு ஏற்படுத்தி, பொதுமக்களின் சுகாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அந்த உர தொழிற்சாலை உரிமம் பெற்றதா என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டு, தகவல் வழங்கப்பட வேண்டும்.

அதே போன்று, மண்டலம் 11-இல் 149-ஆவது வார்டில் தூய்மை பணிகள் சரிவர மேற்கொள்ளப்படுவதில்லை. Independent Engineers மூலம் பணிகள் கண்காணிக்கப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

மண்டலம் 7-இல் 81-ஆவது வார்டில் சுரங்கப்பாதை பணிகள் நடைபெற்று வருகின்றன. அந்த இடம் அடித்தட்டு மக்கள் வசிக்கும் பகுதி; அருகில் இரயில்வே கால்வாய் உள்ளது. அடிக்கடி அடைப்பு ஏற்படுவதால் கழிவுநீர் மக்கள் வசிப்பிடத்திற்கு வந்து சுகாதார சீர்கேடு ஏற்படுத்துகிறது. வரவிருக்கும் மழைக்காலத்தில், அங்கு கூடுதல் மோட்டார் பொருத்தப்பட்டு, தொடர்ந்து நீர் அகற்றப்பட வேண்டும்.

பாலங்கள் துறையினர் துரிதமாக செயல்பட வேண்டும். மேலும், மண்டலம் 7-இல் தூய்மை பணியாளர்களின் ஆகஸ்ட் மாத ஊதியம் 15-ஆம் தேதிக்கு மேல் தான் வழங்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு மேயர்**

இது குறித்து ஆணையர் மற்றும் எனது கவனத்திற்கு வந்தது. அதிகாரிகளை அழைத்து பேசி, தீர்வு காணப்பட்டது.

**டாக்டர் திருமதி கோ. சாந்தகுமாரி**

மாண்புமிகு மேயர் அவர்களே, Silt Catch Pit சுத்தம் செய்யப்படுவதற்காக கடந்த ஆகஸ்ட் மாதத்தில் வார்டுக்கு நியமிக்கப்பட்ட 5 பணியாளர்களுக்கான ஊதியம் செப்டம்பர் மாத இறுதி வரை வழங்கப்படவில்லை.

81-ஆவது வார்டிற்கு கூடுதலாக 20 சாலைகள் அமைத்து தர வேண்டிய தேவை உள்ளன. அடுத்த ஆண்டில் அவை அமைத்து தரப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

81வது வார்டில் இடம் இல்லாத காரணத்தால், மாயா தெருவில் பழுதடைந்த கட்டிடம் மற்றும் பயன்பாடில்லாத கிணறு ஒன்று உள்ளது. அது சென்னை குடிநீர் வாரியத்தின் சொத்தாகும். அங்கு மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி மூலம் கட்டிடம் கட்டி, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட வேண்டும். ஆனால், அந்த இடத்தை கேட்டு பெற இயலாத நிலையில், அங்கு நடைபெறும் சமூக விரோத செயல்களை தடுக்கும் வகையில், அந்தக் கட்டிடம் இடித்து அகற்றப்பட வேண்டும். கிணறும் மூடப்பட வேண்டும். இதற்காக சென்னை குடிநீர் வாரியம் அறிவுறுத்தப்பட வேண்டும்.

81-ஆவது வார்டில் தெரு மின் விளக்குகள் எரிவதில்லை. அடிக்கடி புகார்கள் வருகின்றன. கண்காணித்து சீரமைக்கப்பட வேண்டும்.

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில், வாகனங்கள் செல்லும் பாதைகள் சீரமைக்கப்படாத காரணத்தினால், மண்டலம் 7-இல் லாரிகளின் number of trips குறைந்து வருகிறது.

**ஆணையர்**

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் வாகன பாதை தற்போது சீரமைக்கப்பட்டு விட்டது. இது தொடர்பாக, சுகாதார நிலைக்குழு தலைவர் அவர்கள் சம்பந்தப்பட்ட இடத்தில் நேரில் ஆய்வு மேற்கொண்டு, அதன் விவரங்களை தெரிவிக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

**டாக்டர் திருமதி கோ. சாந்தகுமாரி**

பேச வாய்ப்பளித்த ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்து கொள்கிறேன், நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு மேயர்**

நன்றி. நாய்களுக்கான சிகிச்சை மையங்கள் போதுமான அளவில் இல்லை என்பதாலும், ஒவ்வொரு மண்டலத்திற்கும் தனித்தனி நாய்கள் சிகிச்சை மையம் அமைக்க வேண்டும் என்பதான கோரிக்கையை முன் வைத்துள்ளீர்கள். தற்போது மண்டலம் 2 மற்றும் 14-இல், நாளொன்றுக்கு சுமார் 250 நாய்களுக்கு சிகிச்சையளிக்கப்படும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மண்டலம் 1-இல் ABC மைய கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதுடன், டிசம்பர் மாதத்திற்குள் அந்தப் பணிகள் முடிக்கப்படும் என தெரிவித்து கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் 5 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே இடத்தில் பணியாற்றி வரும் SHN / UHN செவிலியர்கள் பணியிட மாற்றம் செய்வதற்கான சாத்திய கூறுகள் குறித்து ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தனியார் மற்றும் சமூக நல அமைப்புகள் (NGO) நடத்தும் மருத்துவ முகாம்களில் உருவாகும் மருத்துவ கழிவுகள் ஒழுங்காக அகற்றப்படுகிறதா என்பதை மாநகர நல அலுவலர் அவர்கள் கண்காணிக்க வேண்டும்.

சென்னை மாநகரில் அமைக்கப்பட்டுள்ள She Toilet கழிப்பிடங்களில், பெண்கள் பயன்பாட்டிற்கான நாப்கின் வசதிகள் சரிவர அமைக்கப்பட வேண்டும் என்பதற்கான கோரிக்கையினை தாங்கள் முன் வைத்துள்ளீர்கள். இதற்கான தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், Battery Operated Vehicles (BOV) வாகனங்களுக்கு சார்ஜர் வசதி ஏற்படுத்தி தரப்பட வேண்டுமென்றும், தற்போது வழங்கப்பட்டுள்ள BOV வாகனங்கள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன என்றும், எனவே, புதிய BOV வாகனங்கள் வழங்கப்பட வேண்டும் அல்லது அவற்றுக்கு மாற்றாக Tata

Ace வாகனங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதையும் மாமன்ற உறுப்பினர் அவர்கள் கோரிக்கையாக முன் வைத்துள்ளீர்கள்.

அதே போன்று, சக்திமான், காம்பாக்டர், டிப்பர் லாரிகள் முறையாக Fitness Certificate (FC) பெறுகின்றனவா என்பது குறித்து கேள்விக்குறியாக உள்ளன என்றும், இவை பெரும்பாலும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன என்றும், Palfinger எனும் தோட்டக் கழிவுகளை அகற்றும் இயந்திரத்திலும் கோளாறுகள் உள்ளன என்றும், இவை குறித்த நேரத்தில் பழுதுபார்த்து, பயன்பாட்டிற்கு தயாராக வழங்கப்பட வேண்டுமென்கிற கோரிக்கையினை சுகாதார நிலைக்குழு தலைவர் அவர்கள் முன் வைத்துள்ளீர்கள். இது தொடர்பாக, தகுந்த பதிலை சுகாதார நிலைக்குழு தலைவர் அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று இயந்திர பொறியியல் துறையின் மேற்பார்வை பொறியாளர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

மெரினா கடற்கரையில் உள்ள பொதுக்கழிப்பிடம் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. நே. சிற்றரசு, தலைவர், நிலைக்குழு (பணிகள்)**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டு குழு தலைவர்களே, நியமனக்குழு உறுப்பினர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே, அனைத்து துறை அதிகாரிகளே, ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த வணக்கங்கள்.

முன்னதாக உரையாற்றிய சுகாதார நிலைக்குழு தலைவர் அவர்கள் தெரிவித்த பிரச்சனைகள், பெருநகர சென்னை மாநகராட்சியின் 200 வார்டுகளிலும் காணப்படுகின்றன. இவ்வாறான பிரச்சனைகள் அனைத்தும் விரைவில் சரி செய்து தரப்பட வேண்டும்.

அடுத்ததாக, O & M (Operation & Maintenance) பணிகளுக்கான செயல்முறை குறித்து தெளிவான புரிதல் இல்லாத நிலை காணப்படுகிறது. O & M ஒப்பந்ததாரர்களுடன் கூட்டம் நடத்தி, இப்பணிகள் சரிவர நடைபெறாத

பட்சத்தில் ஏற்படும் விளைவுகள் குறித்து அவர்களுக்கு விளக்கப்பட வேண்டும். உதாரணமாக, பூங்கா பராமரிப்பு தொடர்பான பணிகள் குறித்து முன்பு கூறப்பட்டது. Terms & Conditions-ஐப் பார்த்த போது, பணிகள் முறையாக நடைபெறும் என தோன்றியது. ஆனால், சில இடங்களில் ஏற்பட்ட சிறிய தவறுகள் மாநகராட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்துகின்றன. எனவே, இத்தவறுகளை கண்டறிந்து, அவற்றை திருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சக்திமான் இயந்திரம் தொடர்பாக, கொள்முதல் முதல் பராமரிப்பு வரை ஒரே நிறுவனம் பொறுப்பேற்கின்றது. அதன் பழுதுகளை சரி செய்ய 15 நாட்கள் அவசியமில்லை. தற்போது மழைக்காலம் என்பதால், மரக்கிளைகள் வெட்டும் பணிக்காக இவ்வியந்திரம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த இயந்திரம் தொடர்பான புகார்களை நிலைக்குழு மற்றும் வார்டுகுழு கூட்டங்களில் மன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து எழுப்பி வருகின்றனர்.

O & M ஒப்பந்ததாரர்கள் Terms & Conditions-ஐ முறையாக பின்பற்றுகிறார்களா என்பதை கண்காணிக்க வேண்டும். இதற்கென தனி அதிகாரி நியமிக்கப்பட்டு, அவரிடமிருந்து அறிக்கையை பெற்ற பின்னரே அவர்களுக்கு சேர வேண்டிய பணத்தினை வழங்கும் நடைமுறை அமல்படுத்தப்பட வேண்டும்.

பூங்கா பராமரிப்பு பணிகளில் கடந்த இரண்டு மாதங்களாக மாநகராட்சி ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. ஒப்பந்ததாரர்களே ஊதியத்தை வழங்கி வருகின்றனர். ஆனால், மாநகராட்சி நிர்ணயித்த ஊதிய விகிதங்களின்படி ஊதியம் செலுத்தப்பட்ட வங்கி ஆதாரங்களை பார்த்த பின்னரே மாநகராட்சி பணம் வழங்க வேண்டுமென்கிற நிபந்தனை உள்ளது. இதனை தாங்கள் மிகவும் கவனமாக கண்காணிக்க வேண்டும்.

இவ்வளவு நிபந்தனைகளுடன் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும், சிறிய தவறுகள் ஏற்படுவதை கூட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர்

அவர்களும் அனுமதிக்க மாட்டார்கள். இரவு பகல் பாராமல் தமிழ்நாட்டு மக்களுக்காக உழைத்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் ஆகியோர் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து துறை சார்ந்த அதிகாரிகளுடன் கூட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

2026-ஆம் ஆண்டு மீண்டும் திராவிட முன்னேற்ற கழக ஆட்சி அமையும். **(கைதட்டல்)** இந்த மாமன்றத்திலும், இதே போன்று பெரும்பான்மையுடன் திராவிட முன்னேற்ற கழக மாமன்ற உறுப்பினர்கள் இருப்பார்கள். இது தொடர வேண்டுமானால், அதிகாரிகள் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.

இந்தியாவிலேயே நம்பர் 1 ஆக திகழ்ந்து வரும் தமிழ்நாட்டின் திராவிட மாடல் ஆட்சி, நம்பர் 1 முதலமைச்சர் என்கிற பெருமையை பெற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் மேலும் புகழ் சேர்க்கும் வகையில், வரும் பருவமழைக்காலத்தில் சிறிய தவறுகளும் சரி செய்யப்பட்டு, அனைத்து அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதையே இந்த மன்றத்தின் வாயிலாக கேட்டு கொண்டு, என் உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. கே. கார்த்திக், வார்டு எண். 7 அவர்கள்.

**திரு. கே. கார்த்திக்**

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், அனைத்து நிலைக்குழு தலைவர்களுக்கும் மற்றும் வார்டு குழு தலைவர்களுக்கும்,

மாமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்து துறை அதிகாரிகளுக்கும், முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

வார்டு-7இல் உள்ள பாலகிருஷ்ணா நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்க வேண்டி கடந்த ஒரு ஆண்டு காலமாக கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரை பணிகள் துவங்கப்படவில்லை.

வெற்றிவேல் நகரில் உள்ள 8 தெருக்களில் 3 தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் பணிகள் முடிக்கப்படாமல் உள்ளன. மழைக்காலங்களில் நீர் தேங்கும் பகுதியாக இருப்பதால், இப்பணிகள் விரைவில் துவங்கி முடிக்கப்பட வேண்டும்.

கடந்த ஆண்டில் பக்கிங்காம் கால்வாய் ஓரத்தில் மருத்துவ கழிவுகள் கொட்டப்பட்டது தொடர்பாக மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன். வார்டுகுழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும், இதுவரை கழிவுகள் அகற்றப்படவில்லை. அந்த வழியே பக்கிங்காம் கால்வாயில் மழைநீர் செல்லும். எனவே, உடனடியாக மருத்துவ கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

வார்டு-7 இல் மொத்தம் 188 சாலைகள் உள்ளன. இதில் 46 சாலைகள் மட்டுமே புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. 29 சாலைகள் நல்ல நிலையில் உள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட சாலைகள் மோசமான நிலையில் உள்ளன. புதிய மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கப்பட்ட பிறகும், மூன்று ஆண்டு காலமாக இந்தச் சாலைகள் சீரமைக்கப்படாமல் உள்ளன.

பெரியார் நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், அந்தச் சாலை யாருடையது என்பது தெளிவாக இல்லாததால், மாநகராட்சி அந்தச் சாலையை சீரமைக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த வாரம் அப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தினர். எனவே, உடனடியாக அந்தச் சாலையை சீரமைத்து தருமாறு கேட்டு கொள்கிறேன்.

**ஆணையர்**

அந்தச் சாலையின் பட்டா தனியார் பெயரில் உள்ளது. அந்த நிலத்தின் மீதான உரிமை மாநகராட்சியிடம் இல்லை. நாங்கள் பேசி விட்டோம். நீங்களும் இந்நிலத்தின் உரிமையாளரிடம் பேசி, தானபத்திரம் மூலம் மாநகராட்சி பெயரில் நிலத்தை ஒப்படைக்க சொல்லுங்கள். ஒப்படைத்தவுடன் ஒரு வாரத்திற்குள் பணி துவங்கப்படும்.

**திரு. கே. கார்த்திக்**

மிக்க நன்றி. கார்கில் நகர் குளம் சீரமைப்பு பணி மிகவும் மெதுவாக நடைபெறுகிறது. அகற்றப்படும் மண்ணை முறையாக அப்புறப்படுத்தாமல், பக்கிங்காம் கால்வாய் ஓரமாக வைக்கப்படுகின்றது. வார்டு-7 இல் மழைநீர், பக்கிங்காம் கால்வாயில் செல்லும் வகையில் இப்பணி விரைவாக முடிக்கப்பட வேண்டும்.

மாமன்ற உறுப்பினர் அலுவலகம் அருகிலுள்ள குடியிருப்பு பகுதியில் குப்பைகளை தரம் பிரிக்கும் Shed இருந்தது. அதை ஒதுக்குப்புறமாக மாற்ற வேண்டி, கே.சி.பி. சாலையில் இடம் தெரிவு செய்யப்பட்டு Shed அமைத்து தர வேண்டி மூன்றாண்டுகளாக கோரிக்கை விடுக்கப்பட்டும், இதுவரை Shed அமைத்து தரப்படவில்லை. தற்போது அந்தச் சாலை முற்றிலுமாக ஆக்கிரமிக்கப்பட்டு குப்பை கொட்டும் கிடங்காக மாற்றப்பட்டுள்ளது. இந்த இடம் சுகாதாரமாக பராமரிக்க வேண்டுமென்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். Shed அமைத்து பணி மேற்கொள்ள வேண்டும் அல்லது இந்த இடத்தினை மாற்றி அமைக்க வேண்டுமென்று பலமுறை கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

வார்டு-7 இல் 4 பூங்காக்கள் உள்ளன. தற்போது புதிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் 3 பூங்காக்களில் மட்டுமே பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஒரு பூங்கா ஒப்பந்தத்தில் விடுபட்டுள்ளதாக

தெரிவிக்கப்படுகிறது. அந்தப் பூங்கா பராமரிப்பு இல்லாமல் அசுத்தமாக உள்ளது. உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

சொத்து வரியின் Annual Value Tax-இல் 30% விகிதத்தில் 23% மாநகராட்சிக்கும், 7% சென்னை குடிநீர் வாரியத்திற்கும் செல்கிறது. ஆனால், தற்போது புதிய குடிநீர் இணைப்பு பெறுபவர்களுக்கு மீட்டர் பொருத்தப்படுவதால், 25000KL நீர் பயன்படுத்தினால் மாதம் ரூ.500/- கட்டணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது என்று என்னிடம் அம்மையார் ஒருவர் தெரிவித்தார். குடிநீர் வாரிய அதிகாரிகளிடம் இதுகுறித்து கேட்ட போது, பழைய இணைப்புகளுக்கு 6 மாதங்களுக்கு ஒரு முறை ரூ.702/- மட்டுமே செலுத்த வேண்டியதாகவும், புதிய இணைப்புகளுக்கு 6 மாதங்களுக்கு ரூ.3000/- கட்டணம் செலுத்த வேண்டுமெனவும் குடிநீர் வாரிய அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. ஒரே பகுதியில் இரு விதமான கட்டண விகிதங்கள் இருப்பது புதிய இணைப்பு பெறுபவர்களுக்கு பெரும் சுமையாக உள்ளது. எனவே, இது குறித்து ஆய்வு செய்து முறைப்படுத்த வேண்டுகிறேன்.

மண்டலம்-1 இல், வார்டு-7-ல் 40 மாடுகள் தங்கும் வகையில் Cow Shed அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், மண்டலம்-1 முழுவதிலும் மொத்தம் 848 மாடுகள் உள்ளன. இதில் 50% மாடுகளுக்கே இடவசதி உள்ள நிலையில், மீதமுள்ள மாடுகளுக்கான இடவசதி இல்லாததால், மாடு உரிமையாளர்கள் தங்களுக்கு இடம் ஒதுக்கி வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். 400 மாடுகள் தங்கும் அளவிற்கு Cow Shed அமைக்கப்பட வேண்டிய அவசியம் உள்ள நிலையில், தற்போது 40 மாடுகள் மட்டுமே தங்கும் வகையில் Cow Shed அமைக்கப்பட்டுள்ளது. மேலும், கட்டி முடிக்கப்பட்ட Cow Shedல் தேவையான அடிப்படை வசதிகள் இல்லை என இதன் சங்க உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, இவர்களின் வேண்டுகோளினை கருத்திற் கொண்டு, உரிய ஆய்வினை மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.

வார்டு 7-ல் ராம்கி நிறுவனத்தின் தூய்மை பணிகளில் பெரிதும் பின்னடைவு உள்ளது. 14 BOV வாகனங்கள் மற்றும் 30 தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். ஆனால், 10-12 BOV வாகனங்கள் மற்றும் 22-25 பணியாளர்களே பணியில் உள்ளனர். இதனால் தூய்மை பணி பாதிக்கப்பட்டு, பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. எனவே, வருகை பதிவு முறைப்படுத்தப்பட்டு, கூடுதல் பணியாளர்கள் பணியிலமர்த்தப்பட வேண்டும்.

வார்டு 7-ல் வீடு கட்டுபவர்களுக்கு அடிக்கடி அபராதம் விதிக்கப்படுகின்றது. 2024-ஆம் ஆண்டு தேவராஜ் என்பவர் ஒரு வீடு கட்டி கொண்டிருந்தார் அவரிடம் முதலில் அபராதமாக ரூ.5000 பெற்று விட்டு, ரசீது கொடுக்கப்பட்டது. பின்னர் அவரிடம் ஆறு மாதத்திற்கு பிறகு ரூபாய் 3000 பெற்று விட்டு அதற்கு ரசீது ஏதும் தரப்படவில்லை. மீண்டும் அவரிடமே சென்று ரூபாய் பத்தாயிரம் கேட்கிறார்கள். இது தொடர்பாக அந்த நபர் என்னிடம் கடிதம் அளித்துள்ளார். அந்தக் கடிதத்தினை நான் தங்களிடம் அளிக்கிறேன்.

ஞாயிறு விடுமுறை நாளிலும் சென்று அபராதம் செலுத்த சொல்லி கேட்கிறார்கள். கேட்டால் புகார் வந்துள்ளதாக கடிதத்தினை காண்பிக்கிறார்கள். அந்தப் புகார் மனுவினை நான் தங்களிடம் அளிக்கிறேன். அதில் எந்த ஒரு தொலைபேசி எண்ணோ, புகார் அளித்த நபரின் பெயரோ கிடையாது.

மண்டலம்-1 முழுவதிலும் 52 வீடுகளுக்கும், வார்டு 7-ல் 3 வீடுகளுக்கும் காவல் துறை உதவியுடன் சீல் வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள். இந்தச் சீலை திறப்பதற்கு ஒருவர் உத்தரவினை பெற்றும் அந்தச் சீலை திறப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே, இந்தச் சீலை திறந்து விடுவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு சில அதிகாரிகள் மெத்தனமாக செயல்படுவதால் அனைவருக்கும் கெட்ட பெயர் ஏற்படுகிறது. மன்ற உறுப்பினர்களுக்கும் இதன் மூலம் தர்மசங்கடம் ஏற்படுகிறது. எனவே, இதனை சரி செய்ய வேண்டுகிறேன். பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மேயர்**

மழைநீர் வடிகால்வாய் அமைக்க வேண்டி கோரிக்கையினை முன் வைத்துள்ளீர்கள். இந்த மழைக்காலம் தொடங்குவதற்கு முன்பாக முடிக்கப்பட வேண்டிய பணிகள் மட்டுமே துவங்கி நடைபெறுகின்றன. மீதமுள்ள பணிகள் ஜனவரி மாதத்தில் துவங்கப்படும்.

பக்கிங்ஹாம் கால்வாயில் மருத்துவ கழிவுகள் கொட்டப்படுவதாக தாங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். வட்டார துணை ஆணையர் அவர்கள் இது தொடர்பாக கடந்த ஆண்டிலேயே நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். தாங்கள் தற்போது இது தொடர்பாக தெரிவித்துள்ள காரணத்தினால், அங்குள்ள மருத்துவ கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு வட்டார துணை ஆணையர் அவர்களை கேட்டு கொள்கிறேன்.

ராம்கி நிறுவனத்தால் குப்பை தரம் பிரிக்கும் Shed அமைத்து தர வேண்டுமென்கிற கோரிக்கையினை முன் வைத்தும், இதனை மாற்றி தர வேண்டுமென்கிற கோரிக்கையினையும் முன் வைத்துள்ளீர்கள். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை குடிநீர் வாரிய கட்டண விகித மாறுபாடு குறித்து அத்துறையினரிடம் தெரிவித்து உரிய தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

Cow Shed மண்டலத்திற்கு ஒன்று வீதம் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், பொதுமக்களின் தேவைக்கேற்றார் போல் கூடுதலாக அமைக்கப்படும். 1வது மண்டல பகுதியில் மாநகராட்சி நிலம் கண்டறியப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பணி மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. க.வி. நாகவள்ளி அவர்கள், வார்டு எண் - 88.

**திருமதி. க.வி. நாகவள்ளி**

நம் மண், மொழி, மானம் காத்திட நமக்காக உழைத்திட்ட தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பல்வேறு திட்டங்களையும், மானியங்களையும், அரசு

துறைகளையும் ஏற்படுத்திய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோரின் வழிதோன்றலாக, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அன்பு ஆகிய பண்புகளோடு திராவிட மாடல் ஆட்சி நடத்தி கொண்டிருக்கும், திராவிட மாடல் ஆட்சி 2.0-ஐ ஆட்சியையும் நடத்த இருக்கும் நமது கழக தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.

இளைஞர்களின் வழிகாட்டியாக விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும், நமது கழக தலைவர் பிறந்த நாளை முன்னிட்டு "அமுத கரங்கள்" திட்டத்தின் மூலம் தினமும் ஆயிரம் பேருக்கு உணவளித்து வரும் சேவையை முன்னெடுத்து வரும், சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் மற்றும் இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் மனமார்ந்த வணக்கத்துடன் போற்றுகிறேன்.

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், ஆளுங்கட்சி தலைவர், வார்டுகுழு தலைவர்கள், நிலைக்குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து துறை சார்ந்த அதிகாரிகள், பத்திரிகை மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்கள் அனைவருக்கும் என் வணக்கம்.

தேர்தல் நெருங்கி வரும் இந்நேரத்தில், இரண்டு முக்கிய கோரிக்கைகளை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்:

**முதல் கோரிக்கை:**

88-வது வார்டு, 87, 89, 90, 104 ஆகிய வார்டுகளின் எல்லைகளை உள்ளடக்கியதாக உள்ளது. மறுவரையறை செய்யப்பட்ட பின், இந்த வார்டு எல்லைகள் கதவு எண்கள் வரை நிர்ணயம் செய்யப்படவில்லை. 3 தெருக்களில் பாதி தெரு 88வது வார்டுக்கும் மற்ற பாதி தெரு 104வது வார்டுக்கும் மற்றும் வேறொரு தெருவில் தெருவின் இடது புறம் 88வது வார்டுக்கும் தெருவின் வலதுபுறம் 90ஆம் வார்டிற்கும் செல்கிறது. இதே போல, 87வது வார்டிலும் பகிர்ந்து கொள்கிறோம்.

**இதனால் ஏற்படும் சிக்கல்கள்:**

எல்லைகள் மாற்றப்பட்டதனால் வாக்குச்சாவடிகள் மாறி, பொதுமக்கள் குழப்பமடைந்து, தங்களுக்கு எந்த வாக்குச்சாவடி ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரியாமல் தடுமாறுகிறார்கள்.

104-வது வார்டு மண்டலம் 8-இல் உள்ளதனால், வரி வசூல் மண்டலம் 7க்கு வர வேண்டியது மண்டலம் 8ற்கு சென்று கொண்டிருக்கிறது.

Deviation மற்றும் அனுமதியில்லா கட்டிடங்கள் போன்ற விவகாரங்களில், எந்த வார்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தெளிவாக இல்லை.

கதவெண்கள் எங்கு முடிகின்றன என்பது பற்றிய தெளிவும் இல்லை.
இவ்வாறான குழப்பங்களை தீர்க்க, உதவி பொறியாளர் மற்றும் வருவாய் துறை மற்றும் தேர்தல் துறை அலுவலரை உள்ளடக்கிய குழுவை அமைத்து, எல்லைகளை தெளிவாக நிர்ணயிக்க வேண்டுகிறேன்.

**இரண்டாவது கோரிக்கை**

தேர்தல் பணிகளுக்காக, அந்தந்த வார்டில் பணிபுரியும் அரசு அலுவலர்களை அதே வார்டில் நியமனம் செய்ய வேண்டும். BLOக்கள் மற்றும் BLO சூப்பர்வைசர்கள் அந்த வார்டில் உள்ளவர்களாக இருந்தால், அவர்கள் பொதுமக்களிடம் எளிதாக அணுக முடியும். புதியவர்கள் நியமிக்கப்படுகின்ற போது, அவர்களுக்கு அந்தப் பகுதி பற்றிய தெளிவும், மக்களுடன் தொடர்பு கொள்ளும் வசதியும் குறைவாக இருக்கும்.

**( மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள் மேயர் இருக்கையில் அமர்தல்)**

எனவே, மேலே கூறிய இரு கோரிக்கைகளுக்கும் உரிய தீர்வை ஏற்படுத்தி தருமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.

வார்டு 88-இல் கடந்த 2023 ஆம் ஆண்டு புதியதாக அமைக்கப்பட்ட இரண்டு பூங்காக்களுக்கு, பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் பெயர்களை சூட்டும் வகையில் மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சென்னை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் இதுவரை எந்தவித தகவலும் கிடைக்க பெறவில்லை.

அதே போல், நான் மாமன்ற உறுப்பினராக பொறுப்பேற்ற பிறகு, சுமார் ரூபாய் 80 கோடி மதிப்புள்ள 55,000 சதுர அடி நிலத்தை மீட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது. இதில் ஒரு குறிப்பிட்ட சர்வே எண் கொண்ட நிலத்தின் வகைப்பாட்டை மாற்றும் தீர்மானமும் மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, மாவட்ட வருவாய் அலுவலர், நிலம் மற்றும் உடைமை துறை மூலமாக மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தொடர்ந்து பலமுறை முயற்சி மேற்கொண்டும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் இதனை அறிவித்துள்ளார். எனவே, மாமன்றத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்களை கேட்டு கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படும் கடிதங்களில், தீர்மானங்களை காலக்கெடுவிற்குள் நிறைவேற்ற வேண்டிய வரையறையை உள்ளடக்கி அனுப்ப வேண்டும். சில விஷயங்கள் நீண்ட செயல்முறையில் சிக்கி, திட்டங்கள் நிறைவேறாமல் போகும் சூழ்நிலை உருவாகிறது. எனவே, நினைவூட்டல் கடிதம் அனுப்பி, தீர்மானங்களை முடிவுக்கு கொண்டு வர வேண்டுகிறேன்.

**திருமதி க.வி. நாகவள்ளி**

நான் 5 மாவட்ட ஆட்சியர்களை நேரடியாக சந்தித்து, நில மாற்றம் தொடர்பான கோரிக்கையை முன் வைத்துள்ளேன்.

**பாடி மேம்பாலம் தொடர்பாக**

இரவு 10 மணிக்கு மேல் பாடி மேம்பாலத்தின் மேல் ஆட்டோக்கள், டாட்டா ACE, சில நேரங்களில் லோடுடன் லாரிகள் வரை நிறுத்தப்படுவதால், மேம்பாலம் ஒரு பார்க்கிங் ஏரியாவாக மாறி உள்ளன. இது அதன் ஸ்திர தன்மையை பாதிக்க

கூடியதுடன், பொதுமக்களுக்கு பாதுகாப்பு குறைபாடாகவும் உள்ளது. எனவே, இதற்கான நிரந்தர தீர்வினை ஏற்படுத்தி தருமாறு கேட்டு கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

வட்டார துணை ஆணையர் மற்றும் மண்டல அலுவலர், இது தொடர்பாக போக்குவரத்து துறைக்கு கடிதம் அனுப்ப வேண்டும்.

**திருமதி க.வி. நாகவள்ளி**

பலமுறை புகார்கள் அளித்தும், உடல்நிலை பாதிக்கப்பட்ட தெரு நாய்களுக்கு சிகிச்சை அளிக்க போதுமான வாகனங்களும் பணியாளர்களும் இல்லாததால், பொதுமக்கள் Blue Cross போன்ற NGO-களை அணுக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், அவர்கள் இதுவரை வார்டு 88-இல் அவர்களது சேவையினை வழங்கவில்லை.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

புகார் அளிக்கும்போது, கால்நடை துறையின் பணியாளர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறார்கள்.

**திருமதி க.வி. நாகவள்ளி**

மண்டலம் 7-இல் அதற்கான வசதிகள் மற்றும் பணியாளர்கள் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

**ஆணையர்**

தற்போது 5 ABC மையங்களில் Attached Clinic உள்ளது. புதியதாக அமைய உள்ள ABC மையங்களில் pet clinic அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திருமதி க.வி. நாகவள்ளி**

முகப்பேர் பகுதியில் அரசு கால்நடை மருத்துவமனை உள்ளது. உடல்நிலை பாதிக்கப்பட்ட மற்றும் அடிபட்ட நாய்கள் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளன. எனவே, மண்டலத்திற்கு கூடுதலாக ஒரு வாகனமும், அதற்கான பணியாளர்களும் வழங்கப்பட்டால், இந்த பிரச்சனையை நாமே

கையாள முடியும். இது பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பரிசீலிக்க வேண்டிய முக்கிய கோரிக்கையாகும்.

**ஆணையர்**

உடல்நிலை பாதிக்கப்பட்ட நாய்களை எடுத்து செல்ல தனி வாகனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி க.வி. நாகவள்ளி**

நான்கு மாதங்களுக்கு முன் மன்றத்தில் பேசிய போது, பாடி பகுதியில் உள்ள Side Drains அனைத்தையும் சிறிய மழைநீர் வடிகால்வாயாக மாற்ற வேண்டுமென்கிற கோரிக்கையினை முன் வைத்தேன். மாண்புமிகு மேயர் அவர்கள் நான்கு கட்டங்களாக நிதி ஒதுக்கீடு செய்வதாக உறுதி அளித்தும், முதல் கட்ட நிதியாக ரூபாய் 6 கோடி வழங்கப்படவில்லை. வழங்கப்பட்டால், நான்கு மாதங்களில் பணிகளை முடித்திருக்க முடியும்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

அடுத்த மழைக்காலத்திற்குள் அமைத்து கொடுக்கப்படும்.

**ஆணையர்**

மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு விட்டது.

**திருமதி க.வி. நாகவள்ளி**

88வது வார்டு தொடர்பான மதிப்பீடுகள் ஒப்புதலுக்காக வந்துள்ளன. அவற்றை உடனடியாக நிறைவேற்றி தருமாறு தனிப்பட்ட முறையில் கேட்டு கொள்கிறேன், நன்றி. வணக்கம்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.ப. ஸ்ரீராமுலு அவர்கள், வார்டுகுழு தலைவர், மண்டலம்-5 / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.54.

**திரு.ப. ஸ்ரீராமுலு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும், எங்களை வழிநடத்தி கொண்டிருக்கும்

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் அவர்களையும் பணிவுடன் வணங்குகிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்களே, வார்டுகுழு தலைவர்களே, நிலைக்குழு தலைவர்களே, நியமனக்குழு உறுப்பினர்களே, மற்றும் சக மாமன்ற உறுப்பினர்களே—உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கங்களை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர் ஆகியோர், கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு வார்டு-58-இல் அறிமுகப்படுத்திய, ஒரு மணி நேரத்திற்கு 40 MQ திறன் கொண்ட Super Sucker வாகனம் குறித்து இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 40 MQ என்பது 40,000 லிட்டர் திறன் கொண்டதாகும். அந்த வாகனத்தை, 5வது மண்டலத்திற்குட்பட்ட North Waltax Road, வார்டு-53-இல் மழைநீர் வடிகால்வாயில் உள்ள மேன்ஹோலில் தேங்கியுள்ள கழிவுகளை அகற்றுவதற்காக, கடந்த 15 நாட்களாக மண்டல அலுவலர், செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோர் தொடர்ந்து கேட்டும் இதுவரை அந்த வாகனம் வரவில்லை.

நான்கு நாட்களுக்கு முன்பு வரை, வார்டு-54-இல் உள்ள பாஷ்ய தெரு, கண்ணையா தெரு, முனியப்பன் தெரு, பெருமாள் தெரு ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட அடைப்பினால், மழைநீர் பெரிதும் தேங்கி நிற்கிறது.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

வாகனம் விரைவில் வரும்.

**திரு. ப. ஸ்ரீராமுலு**

அந்த வாகனம் குஜராத்திலிருந்து கொண்டு வந்ததாக தாங்கள் கூறியிருந்தீர்கள். ஒரு வேளை அந்த வாகனம் மீண்டும் குஜராத்திற்கே சென்று விட்டதா என்கிற ஐயப்பாடு எழுந்துள்ளது. தொடர்ந்து கேட்டு கொண்டிருக்கிறோம். ஆனால், வாகனம் வரவில்லை. இதனால் வார்டு-53

மற்றும் 54 முழுவதும் தண்ணீர் தேங்கி நிற்கிறது. Super Sucker வாகனம் மூலம் கழிவுகளை சக்கிங் செய்தால் தான் வார்டு-54 சீராகும்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

உங்களுடைய கேள்வியை ஆணையர் அவர்கள் கவனித்து விசாரித்து வருகிறார். விரைவில் தீர்வு ஏற்படும்.

**ஆணையர்**

வாகனம் தற்போது வார்டு-51 மற்றும் 52-இல் உள்ளது.

**திரு. ப. ஸ்ரீராமுலு**

15 நாட்களாக Supervisor-ரிடம் கேட்டு கொண்டிருக்கிறோம். Break Down ஆகியுள்ளதாகவும், காவல் துறை அனுமதி இல்லை எனவும் கூறுகிறார்கள். ஆனால், நாங்கள் காவல் துறையிடம் பேசி விட்டோம்.

**ஆணையர்**

வாகனம் வருவதில் காலதாமதம் ஏற்பட்டால், மண்டல அலுவலர் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி தூர் வாரும் பணியை மேற்கொள்ளலாம்.

**திரு. ப. ஸ்ரீராமுலு**

நன்றி.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

அடுத்து, திரு. வே. ராஜன் அவர்கள், வார்டுகுழு தலைவர், மண்டலம் -11 / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.143.

**திரு. வே. ராஜன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, இணை ஆணையர், துணை ஆணையர்கள், வட்டார துணை

ஆணையர்கள் மற்றும் அனைத்து துறை அதிகாரிகளுக்கும் என் மனமார்ந்த காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

வளசரவாக்கம் மண்டலத்தில் சுமார் ரூ.7 கோடி மதிப்பீட்டில், சென்னை பெருநகர வளர்ச்சி குழும நிதி உதவியுடன் ராமாபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட பூங்கா, கடந்த 26ஆம் தேதி வெள்ளிக்கிழமை, காணொளி வாயிலாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அன்று மாலை 6.30 மணியளவில், 144ஆவது வார்டில் உள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலையையும், நொளம்பூர் யூனியன் சாலையையும் இணைக்கும் ரூ.33 கோடி மதிப்பிலான பாலம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அர்ப்பணிக்கப்பட்டது. இந்த சிறப்பான நிகழ்வை முன்னெடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்களுக்கும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்களுக்கும், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. காரம்பாக்கம் க. கணபதி அவர்களுக்கும், மாண்புமிகு மேயர் மற்றும் மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

குறிப்பாக, அந்தப் பாலம் குறிப்பிட்ட தேதியில் திறக்கப்படுவதற்காக, இரவு பகல் பாராமல், பலமுறை நேரில் ஆய்வு செய்து, குறித்த காலத்திற்குள் பணியை முழுமையாக நிறைவு செய்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்த நமது ஆணையர் அவர்களுக்கும், துணை ஆணையர், வட்டார துணை ஆணையர், மண்டல அலுவலர், செயற் பொறியாளர், உதவி செயற் பொறியாளர், உதவி பொறியாளர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும், எனது பகுதி வாழ் மக்களின் சார்பாக இந்த மன்றத்தில் எனது நன்றியை பதிவு செய்கிறேன்.

வளசரவாக்கம் மண்டலத்தில் தற்போது 13 மாநகராட்சி பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி காலை உணவு திட்டம் நடைமுறையில் உள்ளது. சில பள்ளிகளில் மாணவர்களுக்கான உணவருந்தும் கூடம் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், பல பள்ளிகளில் உணவருந்தும் கூடம் இல்லை. எனவே, 15 மண்டலங்களிலும் உள்ள அனைத்து சென்னை பள்ளிகளிலும், உணவருந்தும் கூடம் இல்லாத பள்ளிகளுக்கு உணவருந்தும் கூடம் அமைத்து தர வேண்டும் என இந்த மன்றத்தின் வாயிலாக கோரிக்கையை பதிவு செய்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் பணிகள் விரைவாக நிறைவேற வேண்டும் என உத்தரவிட்டுள்ளதன் பேரில், அதிகாரிகள் பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர். இருப்பினும், Tender Package-ல் குறிப்பாக பத்து ஒப்பந்ததாரர்களே பெரும்பாலான பணிகளை எடுத்து வருகின்றனர். ஒரே ஒப்பந்ததாரர் 10க்கும் மேற்பட்ட பணிகளை பல்வேறு வட்டாரங்களில் மேற்கொள்கிறார். இதன் காரணமாக சிறிய பணிகளை கூட மேற்கொள்ள முடியாத நிலைமை உள்ளன. எனவே, ஒவ்வொரு Package-யும் அந்த மண்டலத்திற்குட்பட்ட பணிகளாக வழங்கப்பட வேண்டும் அல்லது அருகருகில் உள்ள இரண்டு மூன்று வார்டு / யூனிட்டுகளுக்குள்ளாக மட்டுமே பணி வழங்க வேண்டும். இது தொடர்பாக மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

11வது மண்டல வார்டுகுழு தலைவர் அவர்கள் கூறியதை நானும் முழுமையாக ஆதரிக்கிறேன். இக்கருத்து பலமுறை மாமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு package-ம் அந்த மண்டலத்திற்குட்பட்ட பணிகளாக இருந்தால், செயல்படுத்த எளிதாக இருக்கும். எனவே, ஆணையர்

அவர்கள் இதில் தனிப்பட்ட கவனம் செலுத்த வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

**திரு. வே. ராஜன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, ஒரு இலட்சம் மற்றும் இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புடைய பணிகள் அந்தத் திட்ட பேக்கேஜில் அடங்கியுள்ளன. இவ்வாறான பணிகளை Class-IV மற்றும் Class-V ஒப்பந்ததாரர்களுக்கு வழங்குவது சாத்தியமாகும். மாநகராட்சியில் 500க்கும் மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது பணிகளை மேற்கொள்பவர்கள் 15-20 ஒப்பந்ததாரர்கள் மட்டுமே என்பதை கவனிக்க வேண்டி உள்ளது. இந்த நிலைமையை மாற்றி, மாண்புமிகு திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் மக்கள் நலத் திட்டங்களை முழுமையாக செயல்படுத்தி, அதன் பயனை மக்களுக்கு நேரடியாக கொண்டு சேர்க்க வேண்டியது அவசியமாகும். நமது மாநகராட்சி ஆணையர் அவர்கள் தன்னலமின்றி, முழு உழைப்புடன் பணிகளை மேற்கொண்டு வருகிறார் என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன். **(கைதட்டல்)**

அடுத்து, வண்டிபாட்டை மற்றும் களம் நிலங்களுக்கு பட்டா வழங்குவதற்காக தடையின்மை சான்றிதழ் (NOC) வழங்கியுள்ளோம். நமது மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி, மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில், வரிசை எண் 6-இல் வார்டு 143 நீங்கலாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கு இரண்டு பாலங்கள் கட்டப்பட உள்ளதால், அந்த இடத்திற்கு பட்டா வழங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியரிடமிருந்து கடிதம் வந்துள்ளது. அவர்களது கருத்து நியாயமானதாகும். அந்தப் பகுதியில் மக்கள் 150 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். சாலைகள் அமைக்கப்படவுள்ள பரப்பளவை தவிர, மீதமுள்ள பகுதிக்கு நில உரிமைப் பட்டா வழங்கும் வாய்ப்பு உள்ளது. எனவே, இக்கோரிக்கையை மாண்புமிகு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பரிந்துரை செய்யுமாறு அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

சாலைகளை அகலப்படுத்துவதற்காக ரூபாய் 12.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்காக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

ஓய்வு பெற்ற மண்டல அலுவலர் திரு. எம். பால் தங்கதுரை அவர்கள், அனைத்து வார்டுகளிலும் கட்டிட வரைபட அனுமதி பெற்ற கட்டிடங்கள், அனுமதியில்லா கட்டிடங்கள் மற்றும் விதிமீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் தொடர்பான விவரங்களை கேட்டும், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் தகவல் பெறும் நோக்கில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு சமர்ப்பித்துள்ளார்.

இவர் நம் மாநகராட்சியில் மண்டல அலுவலராக பணியாற்றியவர் என்பதனால், இவ்வாறு தகவல் கோருவது ஏன் என்கிற சந்தேகம் எழுகிறது. எனவே, நான் அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "தாங்கள் இவ்விவரங்களை ஏன் கேட்கிறீர்கள்? தாங்கள் பணியாற்றிய காலத்தில் எத்தனை கட்டிடங்களுக்கு அனுமதி அளித்தீர்கள், அனுமதி அளிக்கப்பட்ட கட்டிடங்கள் விதிமுறைகளின்படி கட்டப்பட்டதா அல்லது விதிமீறி கட்டப்பட்ட கட்டிடங்களின் மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? எத்தனை கட்டிடங்களுக்கு Completion Certificate வழங்கினீர்கள்?" தாங்கள் பொறுப்பில் இருந்த காலத்தில் இவற்றையெல்லாம் கண்காணித்தீர்களா என கேட்ட போது, அவரிடமிருந்து தெளிவான பதில் கிடைக்கவில்லை. 500, 600 சதுர அடிகளில் வீடு கட்டியவர்களுக்கு தொல்லை அளிக்கும் வகையில் இவர் செயல்பட்டு வருகிறார். இவர் ஓய்வூதியம் பெற்று வருகிறார். எனவே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்கள், அவர் பணியாற்றிய காலத்தில் மேற்கொண்ட மேற்படி நடவடிக்கைகள்

**(மாண்புமிகு மேயர் அவர்கள் மீண்டும் இருக்கையில் அமர்தல்)**

குறித்து ஆய்வு செய்து, அவரது சொந்த வீட்டிற்கும் கட்டிட வரைபட அனுமதி பெற்றுள்ளாரா என்பதை கள ஆய்வு செய்து, விதிமுறைகளை மீறியிருந்தால் அவர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

மேலும், 11வது மண்டல பகுதியில் சமீபத்தில் திறக்கப்பட்ட ஒரு பூங்கா மற்றும் ஒரு பாலம் தொடர்பாக, ராமாபுரம் பகுதியில் அமைக்கப்பட்ட பூங்காவிற்கு, வார்டு குழு தீர்மானத்தின்படியும், பகுதி மக்களின் கோரிக்கையின்படியும், அரசு அனுமதி பெற்று "தியாகி விஸ்வநாத தாஸ் பூங்கா" என பெயரிடப்பட வேண்டும்.

அதே போன்று, பூந்தமல்லி நெடுஞ்சாலை மற்றும் மதுரவாயல் நொளம்பூர் பகுதிகளை இணைக்கும் பாலத்திற்கு, வார்டு குழு தீர்மானத்தின்படி, அரசு அனுமதி பெற்று "பண்டிதர் அயோத்தி தாசர் பாலம்" என பெயரிடப்பட வேண்டும். எனது கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றி கொடுக்கின்ற மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும் எனது பகுதி மக்களின் சார்பாக என் மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி.ச.பாரதி அவர்கள், வார்டு எண்.152.

**திருமதி ச. பாரதி**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, அனைத்து மாமன்ற உறுப்பினர்களே, ஊடக துறையை சார்ந்த நண்பர்களே - உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

**திரு. எஸ்.வி. ரவிச்சந்திரன், வார்டுகுழு தலைவர், மண்டலம் - 14 (குறுக்கீடு)**

சதுப்பு நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கொண்டு வருகிறது.

**மாண்புமிகு மேயர்**

சதுப்பு நிலத்தில் C&D கழிவுகளை கொட்டுவது குறித்து கடந்த மாதம் மன்றத்தில் விவாதிக்கப்பட்டது. அந்த நிலப்பகுதியை வனத்துறை பராமரிக்கிறது.

அவர்களிடம் தகவல் தெரிவிக்கப்படும். நாமும் C&D கழிவுகள் கொட்டப்படாதவாறு கண்காணிக்கிறோம். அந்த இடத்தில் கண்காணிப்பு கேமிரா பொருத்தப்பட்டு ICCC-யுடன் இணைத்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஆணையர்**

வேலி அமைக்கலாம்.

**திருமதி ச. பாரதி**

வளசரவாக்கத்தில் உள்ள "மோகன் மதுபானம்" நிறுவனத்தை அகற்றி அரசுக்கு ஒப்படைக்க வேண்டும் என 2024-ஆம் ஆண்டு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதுவரை அது அகற்றப்படவில்லை. 248 ஏக்கர் நிலம் உள்ளது. மற்ற இடங்களில் காலியாக உள்ள பகுதிகளுக்கு நோட்டீஸ் ஒட்டப்பட்டு சீல் வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலத்தின் விவரம் மட்டும் தெரியவில்லை.

**ஆணையர்**

உரிய விசாரணை மேற்கொள்ளப்படும். Housing Board நிலம் என தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் பயன்படுத்தவில்லை என்றால் reconveyance செய்ய சொல்வார்கள்.

**திருமதி ச. பாரதி**

அவர்கள் மீண்டும், மீண்டும் மேல் நீதிமன்றங்களுக்கு செல்கிறார்கள். ஒரு நியாய விலை கடை கட்டுவதற்கும், சமுதாய நல கூடம் கட்டுவதற்கும் இடமில்லை. மாமன்ற உறுப்பினர் அலுவலகம் இல்லை.

**ஆணையர்**

Housing Board வழக்கில் வெற்றி பெற்றதும், அவர்களிடமிருந்து நிலத்தினை கேட்டு பெற்று கொள்ளலாம்.

**திருமதி ச. பாரதி**

அடுத்ததாக, தெரு நாய்களுக்கு ராபிஸ் தடுப்பூசி செலுத்த வேண்டும் என முதலில் மன்றத்தில் நான் பேசினேன். ஆனால், 152வது வார்டில் இன்னும்

அந்தப் பணி தொடங்கவில்லை. கடந்த 3–4 மாதங்களாக மக்கள் இது தொடர்பாக கேட்டு வருகிறார்கள்.

**மாண்புமிகு மேயர்**

இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள், அந்தந்த மண்டலங்களில், அந்தந்த வார்டுகளில், ராபிஸ் தடுப்பூசி செலுத்தும் பணி மேற்கொள்ளும் போது, சம்பந்தப்பட்ட மாமன்ற உறுப்பினர்களுக்கு தெரிவித்து, அவர்களையும் உடன் அழைத்து சென்று பணி மேற்கொள்ள வேண்டும்.

**ஆணையர்**

200 வார்டுகளுக்கான திட்ட அட்டவணை தயார் செய்யப்பட்டுள்ளது. அந்த அட்டவணையை வழங்குகிறோம்.

**திருமதி ச. பாரதி**

ஐந்து நாட்களுக்கு முன் ஒரு நாய் அடிபட்டு கிடந்தது. Association மூலம் Blue Cross-க்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் வந்து, மூளைக் காய்ச்சலால் நாய் பாதிக்கப்பட்டுள்ளது என கூறி, அதை எடுத்துச் செல்லாமல், "இன்னும் நான்கு நாட்களில் இறந்து விடும்; பின்னர் தெரிவிக்கவும்" என கூறி விட்டு சென்றனர். அந்த நாயை அங்கே விட்டு விட்டால், மக்கள் மற்றும் மற்ற நாய்களுக்கு அச்சுறுத்தலாக இருக்காதா?

**ஆணையர்**

பல NGOs உள்ளனர். பட்டியல் பகிரப்படும். Blue Cross மட்டுமே தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு மேயர்**

பல NGOs உள்ளனர்.

**திருமதி ச. பாரதி**

நாய்கள் இறக்கும் நிலையில் இருந்தால் கூட, அவற்றை தனிமைப்படுத்தி வைக்கலாம்.

**மாண்புமிகு மேயர்**

சமீப காலத்தில் பல NGOs முன் வந்து செயல்படுகின்றனர். எந்தெந்த NGOs உள்ளனர் என்கிற பட்டியலும், ராபிஸ் தடுப்பூசி திட்ட அட்டவணையும் வழங்கப்படும். 152வது வார்டில் நாய்களுக்கு தடுப்பூசி செலுத்தும் போது, தாங்கள் உடன் இருந்து பணிகளை மேற்கொள்ளலாம்.

**திருமதி ச. பாரதி**

அம்மா உணவகங்களில் உள்ள தலைவிகளை இரண்டு வருடத்திற்கு ஒரு முறை மாற்ற வேண்டும் என்ற அரசாணையை வழங்கியுள்ளேன். தலைவிகள் மாற்றப்படவில்லை. அம்மா உணவகத்தில் உள்ள சமையல் பொருள்களை திருடிய தலைவிகளின் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மண்டல அலுவலர்களே முடிவெடுக்கலாம் என தாங்கள் கூறியிருந்தீர்கள். ஆனால், அதற்கான வழிகாட்டி விதிகள் வரவில்லை. இதை அமல்படுத்த வேண்டும். இது தொடர்பாக வார்டுகுழு கூட்டத்தில் 15 முறை பேசியுள்ளேன்.

**மாண்புமிகு மேயர்**

மன்றத்தில் இது குறித்து ஏற்கனவே பேசியுள்ளீர்கள். தவறு செய்த ஒரு நபர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருந்தோம். வழிகாட்டி விதிகளின்படி, இரண்டு வருடத்திற்கு ஒரு முறை மாற்றம் செய்யலாம். எனவே, வழிகாட்டி விதிகளின்படி பணியிட மாற்றம் செய்யுமாறு கேட்டு கொள்கிறேன்.

**திருமதி ச. பாரதி**

அந்த வழிகாட்டி விதிகள் என்னவென்று அலுவலர்கள் கேட்கிறார்கள்.

**ஆணையர்**

வழிகாட்டி விதிகள் அளிக்கப்படும்.

**திருமதி ச. பாரதி**

தவறுகள் செய்தவர்களுக்கு என்ன தண்டனை என்பதை வழிகாட்டி விதிகளில் குறிப்பிட வேண்டும்.

**ஆணையர்**

விரிவாக வழங்கப்படும்.

**திருமதி ச. பாரதி**

மாமன்ற உறுப்பினர் அலுவலகம் இல்லை. ஒரு விளையாட்டு திடலில் அம்மா மினி கிளினிக் இருந்த இடத்தில் அலுவலகம் உள்ளது. இரண்டிற்கும் தடுப்பு சுவர் இல்லை. இதற்கு தடுப்பு சுவர் அமைத்து தர வேண்டும். பூங்காவில் மது அருந்தி படுத்து உறங்குகிறார்கள். காவலர்களும் இல்லை. திறந்தவெளி நிலத்தில் (OSR) நிலத்தில் அலுவலகம் கட்ட கூடாது என கூறியுள்ளீர்கள். எனக்கு மாமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டி தர வேண்டும்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

152வது வார்டு அருகில் மண்டல அலுவலகம் உள்ளது. மண்டல அலுவலகத்தில் ஒரு அறை ஒதுக்கி தருமாறு கேளுங்கள்.

**திருமதி ச. பாரதி**

மண்டல அலுவலகத்தில் ஒரு அறை ஒதுக்கி தருமாறு கேட்டதற்கு அலுவலர்கள் "தர மாட்டோம்" என கூறி விட்டார்கள்.

**மாண்புமிகு மேயர்**

11வது மண்டலம் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதி. மண்டலம் 1, 2, 3, 11, 14, 15 ஆகியவற்றில் தற்போது மேம்பாட்டு பணிகள் நடைபெறுகின்றன. வார்டு வாரியாக முக்கிய மேம்பாட்டு பணிகள் நடைபெறுகின்றன. அதே போன்று மாமன்ற உறுப்பினர் அலுவலகமும் முக்கியமானது. எனவே, மண்டல அலுவலத்தில் மாமன்ற உறுப்பினருக்கான அலுவலகம் அமைத்து தர வேண்டும்.

**ஆணையர்**

மண்டல அலுவலகத்தில் மாமன்ற உறுப்பினருக்கான அலுவலகம் அமைத்து தரப்படும்.

**திருமதி ச. பாரதி**

Silt Catch Pit, Speed Breaker அமைத்து தரப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. கே. ஆர். கதிர்முருகன் அவர்கள், வார்டு எண்.170.

**திரு. கே. ஆர். கதிர்முருகன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, அனைத்து கட்சி மாமன்ற உறுப்பினர்களே, ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே, பத்திரிகையாளர்களே, அனைவருக்கும் என் பணிவான வணக்கங்களை தெரிவித்து கொள்கிறேன்.

முதலில், தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கும் புரட்சி தலைவர் அவர்களையும், புரட்சி தலைவி அம்மா அவர்களையும் நினைவு கூர்ந்து, அவர்களுடைய ஆத்மாக்களுக்கு என் பணிவான வணக்கங்களை செலுத்துகிறேன். இவர்கள் வழியில் கழகத்தை சிறப்பாக வழிநடத்தி வரும் எங்கள் பொது செயலாளர், முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தற்போதைய எதிர்கட்சி தலைவர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்களையும் மரியாதையுடன் வணங்குகிறேன்.

மாமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மூன்றரை ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், என்னை தேர்ந்தெடுத்த என் பகுதி மக்களின் சில பிரச்சனைகள் தீர்க்கப்பட்டுள்ளன. ஆனால், இன்னும் சில முக்கியமான பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளன. அவற்றை இம்மன்றத்தின் வாயிலாக எடுத்துரைக்க விரும்புகிறேன்.

**குடிநீர் மற்றும் மின்சார வாரிய பணிகள் தொடர்பாக:**

170-ஆவது வார்டில் குடிநீர் மற்றும் TANGEDCOவினால் தோண்டப்பட்ட பள்ளங்கள், சீரமைக்கப்பட்ட போது கான்கிரீட் அமைக்கப்படுகின்ற காரணத்தினால், ஒரே வாரத்தில் சிதைந்து மீண்டும் பள்ளங்களாக மாறுகின்றன.

இதற்கென Cold Mix வழங்கி, நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

**பூங்கா பராமரிப்பு தொடர்பாக:**

வார்டு 170-இல் மொத்தம் ஆறு பூங்காக்கள் உள்ளன. அதில் முக்கியமானது, மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் இல்லத்தின் பின்புறத்தில் அமைந்துள்ள Infinity Park ஆகும். மேல்தட்டு மக்கள் வசிக்கும் அந்தப் பகுதியில் உள்ள பூங்காவில் காலை மற்றும் மாலை நேரங்களில் மக்கள் நடைபயிற்சி மற்றும் உடற்பயிற்சிகளை மேற்கொள்கிறார்கள். ஆனால், கடந்த நான்கு மாதங்களாக அந்தப் பூங்கா பராமரிப்பின்றி உள்ளது. புகைப்பட ஆதாரத்துடன் இதனை சமர்ப்பிக்கிறேன். திருவாளர் பத்மாவதி ஒப்பந்ததாரர் என்பவருக்கு இந்த ஒப்பந்தப்புள்ளி நேர் செய்யப்பட்டுள்ளது. ஆனால், சூபர்வைசர் யார், பணியாளர்கள் யார் என்கிற எந்த விவரங்களும் தெரியவில்லை. உதவி பொறியாளரிடம் இது குறித்து தெரிவித்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்தப் பூங்காவில் EDPM + ரப்பர் பூச்சு பூசப்பட்டுள்ள இடம் பழுதடைந்துள்ளது. குழந்தைகளுக்கான விளையாட்டு திடல் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இது குறித்து உடனடி கவனம் செலுத்தப்பட வேண்டும். ஏனெனில், ஆறு பூங்காக்களில் இது மிகவும் முக்கியமானது.

**குடிநீர், கழிவுநீர் மற்றும் பணியாளர் பற்றாக்குறை:**

கடந்த இரண்டு மாதங்களாக வார்டு 170-இல் குடிநீர் பிரச்சனை தீவிரமாக உள்ளது. மக்கள் மிகுந்த பாதிப்பை சந்தித்து வருகின்றனர். குடிநீர் வாரியத்தால் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை.

இதனுடன் கழிவுநீர் பிரச்சனை மற்றும் பணியாளர் பற்றாக்குறை பிரச்சனையும் உள்ளது. இதை மாண்புமிகு மேயர் அவர்களும், ஆணையர் அவர்களும் சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநரிடம் பேசி, வார்டு 170-க்கு உரிய நிவாரணம் ஏற்படுத்தி தர வேண்டும்.

மழைக்காலம் நெருங்கி வருகிறது. குடிநீர் பிரச்சனைக்காக தோண்டப்பட்ட பள்ளங்கள் இன்னும் சீரமைத்து தரப்படவில்லை. குறிப்பாக, கோட்டூர் கார்டன்ஸ், திருவள்ளுவர் நகர், கருணாநிதி நகர் உள்ளிட்ட பகுதிகளில் இந்தப் பிரச்சனைகள் மிகுந்து காணப்படுகின்றன.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

பொத்தாம் பொதுவாக சொல்ல கூடாது. ஒரு வாரத்திற்கு முன்னர் போரூர் அருகில் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. 169-ஆவது வார்டும் 170-ஆவது வார்டு அருகிலேயே உள்ளது. எனவே, இந்தப் பிரச்சனை எனக்கும் நன்கு தெரியும். இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே அந்தப் பணி முடிக்கப்பட்டது. விரைவில் முழுமையாக சீரமைத்து தரப்படும்.

**திரு. கே. ஆர். கதிர்முருகன்**

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, போரூர் பகுதியில் பணி ஒரு வாரத்திற்கு முன்னதாகவே மேற்கொள்ளப்பட்டது. ஆனால், நான் கூறுவது, கடந்த இரண்டு மாதங்களாக நிலவி வருகின்ற பிரச்சனை குறித்து. பள்ளங்கள் தோண்டப்பட்டு இதுவரை சீரமைத்து தரப்படவில்லை. இதனால் கோட்டூர் கார்டன்ஸ், திருவள்ளுவர் நகர், கருணாநிதி நகர், பாண்டிச்சேரி சாலை, யாதவாள் தெரு, நாயுடு தெரு, பெருமாள் கோயில் தெரு உள்ளிட்ட 12 தெருக்களில் மக்கள் மிகுந்த பாதிப்பை சந்தித்து வருகின்றனர்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

தற்போது பணி நடைபெற்று வருகிறது. கருணாநிதி நகர் மற்றும் யாதவாள் தெருவில் இரண்டு மூன்று நாட்களுக்குள் பிரச்சனை தீர்க்கப்படும் என சென்னை குடிநீர் வாரிய பொறியாளர் தெரிவித்துள்ளார்.

**திரு. கே. ஆர். கதிர்முருகன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, அதே போன்று 170-ஆவது வார்டில் கடந்த ஓராண்டாக சிறப்பாக செயல்பட்ட இ-சேவை மையம் தற்போது செயலிழந்துள்ளது. எனவே, அந்த மையத்தின் செயல்பாட்டை மீண்டும் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

இ-சேவை மையம் தொடர்பான பிரச்சனை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்து செல்லப்படும்.

**திரு. கே. ஆர். கதிர்முருகன்**

மாநகராட்சி சார்பாக நாய்களுக்கு Chip பொருத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த Chip நாய்களுக்கு பொருத்தப்படுவதால் மக்களுக்கு என்ன நன்மை கிடைக்கும் என்பது தெளிவாக தெரியவில்லை. நான்கு மாமன்ற உறுப்பினர்கள் நாய்கள் தொடர்பான பிரச்சனையினை இங்கு பேசினர்.

**ஆணையர்**

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், வீட்டில் வளர்க்கப்படும் நாய்களுக்கு உரிமம் வழங்கும் ஒருங்கிணைந்த இணையதளம் மற்றும் செயலியை மாண்புமிகு மேயர் அவர்கள் தொடங்கி வைக்க உள்ளார். இந்தத் திட்டம் ஒரு மாத காலம் கண்காணிக்கப்பட்டு, தேவையான மாற்றங்கள் அதில் மேற்கொள்ளப்படும்.

அனைத்து அரசு மற்றும் தனியார் கால்நடை மருத்துவமனைகள் இந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. கால்நடை மருத்துவர்கள் தங்களது விவரங்களை பதிவு செய்யும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த முழுமையான திட்டம் (Comprehensive Scheme) ஒரு வாரத்திற்குள் நடைமுறைப்படுத்தப்படும்.

வீட்டில் வளர்க்கப்படும் நாய்களின் விவரங்கள் — இன வகை, முகவரி சான்று, வெறிநாய்க்கடி நோய் தடுப்பூசி செலுத்தப்பட்ட சான்றிதழ் ஆகியவை — இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். தடுப்பூசி செலுத்திய மருத்துவர் ஒப்புதல் அளித்த பின்னர் மட்டுமே பதிவு உறுதி செய்யப்படும். நாய்களுக்கு Chip பொருத்தப்பட்டால், அவற்றை தொடாமலேயே Scan செய்யும் வசதி ஏற்படும். அதன் மூலம் உரிமையாளர் விவரங்கள் மற்றும் தடுப்பூசி விவரங்களை உடனடியாக அறிய முடியும்.

Pedigree வகையை சேர்ந்த உயர்தர நாய்களை பலர் வளர்த்து வருகின்றனர். இந்நாய்களை பராமரிப்பது கடினமானது என்கிற காரணத்தினால், ஆறு மாதம் அல்லது ஒரு ஆண்டிற்கு பிறகு பராமரிக்க இயலாமல் அவற்றை தெருக்களில் விட்டு விடுகின்றனர். இதனால் சென்னை மாநகர தெருக்களில் உயர்தர நாய்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இத்தகைய நிலைமைகளை தடுக்கும் பொருட்டு, Pet Registration மற்றும் சிப் பொருத்தும் முறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. ஆர். கதிர்முருகன்**

மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, உங்கள் முயற்சிகளை மனமுவந்து பாராட்டுகிறோம்.

நன்றி. 170-ஆவது வார்டில் அமைந்துள்ள பக்கிங்ஹாம் மற்றும் அடையாறு கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டும். மழைக்காலங்களில் சூர்யா நகர், சித்ரா நகர், வாம்பே ஆகிய பகுதிகளில் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதனால், அவர்கள் தற்காலிகமாக அந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு நிவாரண மையங்களில் தங்க வைக்கப்படுகின்றனர்.

எனவே, தூர்வாரும் பணிகளை மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னதாகவே மேற்கொண்டால், சுமார் ஆயிரம் குடும்பங்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். இது, மக்கள் நலனை கருத்தில் கொண்டு முன்னெடுக்க வேண்டிய முக்கிய நடவடிக்கையாகும்.

மேலும், வாம்பே குடியிருப்பில் உள்ள 195 வீடுகள் வெள்ளத்தால் சேதமடைந்துள்ளன. 20.09.2024 அன்று நடைபெற்ற கூட்டத்தில் இந்தக் கேள்வியினை எழுப்பிய போது, மாண்புமிகு மேயர் அவர்கள் 21.09.2024 அன்று நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை பொறியாளருக்கு கடிதம் எழுதி, தற்போது கட்டப்படும் 1500 குடியிருப்புகளில் வாம்பே குடியிருப்பு தாரர்களுக்கான ஒதுக்கீடு பரிசீலிக்கப்படும் என வாக்குறுதி அளித்தீர்கள். வரும் ஜனவரி மாதத்தில் இக்குடியிருப்புகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்கள் தலைமையில் வழங்கப்பட உள்ளன. ஆனால், இதற்கான கணக்கெடுப்பு இதுவரை நடைபெறவில்லை. எனவே, மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்களால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. கே. ஆர். கதிர்முருகன்**

கணக்கெடுப்பு விவரங்கள் மக்களுக்கு தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும்.

அடுத்து, வார்டு பராமரிப்பு நிதியாக ரூ.10 லட்சம் தொகை 170-ஆவது வார்டிற்கு வழங்கப்படவில்லை.

**மாண்புமிகு மேயர்**

வார்டு பராமரிப்பு நிதி அனைத்து மண்டலங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. கே. ஆர். கதிர்முருகன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, 170-ஆவது வார்டிற்கு பராமரிப்பு நிதி இதுவரை வழங்கப்படவில்லை.

**ஆணையர்**

ரூபாய் 10 லட்சம் வரையிலான தொகையில் நீங்கள் மேற்கொள்ள விரும்பும் பணிகள் என்னென்ன? உதாரணமாக: அலமாரிகள் மற்றும் மேசைகள் பூச்சு வேலை, நடுவண் தடுப்புசுவர் (Centre Median) பூச்சு வேலை, சாலை பழுது சரிசெய்தல் (Patch Work) போன்ற பணிகள் பட்டியலிட்டு அப்பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

**திரு. கே. ஆர். கதிர்முருகன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, நான் எப்போது கேட்டாலும் வார்டு பொறியாளர் “நிதி இல்லை” என பதிலளிக்கிறார்.

**ஆணையர்**

மன்ற உறுப்பினர் அவர்கள், வார்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் பட்டியலை வழங்கினால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு மேயர்**

நீங்கள் பராமரிப்பு நிதியின் கீழ் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்ட போது, "நிதி இல்லை" என வார்டு பொறியாளர் தெரிவித்தாரா?

**திரு. கே. ஆர். கதிர்முருகன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, வார்டு பொறியாளர் "நிதி இல்லை" என்கிறார். கடந்த ஆறு மாதங்களில் 170-ஆவது வார்டில் மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் தெரு பெயர் பலகை அமைக்கும் பணிகள் மட்டுமே நடைபெற்றுள்ளன. அதன் பின் மீன் மார்க்கெட் பணி மேற்கொள்ளப்பட்டது. பொறியாளர் பிரிவின் கீழ் எந்த ஒரு பணியும் மேற்கொள்ளப்படாததால், பணி ஆணை வழங்கப்படவில்லை. இதனால் நான்கு அல்லது ஐந்து பணிகள் நிலுவையில் உள்ளன.

**ஆணையர்**

தாங்கள் மேற்கொள்ள வேண்டிய பணிகளின் பட்டியலை எனக்கு வழங்கினால், அவை மேற்கொள்ளப்படும். 170வது வார்டில் செய்ய வேண்டிய பராமரிப்பு பணிகளின் பட்டியலை வட்டார துணை ஆணையரிடம் சமர்ப்பித்தால், ஒரு வாரத்திற்குள் பணிகள் தொடங்கப்படும்.

**திரு. கே. ஆர். கதிர்முருகன்**

நான் பணிகள் குறித்த பட்டியலை வழங்குகிறேன்.

**ஆணையர்**

அனைத்து மாமன்ற உறுப்பினர்களும், "பராமரிப்பு நிதியின் கீழ் பணிகள் நடைபெறவில்லை; பொறியாளர்கள் பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கவில்லை" என கூறினால், மேற்கொள்ள வேண்டிய வார்டு பணிகள் குறித்த பட்டியலை அந்தந்த வட்டார துணை ஆணையரிடம் சமர்ப்பித்து, எனக்கும் ஒரு நகலை வழங்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

**திரு. கே. ஆர். கதிர்முருகன்**

170-ஆவது வார்டில் 25 தெருக்களுக்கு மழைநீர் வடிகால்வாய்கள் அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி ஆகஸ்ட் மாதத்திலேயே கோரப்பட்டுள்ளன.

ஆனால், இதுவரை பணிகள் தொடங்கப்படவில்லை. அந்த 25 தெருக்களில் முக்கியமான 10 தெருக்களுக்கு மழைக்காலத்திற்கு முன்னதாக மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கப்பட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மீதமுள்ள தெருக்களுக்கு ஜனவரி மாதத்தில் பணிகளை மேற்கொள்ளலாம். ஆணையர் அவர்கள் இதற்கான ஒப்புதலை வழங்க வேண்டும். பிரதான சாலைகளில் மழைக்காலத்திற்கு பின்னர் மழைநீர் வடிகால்வாய்களை அமைத்து கொள்ளலாம். நான் கேட்பது உட்புற சாலைகளில் மழைநீர் வடிகால்வாய்கள் அமைத்து தரப்பட வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

வட்டார துணை ஆணையர் அவர்கள், எந்தெந்த உட்புற சாலைகளில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை கள ஆய்வு செய்து, சரிபார்த்து, பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

**திரு. கே. ஆர். கதிர்முருகன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, இந்த மழைநீர் வடிகால்வாய்கள் அமைத்து தரப்பட்டால், மழைக்காலத்தில் மக்கள் பாதுகாப்பாக இருக்க முடியும். மாமன்றத்தில் உரையாற்றுவதற்கு வாய்ப்பினை வழங்கியதற்காக நன்றி தெரிவித்து, உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. என். சந்திரன் அவர்கள், வார்டுகுழு தலைவர், மண்டலம் -12 / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.166.

**திரு. என். சந்திரன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, அனைத்து மாமன்ற உறுப்பினர்களே, அதிகாரிகளே, அனைவருக்கும் மண்டலம் 12 சார்பாக எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, மண்டலம் 12-இல் மண்டல அலுவலக கட்டிடம் கட்டி வழங்கப்பட வேண்டும்.

**ஆணையர்**

அரசின் ஒப்புதலுக்காக கோப்பு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் அரசின் ஒப்புதல் பெற்று பணிகள் தொடங்கப்படும்.

**திரு. என். சந்திரன்**

தாங்கள் பதிவு துறை தலைவராக இருந்த போது, கிண்டி பகுதிக்கு மாற்றப்பட்ட சார் பதிவாளர் அலுவலகத்தை ஆலந்தூரிலேயே மாற்றி கொடுத்தமைக்காக நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

மேலும், வார்டு 165-இல் கூட்டுறவு நகரில் ரூ.20 கோடி மதிப்பிலான இடத்தை மீட்டெடுத்து மதிற்சுவர் அமைத்தமைக்கும் நன்றி.

அதே போன்று, S.A.P. காலனியில் 20,000 சதுர அடியளவிலான . . . . .

**மாண்புமிகு மேயர்**

கோப்பு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. அரசின் ஒப்புதல் பெற்று விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

**திரு. என். சந்திரன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, AJS நிதி பள்ளி மாணவர்களின் வசதிக்காக நடை மேம்பாலம் கட்டி வழங்கப்பட வேண்டும்.

**ஆணையர்**

இரயில்வே துறையினரின் ஒப்புதல் பெற்று பணிகள் துவங்கப்படும்.

**திரு. என். சந்திரன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, பழவந்தாங்கல் சுரங்கப்பாதையும், 5-ஆவது பிரதான சாலையின் பணிகளும் விரைவில் முடிக்கப்பட வேண்டும்.

**ஆணையர்**

இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும். அரசாணை வெளியிடப்பட்ட பின் நிலம் கையகப்படுத்தும் பணிகள் தொடங்கப்படும்.

**திரு. என். சந்திரன்**

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தில் மனுக்களை பெற்று சிறப்பான சேவை மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

**ஆணையர்**

மரியாதைக்குரிய மன்ற உறுப்பினர் அவர்களே, மண்டலம் 12-இன் மண்டல அலுவலகம், பழவந்தாங்கல் சுரங்கப்பாதை நிலம் கையகப்படுத்தும் பணிகள், AJS நிதி மேல்நிலை பள்ளி ஆகிய மூன்று பணிகளையும் நான் நேரடியாக கண்காணித்து வருகிறேன். விரைவில் முடித்து தரப்படும்.

**திரு. என். சந்திரன்**

வார்டு 157-இல் உள்ள MGR நகரில் மயான பூமிக்கு செல்லும் பாதை இல்லை. அப்பகுதியில் சுமார் 600 வாக்காளர்கள் வசித்து வருகின்றனர்.

**ஆணையர்**

அந்த நிலம் பாதுகாப்பு துறையின் (Defence Land) கட்டுப்பாட்டில் உள்ளது.

**திரு. என். சந்திரன்**

மேலும், 12வது மண்டலத்தில் இரண்டு செயற்பொறியாளர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. மழைக்காலத்தில் பணிகள் துரிதமாக நடைபெற, இரண்டு செயற் பொறியாளர்கள் நியமனம் செய்ய வேண்டும்.

**ஆணையர்**

நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால், இன்னும் 10 நாட்களில் செயற் பொறியாளர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

**திரு. என். சந்திரன்**

நன்றி.

**மாண்புமிகு மேயர்**

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. எ. மதியழகன் அவர்கள், வார்டுகுழு தலைவர், மண்டலம் – 15 / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.192.

**திரு. எ. மதியழகன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர் அவர்களே, கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரை, வெட்டுவாங்கண்ணி, ஈஞ்சம்பாக்கம் உள்ளிட்ட கிழக்கு கடற்கரை சாலை பகுதிகளில் நெடுஞ்சாலை துறை சார்பில் சாலை விரிவாக்க பணிகள் நடைபெற்று வருகின்றன. சாலையின் இருபுறங்களிலும், நெடுஞ்சாலை துறை 5 அடி அகலமும் 5 அடி ஆழமும் கொண்ட மழைநீர் வடிகால்வாய்களை அமைத்து வருகின்றது. இவை, கிழக்கு மற்றும் மேற்கு புறங்களில் பெருநகர சென்னை மாநகராட்சியின் 3 அடி அகலமுள்ள மழைநீர் வடிகால்வாய்களுடன் இணைக்கப்பட உள்ளன. மழைக்காலங்களில் அதிக அளவில் நீர் வெளியேறும் வாய்ப்பு இருப்பதால், ஒரு கிலோமீட்டர் தொலைவில் ஒரே அளவிலான வடிகால்வாய்கள் அமைக்கப்பட வேண்டும்.

**ஆணையர்**

ஒரே அளவிலான வடிகால்வாய்கள் மாற்றியமைக்கப்படும்.

**திரு. எ. மதியழகன்**

நன்றி.

**மாண்புமிகு மேயர்**

நன்றி. அடுத்து மரியாதைக்குரிய திரு. த. விஸ்வநாதன், தலைவர், நிலைக்குழு (கல்வி) அவர்கள் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.181.

**திரு. த. விஸ்வநாதன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, வார்டுகுழு தலைவர்களே, நிலைக்குழு தலைவர்களே, நியமனக்குழு உறுப்பினர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே,

அனைத்து துறை அதிகாரிகள் அனைவருக்கும் முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

181-ஆவது வார்டில் AGS காலனி முதல் பிரதான சாலையில் இறகு பந்து உள்விளையாட்டரங்கம் அமைக்கும் பணிக்காக ரூ.1,99,80,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமைக்காக 181வது வார்டு மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியினைதெரிவித்து கொள்கிறேன்.

சூப்பர் சக்கர் லாரி கொள்முதல் செய்வதற்காக ரூ.30 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஓராண்டு கடந்தும் அது இன்னும் கொள்முதல் செய்யப்படவில்லை. எங்கள் விரிவாக்க பகுதியில் புதிய மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், மணலை எடுக்கும் திறன் சூப்பர் சக்கர் லாரிக்கே உண்டு. எனவே, அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கடந்த நிலைக்குழு கூட்டத்தில், சக்திமான் இயந்திரம் ஒரு மாத காலமாக பழுதடைந்திருந்தது குறித்து கேட்ட போது, மறுநாளே பழுதுபார்க்கப்படும் என தெரிவித்தனர். இயந்திர பொறியியல் துறையின் மெத்தனமான செயல்பாடு திருத்தப்பட வேண்டும்.

**ஆணையர்**

இது தொடர்பாக ஆய்வு கூட்டம் நடத்தி சரி செய்து தரப்படும்.

**திரு. த. விஸ்வநாதன்**

2011-ஆம் ஆண்டு எங்கள் பகுதி விரிவாக்கம் செய்யப்பட்ட போது, புதிதாக தெரு விளக்கு கம்பங்கள் அமைக்கப்பட்டன. ஆனால், பழைய தெரு விளக்கு மின் கம்பங்களை அகற்ற வேண்டும் என பலமுறை கேட்டும், இன்னும் அகற்றப்படவில்லை. அவை விரைவில் அகற்றப்பட வேண்டும்.

**மாண்புமிகுமேயர்**

பழைய தெரு மின் விளக்கு கம்பங்கள் அகற்றுவதற்கு வட்டார துணை ஆணையர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. த. விஸ்வநாதன்**

நீர் நிலைகளை தவிர உள்ள மற்ற புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் பத்திர பதிவு செய்யாத சென்னை மாநகர எல்லைக்குள் வசிக்கும் ஒரு லட்சம் குடும்பங்கள் மற்றும் 3 லட்சம் வாக்காளர்களுக்கு சொத்து வரி மதிப்பீடு செய்யப்படவில்லை. தொடர்ந்து கேட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தில் மனுக்கள் அளிப்பவர்கள் பெரும்பாலும் பத்திரப் பதிவு இல்லாத இடங்களில் வசிப்பவர்களே. எனவே, அவர்களுக்கான சொத்து வரி மதிப்பீட்டில் அரசு தனி கவனம் செலுத்த வேண்டும். இது தொடர்பாக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

**ஆணையர்**

மரியாதைக்குரிய கல்வி நிலைக்குழு தலைவர் அவர்களுக்கு. அரசால் இரண்டு ஆவணங்கள் மட்டுமே கோரப்படுகின்றன:

- வருவாய் துறையினரால் வழங்கப்பட்ட பட்டா
- பதிவு துறை மூலம் பதிவு செய்யப்பட்ட ஆவணம்

இந்த இரண்டும் இல்லையெனில், சொத்து வரி மதிப்பீடு செய்ய முடியாது என்பது அரசின் நிலைப்பாடு. மீண்டும் அரசிடம் கடிதம் எழுதி கேட்டு பார்க்கிறோம்.

**திரு. த. விஸ்வநாதன்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னை மாநகராட்சியில் வணக்கத்திற்குரிய மேயராக இருந்த காலத்திலும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்கள் மேயராக இருந்த நேரத்திலும், அ.இ.அ.திமுக மேயர் சைதை துரைசாமி அவர்கள் மேயராக பதவியில் இருந்த போதும், Red Form நடைமுறையில் இருந்தது. 2011-2016 ஆம் ஆண்டுகளில் நான் மாமன்ற உறுப்பினராக இருந்தேன்.

**மாண்புமிகு மேயர்**

கல்வி நிலைக்குழு தலைவர் அவர்கள் இது தொடர்பாக பலமுறை மாமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். அது அரசின் கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. மீண்டும் அரசின் கவனத்திற்கு எடுத்து செல்லப்படும்.

**திரு. த. விஸ்வநாதன்**

மாண்புமிகு மேயர் அவர்களே, நீர்நிலைகளை தவிர பிற இடங்களுக்கு நீதிமன்றத்தில் சென்று Affidavit பெற்று வரி மதிப்பீடு செய்ய வழி வகை உள்ளது. அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மக்களுக்கு தேவையான அனைத்தையும் வழங்க வேண்டும் என அறிவுறுத்தியதின் அடிப்படையில், உங்களுடன் ஸ்டாலின் திட்டம் இரண்டு முறை முகாம் நடைபெற்று விட்டது. எனவே, இந்த விஷயத்தில் தனி கவனம் செலுத்த வேண்டும். பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**ஆணையர்**

கல்வி நிலைக்குழு தலைவர் அவர்கள் முன் வைத்த கருத்துகளின் அடிப்படையில், குறிப்பான பரிந்துரையுடன் CLA அலுவலகத்தில் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு, CLA அவர்கள் அவற்றை மாநில குழுவிற்கு அனுப்பி உள்ளார்கள். நாங்களும் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம்.

Red Form நடைமுறை தொடர கூடாது என அரசால் அறிவுறுத்தப்பட்டதன் பின்னரே, அந்த நடைமுறை நிறுத்தப்பட்டது. அரசின் கடித நகலை உங்களுக்கு வழங்குகிறேன்.

**திரு. ஜெ. டில்லிபாபு, மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.37**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மாதம் வியாசர்பாடி பகுதியில் உள்ள குளத்தில் கட்டிட கழிவுகள் (C & D Waste) நிரப்பப்பட்டிருந்தது. அதனை சீரமைத்து தர வேண்டிய

கோரிக்கையை மாண்புமிகு மேயர் மற்றும் மரியாதைக்குரிய ஆணையர் அவர்களிடம் கடிதம் மூலம் முன் வைத்தேன். கடிதம் அளித்த மறுநாளே அதிகாரிகள் நேரில் வந்து ஆய்வு மேற்கொண்டு பணிகளை தொடங்கியதற்காக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அதே சமயம், வியாசர்பாடி குளத்தை சீரமைத்து தந்தமைக்கு நன்றி. இக்குளத்தினை மேலும் விரிவுபடுத்தி தர வேண்டுகிறேன்.

**ஆணையர்**

மன்ற உறுப்பினர் அவர்களே, வியாசர்பாடி குளம் 20 ஏக்கர் பரப்பளவிற்கு விரிவுபடுத்தப்பட உள்ளது.

**திரு. ஜெ. டில்லிபாபு**

நுழைவாயில் பகுதியில் நீரின் வெளியேற்றம் அகலப்படுத்தப்பட்டுள்ளதால் தண்ணீர் வீணாகிறது. எனவே, Squeeze Gate அமைத்து, தண்ணீர் தேங்கும் வகையில் மாற்றம் செய்ய வேண்டும்.

**ஆணையர்**

அவ்வாறே திட்டமிடப்பட்டுள்ளது. Squeeze Gate அமைக்கப்பட்டு, அதிகப்படியான நீர் மட்டும் பக்கிங்ஹாம் கால்வாயில் செல்லும் வகையில் குளத்தில் நீர் தேங்கும் அமைப்பாக உருவாக்கப்படும்.

**திரு. ஜெ. டில்லிபாபு**

அங்கு உள்ள கருவேல மரங்கள் அகற்றப்பட்டு, நேராக கால்வாய்க்கு செல்லும் பாதையில் எந்தவித இடையூறும் இல்லாத வகையில் அமைக்கப்பட வேண்டும். மேலும், சமூக விரோத செயல்களை தடுக்கும் வகையில் விளக்கு வசதிகள் ஏற்படுத்தி தர வேண்டும்.

**ஆணையர்**

ஐந்து தெரு விளக்குகள் அமைக்க நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**திரு. ஜெ. டில்லிபாபு**

குளத்தை சுற்றி நடைபாதை அமைத்து தர வேண்டும்.

**ஆணையர்**

வடகிழக்கு பருவமழைக்கு பின்னர் நடைபாதை அமைத்து தரப்படும்.

**திரு. ஜெ. டில்லிபாபு**

நன்றி. இதனை ஒரு சுற்றுலா தலமாக மாற்றி அமைக்க வேண்டும். அப்பொழுது தான் வடசென்னையின் வியாசர்பாடி சூழல் மாற்றம் பெறும்.

அதேபோல், கன்னிகாபுரம் மேம்பால பணி நடைபெற்று வருவதற்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். அந்தப் பாலம் இறங்கி அம்பேத்கர் கல்லூரி சாலை வழியாக அம்பேத்கர் கலை கல்லூரியை சென்றடைவதால், வருங்காலத்தில் அவரின் புகழுக்கு பெருமை சேர்க்கும் வகையில், அந்தப் பாலத்திற்கு பாபா சாகிப் அம்பேத்கர் அவர்களின் பெயர் சூட்ட அரசின் அனுமதி பெற்று நிறைவேற்ற வேண்டும் என இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக கோருகிறேன். நன்றி, வணக்கம்.

**ஆணையர்**

ஜனவரி மாதத்திற்குள் இப்பால பணி முடிவடைந்து விடும்.**திரு. த. சத்தியநாதன் (குறுக்கீடு)**

மாண்புமிகு மேயர் அவர்களே, 145-ஆவது வார்டில் ஒப்பந்ததாரராக உள்ள திரு. பாலாஜி அவர்கள், பத்து சாலைகள் அமைக்கும் பணியை மேற்கொண்டு செயல்பட்டு வந்தார். ஆனால், அருகிலுள்ள மற்றொரு வார்டில் பணியை மேற்கொண்டிருந்த போது ஏற்பட்ட விபத்தில், அவர் கடந்த ஒரு மாதமாக பணியில் ஈடுபட முடியாமல் இருக்கிறார்.

இது தொடர்பாக கடந்த வாரம், துணை ஆணையர் (பணிகள்) மற்றும் தலைமை பொறியாளர் (பொது) ஆகியோருடன் நேரில் சந்தித்து பேசினேன். அவர்கள், ஒரு வாரத்திற்குள் விவரங்களை தெரிவிப்பதாக உறுதியளித்தனர். தற்போது, சில சிமெண்ட் சாலைகள் உடைக்கப்பட்ட நிலையில் உள்ளன. அந்த மூன்று சாலைகளும் உடனடியாக அமைத்து தரப்பட வேண்டும் என, 145-ஆவது வார்டு பொதுமக்கள் சார்பில் மாண்புமிகு மேயர் அவர்களை தாழ்மையுடன் கோருகிறேன்.

மேலும், 145-ஆவது வார்டில் கொசு தொல்லை மிக அதிகமாக உள்ளது. தற்போது, வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே கொசு மருந்து தெளிக்கப்படுகிறது. இம்மழை காலத்தில் காய்ச்சல் போன்ற சுகாதார சீர்கேடுகள் ஏற்படும் அபாயம் உள்ளதால், தினமும் காலை மற்றும் மாலை இரு வேளைகளிலும் கொசு மருந்து தெளிக்க ஏற்பாடு செய்யுமாறு மாண்புமிகு மேயர் அவர்களிடம் பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. வி. வி. கிரிதரன் (குறுக்கீடு)**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே, அதிகாரிகளே, அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கடந்த 08.09.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் ரூ.30.00 கோடி மதிப்பீட்டில் விருகம்பாக்கம் கால்வாயை தூர் வாரி மேம்படுத்தும் பணிகளை தொடங்கி வைத்ததற்காக, பெருநகர சென்னை மாநகராட்சிக்கும், தமிழ்நாடு அரசுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன். (கைதட்டல்)

0-பாயிண்ட் 148-ஆவது வார்டிலிருந்து துவங்கப்படுகின்றன. எனவே, அந்தப் பகுதியிலிருந்து பணிகளை தொடங்க வேண்டும் என்பதே எனது கோரிக்கையாகும். வட்டார துணை ஆணையரும், ஒப்பந்ததாரரும் நேரில் வந்து பார்வையிட்டு சென்றுள்ளனர். தற்போது, மழைக்கு முன்னால் தூர்வாரும் பணிகள் முடிவடைந்த பின்னர், 148-ஆவது வார்டில் சுமார் 800 மீட்டர் நீளத்திற்கு பக்க சுவர்கள் கட்டப்பட்டு Bunds ஏற்படுத்தி தர வேண்டும் என கேட்டு கொள்கிறேன். பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. பரிதி இளம் சுருதி (குறுக்கீடு)**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே, அனைவருக்கும் என் அன்பான வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

எழும்பூர் சட்டமன்ற தொகுதியின் 99-ஆவது வார்டில் அரசப்பர் தெருவில், கடந்த மூன்றரை ஆண்டுகளாக ஒரு இல்லத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட நாய்கள் வளர்க்கப்பட்டு வந்தன. இதனால் அந்தப் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு, மிகுந்த துயரத்திற்கு ஆளாகின்றனர் என்று மூன்று மாதங்களுக்கு முன்னர் இந்த அவையில் பதிவு செய்திருந்தேன். அதனை தொடர்ந்து, மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர் ஆகியோர் காவல்துறையினரின் உதவியுடன் விரைந்து நடவடிக்கை எடுத்து, அந்த நாய்களை அந்த வீட்டிலிருந்து அப்புறப்படுத்தியதற்கு என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

அதே போன்று, வார்டு 99-ன் திடீர் நகர் பகுதியில் பயோ மெட்ரிக் பணி நிறைவடைந்துள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு எப்போது நடைபெறும் என்பதை மாண்புமிகு மேயர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மேலும், பிரிக்ளின் சாலைக்கு "தாத்தா திவான் பகதூர் இரட்டைமலை சீனிவாசன் சாலை" என பெயர் மாற்றம் செய்யும் தீர்மானம் மன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அந்தச் சாலையின் பெயர் எப்பொழுது மாற்றம் செய்யப்படும் என்பதை மாண்புமிகு மேயர் அவர்களின் வாயிலாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மூன்று மாதங்களுக்கு முன்னர், நேரமில்லா நேரத்தில் உரையாற்றும் போது, புல்லாபுரம் மற்றும் சாஸ்திரி நகர் பகுதிகளில் இடிந்து விழும் நிலையில் உள்ள பொதுக்கழிப்பிடம் குறித்து குறிப்பிட்டிருந்தேன். அவை சிறப்பு திட்டங்களின் கீழ் பணி மேற்கொள்ளப்படாமல் இருந்தன. இவை மண்டல

அளவிலேயே பணிகளை துவக்க ஆணையர் அவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

வார்டு 99-இல் உள்ள நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு பகுதிகளில் பத்மாவதி என்கிற ஒப்பந்ததாரர் தூய்மை பணிகளை முறையாக மேற்கொள்ளவில்லை. இதனை கண்காணிக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

அதே போன்று, காவலர் குடியிருப்பிலும், காவலர் வீட்டு வசதி கழகத்தினர் பராமரிப்பு பணிகளை சரிவர மேற்கொள்வதில்லை. எனவே, நமது பெருநகர சென்னை மாநகராட்சி, காவலர் குடியிருப்புகளில் தூய்மை பணிகளை மேற்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு மேயர்**

மன்ற உறுப்பினர் அவர்கள் முன் வைத்த கோரிக்கையின் அடிப்படையில், பிரிக்ளின் சாலைக்கு "தாத்தா திவான் பகதூர் இரட்டைமலை சீனிவாசன் சாலை" எனப் பெயர் மாற்றம் செய்யும் பணிக்கான அரசாணையை எதிர்பார்த்து கொண்டிருக்கிறோம். மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அரசாணை பெறப்பட்டவுடன் விரைவில் இப் பணி மேற்கொள்ளப்படும்.

அதே போன்று, திடீர் நகர் பகுதி நிலம் மயான நில வகைப்பாட்டில் உள்ளதால், வகைப்பாடு மாற்றப்பட்டு, விரைவில் அப்பணியும் துவங்கப்படும்.

அடுத்து, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்.

**மதிப்பிற்குரிய துணை மேயர்**

மாண்புமிகு மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, ஊடக துறை மற்றும் பத்திரிகை துறை சார்ந்த நண்பர்களே, மாநகராட்சி மற்றும் அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுக்கும் என் மனமார்ந்த வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், வணக்கத்திற்குரிய தளபதி திரு மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, பெருநகர சென்னை

மாநகராட்சிக்குட்பட்ட மதுரவாயல், நொளம்பூர் மற்றும் முகப்பேர் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், சன்னதி முதல் குறுக்கு தெருவில் கூவம் ஆற்றின் குறுக்கே பூந்தமல்லி நெடுஞ்சாலை மற்றும் யூனியன் சாலையை இணைக்கும் வகையில் ரூபாய் 31.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட உயர் மட்ட பாலம், பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாலத்தை திறந்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்களுக்கும், மாமன்றத்தின் சார்பில் என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். **(கைதட்டல்)**

மாமன்ற கூட்டத்தில், மாமன்ற உறுப்பினர்கள் திருமதி பவித்ரா நரேஷ்குமார் மற்றும் திருமதி தேவி கதிரேசன் ஆகியோர் தங்கள் வார்டுகளில் சென்னை குடிநீர் வாரியத்தின் மூலம் ஜெட்ராடிங் இயந்திரங்களை உடனுக்குடன் பெற முடியவில்லை என குறிப்பிட்டிருந்தனர். அப்பகுதிகள் அடித்தட்டு மக்கள் வசிக்கும் பகுதிகள் என்பதால், கழிவுநீர் குழாய் அடைப்புகள் அடிக்கடி ஏற்படுகின்றன. எனவே, அப்பகுதிகளுக்கு கூடுதல் ஜெட்ராடிங் இயந்திரங்கள் வழங்கப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர் அவர்களின் வழியாக, ஆணையர் அவர்களின் கவனத்திற்கு. மழைக்காலத்தை எதிர்கொள்ள உள்ள காரணத்தினால், சென்னை குடிநீர் வாரிய தலைமை பொறியாளர் உள்ளிட்ட அதிகாரிகளை அழைத்து, இது போன்ற பிரச்சனைகளை தீர்க்கும் வகையில் ஆய்வு கூட்டம் நடத்தி, தேவையான சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில், துப்புரவு ஆய்வாளர்கள், சுகாதார அலுவலர்கள், உதவிப் பொறியாளர்களுக்கு இலக்கு நிர்ணயித்து, சிறு வியாபாரிகள் உள்ளிட்டவர்களுக்கு அபராதம் விதிப்பது தவிர்க்கப்பட வேண்டுமென்று மாமன்ற உறுப்பினர்கள் கேட்டு கொண்டுள்ளனர். இதனால்,

அன்றாடம் பிழைப்பு நடத்தி வரும் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள் என்றும், மாநகராட்சியின் இத்தகைய நடவடிக்கைகள் அரசிற்கு அவப்பெயரை ஏற்படுத்த கூடும் என்றும் மாமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, சிறு வியாபாரிகளுக்கு அபராதம் விதிப்பதை தவிர்க்குமாறு கேட்டு கொள்கிறேன்.

ஏழை, எளிய, விளிம்பு நிலையில் உள்ள சாமானிய மக்களின் வாழ்க்கை தரம் உயர வேண்டும் என நாளும் சிந்தித்து செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின்படி, பெற்றோர் இல்லாத குழந்தைகளுக்கு, அவர்கள் 18 வயது வரையிலான பள்ளி படிப்பை இடைநிறுத்தம் இல்லாமல் தொடர ரூபாய் 2,000 மாத உதவி தொகை வழங்கும் மகத்தான திட்டத்தை அறிவித்ததற்காக, இந்த நேரத்தில் என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். **(கைதட்டல்)**

அதே போன்று, தூய்மை பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கு மூன்று வேளையும் இலவச உணவு வழங்கும் மனிதநேய திட்டத்தை செயல்படுத்த, ஆண்டுக்கு ரூபாய் 50 கோடி என மூன்று ஆண்டுகளுக்கு ரூபாய் 150 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கும் மன்றத்தின் சார்பில் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

மழைக்காலம் தொடங்க இருப்பதால், மாமன்ற உறுப்பினர்களுக்கு என் அன்பான வேண்டுகோள் - மாநகராட்சிக்கு ஒத்துழைப்பு நல்கும் வகையில் அனைவரும் இணைந்து செயல்பட்டு, பொதுமக்களுக்கு மழையினால் பாதிப்புகள் ஏற்படாதவாறு, மழைக்காலத்தில் களத்தில் நின்று சிறப்பாக பணியாற்றுவோம். அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம். பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம் **(கைதட்டல்)**

**மாண்புமிகு மேயர்**

நன்றி. அடுத்து, நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள்.

**மநீ.வ.து.ந.க.எண்.பி3 / 2693 / 2025**

**தீர்மான எண்: 1016 / 2025** **பொருள் எண்.01**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - மண்டலம் - 15, வார்டு -197ல் உள்ள உழவர் கேணி குளத்தினை மேம்படுத்தி புனரமைக்கும் பணி மேற்கொள்வதற்காக 2024-25 ஆம் ஆண்டு அலுவலக விலைபட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி வெள்ள தடுப்பு பணிகளில், மண்டலம்-15, வார்டு 197ல் உள்ள உழவர்கேணி (15418 ச.மீ) குளத்தினை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி, புனரமைக்கும் பணியினை மேற்கொள்ள 2024-2025 ஆம் ஆண்டு விலைப்பட்டியல்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. பணியின் விவரம் பின் வருமாறு

| வ. எண் | மண்டலம் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 15 | 197 | உழவர்கேணி குளம் | 170.00 |

எனவே,

1. மண்டலம்-15, வார்டு-197-ல் உழவர்கேணி குளத்தினை அகலப்படுத்தி, ஆழப்படுத்தி புனரமைக்கும் பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1,70,00,000/க்கு, நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. இப்பணியினை பெருநகர சென்னை மாநகராட்சி, மழைநீர் வடிகால் துறையின் மூலதனநிதியில், கணக்குகுறியீட்டு எண். 412-401-100 (storm water drains and culverts) மேற்கொள்ள அனுமதியும்,
3. நிதிஆலோசகர் அவர்கள் இப்பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,70,00,000/- மூலதன நிதியில் நிதி ஒதுக்கீடு செய்ய ஆணை வேண்டியும்,

**மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.**

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**<u>க.து.ந.க.எண்.பி1/2500/2025</u>**

**தீர்மான எண்: 1017/2025 பொருள் எண்.02**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் – 5, கோட்டம் – 55ல் போர்த்துகீசிஸ் சர்ச் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலை பள்ளியில் புதிதாக தரைத்தளம் கட்டிடம் அமைக்கும் பணிக்கு 2025-2026 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, பகுதி – 13, கோட்டம் – 55ல் போர்த்துகீசிஸ் சர்ச் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலை பள்ளியில் புதிதாக தரைத்தளம் கட்டிடம் அமைக்கும் பணிக்கு 2025-2026 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியலின் படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்–5, பகுதி–13, கோட்டம்–55ல் போர்த்துகீசிஸ் சர்ச் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலை பள்ளியில் புதிதாக தரைத்தளம் கட்டிடம் அமைக்கும் பணிக்காக பணி. |
| 2 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 05 |
| 3 | மதிப்பீட்டின் தொகை விவரம் | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 1,38,66,893.42 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 24,96,040.82 |

| | | |
|---|---|---|
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 1,38,668.93 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 1,38,668.93 |
| | (உ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 3,29,727.90 |
| | (ஊ) தமிழ்நாடு மின்சார வாரியம் | ரூ. 30,000.00 |
| | மொத்தம் | ரூ. 1,70,00,000.00 |
| 4 | நிதியின் தன்மை | பெருநகரசென்னை மாநகராட்சிமூலதன நிதி |
| 5 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 1,70,00,000.00 |

மேற்குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, பகுதி –13, கோட்டம் – 55ல் போர்த்துகீசிஸ் சர்ச் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலை பள்ளியில் புதிதாக தரைத்தளம் கட்டிடம் அமைக்கும் பணிக்கு ரூ.2025-2026 ஆம் ஆண்டிற்கான விலைப்பட்டியலின் படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 5, பகுதி –13, கோட்டம் – 55ல் போர்த்துகீசிஸ் சர்ச் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலை பள்ளியில் புதிதாக தரைத்தளம் கட்டிடம் அமைக்கும் பணிக்காக ரூ.1,70,00,000.00 மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்டுள்ள பணிக்கு ஏற்படும் செலவினத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்வதற்கும்,
3. மேற்கண்டுள்ள பணிக்கு கட்டடத்துறை மூலம் ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

<u>ம.அ.4.ந.க.எண்.பி3 / 3670 / 2025</u>

**தீர்மான எண்: 1018 / 2025** **பொருள் எண்.03**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-4, வார்டு – 36ல் சர்மா நகரில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் கூடுதலாக வகுப்பறைகள் (G+2) கட்டிடம் கட்டும் பணிக்காக 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

மண்டலம்-4, பகுதி-09, வார்டு–36, சர்மா நகரில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளியில் கூடுதலாக வகுப்பறைகள் (G+2) கட்டிடம் கட்டும் பணிக்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

அதன் விவரங்கள் கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | பணியின் பெயர் | மண்டலம்-4, பகுதி-09, வார்டு – 36, சர்மா நகரில் உள்ள சென்னை தொடக்கப் பள்ளியில் கூடுதலாக வகுப்பறைகள் (G+2) கட்டிடம் கட்டும் பணி. |
| 2. | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம்-4 |
| 3. | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து | 2024-25 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |

| | | |
|---|---|---|
| | தயாரிக்கப்பட்டது | |
| 4. | மதிப்பீட்டு தொகை | ரூ.1,37,00,000.00 |
| | அ) பணியின் செலவினம் | ரூ. 1,12,37,411.14 |
| | ஆ) மற்ற எதிர்பாரா செலவு | ரூ. 2,15,106.63 |
| | இ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதி | ரூ. 1,12,374.11 |
| | ஈ) தரக் கட்டுப்பாடு செலவு | ரூ. 1,12,374.11 |
| | உ) GST 18% | ரூ. 20,22,734.01 |
| | மொத்தம் | **ரூ.** 1,37,00,000 |
| 5. | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 6. | நிதியின் தன்மை | மூலதன நிதி |
| 7. | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | **ரூ.** 1,37,00,000 |

எனவே,

1. மண்டலம்-4, பகுதி-09, வார்டு–36, சர்மா நகரில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் கூடுதலாக வகுப்பறைகள் (G+2) கட்டிடம் கட்டும் பணிக்காக 2024 – 2025ஆம் அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,37,00,000-/ (ரூபாய். ஒரு கோடியே முப்பத்தி ஏழு இலட்சங்கள் மட்டும்) நிர்வாக அனுமதியும்,
2. இப்பணி மேற்கொள்ள தேவைப்படும் நிதியினை கட்டிடத் துறை மூலமாக நிதி பெற்று ஒப்பம் கோரி மண்டலம்-4ன் மூலமாக பணியினை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

<u>ம.அ.5.ந.க.எண்.Div60/35/2025</u>

**தீர்மான எண்: 1019/2025** **பொருள் எண்.04**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5, வார்டு – 55, போர்த்துகீசிஸ் சர்ச் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலை பள்ளியில் புதிதாக முதல்தளம் கட்டிடம் அமைக்கும் பணிக்கு 2025-26-ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

பணியின் பெயர் : வார்டு - 55 க்கு உட்பட்ட போர்த்துகீசிஸ் சர்ச் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலை பள்ளியில் புதிதாக முதல்தளம் கட்டிடம் அமைக்கும் பணி.

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீடு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | 55 | 14587 | வார்டு 55 க்கு உட்பட்ட போர்த்துகீசிஸ் சர்ச் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலை பள்ளியில் புதிதாக முதல்தளம் கட்டிடம் அமைக்கும் பணி. | ரூ. 130.00/- |
| | | | மொத்தம் | ரூ. 130.00/- |

| | | |
|---|---|---|
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | மண்டல அலுவலர் |
| 3. | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம்-5 |

| | | |
|---|---|---|
| 4. | சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி | மண்டல அலுவலர்-5 |
| 5. | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி | மேற்பார்வை பொறியாளர் (வடக்கு) |
| 6. | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்டது | 2025-2026 |
| 7. | அ) பணியின் செலவினம் | ரூ. 1,06,15,832.77 |
| | ஆ) மேலான மேற்பார்வை<br><br>செலவினம் 10.0% | – |
| | இ) சிறு மேற்பார்வை செலவு 2.50% | – |
| | ஈ) தரக்கட்டுப்பாடு செலவு 1.0% | ரூ. 1,06,158.33 |
| | உ) மற்ற எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 2,61,000.67 |
| | ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரிய நிதி 1% | ரூ. 1,06,158.33 |
| | எ) ஜி.எஸ்.டிவரி 18% | ரூ. 19,10,849.90 |
| | மொத்தம் | ரூ. 1,30,00,000.00 |
| 8. | மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலை பகுதியா அதன் அளவு குறிப்பிடவும் | பொருந்தாது |
| 9. | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | பொருந்தாது |
| 10. | வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 11. | மதிப்பீடிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் | வார்டு குழு தீர்மானம் பின்னர் பெறப்படும் |

| | | |
|---|---|---|
| 12. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | பொருந்தாது |
| 13. | நிதியின் மூலத்தன்மை | மூலதன நிதி |
| | பிரிவு கணக்கு எண் | |
| | அ)2024-2025 ஆம் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீடு | ரூ. |
| | ஆ)மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | ரூ. |
| | இ) மீதமுள்ள நிதி (அ-ஆ) | ரூ. |
| | ஈ)இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ.1,30,00,000.00 |

எனவே, மண்டலம்-5, பகுதி-13, வார்டு-55க்கு உட்பட்ட போர்த்துகீசிஸ் சர்ச் தெருவில் அமைந்துள்ள சென்னை நடுநிலைபள்ளியில் புதிதாக முதல்தளம் கட்டிடம் அமைக்கும் பணிக்கு 2025-26-ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,30,00,000.00/-க்கு மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**ம.அ.5நக.எண்.இ1/RPM /622/2025**

**தீர்மான எண்: 1020/2025** **பொருள் எண்.05**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5, வார்டு-56 Proposed Construction of Multipurpose Hall (G + 3 floors) at Asirvadhapura Main Road பல்நோக்கு கட்டிடம் பணிக்காக 2025-26-ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பணியின் பெயர்:

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 1 | 56 | மண்டலம் -5, பகுதி-13, வார்டு-56 Proposed Construction of Multipurpose Hall (G + 3 floors) at Asirvadhapura Main Road | ரூ. 1,99,00,000.00 |

| | | |
|---|---|---|
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | மண்டல அலுவலர் |
| 3. | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம்-5 |
| 4. | சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி | மண்டல அலுவலர்-5 |
| 5. | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி | மேற்பார்வை பொறியாளர் வடக்கு) T.S.No. dtd. |
| 6. | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப் பட்டியலின்படி தயாரிக்கப்பட்டது | 2025- 2026 |
| 7. | அ) பணியின் செலவினம் | ரூ. 1,62,13,408.51 |
| | ஆ)மேலானமேற்பார்வை செலவினம் 10.0% | ரூ. ----------- |
| | இ) CMWSSB | ரூ. 50,000.00 |
| | ஈ) தரக் கட்டுப்பாடு செலவு 1.0% | ரூ. 1,62,134.09 |

| | | |
|---|---|---|
| | உ) மற்ற எதிர்பாரா செலவு 2.50% | ரூ 3,93,909.79 |
| | ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதி 1% | ரூ. 1,62,134.09 |
| | எ) ஜி.எஸ்.டி வரி 18% | ரூ 29,18,413.53 |
| | மொத்தம் | ரூ. 1,99,00,000.00 |
| 8. | மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலை பகுதியா அதன் அளவு குறிப்பிடவும் | பொருந்தாது |
| 9. | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | பொருந்தாது |
| 10. | வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா? | ------- |
| 11. | மதிப்பீடிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் | மண்டல வார்டு குழு தீர்மானம் பின்னர் பெறப்படும் |
| 12. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | பொருந்தாது |
| 13. | நிதியின் மூலத்தன்மை | வருவாய் நிதி |
| | பிரிவு கணக்கு எண் | 202107/..................... |
| | அ) 2025-2026 ஆம் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீடு | ரூ.----- |
| | ஆ)மதிப்பீடுகளுக்குஇதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | ரூ.----- |
| | இ) மீதமுள்ள நிதி (அ-ஆ) | ரூ.----- |
| | ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ1,99,00,000.00 |

எனவே, மண்டலம் -5, பகுதி-13, வார்டு-56 Proposed Construction of Multipurpose Hall (G + 3 floors) at Asirvadhapura Main Road பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,99,00,000.00-க்கு மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**ம.அ.5.ந.க.எண்.இ1/RPM/618/2025**

**தீர்மான எண்: 1021/2025** **பொருள் எண்.06**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5, வார்டு – 56, ஜீல்ஸ் தெருவில் பல்நோக்கு கட்டிடம் பணிக்காக 2025-26-ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

1. பணியின் பெயர்:

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 1 | 56 | மண்டலம் -5, பகுதி-13, வார்டு 56, ஜீல்ஸ் தெருவில் பல்நோக்கு கட்டிடம் பணி. | ரூ. 1,99,00,000.00 |

| | | |
|---|---|---|
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | மண்டல அலுவலர் |
| 3. | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம்-5 |
| 4. | சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி | மண்டல அலுவலர்-5 |
| 5. | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி | மேற்பார்வை பொறியாளர் வடக்கு) T.S.No. dtd. |

| | | |
|---|---|---|
| 6. | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப் பட்டியலின்படி தயாரிக்கப்பட்டது | 2025- 2026 |
| 7. | அ) பணியின் செலவினம் | ரூ. 1,61,14,050.32 |
| | ஆ)மேலானமேற்பார்வை செலவினம் 10.0% | ரூ. ----------- |
| | இ) Consulting Charges 1.0% | ரூ. 4,01,999.12 |
| | ஈ) தரக் கட்டுப்பாடு செலவு 1.0% | ரூ. 1,61,140.50 |
| | உ) மற்ற எதிர்பாரா செலவு 2.50% | ரூ 1,61,140.50 |
| | ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதி 1% | ரூ. 1,61,140.50 |
| | எ) ஜி.எஸ்.டி வரி 18% | ரூ 29,00,529.06 |
| | மொத்தம் | ரூ. 1,99,00,000.00 |
| 8. | மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலை பகுதியா அதன் அளவு குறிப்பிடவும் | பொருந்தாது |
| 9. | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | பொருந்தாது |
| 10. | வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா? | ------- |
| 11. | மதிப்பீடிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் | மண்டல வார்டு குழு தீர்மானம் பின்னர் பெறப்படும் |
| 12. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | பொருந்தாது |
| 13. | நிதியின் மூலத்தன்மை | மூலதன நிதி |
| | பிரிவு கணக்கு எண் | 202107/412403000 |
| | அ) 2025-2026 ஆம் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீடு | ரூ.----- |
| | ஆ)மதிப்பீடுகளுக்குஇதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | ரூ.----- |
| | இ) மீதமுள்ள நிதி (அ-ஆ) | ரூ.----- |

| | | |
|---|---|---|
| | ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு<br><br>தேவைப்படும் நிதி | ரூ1,99,00,000.00 |

எனவே, மண்டலம்-5, பகுதி-13, வார்டு-56 பல்நோக்கு கட்டிடம் பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,99,00,000.00-க்கு மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**ம.அ.5.ந.க.எண்.62-10/2025**

**தீர்மான எண்: 1022/2025** **பொருள் எண்.07**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5, வார்டு -62, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான அருணாசலம் சாலை சிங்கண்ண (செ) தெரு சந்திப்பில் அமைந்துள்ள மருந்தகம், மத்திய மருந்து கிடங்கு மற்றும் வணிக வளாக கட்டிடம் பழுதடைந்து அபாயகரமாக உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

மண்டலம்- 5, பகுதி–14, வார்டு-62க்கு உட்பட்ட அருணாசலம் சாலை சிங்கண்ண (செ) தெரு சந்திப்பில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மருந்தகம், மத்திய மருந்து கிடங்கு மற்றும் வணிக வளாக கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.<br>எண் | மண்டலம் - 5 | வார்டுஎண். 62 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | அருணாசலம் சாலை சிங்கண்ண (செ) தெரு சந்திப்பில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மருந்தகம், மத்திய மருந்து கிடங்கு மற்றும் வணிக வளாக கட்டிடம். |

| | | |
|---|---|---|
| 2 | அந்த கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1995 ஆம் ஆண்டு கட்டப்பட்டது |
| 3 | அந்தகட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரைத்தளம் - 615.00 ச.மீ<br>முதல் தளம் - 615.00 ச.மீ |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 14,43,179.96/- |
| 5 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம். | இக்கட்டிடமானது மிகவும் பழுதடைந்துள்ளது. மேலும் இக்கட்டிடம் அபாயகரமாக உள்ளதால் மருந்தகம், மத்திய மருந்து கிடங்கு மற்றும் வணிக வளாகத்திற்கு வரும் பொதுமக்களுக்கு மற்றும் வணிகர்களுக்கும் உயிர்சேதம் ஏற்படாமல் இருக்க அவசிய அவசரம் கருதி இடித்து அகற்ற வேண்டியுள்ளது. |
| 6 | கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | இக்கட்டிடத்தை இடித்து விட்டு அந்த இடத்தில் புதியதாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் கட்டப்பட உள்ளது. |
| 7 | கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | மண்டல அலுவலர்-5 |
| 8 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண்.(ம) நாள்: | எண்.27, நாள் :18:06:2025 |

எனவே, மண்டலம்-5, வார்டு 62ல் சிந்தாதிரிபேட்டையில், அருணாசலம் சாலை சிங்கண்ண (செ) தெரு சந்திப்பில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மருந்தகம், மத்திய மருந்து கிடங்கு மற்றும் வணிகவளாக கட்டிடத்தின் தரைதளம் மற்றும் முதல்தளத்தில் சில இடங்கள் இடிந்துள்ளது மற்றும் சுவர்களில் மரம் வளர்ந்து பல இடங்களில் விரிசல் ஏற்பட்டுள்ளது. ஆகையால் பொதுமக்களுக்கு மற்றும் வணிகர்களுக்கும் உயிர்சேதம் ஏற்படாமல் இருக்க இக்கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.565/2025, நாள்.24.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>TVKNGR/226/2025-ADMIN(ENGINEERING)-E1</u>**

**தீர்மான எண்: 1023/2025 பொருள் எண்.08**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, வார்டு-74, டேங்க் பண்டு சாலையில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மைய கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-74, டேங்க் பண்டு சாலையில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால், அலுவலர், பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி எவ்வித பாதிப்புகள் ஏற்படா வண்ணம் இருக்க இக்கட்டிடத்தை இடித்து கட்டுவது அவசியமாகிறது

கூடுதல் தலைமைச்செயலர்/ ஆணையர் அவர்களின் 01.09.2023 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, தற்போதுள்ள கட்டிடத்தை இடிக்க ஒப்பம் கோரும் பொழுது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள மதிப்பினை நிர்ணயிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டதின் அடிப்படையில் கட்டிடத்தை இடிப்பதற்கான சுற்றறிக்கையில் உள்ளவாறு மதிப்பீட்டு தொகை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம்

| வ. | பணியின் விவரம் | கட்டிடத்தின் சதுர அடி | சுற்றறிக்கையில் | மதிப்பீட்டு |
|---|---|---|---|---|

| எண் | | விவரம் | நிர்ணயிக்கப்பட்ட தொகை | தொகை |
|---|---|---|---|---|
| 1. | மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-74, டேங்க் பண்டு சாலையில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மைய கட்டிடத்தை இடித்து அகற்றும் பணி | 2671 சதுரஅடி | 2,500 சதுர அடி முதல் 5,000 சதுர அடி வரை ரூ.1,00,000/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது | ரூ.1,00,000/- |

மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-74, டேங்க் பண்டு சாலையில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மைய கட்டிடத்தின் விவரம் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | இடம் / பணியின் விவரம் | டேங்க் பண்டு சாலை |
| 2 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் |
| 3 | அந்தகட்டிடம் எப்போது கட்டப்பட்டது ? | 2010 ஆம் ஆண்டு |
| 4 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு ? | 2671 ச.அடி |
| 5 | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு எவ்வளவு ? | 2671 ச.அடி |
| 6 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு ? | ரூ.2,66,768.07 |
| 7 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா ? | இல்லை |
| 8 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | நகர நலவாழ்வு மையம் கட்டப்பட உள்ளது. |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | நவீன முறையில் அமைய உள்ளது |
| 10 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | செயற்பொறியாளர்/ம-6 |

எனவே, மண்டலம்-6, பகுதி-17A, வார்டு-74, டேங்க் பண்டு சாலையில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார மைய கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.554/2025, நாள்.24.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.8.ந.க.எண்.இ1/5888/2025**

**தீர்மான எண்: 1024/2025** **பொருள் எண்.09**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 8, வார்டு – 108, பிள்ளையார் கோயில் தெருவில் பழுதடைந்த நிலையில் உள்ள டோபிகானா கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 8, பகுதி – 23, வார்டு – 108, பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள டோபிகானா கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இந்த கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

**இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்**

| | | |
|---|---|---|
| 1 | இடிக்கப்படவுள்ள கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | *1997*ஆம் ஆண்டு |
| 2 | இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பு | ரூ.*365189.69* |
| 3 | இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் பரப்பளவு | *3443.47*மீ |
| 4 | கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | **இல்லை** |
| 5 | கட்டிடம் இடித்த பின்பு எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும். | டோபிகானா |

எனவே, மண்டலம் - *8*, பகுதி - *23*, வார்டு - *108*, பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள டோபிகானா கட்டிடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இக்கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.566/2025, நாள்.24.09.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ந.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN03/00561/2025**

**தீர்மான எண்: 1025/2025** **பொருள் எண்.10**

**தானப்பத்திரம்**

மண்டலம்-03, கோட்டம்-25ல் (1) Mr.V.Prakash (2) Mr.S.Venkatesan அவர்கள் T.S.No.102/3, 102/5, Block No.23, Ward - B of Madhavaram Village, Madhavaram Taluk, Chennaiல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைப்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN03/00561/2025, நாள்:14.08.2025ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்:09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை, மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் (1) Mr.V.Prakash (2) Mr.S.Venkatesan என்பவர்கள் மனைப்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

*(அ)* (1) Mr. V. Prakash (2) Mr. S. Venkatesan என்பவர்கள் மனைப்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, நிலத்தின் மொத்தப் பரப்பளவு 9528.00சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 2913.20சதுர மீட்டர் நிலம், TANGEDCOவிற்கு 64.00சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 34.00சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*(ஆ)* (1) Mr.V. Prakash (2) Mr. S.Venkatesan என்பவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவர்களாக அறியப்படுகிறார்கள். மனை உரிமையாளர்கள் பட்டாவினை, வட்டாட்சியர், மாதவரம் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

*(இ)* விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 7.20 m, 9.00m & 10.00m அகல சாலை அமைந்துள்ளது. விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த மனைப்பிரிவில் உள்ள மனைகள் அனைத்தும் குறைந்தபட்சம் 72.00 ச.மீ பரப்பளவு உள்ளதாக அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின்படி, மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCO விற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானபத்திரம் மூலம் அளிக்க வேண்டும். (1) Mr.V.Prakash (2) Mr.S.Venkatesan அவர்கள் அதற்கேற்றவாறு 34.00ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் 64.00ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCO விற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(உ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன்படி 10,000ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம். மனைப்பிரிவு 10,000சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர்கள் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு ஈடாக தொகையை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(ஊ) மனைப்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர்கள் (1)Mr.V.Prakash (2)Mr.S.Venkatesan என்பவர்கள் அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவர்களாக கருதுவதாலும் சாலைக்கான 2913.20சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 34.00சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை தானபத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(எ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department dated 16.07.2022ன்படி, சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளர்களே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர்கள் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க கேட்டு கொண்டார்கள்.

(ஏ) அபிவிருத்தியாளர்கள் தங்களின் கடிதத்தில், சாலை மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வருவதாகவும் ஆகவே, ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

(ஐ) உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளதால் (1) Mr.V.Prakash (2)Mr.S.Venkatesan அவர்களிடம் இருந்து தானபத்திரத்தில் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) T.S.No.102/3, 102/5, Block No.23, Ward - B of Madhavaram Village, Madhavaram Taluk, Chennai, Division - 25, Zone - 03ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 2913.20 சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 34.00சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை (1) Mr. V. Prakash (2) Mr.S.Venkatesan அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

(2) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர்கள் / அபிவிருத்தியாளர்கள் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "25.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.89/2025, நாள்.25.09.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

<u>நது.ந.க.எண்.**D1/LA/SD/WDCN15/00348/2025**</u>

**தீர்மான எண்: 1026/2025** **பொருள் எண்.11**

# <u>தானப்பத்திரம்</u>

மண்டலம்-15, கோட்டம்-200ல் (1) A.N. Senthil Ramaswamy (2) R. Rajeswari and (3)J.R. Swarna Revathy அவர்கள் Kamarajar Nagar 3rd Street, T.S.No.12/1, 12/2, 13, 18, 26 & 28, Block No.1, 27 & 28, Ward A & B of Semmencheri Village, Sholinganallur Taluk, Chennai Districtல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி D1/LA/SD/WDCN15/00348/2025, நாள்:19.05.2025ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைஉட்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள்:09.12.2020ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலை, திறந்தவெளி (பூங்கா) மற்றும் பொது பயன்பாட்டிற்கென ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் (1) A.N.Senthil Ramaswamy (2) R. Rajeswari and (3) J.R. Swarna Revathy மனைஉட்பிரிவில் சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது:

*(அ)* (1) A.N.Senthil Ramaswamy (2) R.Rajeswari and (3) J.R.Swarna Revathy என்பவர்கள் மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, நிலத்தின் மொத்தப் பரப்பளவு 8727.96சதுர மீட்டர் ஆகும். சாலைக்கென 1622.74சதுர மீட்டர் நிலம், திறந்தவெளி (பூங்கா) 368.88 சதுர மீட்டர் நிலம், TANGEDCOவிற்கு 33.76சதுர மீட்டர் நிலம் மற்றும் பொது பயன்பாட்டிற்கான 33.45சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*(ஆ)* (1) A.N. Senthil Ramaswamy (2) R. Rajeswari and (3) J.R. Swarna Revathy என்பவர்கள் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவர்களாக அறியப்படுகிறார்கள்.

*(இ)* விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த திட்டம் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள், 2019 இன் படி உள்ளது. காமராஜர் நகர் 3வது தெரு என்ற சாலை மனைஉட்பிரிவுக்கான அணுகு சாலையாகும்.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் உள்ள விதிகளின்படி, மனைஉட்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது, (சாலை பகுதி நீங்கலாக) மனை பரப்பளவில் 1% பொது பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட வேண்டும். அதில் 0.5% TANGEDCOவிற்கும் மற்றும் 0.5% பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் அளிக்க வேண்டும். (1) A.N. Senthil Ramaswamy (2) R.Rajeswari and (3) J.R. Swarna Revathy அவர்கள் அதற்கேற்றவாறு 33.45ச.மீ பரப்பளவு நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள். மேலும் 33.76ச.மீ பரப்பளவு நிலத்தை TANGEDCOவிற்கும் ஒதுக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

(உ) மனைஉட்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் (1)A.N. Senthil Ramaswamy (2) R. Rajeswari and (3) J.R. Swarna Revathy அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவர்களாக கருதுவதாலும் சாலைக்கான 1622.74 சதுர மீட்டர் நிலம், திறந்தவெளி (பூங்கா) 368.88சதுர மீட்டர் நிலம், பொது பயன்பாட்டிற்கான 33.45சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

(ஊ) அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department, dated:16.07.2022ன்படி, சாலை மற்றும் தெரு விளக்குகள் அபிவிருத்தியாளர்களே அமைக்கலாம் என்கின்ற நிலை உள்ளதால், அபிவிருத்தியாளர்கள் தாங்களே சாலை மற்றும் தெரு விளக்கு அமைக்க கேட்டுக் கொண்டார்கள்.

(எ) அபிவிருத்தியாளர்கள் தங்களின் கடிதத்தில், சாலை மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி வருவதாகவும் ஆகவே, ஒப்புதல் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

(ஏ) உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொண்டுள்ளதால் (1) A.N.Senthil Ramaswamy (2) R. Rajeswari and (3) J.R. Swarna Revathy அவர்களிடம் இருந்து தானப்பத்திரத்தல் உள்ளவாறு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,

(1) Kamarajar Nagar 3rd Street, T.S.No.12/1, 12/2, 13, 18, 26 & 28, Block No.1, 27 & 28, Ward A & B of Semmencheri Village, Sholinganallur Taluk, Chennai

District, Division200, Zone - 15ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைஉட்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கான 1622.74சதுர மீட்டர் நிலம், திறந்தவெளி (பூங்கா) 368.88சதுர மீட்டர் நிலம் பொது பயன்பாட்டிற்கான 33.45சதுர மீட்டர் நிலம் ஆகியவற்றை (1) A.N. Senthil Ramaswamy (2) R. Rajeswari and (3) J.R. Swarna Revathy அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கும்,

( 2 )மனைஉட்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலத்தில் மனை உரிமையாளர்கள் / அபிவிருத்தியாளர்கள் உள்கட்டமைப்புகளான சாலை, வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவற்றை தரநிலைக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டவுடன் அவற்றை எடுத்துக் கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.91/2025, நாள்.25.09.2025ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

*****

**நது.ந.க.எண்.D2/3075 /2025**

**தீர்மான எண்: 1027/2025** **பொருள் எண்.12**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நகரமைப்புத்துறை - மண்டலம்-08, கோட்டம்-103ல் M/s. Transindia Infra Realty Limited & M/s.Fifth Field Realtors Pvt. Ltd., திருத்தியமைக்கப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பத்தை CMDA-விடம் சமர்ப்பித்துள்ளது CMDA கடிதத்தின்படி, அரும்பாக்கம் கிராமத்தில் ஏற்கனவே தானமாக அளித்த 3512 சதுர அடி OSR நிலத்தை மீண்டும் நிலம் வழங்கிய நிறுவனத்திற்கே வழங்க அரசிற்கு பரிந்துரை செய்வதற்கு அனுமதி.**

மண்டலம்-08, கோட்டம்- 103ல் M/s. Transindia Infra Realty Limited & M/s. Fifth Field Realtors Pvt. Ltd., திருத்தியமைக்கப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பத்தை CMDA-விடம் சமர்ப்பித்துள்ளது. இந்த இடம் T.S.No.2/4, 2/5, 2/6, Block No.10, Arumbakkam Village, Door No.477/1, Poonamallee High Road, Arumbakkam, Chennai–600106ல் அமைந்துள்ளது. மேலும், விண்ணப்பதாரர் CMDA-க்கு ஏற்கனவே தானமாக வழங்கப்பட்ட 3512 சதுர அடி (326.36சதுர மீட்டர்) அளவிலான OSR நிலத்தை மீள திருப்பி அளிக்க கோரிக்கை அளித்துள்ளனர்.

M/s. Fifth Field Realtors Pvt. Ltd. க்கு முன்னதாக, T.S. எண். 2/4, 2/5, 2/6, பிளாக் எண்.10, அரும்பாக்கம் கிராமம், கதவு எண். 477/1, பூந்தமல்லி நெடுஞ்சாலை, அரும்பாக்கம், சென்னை-600106இல், 02.03.2017 தேதியிட்ட, திட்ட அனுமதி கடிதம் எண்.C3(N)/3960/2014 அளிக்கப்பட்டது.

விண்ணப்பதாரர் மேற்கூறிய திட்ட அனுமதியைப் பெறும்போது, திறந்தவெளி நிலத்திற்காக ஒதுக்கப்பட்ட 3512 சதுர அடி (326.36 சதுர மீட்டர்) பரப்பளவு நிலத்தை 13.01.2017 தேதியிட்ட ஆவண எண்.182/2017 இன் படி, பதிவுசெய்யப்பட்ட தானப்பத்திரம் மூலம் வழங்கியுள்ளனர்.

OSR நிலத்தை திரும்ப அளிக்கும் கோரிக்கையின் மீது தேவையான நடவடிக்கை எடுத்து, திருத்தப்பட்ட திட்ட அனுமதி விண்ணப்பத்தின் மீது CMDA மேல் நடவடிக்கை எடுப்பதற்கு தகவல் தெரிவிக்கவும் உறுப்பினர்-செயலாளர், CMDA அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

As per Development Regulations Rule NO.28(8), Annexure – XX, the plot extent between 3,000 to 10,000 sq.m. 10% of the area excluding roads or in the alternative he shall pay the market value of the equivalent land excluding the first 3000 sq.m as per the valuation 25provide open space due to physical constraints.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, திட்ட அனுமதி அளிக்கும்பொழுது தேவையான OSR நிலத்திற்கு அதற்கு சமமான சந்தை மதிப்பை செலுத்துவதாக விண்ணப்பதாரர் ஒப்புக் கொண்டுள்ளார்,

திட்ட அனுமதி வழங்கும் அதிகாரம் CMDA க்கு உள்ளதாலும், விண்ணப்பதாரரின் கோரிக்கையை CMDA ஏற்றுக் கொண்டமையால், அந்தக் கோரிக்கையினை பரிசீலித்து, மன்றத்தின் மூலம் பரிந்துரைக்கப்பட்டு, அரசாங்கத்திற்கு மேல் நடவடிக்கைகாக அனுப்பலாம் என்று கருதப்பட்டு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலம் மன்றத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது.

இப்பொருள் குறித்து, நிலைக்குழு (நகரமைப்பு) தீர்மானத்தில் கீழ்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

“25.08.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் இப்பொருள் குறித்து பெரும்பான்மையான உறுப்பினர்கள் கள ஆய்வு செய்யப்பட வேண்டுமென தெரிவித்த கருத்தின் அடிப்படையில், தீர்மான எண்.88/2025, நாள்:25/08/2025ன்படி, இதனை நிலைக்குழு (நகரமைப்பு) ஒத்திவைக்கின்றது”.

எனவே, மேற்கூறியவாறு கடந்த 3/09/2025 அன்று செயற் பொறியாளர் (நகரமைப்பு) மற்றும் நிலைக்குழு (நகரமைப்பு) உறுப்பினர் கள ஆய்வு செய்ததில் விண்ணப்பதாரரால் பூங்காவிற்காக தானமாக வழங்கப்பட்ட 3512 சதுர அடி (326.36 சதுர மீட்டர்) திறந்தவெளி நிலத்தில் எந்த ஒரு அபிவிருத்தி வளர்ச்சிப் பணிகளும் மேற்கொள்ளாமல் காலி நிலமாகவே இருக்கின்றது.

ஆதலால், விண்ணப்பதாரரின் கோரிக்கையை CMDA ஏற்றுக் கொண்டமையால், அந்தக் கோரிக்கையினை பரிசீலித்து, மன்றத்தின் மூலம் பரிந்துரைக்கப்பட்டு, அரசாங்கத்திற்கு மேல் நடவடிக்கைகாக அனுப்பலாம் என்று கருதப்படுகிறது.

எனவே,T.S.No..2/4, 2/5, 2/6, பிளாக் எண். 10 அரும்பாக்கம் கிராமத்தில் M/s. Fifth Field Realtors Pvt. Ltd. ஏற்கனவே தானமாக அளித்த 3512 சதுர அடி (326.36 சதுர மீட்டர்) OSR நிலத்தை வழங்குவதற்காக அரசிற்கு பரிந்துரை செய்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“25.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.90/2025, நாள்.25.09.2025ன்படி, இதற்கு நிலைக்குழு

(நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**திகமேநகஎண்அ7/4075 /2025**

**தீர்மான எண்: 1028/2025** **பொருள் எண்.13**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு - மண்டலம்-2, வார்டு–22, சின்ன சேக்காடு பகுதியில் 50 மெடன் திறனுடைய புதிய பேலிங் மையத்திற்கு உள்கட்டமைப்பு வசதிகளை அமைப்பதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு நாளைக்கு சராசரியாக *6150* மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகிறது. இதில் ஒரு நாளைக்கு சுமார் *3200* மெட்ரிக் டன் ஈரக்கழிவுகளும், *2450* மெட்ரிக் டன் உலர் கழிவுகளும் மற்றும் *500* மெட்ரிக் டன் செயலாக்கம் செய்ய இயலாத கழிவுகளும் *(Inert)* அடங்கும். மேற்கண்ட, திடக்கழிவுகள் செயலாக்கம் மற்றும் மறுசுழற்சிக்கு பின்னர் மீதம் உள்ள திடக்கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை விதி *2016*-ஐ பின்பற்றும் வகையில், அனைத்து மண்டலங்களிலும் ஒரு நாளைக்கு *735* மெட்ரிக் டன் வடிவமைப்பு திறன் கொண்ட ஈரக்கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும் கூடங்கள் *(MCC)*, இயற்கை எரிவாயு *(Bio –gas)* ஆலைகள், எரியூட்டும் கலன்கள் *(Incinerators)*, பொருட்கள் மீட்பு மையங்கள் *(MRF)* மற்றும் பொருட்கள் வளமீட்பு வசதி *(RRC)*, *3* இடங்களில் தலா *10* மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பேலிங் மையங்கள் போன்ற பல்வேறு பரவலாக்கப்பட்ட செயலாக்க வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. சோழிங்கநல்லூர், கோயம்பேடு மற்றும் மாதவரம் ஆகிய *3* இடங்களில் தலா *100* மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட *5* உயிரி-எரிவாயு *(Bio-CNG)* ஆலைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் மாதவரத்தில் *50* மெட்ரிக் டன் திறன் கொண்ட

இரண்டு எண்ணிக்கையில் காற்று புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் கூடங்கள் (Windrow) சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட 3 எண்ணிக்கையிலான பேலிங் மையங்களுக்கு மண்டலம்-1 முதல் 15 வரை சேகரிக்கப்படும் பயன்படுத்த இயலாத நெகிழி கழிவுகள் கொண்டு சேர்க்கப்படுகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில், நாள் ஒன்றுக்கு உருவாகும் 6150 மெட்ரிக் டன் திடக்கழிவுகளில் சுமார் 1168 மெட்ரிக் டன்(19%) கழிவுகள் நெகிழி கழிவுகள் ஆகும். இதில் 160 மெட்ரிக் டன் நெகிழி கழிவுகள் வள மீட்பு / பொருட்கள் மீட்பு மையங்களில் இருந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மை பணியாளர்கள் மூலம் விற்கப்பட்டு அதன் மூலம் வரும் வருவாயை தூய்மை பணியாளர்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது, மேலும் நாள் ஒன்றுக்கு 30 மெட்ரிக் டன் நெகிழி கழிவுகள் பேலிங் மையங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கு சிப்பமாக்கப்பட்டு சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பப்படுகிறது. மீதமுள்ள 978 மெட்ரிக் டன் நெகிழி கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களுக்கு அனுப்பப்படுகிறது,

பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் நெகிழி கழிவுகளை கொட்டுவதை தவிர்க்கும் பொருட்டு,2025 - 2026ஆம் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு எண்.49ல், மண்டலத்துக்கு ஒரு பேலிங் மையங்கள் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது, இதன் தொடர்ச்சியாக நடந்த ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அனைத்து மண்டலங்களிலும் பேலிங் மையங்கள் அமைவதில் உள்ள சிக்கல் மற்றும் பிரச்சனைகளை விளக்கினார். மேலும் தீ விபத்துகள் மற்றும் பொது மக்களின் புகார்கள் எழ வாய்ப்பு இருப்பதால், வடக்கு மற்றும் தெற்கு வட்டாரத்தில் ஒரு மெகா பேலிங் மையத்தை அமைக்க பரிந்துரைத்தார். அதன்படி வடக்கு வட்டாரத்தின் கீழ் உள்ள மண்டலம்-2, பகுதி-05, வார்டு-22ல், சின்ன சேக்காடு பகுதி வேலு தெருவில் எண்-72ல் சுமார் 3025$m^2$(32549 sq.ft) பரப்பளவு கொண்ட இடத்தை பேலிங் மையம் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக திருவாளர்கள் வெர்னிகுலர் பில்டிங் சொலுஷன்ஸ் (OPC) பிரைவேட் லிமிடெட் அவர்கள் திட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டு பேலிங் மையம் அமைப்பதற்காக திட்ட அறிக்கை பெறப்பட்டது.

மேற்கண்ட திட்ட அறிக்கையின் அடிப்படையில், மண்டலம் 1 முதல் 8 வரை சேகரிக்கப்படும் உலர் கழிவுகளான நெகிழி கழிவுகள் குப்பைக் கிடங்கிற்குச் செல்வதை குறைக்கும் வகையில், மண்டலம்–2, பகுதி-05, வார்டு–22ல், சின்ன சேக்காடு பகுதியில் 50 மெட்ரிக் டன் கொள்ளளவு

கொண்ட பேலிங் மையத்திற்கு உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் பேலிங் மையத்திற்கு தேவையான கீழ்கண்ட வசதிகள் அமைக்கப்பட உள்ளன.

1. அலுவலக கட்டிடம்.
2. மேலாளர் அறை
3. மின்சார அறை
4. பணியாளர்களுக்கான வருகை பதிவறை, உணவு அருந்தும் அறை, உடை மாற்றும் அறை மற்றும் கழிவறை.
5. பாதுகாவலர் அறை மற்றும் கண்காணிப்பு கோபுரம்.

எனவே, மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை *2025-26* அறிவிப்பு எண். *49*ன் ஒரு பகுதியாக, மண்டலம்-*2*, பகுதி-*05*, வார்டு-*22*ல், சின்ன சேக்காடு பகுதி வேலு தெருவில் எண்-*72*ல் சுமார் *3025m²(32549 sq.ft)* பரப்பளவு கொண்ட இடத்தில் மெகா பேலிங் மையம் அமைய இருப்பதால் பேலிங் மையத்திற்கு தேவைப்படும் வசதிகளான அலுவலக கட்டிடம், மேலாளர் அறை, மின்சார அறை, பணியாளர்களுக்கான வருகை பதிவறை, உணவு அருந்தும் அறை, உடை மாற்றும் அறை, கழிவறை, பாதுகாவலர் அறை மற்றும் கண்காணிப்பு கோபுரம் அமைப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ-*3,70,00000/-* (ரூபாய் மூன்று கோடியே எழுபது இலட்சம் மட்டும்)க்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.153/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**இ.பொது.ந.க.எண்.எம்1 / 1798 / 2025**

**தீர்மான எண்: 1029/2025** **பொருள் எண்.14**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - சுகாதார துறையில் மருத்துவ முகாம்களுக்கு தேவையான உபகரணங்கள், UPHC / UCHC / EOC / Health & Wellness Center-களுக்கு மருந்து மற்றும் தேவையான பொருட்களை எடுத்துச் செல்ல பின்புறம் மூடியவாறு உள்ள Rear Body Closed CNG மூலம் இயங்கும் வாகனம் மண்டலத்திற்கு 1 வீதம் 15 மண்டலங்களுக்கு 15 எண்ணிக்கையிலான பின்புறம் மூடியவாறு உள்ள Rear Body Closed CNG மூலம் இயங்கும் வாகனங்கள் மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

நிலைக்குழு(சுகாதாரம்) கூட்டத்தில் பெறப்பட்ட கோரிக்கையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதார துறையில் மருத்துவ முகாம்களுக்கு தேவையான உபகரணங்கள், மருந்துகள் மற்றும் தேவையான பொருட்களை மழையில் நனையா வண்ணம் எடுத்துச் செல்லும் பணிகளுக்கும், மண்டலத்திற்கு ஒன்று வீதம் 15 எண்ணிக்கையில் பின்புறம் மூடிய நிலையில் உள்ள சிறிய வகை டிரக் (Rear Body Closed Mini Truck) வாகனங்கள் இயந்திர பொறியியல் துறை மூலம் கொள்முதல் செய்து வழங்குமாறு கோரியுள்ளார்கள்.

மாண்புமிகு மேயர் அவர்கள் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை அறிவிப்பின் போது பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்டு வரும் டீசல் மற்றும் பெட்ரோல் மூலம் இயங்கும் வாகனங்களினால் ஏற்படும் காற்று மாசினை கட்டுப்படுத்தும் விதமாக, அவ்வாகனங்கள் படிப்படியாக இயற்கை எரிவாயு (CNG) மற்றும் மின்சாரம் (EV) மூலம் இயங்கும் வாகனங்களாக மாற்றம் செய்யப்படும் என அறிவித்துள்ளார்கள்.

சுகாதார துறையில் மருத்துவ முகாம்களுக்கு தேவையான உபகரணங்கள், மருந்து மற்றும் தேவையான பொருட்களை எடுத்துச் செல்லும் பணிகளுக்கு பின்புறம் மூடிய நிலையில் உள்ள சிறிய வகை டிரக் (Rear Body Closed Mini Truck) வாகனங்கள் பயனுள்ளதாக இருக்கும் என கருதப்படுகிறது. மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின்படி இயற்கை எரிவாயு மூலம் இயக்கப்படும் இவ்வகை வாகனங்கள் கிடைக்கப் பெறுகின்ற நிலையில் சுற்றுப்புற சூழலை பேணிக்காத்திடவும், காற்று மாசினை குறைத்திடவும் இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் பின்புறம் மூடிய நிலையில் உள்ள சிறிய வகை டிரக் (Rear Body Closed Mini Truck) வாகனங்களை மண்டலத்திற்கு 1 வீதம் 15 எண்ணிக்கையில் கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதன் அடிப்படையில், ஏற்கனவே கொள்முதல் செய்யப்பட்ட இவ்வகை வாகனங்களின் விலையிலேயே 15 எண்ணிக்கையிலான இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் பின்புறம் மூடிய சிறிய வகை

*CNG* மூலம் இயங்கும் வாகனங்கள் கொள்முதலுக்கான தோராய மதிப்பீடு கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி, இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் பின்புறம் மூடிய சிறிய வகை *CNG* மூலம் இயங்கும் வாகனங்கள் ஒன்றின் விலை ரூ.*12,37,000/-* வீதம் *15* எண்ணிக்கையிலான வாகனங்கள் கொள்முதல் செய்வதற்கான தோராய மதிப்பீடு ரூ.*1,85,55,000/-* (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரம் மட்டும்) மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்து இயக்கலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இக்கொள்முதலுக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பணிமனை கணக்கு குறியீட்டு எண்.*40 – 41 – 01 / 410 – 50 – 01 – 00*-லாரி என்னும் கணக்கு தலைப்பில் *2025-26* ஆம் ஆண்டிற்கான ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதார துறையில் மருத்துவ முகாம்களுக்கு தேவையான உபகரணங்கள், மருந்து மற்றும் தேவையான பொருட்களை எடுத்துச் செல்லும் பணிகளுக்கு இயற்கை எரிவாயு மூலம் இயங்கும் பின்புறம் மூடிய சிறிய வகை CNG மூலம் இயங்கும் வாகனங்கள் ஒன்றின் விலை ரூ.12,37,000/- வீதம் 15 எண்ணிக்கையிலான வாகனங்கள் கொள்முதல் செய்வதற்கான தோராய மதிப்பீடு ரூ.1,85,55,000/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்தைந்து இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரம் மட்டும்)ல் மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. இக்கொள்முதலுக்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன பணிமனை கணக்கு குறியீட்டு எண்.40 – 41 – 01 / 410 – 50 – 01 – 00-லாரி என்னும் கணக்கு தலைப்பில் 2025-26 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**இ.பொ.து.ம.வா.ப.ந.க.எண்.சி1/224/2025**

**தீர்மான எண்: 1030/2025 பொருள் எண்.15**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய வட்டாரம் - இயந்திர பொறியியல் துறை - ஒரு எண்ணிக்கையிலான ரொபோடிக் மல்டி பர்பஸ் எக்ஸ்கவேட்டர் உபகரண எண் TN04 AT 1040 - 90 நாட்களுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி வரும் 29.10.2025 அன்றுடன் முடிவடையவுள்ளது - மத்திய வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள 3.5 மீட்டருக்கும் குறைவான அகலம் கொண்ட நீர்வழித்தடங்களை சுத்தம் செய்யும் பணிக்கென கொள்முதல் செய்யப்பட்ட ஒரு எண்ணிக்கையிலான ரொபோடிக் மல்டி பர்பஸ் எக்ஸ்கவேட்டர் உபகரண எண் TN04 AT 1040 -ஐ 365 நாட்களுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தடையின்றி ஓடுவதை உறுதி செய்வதற்கும், கொசு தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்கும், பொது சுகாதாரத்தைப் பேணுவதற்கும், பெரிய மற்றும் சிறிய கால்வாய்களைப் பராமரித்து வருகிறது. இதில் 3.5 மீட்டருக்கும் அதிகமான அகலம் கொண்ட முக்கிய கால்வாய்கள் ஆம்பிபியன் உபகரணங்களைப் பயன்படுத்தி சுத்தம் செய்யப்படுகின்றன.3.5 மீட்டருக்கும் குறைவான அகலமுள்ள கால்வாய்கள் ரொபோடிக் மல்டி பர்பஸ் எக்ஸ்கவேட்டர் இயந்திரம் மூலம் சுத்தம் செய்யப்படுகின்றன.

மூன்று எண்ணிக்கையிலான ரொபோடிக் மல்டி பர்பஸ் எக்ஸ்கவேட்டர் இயந்திரங்கள் இயந்திர பொறியியல் தலைமையிடத்தில் கொள்முதல் செய்யப்பட்டு மத்திய வட்டாரத்திற்கென ஒதுக்கப்பட்டது. தற்பொழுது, இப்பணியினை மேற்கொள்ள போதிய பயிற்சி பெற்ற அல்லது தொழிற்நுட்ப கல்வி பயின்ற பணியாளர்கள் இந்நாள் வரை பொதுத் துறை மூலம் நியமிக்கப்படவில்லை. இந்த இயந்திரத்தை இயக்கி பணி மேற்கொள்ள தொழில்நுட்ப தகுதி வாய்ந்த பணியாளர்களை அமர்த்துவது அவசியமாகிறது. மத்திய வட்டாரத்திற்கென ஒதுக்கப்பட்ட மூன்று எண்ணிக்கையிலான ரொபோடிக் மல்டி பர்பஸ் எக்ஸ்கவேட்டர் இயந்திரங்களின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு விவரம் கீழ்க்கண்டவாறு :

| S.No | Zone | Vehicle No | O&M Period commenced on | O & M Periods valid till |
|---|---|---|---|---|
| 1. | CCD | S8 (558) | 31.05.2023 | 30.05.2028 |
| 2. | | S8 (559) | | |
| 3. | | TN04 AT 1040 | 31.07.2025 | 29.10.2025 |

மேலே குறிப்பிடப்பட்ட இயந்திரங்கள் உயர் தொழில்நுட்பத்துடன் பொருத்தப்பட்டிருந்ததாலும், போதுமான மற்றும் தொழில்நுட்ப ரீதியாக திறமையான துறை ஊழியர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் இல்லாததாலும், இந்த வகையான இயந்திரங்களை உபகரண சப்ளையர் தங்கள் அங்கீகரிக்கப்பட்ட டீலர் மூலம் மட்டுமே பராமரிக்க முடியும். மேலும் உதிரி பாகங்களை உபகரண சப்ளையரிடமிருந்து மட்டுமே பெற முடியும். அதன்படி மின்னணு ஒப்பம் கோரப்பட்டு 90 நாட்களுக்கான இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்கான பணி ஆணை 29.07.2025 அன்று வழங்கப்பட்டது. இந்த பணிஆணை வரும் 29.10.2025 அன்றுடன் முடிவடைகிறது. அதன் விவரம் கீழ்கண்டவாறு,

| Sl.No | Description | Equipment Registration No. | 90 days O & M Period commenced on | O & M period ends on |
|---|---|---|---|---|
| 1 | Operation & Maintenance of 1 No of Robotic Multi Purpose Excavator for a period of 90 days | TN04AT1040 | 31.07.2025 | 29.10.2025 |

கால்வாய்களில் தண்ணீர் தடையின்றி ஓடுவதை உறுதி செய்வதற்காக இந்த இயந்திரம் ஆண்டு முழுவதும் இயக்கப்பட வேண்டும். தவறினால் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுக்கும். இது இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரம் என்பதால், உபகரணங்கள் சப்ளையரின் அங்கீகரிக்கப்பட்ட டீலர் மூலம் மின்னணு ஒப்பம் அழைப்பதன் மூலம், இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணியை (எரிபொருள் தவிர்த்து) மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போதுள்ள இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணி விகிதத்தின் (தற்போதுள்ள பணி ஆணை தொகை) விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

A.OPERATION COST

| Description | Basic cost per hour(Excl. of | GST @ | Value per hour | Nos. of hours per | Total operation cost (8 hours) |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | GST)<br><br>(Rs) | 18 % in<br><br>(Rs) | (Incl. of GST) | day | for 90 days (Rs) |
| Operation cost for 1 no. of robotic multipurpose excavator for a period of 90 days. | A | B | C = A+B | D | E = (C X D) 90 |
| | 614/- | 110.52/- | 724.52/- | 8 | 5,21,654.40/- |

B.MAINTENANCE COST

| Description | Basic cost per day<br><br>(Excl. of GST)<br><br>(Rs) | GST @ 18 % in<br><br>(Rs) | Value per day (Incl. of GST) | Total maintenance cost for 90 days (Rs) |
|---|---|---|---|---|
| Maintenance cost for 1 no. of robotic multipurpose excavator for a period of 90 days. | 33,535/- | 6,036.6/- | 39,571.3/- | 35,61,417/- |

இயந்திரப்பொறியியல்துறையின் 25.07.2025 நாளிட்ட விலைப்புள்ளி சுற்றறிக்கையின் படி, ஒரு இயந்திரத்தை 365 நாட்களுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக ஆகும் செலவு கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது:

| S. No. | Description | Operation & Comprehensive maintenance Charges per Equipment | | | Total Operation & Comprehensive Charges per equipment per day (Excluding GST) ( Rs.) | Total Amount per year ( 365 days ) ( Excluding GST) Rs. | GST 18 % In Rs. | Total Amount for a period of 365 days ( Including GST) Rs. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | Operation Cost Per Hour (Excluding GST) (Rs.) | Operation Cost Per Day (Excluding GST) ( 8 hrs shift ) (Rs.) | Comprehensive Maintenance Cost Per Day (Excluding GST) ( Rs.) | | | | |
| | | A | B = A*8 | C | D = B + C | E = D * 365 | F = E *18% | G = E + F |
| 1 | Operation and Maintenance contract for 1 no. of robotic multipurpose excavator TN 04 AT | 677 | 5,416 | 36,891 | 42,307 | 1,54,42,055 | 27,79,570 | 1,82,21,625 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1040 for a period of 365 days | | | | | | | |
| Total Operation & Comprehensive maintenance Cost for 365 days per equipment | | | | | | | | 1,82,21,625 |
| Rounded off | | | | | | | | 1,82,22,000 |

மேற்குறிப்பிட்டுள்ளபடி இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பராமரிப்பு பணிக்காக ஒரு நாளைக்கு ஒரு வாகனத்திற்கு ஆகும் செலவு ரூ.42,307/- (GST நீங்கலாக) ஆகும். அதன்படி 1 வாகனத்திற்கு 365 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.1,82,22,000/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து இரண்டு இலட்சத்து இருபத்து இரண்டாயிரம் மட்டும்) (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) இச்செலவீனம் 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40-41-09 – கணக்கு எண். 230-800-300 "Compactor Vehicle" என்னும் தலைப்பின் கீழ் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, மத்திய வட்டாரத்திற்கு உட்பட்ட TN04 AT 1040 பதிவு எண் கொண்ட ஒரு எண்ணிக்கையிலான ரொபோடிக் மல்டி பர்பஸ் எக்ஸ்கவேட்டர் உபகரணத்தை 365 நாட்களுக்கு இயக்குதல் மற்றும் ஒருங்கிணைந்த பாரமரிப்பு பணி மேற்கொள்ள ஒருநாளைக்கு ரூ.42,307/- (GST நீங்கலாக) வீதம் 365 நாட்களுக்கு ரூ.1,82,22,000/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து இரண்டு இலட்சத்து இருபத்து இரண்டாயிரம் மட்டும்) (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) செலவீனத்தில் மின்னணு ஒப்பம் கோரி தகுதி வாய்ந்த அசல் உபகரண உற்பத்தியாளரின் அங்கீகரிக்கப்பட்ட டீலர்கள் ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள அனுமதியும்,
2. இதற்கான செலவீனமான ரூ.1,82,22,000/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து இரண்டு இலட்சத்து இருபத்து இரண்டாயிரம் மட்டும்) (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) இச்செலவீனத்தினை மத்திய மண்டலத்தின் (Central Region) கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மத்திய வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண்.40-41-09 மற்றும் கணக்கு தலைப்பு எண் 230-800-300 "Compactor Vehicle" என்னும் தலைப்பின்கீழ் கூடுதல் நிதி வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**
**********

**<u>E.L.D.C.No.SM II/P10/2790/2025</u>**

**தீர்மான எண்: 1031/2025** **பொருள் எண்.16**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மின் துறை – பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 10, 11, 13 மற்றும் 14 ல் உள்ள சம்ப் மற்றும் பம்புகளை இயக்க தேவையான மின்கம்பியாளர் மற்றும் மின் உதவியாளர்களை 4 மாத (120 நாட்கள்) காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்த திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

பருவமழைக் காலங்களில், பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தேங்கி நிற்கும் மழைநீரை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் மழைநீரைத் தேக்கி வைக்க கீழ்நிலைத் தொட்டிகளில் மின்சார நீர்மூழ்கி பம்பு மோட்டார்கள் பொருத்தப்பட்டுள்ளன. இதற்காக நீர்மூழ்கி பம்புகள் மோட்டார்கள் மற்றும் மின்னாக்கிகளை (Genset) இயக்க பணியாளர்கள் தேவை என உதவி செயற்பொறியாளர் (மி) மண்டலம் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 10, 11, 13 மற்றும் 14 ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

வரவிருக்கும் வடகிழக்கு பருவமழை மற்றும் பணியின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, SWD கீழ்நிலைத் தொட்டிகளில் நீர்மூழ்கி பம்ப் மோட்டார்களை இயக்குவதற்கு பணியாளர்கள் – மின் கம்பியாளர் மற்றும் மின் உதவியாளர் ஆகியோரை ஈடுபடுத்துவது அவசியமாகிறது. பொதுப்பணித் துறை *SoR* 2024-25ன் அடிப்படையில் தொழிலாளர் விகிதங்கள் கணக்கிடப்பட்டது. எலக்ட்ரீஷியன் கிரேடு *I* (மின் கம்பியாளர்) நாள் ஒன்றிற்கு ரூ.908/- ( ஜி.எஸ்.டி நீங்கலாக) மற்றும் மின் உதவியாளருக்கு நாள் ஒன்றிற்கு ரூ.708/-(ஜி.எஸ்.டி நீங்கலாக), இபிஎஃப் ரூ.1800 /நபர் / மாதம் மற்றும் தினசரி ஊதியத்தில் 10% நிர்வாக கட்டணங்கள் மற்றும் இபிஎஃப் .

சம்ப் மற்றும் பம்புகளை இயக்க தேவையான மின்கம்பியாளர் மற்றும் மின் உதவியாளர்களை 4 மாத (120 நாட்கள்) காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரர்

மூலம் பணியமர்த்துவதற்கு, 8 தனித்தனி மின்னனு ஒப்பந்தப்புள்ளிகள் கோர ஆணையரின் 03.07.2025 நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது. இதன் விவரங்கள் பின்வருமாறு:

**TABLE : 1**

| Sl. No | Zone | No. of Sump & Pump Locations | No.of Electricians required | No. of Electrical Helpers required | Description of work | Total amount for4 months (120days) (Electrician - Rs.908 per day, Electrical helper- Rs.708 per day based on PWD SOR 2024-2025 and Inclusive of 18% GST, Administrative Charges & PF) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 & 3 | 10 | 27 | 30 | ELDC.NO./SMII/P10/2790/2025 Hiring of Manpower 27 Nos of Electrician & 30 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 1 & 3 for a period of four months (120 days) on contract basis. | 76,59,653.76 |
| 2 | 2 | 12 | 36 | 36 | ELDC.NO./SMII/P10/2791/2025 Hiring of Manpower 36 Nos of Electrician & 36 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 2 for a period of four months (120 days) on contract basis. | 97,34,376.96 |
| 3 | 4 | 16 | 21 | 39 | ELDC.NO./SMII/P10/2792/2025 Hiring of Manpower 21 Nos of Electrician & 39 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 4 for a period of four months (120 days) on contract basis. | 78,31,612.80 |
| 4 | 5 | 9 | 21 | 27 | ELDC.NO./SMII/P10/2793/2025<br><br>Hiring of Manpower 21 Nos of Electrician & 27 nos of Electrical Helper for the operation of Sump and | 63,96,128.64 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | pumps in Zone 5 for a period of four months (120 days) on contract basis. | |
| 5 | 6 | 11 | 27 | 33 | ELDC.NO./SMII/P10/2794/2025<br><br>Hiring of Manpower 27 Nos of Electrician & 33 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 6 for a period of four months (120 days) on contract basis. | 80,18,524.80 |
| 6 | 7, 8 &10 | 10 | 24 | 30 | ELDC.NO./SMII/P10/2795/2025<br><br>Hiring of Manpower 24 Nos of Electrician & 30 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 7, 8 & 10 for a period of four months (120 days) on contract basis. | 72,07,326.72 |
| 7 | 11 &13 | 9 | 18 | 27 | ELDC.NO./SMII/P10/2796/2025<br><br>Hiring of Manpower 18 Nos of Electrician & 27 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 11 & 13 for a period of four months (120 days) on contract basis. | 59,43,801.60 |
| 8 | 14 | 6 | 15 | 18 | ELDC.NO./SMII/P10/2797/2025<br><br>Hiring of Manpower 15 Nos of Electrician &18 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 14 for a period of four months (120 days) on contract basis. | 44,14,861.44 |

மேலே குறிப்பிட்டுள்ள 8 மின்னணு ஒப்பங்கள் 01.08.2025 அன்று திறக்கப்பட்டது. இந்த 8 டெண்டர்களில், 4 டெண்டர்களுக்கு ஒப்பங்கள் எதுவும் பெறப்படவில்லை. எனவே, அதற்கான ஒப்ப திறப்பு நாள் 08.08.2025 வரை ஒரு வாரம் நீட்டிக்கப்பட்டது.

08.08.2025 அன்று 4 டெண்டர்களில், 1 க்கு ஒப்பங்கள் எதுவும் பெறப்படவில்லை. அனைத்து டெண்டர்களுக்கும் ஒரு ஒப்பம் மட்டுமே பெறப்பட்டது மற்றும் மதிப்பிடப்பட்ட நிர்வாக கட்டணங்களுடன் ஒப்பிடும்போது திறக்கப்பட்ட விலைபுள்ளி விகிதங்கள் சுமார் 20% அதிகமாக உள்ளது.

மன்ற தீர்மான எண் 547/2025, நாள்: 30/04/2025 ல் மன்ற ஒப்புதலைப் பெற்ற பிறகு, கட்டிடத்துறை M/s Jayram Ventures நிறுவனத்திற்கு அளித்த Letter of acceptance B.D.C.No.B1/1654/2024 நாள் 30.04.2025 மூலம் ,“ This is to Notify that you Tender dated 28.02.2025 for request proposal for the Engagement of Agency to provide professional Manpower to Greater Chennai Corporation has been accepted by the competent authority for the period from 01.05.2025 to 30.04.2026.

**The following conditions shall be strictly adhered to :**

M/s Jayram Ventures should provide professional manpower to GCC under various categories in the field of Engineering, Finance, Healthcare, Information Technology, Administration etc.,

The Department/Zone who have a need to engage manpower shall obtain separate Administration sanction on the above and engage the Tenderers for providing Manpower with the service charge of 7.48% on the value of the Work.”

மேலும், பொதுப்பணித் துறை SOR 2025-26-ன் அடிப்படையில் எலக்ட்ரீஷியன் கிரேடு I மின் கம்பியாளர் நாள் ஒன்றிற்கு ரூ.971/- (ஜிஎஸ்டி நீங்கலாக) மற்றும் மின் உதவியாளர் நாள் ஒன்றிற்கு ரூ.757/- (ஜிஎஸ்டி நீங்கலாக) பணியமர்த்துவதற்கு கட்டணம் கணக்கிடப்பட்டுள்ளது.

மேற்கண்டவற்றின் அடிப்படையில், இப்பணிக்கான திருத்தப்பட்ட மதிப்பு பின்வருமாறு:

**Table 2:**

| Sl.No | Zone | No. of Sump & Pump Locations | No.of Electricians required | No. of Electrical Helpers required | Description of work | Total amount for 4 months (120days)(Electrician - Rs.971 per day, Electrical helper- Rs.757 per day based on PWD SOR 2025-2026 and inclusive of 18% GST, Service Charges 7.48% & PF) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 & 3 | 10 | 27 | 30 | ELDC.NO./SMII/P10/2790/2025 Hiring of Manpower 27 Nos of Electrician & 30 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 1 & 3 for a period of four months (120 days) on contract basis. | 79,66,777.87 |
| 2 | 2 | 12 | 36 | 36 | ELDC.NO./SMII/P10/2791/2025 Hiring of Manpower 36 Nos of | 1,01,25,008.09 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Electrician & 36 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 2 for a period of four months (120 days) on contract basis. | |
| 3 | 4 | 16 | 21 | 39 | ELDC.NO./SMII/P10/2792/2025 Hiring of Manpower 21 Nos of Electrician & 39 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 4 for a period of four months (120 days) on contract basis. | 81,44,385.56 |
| 4 | 5 | 9 | 21 | 27 | ELDC.NO./SMII/P10/2793/2025<br><br>Hiring of Manpower 21 Nos of Electrician & 27 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 5 for a period of four months (120 days) on contract basis. | 66,52,298.33 |
| 5 | 6 | 11 | 27 | 33 | ELDC.NO./SMII/P10/2794/2025<br><br>Hiring of Manpower 27 Nos of Electrician & 33 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 6 for a period of four months (120 days) on contract basis. | 83,39,799.680 |
| 6 | 7, 8 &10 | 10 | 24 | 30 | ELDC.NO./SMII/P10/2795/2025<br><br>Hiring of Manpower 24 Nos of Electrician & 30 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 7, 8 & 10 for a period of four months (120 days) on contract basis. | 74,96,049.00 |
| 7 | 11 &13 | 9 | 18 | 27 | ELDC.NO./SMII/P10/2796/2025<br><br>Hiring of Manpower 18 Nos of Electrician & 27 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 11 & 13 for a period of four months (120 days) on contract basis. | 61,81,569.47 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 8 | 14 | 6 | 15 | 18 | ELDC.NO./SMII/P10/2797/2025<br><br>Hiring of Manpower 15 Nos of Electrician &18 nos of Electrical Helper for the operation of Sump and pumps in Zone 14 for a period of four months (120 days) on contract basis. | 45,91,775.18 |

இது பணியாளர்களை பணியமர்த்தும் செயல்முறையை விரைவுபடுத்தும் என்பதால், முந்தைய ஒப்பந்தப்புள்ளிகளை ரத்து செய்து, மன்ற தீர்மான எண் 547/2025, நாள் : 30/04/2025ல் குறிப்பிட்டுள்ளபடி " பெருநகர சென்னை மாநகராட்சி தொழில்முறை மனித வளத்தை வழங்க வேண்டி பணிமதிப்பு தொகையை விட சேவை தொகையாக (+)7.48% அதிகம், சேர்த்து L1 ஒப்பந்ததாரர் திருவாளர். Jayram Ventures, அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,

மேற்கண்ட பணிகளுக்காக மண்டலங்கள் மற்றும் துறைகள் மூலம் நிர்வாக அனுமதி பெற்றபின் மேற்கண்ட ஒப்ப ஆணையினை மேற்கோள் காட்டி மேற்குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்ப ஆணை வழங்கவும்." உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 10, 11, 13 மற்றும் 14'ல் உள்ள சம்ப் மற்றும் பம்புகளை இயக்க தேவையான மின்கம்பியாளர் மற்றும் மின் உதவியாளர்களை 4 மாத (120 நாட்கள்) காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்துவதற்கு ஆணையரின் நிர்வாக ஒப்புதலை ரத்து செய்யவும் மற்றும் அட்டவணை 1 இல் குறிப்பிட்டுள்ளபடி 8 தனித்தனி டெண்டர்களை ரத்து செய்யவும்,
2. மண்டலம் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 10, 11, 13 மற்றும் 14 ல் உள்ள சம்ப் மற்றும் பம்புகளை இயக்க தேவையான மின்கம்பியாளர் மற்றும் மின் உதவியாளர்களை 4 மாத (120 நாட்கள்) காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணியமர்த்துவதற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் அட்டவணை 2 ல் குறிப்பிட்டுள்ளப்படி அனுமதி வழங்கவும்,
3. திருவாளர். M/s Jayram Ventures நிறுவனத்திற்கு கட்டடத் துறையால் வழங்கப்பட்ட ஏற்புக் கடிதத்தின் அடிப்படையில் அட்டவணை 2 இல் குறிப்பிட்டுள்ள 8 தனித்தனி பணிகளுக்கு பணி ஆணை வழங்கவும்,
4. இப்பணிக்கான செலவினத்தை மின்துறையின் வருவாய் 2025 – 26 நிதி ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளவும்,

5. இப்பணிக்கான செலவினத்தை மேற்கண்ட தலைப்பின் கீழ் நிதி ஒதுக்குவதற்கு நிதி மேலாண்மை பிரிவுக்கு அறிவுறுத்தவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

<u>ம.அ.9.ந.க.எண். அ2/6746/2025</u>

**தீர்மான எண்: 1032/2025** **பொருள் எண்.17**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-9, கோட்டம்-123, சி.பி ராமசாமி சாலையில் உள்ள சமுதாய கூடத்தில் மூன்றாம் தளத்தில் கூடுதலாக அறைகள் கட்டும் பணியும் மேலும் இக்கூடத்திற்கு தேவையான பொருட்கள் (Furniture items) மற்றும் மின்சாரம் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, பகுதி-25, கோட்டம்-123, சி.பி ராமசாமி சாலையில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் இப்பகுதியை சுற்றியுள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதியதாக தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய சமூக நலக்கூடம் ரூ. 3,00,00,000/- மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டது.

மேலும் இச்சமூகநலகூடத்தில் கூடுதல் நிதி மூலம் ரூ 2,50,00,000/- மதிப்பீட்டில் கட்டிட துறை மூலம் இரண்டாம் தளம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது,

இதனை தொடர்ந்து மத்திய வட்டார துணை ஆணையர் அவர்களின் *28.05.2024* நாளிட்ட கள ஆய்வின் போது சமூக நலக்கூடத்தில் கூடுதலாக மூன்றாம் தளத்தில் தங்கும் அறைகள் அமைக்கவும், சமூக நலக்கூடத்திற்கு தேவையான பொருட்கள் *(Furniture items)* மற்றும் மின்சாரம் தொடர்பான பணிகள் அமைக்க அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து கீழ் கண்டவாறு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தலைமை பொறியாளர் *( கட்டிடம் )* அவர்களின் *23.06.2025* அன்று தொழிற்நுட்ப அனுமதி பெறப்பட்டது.

**பணியின் விவரம்**

| வ. எண் | வார்டு எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு எண் | மதிப்பீட்டுத் தொகை (ரூ) |
|---|---|---|---|---|
| 1 | 123 | Additional Construction of Rooms in Third floor Supply of Furniture and Electrical Works to Community Hall at C.P. Ramasamy Road in Division 123. Unit 25, Zone 9 | NJ/2025-26/3200 | 2,43,00,000 |
| | | | மொத்தம் | 2,43,00,000 |

எனவே,

1. மண்டலம்-9, பகுதி-25, கோட்டம்-123 ல் உள்ள சி.பி ராமசாமி சாலையில் கட்டப்பட்டு வரும் சமூக நல கூடத்தில் கூடுதலாக Additional Construction of Rooms in Third floor Supply of Furniture and Electrical Works பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ 2,43,00,000/- க்கு நிர்வாக அனுமதி யும்,
2. இப்பணிக்கு தலைமையிடத்து கட்டிட துறையின் மூலம் ஒப்பம் கோர அனுமதியும்,
3. இப்பணிகளுக்கான செலவீன தொகையை கட்டிட துறையின் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண் டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.568/2025, நாள்.24.09.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

<u>ம.அ.11.ந.க.எண்.E1/598999/2025</u>

**தீர்மான எண்: 1033/2025** **பொருள் எண்.18**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-11, கோட்டம்-144, வி.ஜி.பி அமுதா நகர் 3வது குறுக்கு தெருவில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பள்ளி மற்றும் விளையாட்டுத்திடல் என வகைப்படுத்தப்பட்ட இடத்தில் உடற்பயிற்சி கூடம் மற்றும் இதர உள் அரங்கு மற்றும் திறந்த வெளி விளையாட்டு திடல் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

கீழ்குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு | மதிப்பீட்டு எண். | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (கோடி) |
|---|---|---|---|---|
| 1. | 144 | NL/2024-2025/1586 | மண்டலம்-11, பகுதி-32, கோட்டம்-144-ல் வி.ஜி.பி அமுதா நகர் 3வது குறுக்கு தெருவில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பள்ளி மற்றும் விளையாட்டுத்திடல் என வகைப்படுத்தப்பட்ட இடத்தில் உடற்பயிற்சி கூடம் மற்றும் இதர உள் அரங்கு மற்றும் திறந்தவெளி விளையாட்டு திடல் அமைக்கும் பணி. | ரூ.3.60 கோடி |

| | | |
|---|---|---|
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | 144வது வார்டு மாமன்ற உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 3 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம்-11 |
| 4 | சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி | மண்டலம்-11 |
| 5 | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி | தலைமை பொறியாளர் (பூங்கா) (ம) விளையாட்டுத்திடல் ஆணை எண் 01 /2025 , நாள். 29.08.2025 |
| 6 | வார்டு குழு தீர்மான எண். மற்றும் தேதி | தீர்மான எண். /2025, நாள். |
| 7 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024 - 2025 ஆம் ஆண்டு |
| 8 | மதிப்பீடு தொகை | |
| | அ) பணியின் செலவீனம | ரூ 2,98,78,503.46 |
| | ஆ) மேலான மேற்பார்வை செலவினம் | 0.00 |
| | இ) சிறு மேற்பார்வை செலவு | 0.00 |
| | ஈ) தரக் கட்டுப்பாடு செலவு | 0.00 |
| | உ) மற்ற எதிர்பாரா செலவு | ரூ 4,44,580.89 |
| | ஊ) தமிழ்நாடு கட்டுமானதொழிலாளர் நல வாரியநிதி | ரூ 2,98,785.03 |
| | எ) பொருட்கள் (ம) சேவை வரி | ரூ 53,78,130.62 |
| | ஏ) மின் கட்டணம் செலவு | 0.00 |
| | மொத்தம் | ரூ 3,60,00,000.00 |
| 9 | மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலை பகுதியா அதன் அளவு குறிப்பிடவும் | தொடர்பற்றது |
| 10 | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு அல்லது ஒரு | --------- |

| | | |
|---|---|---|
| | மீட்டருக்கு ஆகும் செலவு | |
| 11 | வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 12 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள் | தீர்மான எண். /2025, நாள். |
| 13 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | புதிய பணி |
| 14 | நிதியின் மூலத்தன்மை | 202107 / மூலதன நிதியின் கீழ் |
| | அ) வரவு செலவு ஒதுக்கீடு | ரூ.-------------------- |
| | ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | ரூ.------------------- |
| | இ) மீதமுள்ள நிதி (அ – ஆ) | ரூ.----------------- |
| | ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி. | ரூ.3,60,00,000.00 |
| | உ) மீதமுள்ள தொகை | ரூ.------------------- |

எனவே, மண்டலம்-11, பகுதி-32, கோட்டம்-144, வி.ஜி.பி அமுதா நகர் 3வது குறுக்கு தெருவில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பள்ளி மற்றும் விளையாட்டுத்திடல் என வகைப்படுத்தப்பட்ட இடத்தில் உடற்பயிற்சி கூடம் மற்றும் இதர உள் அரங்கு மற்றும் திறந்த வெளி விளையாட்டு திடல் அமைக்கும் பணிக்கு ரூ.3,60,00,000/- (ரூபாய் மூன்று கோடியே அறுபது இலட்சம் மட்டும்)-க்கு தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிலைக்குழு(பணிகள்)வின் நிர்வாக அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.571/2025, நாள்.24.09.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**<u>க.து.ந.க.எண்.பி1/2059/2025</u>**

**தீர்மான எண்: 1034/2025** **பொருள் எண்.19**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம்-5, வார்டு-53, கத்பாட சாலையில் மூலக்கொத்தளம் மயான பூமியில் இயற்கை நிலத்தோற்றம் (Landscape Development) அமைக்கும் பணிக்காக திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-5, வார்டு-53, கத்பாட சாலையில் மூலக்கொத்தளம் மயான பூமியில் இயற்கை நிலத்தோற்றம் (Landscape Development) அமைக்கும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | 1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள்: 22.07.2025.<br>2. மன்ற தீர்மானம் எண்: 904/2025, நாள்: 30.07.2025. |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 05. |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | <u>மதிப்பீட்டின் தொகை</u> | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 2,56,94,000.00 |

| | | |
|---|---|---|
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 46,24,920.00 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 2,56,940.00 |
| | (ஈ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 6,24,140.00 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 3,12,00,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 31.07.2025.<br>2. தினமலர் 01.08.2025.<br>3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 01.08.2025. |
| 7 | ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 18.08.2025 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | Health Department Buildings<br>(20 - 28 - 00 / 412 - 400 - 301) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender) ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளன. |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 19.08.2025 அன்று இரண்டு ஒப்பங்கள் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு **2024-2025** (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | **2024-2025**ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | K S K Engineers | 2,56,94,000.00 | 2,73,61,540.60 | (+) 6.49 % அதிகம் |
| 2 | N Vivek Constructions | 2,56,94,000.00 | 2,81,34,930.00 | (+) 9.50 % அதிகம் |

இவ்வொப்பத்தில் திருவாளர். *K S K Engineers*., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் *L1* ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு

| வ. எண் | மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம் | *L1* ஒப்பந்ததாரர் *2024-2025*ஆம் ஆண்டு *SOR*-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| *1* | முதற் கட்ட விலை குறைப்பு<br>நாள். *04.09.2025* | ரூ. *2,70,30,088.00 (+) 5.20 %* அதிகம் |
| *2* | இரண்டாம் கட்ட விலை குறைப்பு<br>நாள். *04.09.2025* | ரூ. *2,69,73,561.20 (+) 4.98 %* அதிகம் |

இதன்படி, மண்டலம்-*5*, வார்டு-*53*, கத்பாட சாலையில் மூலக்கொத்தளம் மயான பூமியில் இயற்கை நிலத்தோற்றம் *(Landscape Development)* அமைக்கும் பணிக்காக *2024-2025*ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட *(+) 4.98%* அதிகம், ஒப்பத் தொகை ரூ.*2,69,73,561.20* மற்றும் *18* சதவீதம் சரக்கு மற்றும் சேவை வரி ரூ.*48,55,241.01*ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.*3,18,28,802.00*-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண். | மதிப்பீட்டின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய்) (A) | தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+) 4.98% சேர்த்து (ரூபாய்) (B) |
|---|---|---|---|
| 1 | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 2,56,94,000.00 | ரூ. 2,69,73,561.20 |
| 2 | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 46,24,920.00 | ரூ. 48,55,241.01 |
| 3 | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 2,56,940.00 | ரூ. 2,56,940.00 |
| 4 | (ஈ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 6,24,140.00 | ரூ. 6,24,140.00 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ.3,12,00,000.00 | ரூ. 3,27,09,882.00 |
| கூடுதல் தொகை (B- A) | | | ரூ. 15,09,882.00 |

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+)4.98%, 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.3,27,09,882.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.3,27,09,882.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.98% அதிகம், ஒப்பத் தொகை ரூ.2,69,73,561.20 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.48,55,241.01ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.3,18,28,802.00-க்கு (ரூபாய் மூன்று கோடியே பதினெட்டு இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து எண்ணூற்று இரண்டு மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். K S K Engineers., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,

3. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண்:Health Department Buildings (20 - 28 - 00 / 412 - 400 - 301) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண் டியும் மற்றும் இனம்-1ற்கு மட்டும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.561/2025, நாள்.24.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**<u>க.து.ந.க.எண்.பி1 / 2053 /2025</u>**

**தீர்மான எண்: 1035/2025** **பொருள் எண்.20**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 07, வார்டு - 89, இளங்கோ நகர், T.V.S. அவென்யூ பிரதான சாலையில் உள்ள இடுகாடு வளாகத்தில் புகையில்லா LPG தகன மேடை மற்றும் பிற மேம்பாட்டு பணி மற்றும் மண்டலம் - 09, வார்டு - 113, ராமா தெருவில் உள்ள சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டும் பணிகளுக்காக திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | 1) மண்டலம் - 07, வார்டு - 89, இளங்கோ நகர், T.V.S. அவென்யூ பிரதான சாலையில் உள்ள இடுகாடு வளாகத்தில் புகையில்லா LPG தகன மேடை மற்றும் பிற மேம்பாட்டு பணி.<br>2) மண்டலம் - 09, வார்டு - 113, ராமா தெருவில் உள்ள சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டும் பணி |

| | | |
|---|---|---|
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | 1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : **28.07.2025.**<br>2. மன்ற தீர்மானம் எண் : 906 / 2025, நாள் : 30.07.2025.<br>3. மன்ற தீர்மானம் எண் : 925 / 2025, நாள் : 30.07.2025. |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 07 மற்றும் 09. |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | **மதிப்பீட்டின் தொகை** | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 3,21,79,000.00 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 57,92,220.00 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 3,21,790.00 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 3,21,790.00 |
| | (உ) மேலான மேற்பார்வை செலவு 10% | ரூ. 12,96,182.71 |
| | (ஊ) சிறு மேற்பார்வை செலவு 2.50% | ரூ. 3,24,045.68 |
| | (எ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 7,62,971.62 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 4,09,98,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் **31.07.2025.**<br>2. தினமலர் **01.08.2025.**<br>3. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் **01.08.2025.** |
| 7 | ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 18.08.2025 |

| | | |
|---|---|---|
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | Health Department Buildings<br>(20 - 28 - 00 / 412 - 400 - 301)<br>Middle School<br>(20 - 28 - 00 / 412 - 400 - 402) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து *15/30* நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | மூன்று *(e-Tender)* ஒப்பப்படிவங்கள் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளன. |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 19.08.2025 அன்று மூன்று ஒப்பங்கள் பெறப்பட்டன. ஒப்பத்தில் பங்கேற்றவர்களில் திருவாளர். *RTI Foundation*., அவர்கள் தகுதி இல்லாமையால் நிராகரிக்கப்பட்டார். மற்ற ஒப்பந்ததாரர்கள் ஒப்ப நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர்கள் என்று அறியப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு :

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு ***2024-2025*** (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | ***2024-2025***ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | K S K Engineers | 3,21,79,000.00 | 3,42,70,635.00 | (+) 6.50 % அதிகம் |
| 2 | N Vivek Constructions | 3,21,79,000.00 | 3,37,84,732.10 | (+) 4.99 % அதிகம் |

இவ்வொப்பத்தில் திருவாளர். *N. Vivek Constructions*., அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் *L1* ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு

| வ. எண் | மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம் | L1 ஒப்பந்ததாரர் **2024-2025**ஆம் ஆண்டு **SOR**-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | முதற்கட்ட விலை குறைப்பு<br>நாள். 04.09.2025 | ரூ. 3,37,81,514.20 (+) 4.98 % அதிகம் |
| 2 | இரண்டாம் கட்ட விலை குறைப்பு<br>நாள். 04.09.2025 | ரூ. 3,37,75,078.40 (+) 4.96 % அதிகம் |

இதன்படி, மண்டலம் - 07, வார்டு - 89, இளங்கோ நகர், T.V.S. அவென்யூ பிரதான சாலையில் உள்ள இடுகாடு வளாகத்தில் புகையில்லா LPG தகன மேடை மற்றும் பிற மேம்பாட்டு பணி மற்றும் மண்டலம் - 09, வார்டு - 113, ராமா தெருவில் உள்ள சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கட்டும் பணிகளுக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.96% அதிகம், ஒப்பத் தொகை ரூ.3,37,75,078.40 மற்றும் 18 சதவீதம் சரக்கு மற்றும் சேவை வரி ரூ.60,79,514.11ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.3,98,54,593.00-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண். | மதிப்பீட்டின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய்) (A) | தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+) 4.96 % சேர்த்து (ரூபாய்) (B) |
|---|---|---|---|
| 1 | **(அ) கட்டுமான பணி செலவு** | ரூ. 3,21,79,000.00 | ரூ. 3,37,75,078.40 |
| 2 | **(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி** 18% | ரூ. 57,92,220.00 | ரூ. 60,79,514.11 |
| 3 | **(இ)** த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 3,21,790.00 | ரூ. 3,21,790.00 |

| | | | |
|---|---|---|---|
| 4 | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 3,21,790.00 | ரூ. 3,21,790.00 |
| 5 | (உ) மேலான மேற்பார்வை செலவு 10% | ரூ. 12,96,182.71 | ரூ. 12,96,182.71 |
| 6 | (ஊ) சிறு மேற்பார்வை செலவு 2.50% | ரூ. 3,24,045.68 | ரூ. 3,24,045.68 |
| 7 | (எ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 7,62,971.62 | ரூ. 7,62,971.62 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 4,09,98,000.00 | ரூ. 4,28,81,373.00 |
| கூடுதல் தொகை (B- A) | | | ரூ. 18,83,373.00 |

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+) 4.96%, 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.4,28,81,373.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.4,28,81,373.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)4.96% அதிகம், ஒப்பத் தொகை ரூ.3,37,75,078.40 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.60,79,514.11ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.3,98,54,593.00-க்கு (ரூபாய் மூன்று கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். N. Vivek Constructions., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,
3. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண்:Health Department Buildings (20 - 28 - 00 / 412 - 400 - 301) மற்றும் Middle School (20 - 28 - 00 / 412 - 400 - 402) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் இனம் 1ற்கு மட்டும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.560/2025, நாள்.24.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.பி1 / 2357 / 2024**

**தீர்மான எண்: 1036 / 2025** **பொருள் எண்.21**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் – 15, கோட்டம் – 192ல் கபாலீஸ்வரர் நகர் 1வது பிரதான சாலை, நீலாங்கரை, சென்னை நடுநிலைப் பள்ளியில் 10 எண்ணிக்கைகள் கொண்ட புதிய வகுப்பறைகள் கட்டிடம் கட்டும் பணிக்காக தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

மண்டலம் - 15, பகுதி - 44, கோட்டம் - 192-ல் கபாலீஸ்வரர் நகர் 1வது பிரதான சாலை, நீலாங்கரை, சென்னை நடுநிலைப்பள்ளியில் 10 எண்ணிக்கைகள் கொண்ட புதிய வகுப்பறைகள் கட்டிடம் கட்டும் பணியினை மேற்கொள்ள வேண்டி 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான விலைப்பட்டியலின் படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | பணியின் பெயர் | மண்டலம் - 15, பகுதி - 44, கோட்டம் - 192-ல் கபாலீஸ்வரர் நகர் 1வது பிரதான சாலை, நீலாங்கரை, சென்னை நடுநிலைப்பள்ளியில் 10 எண்ணிக்கைகள் கொண்ட புதிய வகுப்பறைகள் கட்டிடம் கட்டும் பணி. |
| 2. | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 15 |

| | | |
|---|---|---|
| 3. | மதிப்பீட்டின் தொகை விவரம் | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 2,00,28,282.15 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ 36,05,090.79 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா.1% | ரூ 2,00,282.82 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 2,00,282.82 |
| | (உ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 4,36,061.42 |
| | (ஊ) தமிழ்நாடு மின்சார வாரியம் | ரூ. 30,000.00 |
| | மொத்தம் | ரூ.2,45,00, 000.00 |
| 4. | நிதியின் தன்மை | பெருநகரசென்னை மாநகராட்சிமூலதன நிதி |
| 5. | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ.2,45,00, 000.00 |

**மேற்குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 15, பகுதி – 44, கோட்டம் – 192-ல் கபாலீஸ்வரர் நகர் 1வது பிரதான சாலை, நீலாங்கரை, சென்னை நடுநிலைப் பள்ளியில் 10 எண்ணிக்கைகள் கொண்ட புதிய வகுப்பறைகள் கட்டிடம் கட்டும் பணியினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளின் செலவினத்தை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.**

**இதற்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டடத்துறை மூலமாக ஒப்பம் கோரப்பட வேண்டும்.**

**எனவே,**

1. **மண்டலம்–15, பகுதி –44, கோட்டம் –192-ல் கபாலீஸ்வரர் நகர் 1வது பிரதான சாலை, நீலாங்கரை, சென்னை நடுநிலைப்பள்ளியில் 10 எண்ணிக்கைகள் கொண்ட புதிய வகுப்பறைகள் கட்டிடம் கட்டும் பணியினை 2024 - 2025 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின் படி மேற்கொள்வதற்கும்,**
2. **மேற்கண்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.2,45,00,000.00–க்கான திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதிக்கும்,**

3. இப்பணிக்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் ஒதுக்கீடு அளிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.567/2025, நாள்.24.09.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

******

**பொ.து.ந.க.எண்.ஈ3 / 26543 / 2025**

**தீர்மான எண்: 1037/2025** **பொருள் எண்.22**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு.**

இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர் அவர்களின் நடவடிக்கை எண்.11599275/ நிர், 2.1.2025-1, நாள்.05.09.2025, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை செ.மு.ஆ.பஅப1/22669/2024, நாள்.28.08.2025 மற்றும் மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை. அ1/001/2025, நாள்.29.08.2025 ஆகிய நடவடிக்கை மற்றும் செயல்முறை ஆணைகளின்படி, கீழ்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | செயல்முறை ஆணை எண். மற்றும் நாள். | அயற்பணியில் சேர்ந்த நாள். |
|---|---|---|---|

| வ. எண். | பெயர் மற்றும் பதவி | செயல்முறை ஆணை எண். மற்றும் நாள். | அயற்பணியில் சேர்ந்த நாள். |
|---|---|---|---|
| 1. | திரு.ச.சிவக்குமார்,<br>உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)<br>மக்கள் தொடர்பு அலுவலகம்<br>பெருநகர சென்னை மாநகராட்சி | இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர் அவர்களின் நடவடிக்கை எண்.11599275/நிர், 2.1.2025-1,<br>நாள். 05.09.2025 | 09.09.2025<br>மு.ப. |
| 2. | திரு.வெ.பாலகுமார்,<br>பூங்கா கண்காணிப்பாளர்<br>வட்டார அலுவலகம் ( மத்தியம்)<br>பெருநகர சென்னை மாநகராட்சி | தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை செ.மு.ஆ.பஅப1/22669/2024, நாள்.28.08.2025 | 11.09.2025<br>மு.ப. |
| 3. | திரு.க.திலீப்குமார்,<br>தனி வட்டாட்சியர் (நிலம் மற்றும் உடைமை)<br>வட்டார அலுவலகம் (தெற்கு)<br>பெருநகர சென்னை மாநகராட்சி | மாவட்ட ஆட்சியர், சென்னை மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை. அ1/001/2025, நாள்.29.08.2025 | 15.09.2025<br>மு.ப. |

“இதனை நியமனக்குழு பதிவு செய்து,

மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கின்றது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ7/2112/2025**

**தீர்மான எண்: 1038/2025** **பொருள் எண்.23**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - சென்னை மாவட்டம், வீட்டுமனை பட்டா வரன்முறைப்படுத்துதல் - அரசு புறம்போக்கு நிலங்களில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வசிப்பவர்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்குதல் - வருவாய் துறை ஆவணங்களில் பாதை, வண்டி பாதை, பாட்டை, களம், மயானம்/இடுகாடு, கார்பரேஷன் பப்ளிக் ஆகிய வகைபாடு கொண்ட நிலங்களில் வசிப்பவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மை சான்றினை வழங்க மன்றத்தின் அனுமதி.**

சென்னை மாவட்ட ஆட்சியரின் 26.08.2025 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்டத்தில் ஆட்சேபனையற்ற அரசு புறம்போக்கு நிலத்தில் 10 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு ஒருமுறை வரன்முறைபடுத்தும் சிறப்பு திட்டத்தின் கீழ் வீட்டு மனை பட்டா வழங்க அரசாணை நிலை எண்.97 மற்றும் 205 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை நாள்:21.02.2025 (ம) 24.06.2025ல் காணும் அரசாணைகளில் ஆணையிடப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் சர்க்கார் புறம்போக்கு – சாலை வகைப்பாட்டில் வீடுகள் மூலமாக ஆக்கிரமணம் செய்துள்ளதாக கிண்டி வட்டாட்சியரிடமிருந்து அறிக்கை வரப்பெற்றுள்ளது என்றும், அவற்றின் விவரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வட்டத்தின் பெயர் | கிராமம் | வகைபாடு | வார்டு | பிளாக் எண். | நகர புல எண். புல எண் | மொத்த பரப்பு (ச.அடி/ ஹெக்டேர்) | வரன்முறைப் படுத்தபட வேண்டிய பரப்பு (ச.அடி) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | கிண்டி | தி.நகர் | சாலை | | 129 | 5706/4 | 0.16.34.0 | 7518.654 ச.அடி |

மேலும், இந்நேர்வு தொடர்பாக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் சுற்றறிக்கையில், உள்ளாட்சி அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள நிலங்களான மாநகராட்சி நிலமாற்றம்

விலக்களிக்கப்பட்டவை-கார்ப்ரேஷன் பப்ளிக், சர்க்கார் புறம்போக்கு-பாதை, வண்டி பாதை வகைபாட்டில் உள்ள நபர்களின் ஆக்கிரமணத்தை வரன்முறை செய்ய உள்ளாட்சி அமைப்பின் தீர்மானம் பெற்ற பின்பு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பட்டியலில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள புலங்களில் வசிக்கும் தகுதியுள்ள நபர்களுக்கு அரசாணை நிலை எண்.97 மற்றும் 205ன் கீழ் வரன்முறைப்படுத்தி பட்டா வழங்கும் பொருட்டு சென்னை மாநகராட்சியின் மாமன்ற தீர்மானம் நிறைவேற்றி தருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

துணை ஆட்சியர் / நிமஉது (மத்தியம்) அவர்களின் 01.09.2025 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்டம், கிண்டி வட்டம், தி.நகர் கிராமம் பகுதிகளில் 10 ஆண்டுகளுக்கு மேலாக வசிப்பவர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க பெருநகர சென்னை மாநகராட்சி மன்ற தீர்மானம் வழங்குதல் குறித்து புலத்தணிக்கை அறிக்கை தெரிவிக்க கோரப்பட்டுள்ளதற்கு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அட்டவணை</u>**

**<u>சென்னை மாவட்டம், கிண்டி வட்டம், தி.நகர் கிராமம்</u>**

| Ward | Taluk / Town | Block / Ts | Eextent | adangal | Total encroachers | No.of eligible beneficiary | Boundaries | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | North | South | East | West |
| 141 | Guindy / T.Nagar | 129, T.S.No. 5706/4 (Sarkar Porambok | 1634 Sq.mtr | --- | 65 | 45 | Bk.129 TS.No.8821 | Bk.129 TS.No.8859 | Bk.129 TS.No.5724/1 | Bk.129 TS.No.5705/1 & 3 |

மேற்கண்ட புலத்தினை கள ஆய்வு செய்ததில் புலத்தில் மாடி வீடுகளுடன் கூடிய குடியிருப்புகள் அமைந்துள்ளதாகவும், இக்குடியிருப்புகளில் சுமார் 40 முதல் 50 ஆண்டுகளுக்கு மேலாக பல தரப்பட்ட இனம் மற்றும் வகுப்பை சார்ந்த மக்கள் வசித்து வருகிறார்கள் என்றும் இவர்கள் தனியார் மற்றும் கூலி வேலை செய்பவர்கள் என விசாரணையில் தெரியவருகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர், மண்டலம்-10 அவர்களின் 02.09.2025 நாளிட்ட குறிப்பில், மேற்படி புலமானது 29.08.2025 அன்று துணை ஆட்சியர் / நிமஉது (மத்தியம்), உரிமம் பெற்ற நில அளவர், சம்பந்தப்பட்ட உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர் மற்றும் வருவாய் வட்ட நில அளவருடன் கூட்டுப் புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| வார்டு | வட்டத்தின் பெயர் | கிராமம் | வகைபாடு | பிளாக் எண். | நகர புல எண். புல எண். | மொத்த பரப்பு (ச.மீ) | அடங்கல் | மொத்த ஆக்கிரமிப்பு | மொத்த தகுதியுள்ள நபர்களின் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 41 | கிண்டி | தி.நகர் | சர்க்கார் புறம்போக்கு | 129 | 5706/4 | 1634 சதுர மீட்டர் | -- | 65 | 45 | இவ்விடத்தில் மாநகராட்சியின் திட்டப்பணிகள் ஏதும் இல்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது |

மேற்படி புலத்தினை கள ஆய்வு செய்ததில் புலத்தில் மாடி வீடுகளுடன் கூடிய குடியிருப்புகள் அமைந்துள்ளதாகவும், இக்குடியிருப்புகளில் சுமார் 40 முதல் 50 ஆண்டுகளுக்கு மேலாக பல தரப்பட்ட இனம் மற்றும் வகுப்பை சார்ந்த மக்கள் வசித்து வருகிறார்கள் என்றும், இவர்கள் தனியார் மற்றும் கூலி வேலை செய்பவர்கள் என விசாரணையில் தெரியவருகிறதாகவும், மாநகராட்சியின் எதிர்கால திட்டப்பணிகளோ அல்லது சாலை விரிவாக்க பணிகளோ மேற்கொள்ளும் திட்டங்கள் ஏதுமில்லை என்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள புலங்களுக்கு தடையின்மைச் சான்று வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை நிலை எண் 97 (ம) 205 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள்: 21.02.2025 (ம) 26.04.2025ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 10, கோட்டம் – 141, கிண்டி வட்டம், தி.நகர் கிராமம், முத்துரங்கன் சாலை, பிளாக் எண் –129, நகர புல எண். 5706/4, சர்க்கார் புறம்போக்கு – சாலை வகைபாட்டில் வீடுகள் மூலமாக ஆக்கிரமணம் செய்து மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இடத்தில் வசிக்கும் தகுதிவாய்ந்த நபர்களுக்கு பட்டா வழங்க சென்னை மாவட்ட ஆட்சியர் கோரியவாறு பெருநகர சென்னை மாநகராட்சியின் தடையின்மைச் சான்றினை வழங்க, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.469/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**மது.ந.க.எண்.அ1 / 586 / 2025**

**தீர்மான எண்: 1039 / 2025** **பொருள் எண்.24**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மன்றத்துறை - அதிகாரங்கள், பணிகள் மற்றும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் - நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி.**

மன்றத் தீர்மான எண்.1290/1997, நாள்.12.02.1997ல், சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919, விதி 6(எ)ன் கீழ் சென்னை மாநகராட்சியில் நிலைக் குழுக்களை ஏற்படுத்தி அரசாணை எண்.எம்.எஸ்.எண்.27, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.07.02.1997ன் அடிப்படையில், 12.02.1997 அன்று நடைபெற்ற சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் சென்னை மாநகராட்சியில் 6 நிலைக் குழுக்களை ஏற்படுத்த மன்றத் தீர்மான எண்.1290/97ன்படி மன்றம் ஒப்புதல் அளித்துள்ளது எனவும், மேலும், ஒவ்வொரு நிலைக்குழுவிற்கும் அதிகாரங்கள் மற்றும் பணிகள் குறித்து மாமன்றம் முடிவு செய்யும் என்று மேற்படி அரசாணை பத்தி 8ல் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், சென்னை மாநகராட்சியில் மேற்குறிப்பிட்டுள்ள மன்றத் தீர்மானத்தின்படி ஏற்படுத்தப்பட்டுள்ள நிலைக்குழுக்களுக்கு பணிகளை ஒதுக்கீடு செய்வது சம்பந்தமாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்றத் தீர்மான எண்.223/2002, நாள்.28.06.2002ல், அரசாணை எண்.89, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.06.03.2002ன்படி சென்னை மாநகராட்சியில் 6 நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இந்நிலைக் குழுக்களுக்குண்டான பணிகள், செயல்பாடுகள், அதிகாரங்கள் மற்றும் பின்பற்ற வேண்டிய நடைமுறை விதிகள் ஆகியவைகளை மன்றம் முடிவு எடுக்க வேண்டும் என்று அரசாணை எண்.27, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.07.02.1997ல் பத்தி 8ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதன்படி தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள நிலைக் குழுக்களுக்கான அதிகாரங்களும், பணிகளும் மற்றும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் வரையறை செய்யப்பட்டுள்ளன என்றும், மேலும், 1971க்கு பிறகு சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919க்கு பற்பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டதை கருத்தில் கொண்டு தற்போது நிலைக்குழுக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள் எந்தெந்த சட்ட விதிகளின்படி வருகின்றது என்பதை குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேற்குறிப்பிட்ட சென்னை மாநகராட்சி சட்ட விதிகளின்படி ஒவ்வொரு நிலைக்குழுவிற்கும் வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள், பணிகள் மற்றும்

பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகியவற்றை வரையறை செய்து மன்றத்தில் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் *1998*, பிரிவு *199 (1)* மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் *2023*, விதி *394*ன்படி மன்றத்தை நடத்துவதற்காகவும், தேவையான விதிமுறைகளை கொண்டு வருவதற்காகவும், ஆணையரின் அனுமதியுடன் துணை விதிகளை ஏற்படுத்தவும், இந்த துணை விதிகளை மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு உரிய பரிசீலனைக்குப் பிறகு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் *1998*, பிரிவு-*49-A*ல் அதிகாரங்களைப் பயன்படுத்துவதற்கும் மாமன்றம் வழங்கக்கூடிய செயல்பாடுகளைச் செய்வதற்கும் அரசால், அறிவிப்பின் மூலம், உருவாக்கப்பட்ட நிலைக்குழுக்களின் எண்ணிக்கை , ஆறுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் *1998*, பிரிவு *-40(3)(vi)*ல் இந்தச் சட்டத்தின் கீழ் வெளிப்படையாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் தவிர, பரிந்துரைக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு, மாமன்ற மேயர், நிலைக்குழு, வார்டுக்குழு அல்லது வேறு எந்தக் குழுவுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், மன்றத் தீர்மான எண்.*1290/1997*, நாள்.*12.02.1997* மற்றும் மன்றத் தீர்மான எண்.*223/2002*, நாள்.*28.06.2002* ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் கீழ்கண்ட *6* நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டு தற்போது வரையில் செயல்பட்டு வருகிறது.

அவை:-

கணக்கு

கல்வி

பொது சுகாதாரம்

வரி விதிப்பு மற்றும் நிதி

நகரமைப்பு

பணிகள்

மேற்படி ஆறு நிலைக்குழுக்களும், ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919ஐ பின்பற்றி அதிகார பகிர்வு வழங்கப்பட்டு அதன்படி செயல்பட்டு வந்த நிலையிலும், தற்போது இச்சட்டம் இரத்து செய்யப்பட்டு புதிதாக தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கென தனியே சட்டம் இயற்றப்பட்டுள்ளதாலும், மேற்படி நிலைக் குழுக்களுக்குண்டான பணிகள், செயல்பாடுகள், அதிகாரங்கள் மற்றும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகியவைகளை மன்றத்தின் மூலமாக பரிந்துரை செய்திடவும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 199 (1) மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, விதி 394 ஆகியவற்றில் மன்றத்திற்கு அதிகார பகிர்வு அளிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அவ்வாறு, மேற்படி சட்ட விதிகளின்படி மேற்கண்ட ஒவ்வொரு நிலைக்குழுவிற்கும் வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள், பணிகள் மற்றும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகியவற்றை கீழ்கண்டவாறு வரையறை செய்யப்பட்டுள்ளது.

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி</u>**

**<u>நிலைக் குழுக்கள் அதிகாரங்களும் பணிகளும்</u>**

**நிலைக் குழு எண்.1 - கணக்குகள் மற்றும் தணிக்கை**

இந்த நிலைக்குழு பெருநகர சென்னை மாநகராட்சி வரவு செலவு கணக்குகளை சரிபார்த்தல் மற்றும் தணிக்கை குறிப்புகளை அங்கீகரித்தல் போன்ற முக்கிய பணிகளை இக்குழு மேற்கொள்ளும். மத்திய கணக்கு குழுமம் மற்றும் தணிக்கை பிரிவு முதலிய பிரிவுகளிலிருந்து வரும் கணக்கு மற்றும் தணிக்கை சம்பந்தப்பட்ட கோப்புகளை இந்த நிலைக் குழு பரிசீலிக்கும்.

**நிலைக் குழு எண்.2 - கல்வி, பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள்**

இந்த நிலைக்குழு, பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் நிர்வகிக்கப்படும் ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், மழலையர் பள்ளிகள்

மற்றும் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் கல்வி போதித்தல் போன்ற முக்கிய பணிகளுடன் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளுக்கு வழங்கப்படும் காலை உணவுத் திட்டம் /சத்துணவு மையங்கள், நீச்சல் குளம், பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள் நிர்வாகம் குறித்த கோப்புகளை பரிசீலிக்கும்.

இக்குழு, கல்வித் துறை, பூங்கா மற்றும் அரங்கத் துறை போன்ற துறைகளிலிந்து வரும் கோப்புகளை பரிசீலிக்கும்.

**நிலைக் குழு எண்.3 - பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள்**

இந்த நிலைக்குழு, பொது சுகாதாரம், தாய் சேய் நலம், இந்திய குடும்ப நலத் திட்டம்-5, மலேரியா ஒழிப்பு, ஆய்வு கூடங்கள், திடக்கழிவு மேலாண்மை, வாகனங்கள் பழுது பார்த்தல், வாகனங்கள் கொள்முதல், மருந்து கொள்முதல், இரவு காப்பகங்கள் மற்றும் அம்மா உணவகங்கள் ஆகியவை குறித்து பரிசீலனை செய்யும்.

இக்குழு, சுகாதாரத் துறை, மருத்துவ சேவைகள் துறை, கால்நடை மருத்துவ பிரிவு, பூச்சி தடுப்புத் துறை, இந்திய மக்கள் தொகை திட்ட இயக்கம், திடக்கழிவு மேலாண்மைத் துறை, இயந்திரப் பொறியியல் துறை போன்ற துறைகளிலிருந்து பெறப்படும் கோப்புகளை பரிசீலிக்கும்.

**நிலைக் குழு எண்.4 - வரி விதிப்பு மற்றும் நிதி**

இந்த நிலைக்குழு சொத்து வரி, தொழில் வரி, பிற வரிகள் விதிப்பு, நில உரிமை மாற்றம், பெருநகர சென்னை மாநகராட்சி நிலங்களை வேறு துறைகளுக்கு குத்தகைக்கு அனுமதித்தல், பெருநகர சென்னை மாநகராட்சியின் பயன்பாட்டிற்காக வேறு துறைகளிடமிருந்து நிலங்களை குத்தகைக்கு பெறுதல், சாலை பெயர் மாற்றம், சிலை நிறுவுதல், பெருநகர சென்னை மாநகராட்சி கட்டிடங்களை சேவைத் துறைகளுக்கு ஒதுக்கீடு செய்தல், திறந்த வெளி நிலங்களை பராமரித்தல், ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், நிதி நிலைக் கட்டுப்பாடு, மற்றும் வரவு செலவு திட்டம் குறித்து பரிசீலித்தல் போன்ற பணிகள்.

இக்குழு வருவாய்த் துறை, மத்திய கணக்குக் குழுமம், நிலம் மற்றும் உடைமைத் துறை போன்ற துறைகளிலிருந்து பெறப்படும் கோப்புகள் இந்த நிலைக் குழுவில் பரிசீலனை செய்யப்படும். மேலும், இக்குழு, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023, விதி எண்.248ன்படி நிதி தேவை குறித்து பிற நிலைக் குழுக்களிலிருந்து அனுப்பப்படும் கோப்புகளை பரிசீலித்து குழுவின் பரிந்துரையுடன் மாமன்றத்திற்கு அனுப்பி வைக்கும்.

**நிலைக் குழு எண்.5 · நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி**

இந்த நிலைக்குழு திட்ட அனுமதிக்காக ஒதுக்கீடு செய்யப்படும் திறந்த வெளி நிலங்களை பெறுதல், சாலைக்கான நிலங்கள் மற்றும் சாலை விரிவாக்கத்திற்கான நிலங்களை பெறுதல். இக்குழு நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி குறித்து நகரமைப்புத் துறையிலிருந்து பெறப்படும் கோப்புகளை பரிசீலிக்கும்.

**நிலைக் குழு எண்.6 · பணிகள்**

இக்குழு, பேருந்து சாலைகள், உட்புறச் சாலைகள், குடிசைப் பகுதி சாலைகள் மற்றும் தனியார் தெருக்கள் ஆகியவற்றை அமைத்தல் மற்றும் பழுதுபார்த்தல் போன்ற பணிகளை பிரதானமாகக் கவனிக்கும். பள்ளிகள், வகுப்பு அறைகள், கழிப்பிடங்கள், மருத்துவ மனைகள் மற்றும் அலுவலக கட்டிடங்கள், பாலங்கள், போன்றவற்றை கட்டுதல் மற்றும் பழுதுபார்த்தல் போன்ற பணிகளை பிரதானமாகக் கவனிக்கும். மேலும், இந்தக் குழு தெரு விளக்குகள் அமைத்தல் மற்றும் பராமரித்தல், போக்குவரத்து தீவுகள் அமைத்தல், மழைநீர் வடிகால்கள் கட்டுதல், பராமரித்தல் மற்றும் தூர் வாருதல் போன்ற பணிகளையும் பிரதானமாகக் கவனிக்கும்.

இக்குழு, பேருந்து சாலைகள் துறை, மழைநீர் வடிகால் துறை, கட்டடத் துறை, மின் துறை, பாலங்கள் துறை, சிறப்புத் திட்டங்கள் துறை, தகவல் தொழில் நுட்ப துறை, நதிநீர் சீரமைப்புத் துறை, தரகட்டுபாட்டுத் துறை மற்றும் ஒருங்கிணைந்த கட்டளை கட்டுப்பாட்டு மையம் போன்ற துறைகளிலிருந்து பெறப்படும் பொருள்களைப் பரிசீலிக்கும்.

எனவே, தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் *1998* மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் *2023*ன்படி, மேற்கண்ட ஒவ்வொரு நிலைக்குழுவிற்கும் வழங்கப்பட வேண்டிய அதிகாரங்கள், பணிகள் மற்றும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகியவற்றை மன்றத்தின் மூலமாக வரையறைகள் செய்து அதிகார பகிர்வு வழங்கிட கீழ்காணும் இனங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. மேற்கண்ட பொருள்கள் குறித்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் *1998* மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் *2023*ன்படி ஒதுக்கப்பட்டுள்ள அதிகார வரையறைகளில் கீழ்க்கண்ட பிரிவுகளில், எதிரெதிரே குறிப்பிடப்பட்டுள்ள நிலைக்குழுக்கள் பரிசீலனை செய்ய அந்தந்த நிலைக் குழுக்களுக்கு அனுமதி அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டியும்,

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி</u>**

**<u>நிலைக் குழுக்களின் அதிகாரங்களும் பணிகளும்</u>**

**<u>மன்றத்தின் ஒப்புதலுக்காக</u>**

| வ. எண் | சட்ட பிரிவுகள் | பொருள் | சம்பந்தப்பட்ட குழுக்கள் |
|---|---|---|---|
| 1. | 8 (4) | வார்டு மறுவரையறை | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 2. | 32(4) | தகுதி நீக்கம் மேயர் அல்லது மன்ற உறுப்பினர் | மன்றம். |
| 3. | 34 | ராஜினாமா மேயர் | மன்றம் |
| 4. | 35 (4) (a) | மன்ற உறுப்பினர் அல்லது மேயரை தகுதி நீக்கம் செய்வது குறித்த முடிவு | மன்றம் |
| | | | |
| 5. | 40 (i) | மாநகராட்சிக்கு சொந்தமான மற்றும் அரசால் மாநகராட்சிக்கு மாற்றப்பட்ட சாலைகள், சிறு பாலங்கள் மற்றும் வடிகால்களின் கட்டுமானம் மற்றும் பராமரிப்புப் பணிகள் | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 6. | 40 (iii) | மாநகராட்சிக்கு சொந்தமான நீர்நிலைகளை பாதுகாத்தல் | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |

| | | | |
|---|---|---|---|
| 7. | 40 (v) | தெரு நாய்களை கட்டுப்படுத்துதல் | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம் |
| 8. | 40 (vi) | கொசு உள்ளிட்ட நோய் பரப்பிகளைக் கட்டுப்படுத்துதல் | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம். |
| 9. | 40(vii) | இறைச்சி, மீன் மற்றும் பிற அழிந்து போகக்கூடிய உணவுப் பொருட்களின் விற்பனை மற்றும் பிற நுகர்வோர் பொருட்களின் விற்பனையை ஒழுங்குபடுத்துதல் | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம் |
| 10. | 40(viii) | வர்த்தகங்கள் அல்லது வர்த்தக நடைமுறைகளை ஒழுங்குபடுத்துதல் | நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 11. | 40(ix) | உண்ணும் வணிக அமைப்புகளுக்கான உரிமம் வழங்குதல் | நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 12. | 40(x) | உரிமை கோரப்படாத சடலங்கள் அல்லது விலங்குகளின் சடலங்களை அகற்றுதல். | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம். |
| 13. | 40(xi) | பொது வசதி நிலையங்கள், கழிப்பறை மற்றும் குளியல் இடங்களை நிறுவுதல். | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 14. | 40(xii) | மாநகர பூங்காக்கள், பூந்தோட்டங்கள், விளையாட்டு மைதானங்கள், போக்குவரத்து தீவுகள் ஆகியவற்றின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு | நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |

| | | | |
|---|---|---|---|
| 15. | 40(xiii) | பொது அடக்கம், தகன மேடை மற்றும் எரியூட்டும் மையங்களை நிறுவி பராமரித்தல். | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 16. | 40(xiv) | பிறப்பு மற்றும் இறப்பு பதிவு | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம். |
| 17. | 40(xv) | தெரு விளக்குகளை நிறுவுதல் மற்றும் அவற்றின் பராமரிப்பு | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 18. | 40(xvi) | வாடகை கார் மற்றும் ஆட்டோ ரிக் ஷக்கள் உள்ளிட்ட வாகனங்களுக்கு நிறுத்தும் இடங்களை வழங்குதல் | நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 19. | 40(xvii) | தடுப்பூசி மற்றும் நோய்த் தடுப்பு ஊசி மருந்து உட்செலுத்துதல் உட்பட பொது சுகாதாரம் சார்ந்த பணிகள். | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம். |
| 20. | 40(xviii) | பொது சந்தைகள், கடைகள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், பேருந்து தங்குமிடங்கள், ஓய்வு இல்லங்கள், பொதுக் கழிப்பறைகள் மற்றும் சமுதாயக் கழிப்பறைகளைப் பராமரித்தல் | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 21. | 40(xix) | திடக்கழிவு, திரவக் கழிவு மேலாண்மை மற்றும் பயன்படுத்தப்பட்ட நீர் மேலாண்மை | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம். |

| | | | |
|---|---|---|---|
| 22. | 40(xx) | தெருக்கள், பாலங்கள் மற்றும் பிற பொது இடங்களில் உள்ள தடைகள் மற்றும் நீட்டிப்புகளைத் தடுத்தல் அல்லது அகற்றுதல். | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 23. | 40(xxi) | தெருக்களுக்கு எண்ணிடுதல் மற்றும் பெயரிடுதல் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 24. | 40(xxii) | பொது அல்லது தனியார் நிலத்தில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்படும் நெகிழிப் பதாகை, மின்னணு பதாகை மற்றும் விளம்பரங்களை ஒழுங்குபடுத்துதல் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 25. | 40(xxiii) | தனித்துவம் வாய்ந்த நபர்களுக்கு அல்லது சாதனையாளர்களுக்கு சிறப்பு வரவேற்பு வழங்குதல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 26. | 40(xxiv) | கண்காட்சிகள் மற்றும் பொருட்காட்சிகளுக்கு ஏற்பாடு செய்தல், தனியார் கண்காட்சிகள் மற்றும் பொருட்காட்சிகளை ஒழுங்குபடுத்துதல். | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 27. | 40(xxv)<br>&<br>40(xxvi) | மாநகராட்சி நிதியின் கீழ் செய்யப்படும் பணிகளை தேர்ந்தெடுத்து ஒப்புதல் அளித்தல் மற்றும் அரசு குறிப்பிட்ட திட்டங்களுக்கு மாநகராட்சி நிதியிலிருந்து பங்களிப்பை ஒதுக்கீடு செய்தல் மற்றும் அரசாங்கத்தால் மாநகராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட வேறு ஏதேனும் கடமை அல்லது பணிகள். | சம்பந்தப்பட்ட நிலைக்குழுக்கள், கல்வி, பொது சுகாதாரம், பணிகள், வரிவிதிப்பு மற்றும் நிதி மூலமாக மன்றம். |
| 28. | 40 (2) (i) | மாநகரத் திட்டமிடல் உட்பட நகரத் திட்டமிடல். | நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றம். |

| | | | |
|---|---|---|---|
| 29. | (ii) | நிலப்பயன்பாடு மற்றும் கட்டிடங்களின் கட்டுமானத்தை ஒழுங்குபடுத்துதல். | நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றம். |
| 30. | (iii) | விலங்குகளை வதைக்கும் இடங்கள் மற்றும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளை ஒழுங்குபடுத்துதல். | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம். |
| 31. | (iv) | பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான திட்டமிடல். | நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 32. | (v) | தீயணைப்பு சேவைகள் | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 33. | (vi) | மாநகரக் காடுகள், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் சூழலியல் அம்சங்களை மேம்படுத்துதல். | நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் மன்றம். |
| 34. | (vii) | தெருவோர வியாபாரிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உட்பட சமூகத்தின் நலிந்த பிரிவினரின் நலன்களை பாதுகாத்தல். | நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 35. | (viii) | குடிசை மேம்பாடு மற்றும் மேம்படுத்தல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 36. | (ix) | மாநகர வறுமை ஒழிப்பு | நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (பொது சுகாதாரம்),நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |

| | | | |
|---|---|---|---|
| 37. | (x) | கலாச்சாரம், கல்வி மற்றும் அழகியல் அம்சங்களை மேம்படுத்துதல். | நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 38. | (xi) | தெருவில் சுற்றித் திரியும் கால்நடைகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் விலங்குகள் மீதான கொடுமையைத் தடுத்தல். | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம். |
| 39. | 40(3) (i) | தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சட்டம் *1998*ன் ஏற்பாடுகளின்படி மாமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை நிறைவேற்றுவது | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 40. | (ii) | மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள அனைத்து பொருட்களையும் பரிசீலித்து, இது தொடர்பான தேவையான தீர்மானத்தை நிறைவேற்றி பொருத்தமான முடிவுகளை எடுப்பது. | சம்பந்தப்பட்ட நிலைக்குழுக்கள் மூலமாக மன்றம். |
| 41 | (iii) | பொருட்களை வாங்குதல் மற்றும் விநியோகம் செய்தல் பற்றிய அனைத்து கால அறிக்கைகள் மற்றும் அனைத்து முன்னேற்ற அறிக்கைகளையும் பரிசீலித்து அது பொருத்தமானது என்று கருதும் தீர்மானத்தை நிறைவேற்றுதல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |

| | | | |
|---|---|---|---|
| 42 | (iv) | நிலைக்குழுக்களை அமைப்பது. | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 43 | (v) | தேவைப்பட்டால், சிறப்புக் குழுக்களை அமைப்பது. | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 44 | (vi) | இந்தச் சட்டத்தின் கீழ் வெளிப்படையாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைத் தவிர, பரிந்துரைக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மாமன்ற மேயர், நிலைக்குழு, சிற்றொகுதிக் குழு அல்லது வேறு எந்தக் குழுவுக்கும் பிரதிநிதித்துவம் செய்வது. | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 45 | (vii) | பரிந்துரைக்கப்படும் வழிகாட்டுதலின்படி, ஒவ்வொரு ஆண்டும் மாநகராட்சிக்கான பொருளாதார மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்து, அத்தகைய வரைவுத் திட்டத்தை மாநகராட்சியின் மாமன்றத்தில் பொருள் வைத்தல், தேவையெனில் ஆணையாளர் தனது பாதுகாப்பில் உள்ள ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டும். | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 46 | 47 | துணை மேயர் இல்லாத நிலையில் மேயர் செயல்பாடுகளை மாமன்ற உறுப்பினர் ஒருவரிடம் ஒப்படைத்தல் - மாமன்ற உறுப்பினர்களில் இருந்து மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழுவை மன்றம் நியமிப்பது. | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |

| | | | |
|---|---|---|---|
| 47 | 49(1) | வார்டுக் குழுக்களை அமைப்பது | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 48 | 49-A | நிலைக்குழுக்களை அமைப்பது | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 49 | 49-C(1)(2) | வார்டு சபா அமைப்பது – உறுப்பினர் நியமனம். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 50 | 50(3) | மன்றத்தை கலைத்தல் சம்பந்தமான முன்மொழிவுக்கு எதிரான காரணம் அதன் விளக்கங்கள் அல்லது ஆட்சேபனைகள் . | மன்றத்தின் மூலமாக அரசு |
| 51 | 51 | மேயர் அல்லது துணை மேயர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம். | மன்றம் |
| 52 | 65 | எந்தவொரு சிறப்புப் பணிக்கும் மாநகராட்சியால் நிதி வழங்குதல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 53 | 66(1) (i) (ii) (2) (3) | மாநகராட்சிக்கு கடன் வாங்கும் அதிகாரம் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 54 | 67 (1) (2) | கடனீட்டுப் பத்திரம் செலுத்துதல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 55 | 70 (1) | நிதி நிலை அறிக்கை தயாரித்தல் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 56 | 71 | துணை நிதி நிலை அறிக்கை தயாரித்தல் மற்றும் இறுதி திருத்தம் மற்றும் ஒதுக்கீடு. | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 57 | 73 (i) (ii) (iii) | அறக்கட்டளை சொத்துக்களை ஏற்பது | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |

| | | | |
|---|---|---|---|
| 58 | 74 | மாநகராட்சிக்கு நிலம் கையகப்படுத்தும் அதிகாரம் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 59 | 75 | இந்தச் சட்டத்தின் கீழ் நிரூபிக்கப்படாத எந்தவொரு பணிகளையும் மாநகராட்சியிடம் ஒப்படைத்தல் | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 60 | 75(A) | வணிக திட்டங்களை நிறுவுதல் | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 61 | 77 | ஒப்பந்தங்கள் தொடர்பான பொதுவான விதிகள் | நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றம். |
| 62 | 78 | மாநகராட்சிக்கு சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை விற்பனை செய்தல் மற்றும் உரிமம் வழங்குதல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 63 | 79 | சொத்து பதிவேடு பராமரிப்பு | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 64 | 80 (1) (a) (aa) (d) (e) (f) | மன்றத்தால் விதிக்கப்படும் வரிகள் - சொத்து வரி, தொழில் வரி, கல்வி வரி, நிறுவ வரி மற்றும் சொத்து பரிமாற்றத்திற்கான கடமை. | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 65 | 81 (1) (1A) (2) (3) (4) | வரி விதிப்பதற்கான நடைமுறை | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 66 | 82 | சொத்து வரி விதிப்பு | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |

| | | | |
|---|---|---|---|
| 67 | 84 | சொத்து வரி செலுத்துவதற்கான ஊக்கத் தொகை மற்றும் காலதாமதமாக செலுத்தும் சொத்து வரிக்கு அபராதம் விதித்தல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 68 | 86, 86(A) | சொத்து வரி பொது சீராய்வு மற்றும் சொத்து வரி உயர்த்துதல் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 69 | 87 | சொத்து வரி பொது விலக்குகள் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 70 | 88 | பிரிவு *87*ல் சொத்து வரி பொது விலக்களிப்பட்ட தொடர்புடைய கட்டிடங்களுக்கு சேவைக் கட்டணங்களை வசூலித்தல் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 71 | 91 | கல்வி வரி விதிப்பு மற்றும் வசூல் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 72 | 91-A | நிறும வரி விதிப்பு மற்றும் வசூல் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 73 | 95 | மாநகராட்சிக்கு சுங்க வரி விதிக்கும் அதிகாரம் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 74 | 99 | குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் சொத்து வரி செலுத்தாத இனங்களுக்கு அபராதம் கட்டணம் நிர்ணயித்தல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 75 | 103(1)(2) | தொழில் உரிமத்திற்கான கட்டணம் நிர்ணயித்தல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 76 | 108 (2) (3) | பொது மற்றும் தனியார் சந்தைகளுக்கு உரிமம் வழங்குதல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |

| | | | |
|---|---|---|---|
| 77 | 110 | வாகனங்களுக்கான நிறுத்தம் இடத்தினை பராமரித்தல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 78 | 111 | யாத்ரீகர் அல்லது சுற்றுலா தலத்திற்குள் நுழையும் மோட்டார் வாகனங்களுக்கு கட்டணம் வசூலித்தல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 79 | 112(1)(2)(3)(4)(5) | பொது கழிவறைகள், குளியலறைகள், மற்றும் சிறுநீர் கழிப்பிடங்களுக்கான பராமரிப்பு மற்றும் கட்டணம் நிர்ணயம். | நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 80 | 113 | இறைச்சி கூடங்களாகப் பயன்படுத்த போதுமான எண்ணிக்கையிலான இடங்களை மன்றத்தினால் வழங்குவது. | நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 81 | 117B | தொழில், வர்த்தகம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றிற்கு<br>தொழில் வரி விதிப்பு. | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| *82* | *118(4)* | பொது தெருக்களை கையகப்படுத்துதல் மற்றும் அவற்றின் உபகரணங்களை மாநகராட்சியிடம் ஒப்படைத்தல் - எந்தவொரு பொது இடத்திலும் எந்தவொரு விளக்கு அமைப்பையும் மன்றத்தினால் வழங்குவது. | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| *83* | *118(5)(6)* | நிலம் கையப்படுத்துதல் மற்றும் தடையாக உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |

| | | | |
|---|---|---|---|
| *84* | *119(3)* | தெரு சீரமைப்பு அல்லது கட்டிடக் கோட்டிற்குள் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கோ அல்லது சேர்ப்பதற்கோ கட்டுப்பாடு. | நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றம். |
| 85 | 120 (3) | நிலத்தை கட்டிட தளங்களாக மாற்றும் போது தெருவை உருவாக்க உரிமையாளரின் கடமை சம்பந்தமாக - துணை விதிகளை இயற்ற மன்றத்தின் அதிகாரம் | நிலைக்குழு (நகரமைப்பு), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 86 | 123(2) (3) (4) | பொது இடங்களில் தற்காலிக மூடலுக்கு உரிமம் வழங்குவதற்கும், சில திட்டங்களை செயல்படுத்துவதற்கும், அனுமதிப்பதற்கும். | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 87 | 125(3) (4) | பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் அமைக்க நிலம் கையகப்படுத்துதல். | நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 88 | 126 | பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளி நிலங்கள் பட்டியலை ஐந்து வருடத்திற்கு ஒரு முறை மன்றத்தில் வெளியிடுதல். | நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 89 | 127(1)(2) | நிழற் தரும் மரங்களை நடுதல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் ஒவ்வொரு வருடமும் உரிமம் வழங்குதல். | நிலைக்குழு (கல்வி) மூலமாக மன்றம். |
| 90 | 129 | தெருக்கள் மற்றும் கட்டிடங்களுக்கு பெயர் வைத்தல் மற்றும் எண்ணிடுதல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |

| | | | |
|---|---|---|---|
| 91 | 130 (1) | வாகன நிறுத்துமிடங்களுக்கான கட்டணம் வசூல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 92 | 133(8)(9) | கட்டிடத்தை கட்ட அல்லது புனரமைக்க அல்லது இடிக்க அனுமதி மறுக்கப்பட்டதற்கான மேல் முறையீடு. | நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றம். |
| 93 | 161 A (2)(3) | குடிநீர் வழங்கல் அல்லது கழிவுநீர் இணைப்புடன் இணைக்கப்பட்ட இடத்தில் அத்துமீறல் – மன்றத்தின் அனுமதியின்றி எந்தவொரு தனியார் கட்டிடம், சுவர் அல்லது பிற கட்டமைப்பும் கட்டப்படக்கூடாது, மேலும் எந்தவொரு குடிநீர் குழாய்கள் அல்லது கழிவுநீர் குழாய்களின் மீதும் எந்தவொரு தனியார் தெருவும் கட்டமைக்ககூடாது. | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 94 | 165 | சில வகையான விவசாயத்தினை ஒழுங்குபடுத்துதல் அல்லது தடை செய்தல். | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம். |
| 95 | 171 | குடும்ப நலன் மற்றும் சிறிய குடும்ப விதிமுறை | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம். |
| 96 | 172(4) | தனியார் மயான பூமி மற்றும் தகன மேடைகள் அமைப்பதற்கான கட்டணம் விதிப்பு. | நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |

| | | | |
|---|---|---|---|
| 97 | 173(2) | பொது சுகாதாரத்திற்கு ஆபத்து ஏற்படுத்தப்படும் பொது அல்லது தனியார் மயான பூமி மற்றும் தகன மேடைகளை மூடுவது. | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம். |
| 98 | 174(2) | இறந்த விலங்குகளை அகற்றுவதற்கான கட்டணம் நிர்ணயம். | நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 99 | 175(1) | திடக்கழிவுகள் மற்றும் கழிவு நீரை அகற்றுதல் சம்பந்தமான இனங்களுக்கு கட்டணம் நிர்ணயம். | நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 100 | 176 | மாநகராட்சியில் திடக்கழிவுகளை அகற்றுவதற்கான நவீன முறைகளை அறிமுகப்படுத்துதல். | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம். |
| 101 | 177 (3)(5)(6)(8) | குப்பை அகற்றுதல் - பயனர் கட்டணம், அபராதம் விதித்தல் | நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 102 | 178(1) | திடக்கழிவுகள் அல்லது குப்பைகளை அகற்றாத நபர்கள் அல்லது தொழில் துறை அலகுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம். |
| 103 | 181(1) | மேயர், துணை மேயர், மாமன்ற உறுப்பினர்கள், ஆணையர், அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் மாநகராட்சிக்கு சொந்தமான அல்லது மாநகராட்சிக்கு சொந்தமான எந்தவொரு பணம் அல்லது பிற | நிலைக்குழு (கணக்குகள் மற்றும் தணிக்கை) மூலமாக மன்றம். |

| | | | |
|---|---|---|---|
| | | சொத்தின் இழப்பு, வீண் விரயம் அல்லது தவறாகப் பயன்படுத்தப்படுவதற்குப் பொறுப்பேற்பது. | |
| 104 | 199 | துணை விதிகள் இயற்ற மன்றத்திற்கான அதிகாரம் | நிலைக்குழுக்கள், கல்வி, பொது சுகாதாரம், பணிகள், நகரமைப்பு மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதி மூலமாக மன்றம். |
| | **<u>விதிகள்</u>** | **<u>தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023</u>** | |
| 105 | 164 | ஏற்கனவே மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ரத்து செய்தல் அல்லது மாற்றியமைத்தல். | சம்பந்தப்பட்ட நிலைக்குழுக்கள் மூலமாக மன்றம். |
| 106 | 168 | வரவு செலவுத் திட்டம் மன்றத்தில் நிறைவேற்றுதல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 107 | 173 | வார்டு சபா உறுப்பினர் நியமித்தல் ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு உறுப்பினரை வார்டு சபாவிற்கு மன்றத்தினால் நியமிக்கும் அதிகாரம். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 108 | 175 | வார்டு சபா உறுப்பினரின் நியமனம் – ஒவ்வொரு வார்டிலும் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்பட்ட நபர்களில் தகுதியான ஒருவரை பரிந்துரைப்பது சம்பந்தமான மன்றத்தின் அதிகாரம். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 109 | 184 | மேயர், துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் பயணப்படி மற்றும் தினப்படி. | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |

| | | | |
|---|---|---|---|
| 110 | 186 | பொது தெருக்கள் மற்றும் மாநகராட்சி கட்டிடங்களுக்கு பெயரிடுதல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 111 | 233 | மாநகராட்சி கணக்குகள் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 112 | 235 | அங்கீகரிக்கப்பட்ட செலவு | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 113 | 237 | கடன் பத்திரங்கள் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 114 | 238 | வரவு செலவுத் திட்டம் தயாரித்தல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 115 | 239 | வருவாய் மற்றும் செலவினங்களின் ஆய்வு – மன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் உள்ள மானியங்களின் மொத்த தொகை சட்டத்தின் 71வது பிரிவின் கீழ் மன்றத்தினை தவிர வேறு எந்த வகையிலும் அதிகரிக்கப்படாது. | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 116 | 241 (10) | தணிக்கை அறிக்கை பத்திகள் மன்றத்தின் அனுமதி கோருதல். | நிலைக்குழு (கணக்குகள் மற்றும் தணிக்கை) மூலமாக மன்றம். |
| 117 | 242 | நிதி இழப்பீடு ஏற்படுத்திய தணிக்கை தடைகள் சம்பந்தமான இனங்களுக்கு *(Levy of Surcharge)* கூடுதல் கட்டணம் விதித்தல். | நிலைக்குழு (கணக்குகள் மற்றும் தணிக்கை) மூலமாக மன்றம். |

| | | | |
|---|---|---|---|
| 118 | 244(3) | ஒப்பந்ததாரர்களின் பெயர் பட்டியல் ஒவ்வொரு ஆண்டும் மன்றத்தில் வைக்கப்பட வேண்டும். | நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றம். |
| 119 | 248(1) | நிதி வரம்பு - மதிப்பீடுகளுக்கான நிர்வாக அனுமதி அளித்தல், பணிகளை நிறைவேற்றுதல் மற்றும் பொருட்கள் கொள்முதல் | மாண்புமிகு மேயர், முறையே சம்பந்தப்பட்ட நிலைக்குழுக்கள் (பொது சுகாதாரம்), (கல்வி) (பணிகள்), (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 120 | 254 | வரிகளுக்கான பொதுவான வழிகாட்டுதல்கள் | நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 121 | 258 | சொத்து வரியை சுயமாக மதிப்பிடுவதற்கான நடைமுறை | நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 122 | 263(2) | விலக்களிப்பட்ட சொத்துக்களுக்கு சொத்து வரிக்குப் பதிலாக சேவை கட்டணம் விதித்தல் | நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 123 | 264(1) | மன்றத்தினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய சொத்து வரி விகிதங்கள் | நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 124 | 266(1)(2) | காலி மனைக்கு சொத்து வரி விதிப்பு - மன்றத்தின் மூலம் கட்டணம் நிர்ணயம். | நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 125 | 267 | சில நிறுவனங்களுக்கு சொத்து வரியிலிருந்து விலக்கு அளிப்பதற்கான அளவுகோல்கள் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |

| | | | |
|---|---|---|---|
| 126 | 268(4)(b) | அரையாண்டு சொத்து வரி செலுத்துவதற்கான கால அவகாசம் - மத்திய /மாநில மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டிடங்களுக்கு சொத்து வரி வட்டி குறைப்பது அல்லது தள்ளுபடி செய்வது . | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 127 | 269 | சட்டத்தின் பிரிவு 116A இன் கீழ் வரிகளை வசூலிப்பதற்கான நடைமுறை | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 128 | 272 | ஏதேனும் வரி, கட்டணம் அல்லது பிற தொகையை தள்ளுபடி செய்தல் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 129 | 273 (3) | சொத்து வரியில் ஐந்து சதவீதத்திற்கு மிகாமல் கல்வி வரி விதிக்கும் விகிதத்தை மன்றம் தீர்மானிக்கலாம். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 130 | 275 | தொழில் வரி பொது சீராய்வு. | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 131 | 289 | தொழில் உரிமத்திற்கு மன்றத்தின் மூலம் கட்டணம் நிர்ணயம். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 132 | 290(1)(2) | உரிமத்தின் செல்லுபடியாகும் காலம் மற்றும் புதுப்பித்தல் - மன்றத்தின் மூலம் கட்டணம் நிர்ணயித்தல் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 133 | 291 (1) | எந்தவொரு பொது தெரு அல்லது சாலை ஓரத்திலோ விற்பனை அல்லது கடைகள் சம்பந்தமான நடவடிக்கைகளை ஒழுங்குப்படுத்துதல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |

| | | | |
|---|---|---|---|
| 134 | 292(7)(8) | விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு உரிமம் - அபராதம், பராமரிப்பு கட்டணம் மன்றத்தின் மூலம் நிர்ணயம். | நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 135 | 293(1)(3) | சந்தைகளுக்கு உரிமம் வழங்குவதற்கான கட்டணம் நிர்ணயம் மற்றும் ஒவ்வொரு பொது மற்றும் தனியார் சந்தையும் நல்ல சுகாதார நிலையில் பராமரிக்க துணை விதிகள் ஏற்படுத்த மன்றத்தின் அதிகாரம். | நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 136 | 294(1)(2)(3) | வாகனங்கள் நிறுத்தத்திற்கு கட்டணம் விதித்தல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 137 | 295(1)(2)(3) | பொது சலவைத்துறையினை பராமரித்தல் மற்றும் கட்டணம் நிர்ணயம். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 138 | 296(1)(6) | பொது குளியலறைகள், கழிவறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்களுக்கு உரிமம் வழங்குதலுக்கான கட்டணம் நிர்ணயம். | நிலைக்குழு (பொது சுகாதாரம்)<br>நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 139 | 297(1)(2)(3)(4) | இறைச்சிக் கூடம் பராமரித்தல் மற்றும் கட்டணம் நிர்ணயம். | நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)மூலமாக மன்றம். |
| 140 | 298(2) | தனியார் இறைச்சிக் கூடத்திற்கு உரிமம் வழங்குதலுக்கான கட்டணம் நிர்ணயம். | நிலைக்குழு (பொது சுகாதாரம்),நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)மூலமாக மன்றம். |

| | | | |
|---|---|---|---|
| 141 | 299 | குளியல் வசதியுடன் கூடிய ஸ்பா, மசாஜ் பார்லர் மற்றும் அழகு நிலையத்திற்கான உரிமம் கட்டணம் மன்றத்தின் மூலம் நிர்ணயம். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 142 | 300 | ரிசார்ட் அல்லது பொழுது போக்குக்கான இடங்கள் மற்றும் கட்டிடங்களுக்கு உரிமம் கட்டணம் மன்றத்தின் மூலம் நிர்ணயம். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 143 | 315 | மத்திய/மாநில மற்றும் பொது துறை நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியம் ஆகியவற்றிற்கு பொது பயன்பாட்டிற்காக அசையா சொத்துக்கள் கிரையம் செய்தல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 144 | 316(1) | மாநகராட்சியின் அசையா சொத்துக்களை உரிமம் அல்லது குத்தகை க்கு வழங்குதல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 145 | 317 | உரிமம் அல்லது குத்தகை ரத்து செய்தல் | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 146 | 318 | விதி *302*இல் உரிமத்தை ரத்து செய்தல் அல்லது நிறுத்தி வைத்தல், இந்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் அல்லது குத்தகைக்கு மாற்றங்களுடன் விண்ணப்பித்தல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |

| | | | |
|---|---|---|---|
| 147 | 319 | மாநகராட்சி நிலம் அல்லது கட்டிடம் அல்லது உரிமம் அல்லது குத்தகை இல்லாமல் மாநகராட்சிக்கு சொந்தமான நிலம் அல்லது கட்டிடத்தின் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 148 | 381 | பொது சுகாதாரம் சம்பந்தமாக துணை விதிகள் இயற்ற மன்றத்துக்கான அதிகாரம் | நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 149 | 385 | பூச்சி தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல். | நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக மன்றம். |
| 150 | 388 (4) | ஏற்கனவே உள்ள மயான பூமி, தகன மேடைகளை பதிவு செய்தல் மற்றும் புதிய உரிமத்திற்கான விண்ணப்பம் - கட்டணம் நிர்ணயித்தல். | நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 151 | 389 | மின்சாரம் மற்றும் எரிவாயு மூலம் தகனம் செய்யப்படும் உடல்களுக்கு கட்டணம் நிர்ணயித்தல். | நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 152 | 390(2) | மழைநீர் வடிகாலில் கழிவுநீரை வெளியேற்றும் குடியிருப்பாளர்களுக்கு அபராதம் விதித்தல். | நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 153 | 391 | திடக்கழிவுகளை அகற்றுவதற்கான நவீன அறிவியல் முறைகளை அறிமுகப்படுத்துதல். | நிலைக்குழு (பொது சுகாதாரம்), மூலமாக மன்றம். |

| | | | |
|---|---|---|---|
| 154 | 392 | மாநகராட்சி பகுதியின் எல்லைக்குள் உருவாகும் திடக்கழிவுகளை சேகரித்தல், கொண்டு செல்லுதல், சேமித்தல், பதப்படுத்துதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றுக்கான மாநகராட்சி, மன்றத்தினால் அறிவிக்கப்பட்ட இடத்தில் திடக்கழிவுகளை அகற்றுதல். | நிலைக்குழு (பொது சுகாதாரம்), மூலமாக மன்றம். |
| 155 | 393 | அதிக அளவிலான திடக்கழிவுகளை அகற்றுவதற்கான தனி கட்டணம் நிர்ணயித்தல். | நிலைக்குழு (பொது சுகாதாரம்),, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம். |
| 156 | 394(1)(2)(3) | மன்றத்தினால், துணை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை சீராய்வு செய்தல். | நிலைக்குழுக்கள், கல்வி, பொது சுகாதாரம், பணிகள் மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதி மூலமாக மன்றம். |
| 157 | 394(5) | துணை விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் நகல்கள் பொது மக்களுக்கு வழங்குவதற்கான கட்டணம் நிர்ணயம். | நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றம் |
| 158 | 395(1) | மன்றத்தினால் துணை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை மதிப்பாய்வு செய்தல். | நிலைக்குழுக்கள், கல்வி, பொது சுகாதாரம், பணிகள் மற்றும் வரிவிதிப்பு மற்றும் நிதி மூலமாக மன்றம். |

2. ஒன்றுக்கு மேற்பட்ட நிலைக்குழுவிற்கு சம்பந்தப்பட்ட பொருள்களை முதலில் குறிப்பிட்ட நிலைக்குழு பரிசீலித்த பின்னர் இரண்டாவதாக குறிப்பிட்டுள்ள நிலைக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பி வைப்பதற்கும்,
3. முரண்பட்ட முடிவுகளை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிலைக் குழுக்கள் எடுக்குமாயின், அவ்வாறான முடிவுகள் முடிவுக்கு கொண்டுவரப்படாத நிலையில்,

ஆணையர் அவர்களால் இது குறித்து அறிக்கை மாண்புமிகு மேயர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அதனை மாண்புமிகு மேயர் அவர்களால் மன்றக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும். மேலும் மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றும் வரையில், ஆணையாளர் பிரச்சனைக்குரிய விஷயம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் நிறுத்தி வைப்பார். (TNULB Rule 172 (8).

4. ஒரு நிலைக்குழு ஆய்வு செய்து, அடுத்த நிலைக்குழுவின் கருத்தையும் கோர தீர்மானிக்கும் பொழுது, சம்பந்தப்பட்ட நிலைக்குழுவிற்கு தனது கருத்தினை தெரிவிக்க கோப்புகளை அனுப்பலாம். அவ்வாறு அனுப்பப்படும் கோப்புகள் மீது, இரண்டாவதாக பரிசீலிக்கக்கூடிய நிலைக்குழு தனது குறிப்புரையுடன் மன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுவதற்கும்,
5. சில பொருள்கள் மன்றத்தில் விவாதிக்கப்படும் பொழுது வேறொரு குறிப்பிட்ட நிலைக் குழுவின் கருத்தினை கோரலாம் என்ற முடிவு செய்து அனுப்பப்படும் பொருள்களைப் பரிசீலித்து சம்மபந்தப்பட்ட நிலைக்குழு தனது குறிப்புரையுடன் மன்றத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுவதற்கும்,
6. மாண்புமிகு மேயர் அவர்கள் அவசரத்தினைக் கருத்தில் கொண்டு ஏதாவது ஒரு பொருளை குறிப்பிட்ட நிலைக்குழு உடனடியாகப் பரிசீலனை செய்து மன்றத்தின் அனுமதிக்கு அனுப்புமாறு கோரும் பொழுது, அந்தப் பொருள் மீதான குறிப்புரையுடன் அக்குழு மன்றத்தின் அனுமதிக்காக உடன் அனுப்பி வைக்க வேண்டுவதற்கும்,
7. மாநகராட்சி மன்ற ஒப்புதலுக்கோ, பார்வைக்கோ அல்லது முடிவுக்கோ வரும் கோப்புகள் யாவும் அந்தந்த நிலைக்குழு பரிசீலித்து முடிவு எடுத்த பின்னரே மன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கும், (TNULB Rule 172 (7).
8. மேயர் அவசர நிலை கருதி ஒரு அறிக்கையுடன், சம்பந்தப்பட்ட பொருளினை நேரடியாக மன்றத்தின் அனுமதிக்காக வைப்பதற்கும்.
9. தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள்2023 ஆகியவற்றில், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களில் மேற் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளிலுள்ள பொருள்கள் குறித்து அப்பொருள்களின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள நிலைக் குழு / நிலைக் குழுக்கள் பரிசீலனை செய்ய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டியும், மன்றத்தின் அனுமதி தேவையில்லாத இனங்களில் அந்தந்த நிலைக்குழுக்களே முடிவு செய்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 9 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.470/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

<u>ம.அ1.சு.து.ந.க.எண்.எச்.2/ 003946 /2025</u>

**தீர்மான எண்: 1040/2025** **பொருள் எண்.25**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்-1, பொது சுகாதாரத்துறை-பகுதி-1 முதல் 3 வரை - கோட்டம்-1 முதல் 14 வரை - சுய உதவிக்குழுக்கள் மூலம் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட சுகாதார பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2025ல் முடிவடைகிறது - 03.10.2025 முதல் 02.10.2026 வரை ஒருவருட காலத்திற்கு 153 சுகாதார பணியாளர்களை சுய உதவிக்குழு மூலம் தற்காலிகமாக பணியமர்த்த மன்றத்தின் அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-1 (திருவொற்றியூர்), பகுதி-1, 2 மற்றும் 3 (கோட்டம் 1 முதல் 14 வரை) 14 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் சுமார் 54760 வீடுகள் உள்ளன. சுமார் 3,14,996 மக்கள் இக் குடியிருப்பு பகுதியில் வசித்து வருகின்றனர்.

மேற்கண்ட பகுதிகளில்

1. வீடுதோறும் கொசு மருந்து அடிக்கும்பணி, கொசு கொல்லி மருந்து தெளிக்கும் பணி, வீடுகளில் உள்ள நீர்த் தொட்டிகளில் மருந்து இடும் பணி மற்றும் கால்வாய்களில் உள்ள தேவையற்ற பொருட்களை அகற்றி நீரோட்டத்தை ஏற்படுத்தி கொசு உற்பத்தியாகாமல் தடுக்க தடுப்பு

நடவடிக்கை பணி, சிறிய புகை பரப்பும் இயந்திரத்தின் மூலம் புகை பரப்பும் பணி, கை தெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி ஆகிய கொசு தடுப்பு பணிகள்.

2. காய்ச்சல் கண்டவர்களின் தகவல் சேகரிக்கும் பணி, காலிமனைகளில் உள்ள தேவையற்ற பொருட்களில் நீர் தேங்காவண்ணம் அப்புறப்படுத்தும் பணி.
3. நீரினால் பரவும் நோய்களை தடுக்கும் பணி.
4. வீடுகள், புதிய கட்டிடம் கட்டும் இடங்களில் கொசுப்புழு கண்டறியும் பணி.
5. தொற்றா நோய்களை வீடுதோறும் சென்று தகவல் சேகரிக்கும் பணி மற்றும் வீடுகள் தோறும் சென்று தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பணி.
6. தடைசெய்யப்பட்ட நெகிழி பறிமுதல் செய்யும் பணி.
7. ஆன்லைன் புகார்கள் பெறப்பட்ட இடங்களில் சென்று ப்ளீச்சிங் பவுடர் தூவுதல் மற்றும் கைத் தெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி.
8. உண்ண தகுதியற்ற இறைச்சிகளை பறிமுதல் செய்யும் பணி.
9. *IHIP* மூலம் தெரிவிக்கப்படும் நோயாளிகளை பற்றிய தகவல் சேகரிக்கும் பணி.
10. பொது மக்களிடையே நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள சிறப்பு மற்றும் சாதாரண மருத்துவ முகாம்கள் நடத்துவதற்கு தேவையான பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகள் கோட்டம்-1 முதல் 14 வரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மண்டலம்-1, பொது சுகாதாரத்துறையில் மொத்தம் 24 நிரந்தர சுகாதார பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சியுடன் திருவொற்றியூர் மற்றும் கத்திவாக்கம் நகராட்சிகள் இணைக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்து அதிகப்படியான வீடுகளும் மற்றும் மக்கள் தொகையும் வளர்ச்சியடைந்து வருகின்றது

கோட்டம்-1 முதல் 14 வரை பொது சுகாதாரத்துறையில் பணிபுரியும் 24 நிரந்தர சுகாதார பணியாளர்களுடன் சுகாதார பணிகளை தங்குதடையின்றி மேற்கொள்ள சுய உதவிக் குழுக்கள் மூலம் தினக்கூலி அடிப்படையில் கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள தேவைப்படும் தற்காலிக சுகாதார பணியாளர்களின் எண்ணிக்கை விபரம்

| வ.எண் | கோட்டம் | தேவைப்படும் தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 1 | 12 |
| 2 | 2 | 10 |
| 3 | 3 | 20 |
| 4 | 4 | 12 |

| | | |
|---|---|---|
| 5 | 5 | 10 |
| 6 | 6 | 10 |
| 7 | 7 | 12 |
| 8 | 8 | 9 |
| 9 | 9 | 9 |
| 10 | 10 | 10 |
| 11 | 11 | 10 |
| 12 | 12 | 10 |
| 13 | 13 | 9 |
| 14 | 14 | 10 |
| மொத்தம் | | 153 |

நிரந்தர பணியாளர்கள் அல்லாமல் 153 நபர்களை சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியமர்த்தப்பட்டு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து பணி நடைபெற்று வருகிறது. இப்பணியானது 30.09.2025 அன்றுடன் முடிவடைவதால் மீண்டும் 03.10.2025 முதல் 02.10.2026 வரை 153 நபர்களை சுய உதவிக்குழுக்கள் மூலம் பணியமர்த்தி சுகாதார பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

அ) மண்டலம்-1 பகுதி-1,2 மற்றும் 3 கோட்டம்-1 முதல் 14 வரை உள்ள பகுதிகளுக்கு 153 தற்காலிக சுகாதார பணியாளர்களை சுய உதவிக் குழுக்கள் மூலம் பணிகளில் ஈடுபடுத்தி கொள்ளவும், வாரம் ஒரு நாள் சுழற்சி முறையில் விடுப்பு வழங்கவும் 03.10.2025 முதல் 02.10.2026 வரை ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தவும் நாள் ஒன்றிற்கு நபருக்கு ரூ.753/- வீதம் (153 நபர்கள் X 365 நாட்கள்) ரூ.4,20,51,285/- (ரூபாய் நான்கு கோடியே இருபது இலட்சத்து ஐம்பத்து ஓராயிரத்து இருநூற்று எண்பத்து ஐந்து மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும், பின்னர் இத்தொகை உயர்த்தப்படும் பட்சத்தில் உயர்த்தப்பட்ட தினக்கூலியை அப்பணியாளர்களுக்கு உயர்த்தி வழங்குவதற்கும்,

ஆ) மேலும் சுகாதார துறையின் கணக்கு தலைப்பு எண். 30-32-02- கணக்கு குறியீட்டு எண். 210-10-06-02 என்ற தலைப்பில் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியும் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பட்டியை தீர்வு செய்து ஊதியம் வழங்கவும்,

இ) சுகாதார பணிகளில் ஈடுபடும் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வண்ணம் நடந்து கொள்ளும் பணியாளர்களை சம்மந்தப்பட்ட மண்டல நல அலுவலர் மூலம் சம்மந்தப்பட்ட நபரை பணியிலிருந்து நீக்கம் செய்வதற்கும், அதற்கு பதிலாக புதிய நபரை பணியில் சேர்த்துக்கொள்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.156/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.487/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

<u>**ம.அ.4.சு.து.ந.க.எண்.சு3/1632/2025**</u>

**தீர்மான எண்: 1041/2025** **பொருள் எண்.26**

<u>**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்– 4 - சுகாதாரத்துறை - கோட்டம் – 34 முதல் 48 வரையுள்ள கோட்டங்களில் 142 உறுப்பினர்களைக் கொண்ட 9 சுயஉதவிக் குழுக்கள்(SHG) மூலம் 26.09.2024 முதல் சுகாதாரக் களப்பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது - இப்பணிக்காலம் 25.09.2025 அன்றுடன் முடிவடைகிறது -மேற்கண்ட அண்டை வீட்டு குழுவின் மூலம் 142 தற்காலிக சுகாதாரப் பணியாளர்கள் மூலம் 26.09.2025 முதல் 25.09.2026 வரை ஓராண்டு காலத்திற்கு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி.**</u>

ஆணையர் அவர்களின் *09.09.2024* நாளிட்ட உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*4*, சுகாதாரத்துறையில் கோட்டம்-*34* முதல் *48* வரை உள்ள கோட்டங்களில் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள நீர்தேக்க தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுப்புழுக்களை அழித்தல் மற்றும் முதிர்ந்த கொசுக்களை மருந்து தெளிக்கப்பட்டு அழிப்பதன் மூலம் கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா, யானைக்கால் மற்றும் மூளை காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்த கொசு மருந்து தெளிக்கவும், முதிர்ந்த கொசுக்களை அழிப்பதற்கு புகைப்பரப்பும் பணிகளை மேற்கொள்ளவும், மேலும், நீர்வழித் தடங்களில் உள்ள ஆகாயத்தாமரை அகற்றும் பணி மற்றும் பிற சுகாதாரப் பணிகளை மேற்கொள்வதற்கு *(SHG) 142* தற்காலிக சுகாதாரப்பணியாளர் உறுப்பினர்களை கொண்டு *26.09.2024* முதல் *25.09.2025* வரை ஓராண்டு காலத்திற்கு *9* சுய உதவி குழுக்கள் மூலமாக சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, மண்டலம்-*4*ல் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள கோட்டம் வாரியாக தேவைப்படும் உறுப்பினர்களின் விவரங்கள் கீழ்கண்ட அட்டவணையில் உள்ளவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அட்டவணை-*I* | | | | | | | | | | | | | | | | |
| விவரம் | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | மொத்தம் |
| மொத்த வீடுகளின் எண்ணிக்கை | 5942 | 9412 | 6756 | 6592 | 4678 | 4420 | 5930 | 6487 | 6240 | 6483 | 8677 | 7352 | 6651 | 4182 | 3295 | 93097 |

| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்த செக்டார்களின் எண்ணிக்கை | 13 | 19 | 14 | 13 | 12 | 11 | 12 | 16 | 14 | 14 | 10 | 14 | 13 | 11 | 9 | 195 |
| தற்போது செக்டார்களின் எண்ணிக்கை | 14 | 18 | 14 | 15 | 10 | 10 | 11 | 13 | 13 | 13 | 11 | 14 | 13 | 11 | 7 | 187 |
| மழைநீர் கால்வாய் பக்கவாட்டு கால்வாய் நீளம்(km) | 1 | 5 | 7 | 5 | 3 | 0 | 0 | 11 | 0 | 0 | 0 | 3 | 0 | 3 | 0 | 38 |
| மழைநீர் கால்வாய்களில் கொசுமருந்து தெளிக்கும் பணி | 1 | 2 | 1 | 1 | 4 | 2 | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 22 |
| ZONE 4 கால்வாய் கூவம் ஆறு தூர்வாரும் பணி | 0 | 1 | 1 | 1 | 1 | 0 | 0 | 4 | 0 | 0 | 0 | 2 | 0 | 1 | 2 | 13 |
| மொத்த (SHG) பணியாளர்களின் எண்ணிக்கை | 11 | 12 | 13 | 13 | 9 | 9 | 8 | 10 | 11 | 10 | 8 | 9 | 9 | 5 | 5 | 142 |

கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் அவர்களின் 10.07.2024 நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் அனைத்து துறைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் பணிபுரியும் சுகாதார களப்பணி மேற்கொள்ளும் உறுப்பினர்களுக்கு நாளொன்றுக்கு தினக்கூலியாக ரூ.753/-வீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதின் அடிப்படையில், மண்டலம்-4ல் சுகாதாரத் துறையில் அண்டை வீட்டு குழுவின்(SHG) மூலம் குழுக்கள் அமைத்து அதன் மூலம் 365 நாட்களுக்கு குழு உறுப்பினர்களுக்கு ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு சுகாதார களப்பணிகளில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, வார்டு குழுவின் தீர்மானம் எண்.49. நாள்.14.08.2025 அன்று நிறைவேற்றப்பட்டது அதன் விவரம் பின்வருமாறு

அட்டவணை-II

| வ. எண் | பணியின் விவரம் | அண்டை வீட்டு குழுவின் (SHG) மூலம் தற்காலிக சுகாதாரப் பணியாளர்களின் எண்ணிக்கை | கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் அவர்களின் ஆணையின்படி நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியம் (2024 - 2025 ஆம் ஆண்டுக்கானது) | தோராய செலவினம் ரூ. |
|---|---|---|---|---|
| 1. | கொசுப்புழு தடுப்புப் பணி, மருந்து தெளிப்புப் பணி புகைப்பரப்பும் பணி நீர்வழித் தடப்பணி மற்றும் சுகாதாரப் பணிகள் | 142 | ரூ.753/- | ரூ.753/- X 142 X 365 நாட்கள் = ரூ.3,90,27,990/- |

எனவே,

| | |
|---|---|
| அ) | மண்டலம்-4, சுகாதாரத்துறை, கோட்டம்-34 முதல் 48 வரையுள்ள மேற்கண்ட சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள அண்டை வீட்டு குழுவின் (SHG) மூலம் 142 தற்காலிக சுகாதாரப் பணியாளர்களைக் 26.09.2025 முதல் 25.09.2026 வரை ஓராண்டு காலத்திற்கு எடுத்துக் கொள்ள நிர்வாக அனுமதியும், |
| ஆ) | கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் அவர்களின் ஆணை தி.க.மே.து.ந.க. எண்.அ3/3974/2023, நாள் 10.07.2024-ன்படி, ஒரு நாளுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.753/- வீதம் X 142 நபர்கள் X 365 நாட்கள் = ரூ.3,90,27,990/-ற்கு (ரூபாய் மூன்று கோடியே தொண்ணூறு இலட்சத்து இருப்தேழாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறு மட்டும்) நிர்வாக அனுமதியும், |
| இ) | சுகாதாரப் பணியில் ஈடுபட்டு வரும் அண்டை வீட்டு குழுவின் (SHG) மூலமாக தற்காலிக சுகாதாரப் பணியாளர்கள் எவரேனும் தொடர்ந்து பணிக்கு வர தவறும்பட்சத்தில் உறுப்பினரை மாவட்ட வருவாய் அலுவலர்/உதவி ஆணையர்/மண்டலம்-4 அவர்களின் அனுமதியுடன் பணியிலிருந்து நீக்கம் செய்ய அனுமதியும், |

| | |
|---|---|
| ஈ) | சுகாதாரப் பணிகளை மேற்கொள்ளும் அண்டை வீட்டு குழுவின் (SHG) மூலமாக தற்காலிக சுகாதாரப் பணியாளர்கள் பணி செய்த நாட்களுக்கு மண்டல நல அலுவலர்-4 அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதனடிப்படையில் கணக்கிட்டு நாள் ஒன்றுக்கு தினக்கூலி ரூ.753/- குழுக்களுக்கு வழங்க அனுமதியும், இவர்களுக்கான ஊதியத்தை RTGS மூலம் வழங்க அனுமதி வேண்டியும், |
| உ) | அரசாணை எண்.36(2D), தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (J1) துறையின் மூலம் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையில் ஊதியம் வழங்க அனுமதியும், |
| ஊ) | இப்பணிக்கான செலவீனத் தொகையை கணக்கு குறியீட்டு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண்.210-100-602கீழ் 2025-2026 நிதியாண்டிற்கு ரூ.37000000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது ரூ.18895029/- செலவிடப்பட்டது போக மீதம் ரூ.21099652/- இருப்பில் உள்ளது. |

மேற்கண்ட அ முதல் ஊ வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.148/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.473/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.5.சு.து.ந.க.எண்.எச்2/2160/2025**

**தீர்மான எண்: 1042/2025** **பொருள் எண்.27**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5 - சுகாதாரத்துறை - கோட்டம் – 49 முதல் 63 வரையுள்ள கோட்டங்களில் 01.10.2024 முதல் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள 147 உறுப்பினர்களைக் கொண்ட 12 சுய உதவி குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் வழியாக சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது - இப்பணிக்காலம் 30.09.2025 அன்றுடன் முடிவடைகிறது - 147 உறுப்பினர்களைக் கொண்ட 12 சுயஉதவி குழுக்களின் மூலமாக 01.10.2025 முதல் 30.09.2026 வரை ஓராண்டு காலத்திற்கு சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள அனுமதி.**

ஆணையர் அவர்களின், *22.09.2024* நாளிட் ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்-*5*, கோட்டம்-*49* முதல் *63* வரை உள்ள கோட்டங்களில் வீட்டிலுள்ள நீர்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம், கொசு மருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்த புகைமருந்து தெளிக்கும் பணி மற்றும் சுகாதார பணிகளை மேற்கொள்ளவும் சுய உதவிக் குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் மூலம் சுகாதார பணிக்காக *131* நபர்கள் மற்றும் ரிப்பன் மாளிகை, பணிக்காக *16* நபர்கள் மொத்தம் *147* நபர்களை *(01.10.2024* முதல் *30.092025* வரை*)* ஓர் ஆண்டு காலத்திற்கு தற்காலிக தினக்கூலி பணியாளர்களாக பணியில் ஈடுபடுத்த ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட்டுள்ளது.

இதற்கென மன்றத் தீர்மான எண்.*375/2024*, நாள்.*30.09.2024*ல் மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், மண்டலம்-*5*க்குட்பட்ட எல்லையில் இயங்கி வரும் தலைமை செயலகம், ரிப்பன் மாளிகை, கலைவாணர் அரங்கம், உயர்நீதி மன்றம், காவல் ஆணையர் அலுவலகம், இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, எழும்பூர் மகப்பேறு மருத்துவமனை, எழும்பூர் அரசு கண் மருத்துவமனை, அரசு ஸ்டான்லி மருத்துவமனை, ஆர்.எஸ்.ஆர்.எம் மகப்பேறு மருத்துவமனை, ஓமந்தூரார் பல்நோக்கு அரசு பொது மருத்துவமனை, அரசு பல் மருத்துவமனை, டாக்டர்.எம்.ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் ரயில் நிலையம், எக்மோர் ரயில் நிலையம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் போன்ற மிக முக்கியத்துவம் வாய்ந்த முதன்மை அரசு அலுவலகங்கள் இயங்கி வருவதால், பொது சுகாதாரப்பணிகளில் தனிக்கவனம் செலுத்தும் வகையில், பொது சுகாதாரம் மற்றும் பொது மக்கள் நலன் கருதியும் அவசரம் மற்றும் அவசியம் கருதி இப்பணிகளை தொடர வேண்டியுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை துறையின் சுற்றறிக்கை, தி.க.மே.து.ந.க.எண். அ3/3974/2023, **நாள்**:29.07.2024**ல்** குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைபடியுடன் ஒரு நாளைக்கு ஒரு பணியாளருக்கு **ரூ.753/-**நியமனம் செய்யப்பட்டுள்ளது.

| வ எண். | பணியாளர்கள் எண்ணிக்கை | நாள் ஒன்றுக்கு ஊதியம் | *01.10.2025* முதல் *30.09.2026* வரை | மொத்தம் |
|---|---|---|---|---|
| *1* | *147* | ரூ.*753/-* | *365* நாட்களுக்கு | ரூ. *4,04,02,215/-* |

அதனடிப்படையில் 01.10.2025 முதல் 30.09.2026 வரை ஓராண்டு காலத்திற்கு 147 நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.753/- வீதம், 753 X 365 X 147 **= ரூ.** 4,04,02,215/- (ரூபாய் நான்கு கோடியே நான்கு இலட்சத்து இரண்டாயிரத்து இருநூற்று பதினைந்து மட்டும்) தேவைப்படுவதால் இத்தொகையை கணக்கு குறியீடு எண்.30-32-02 மற்றும் கணக்கு தலைப்பு எண்.210-100-602 தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்து சுய உதவி குழு உறுப்பினர்கள் மூலம் தொடர்ந்து பணியினை மேற்கொள்ளலாம்.

எனவே,

1. மண்டலம்-5ல் சுய உதவிக் குழுக்களின் மூலம் வழங்கப்பட்ட 147 நபர்களை, சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள தற்காலிக பணியில் ஈடுபடுத்திக்கொள்ளவும், திடக்கழிவு மேலாண்மை துறையின் சுற்றறிக்கை தி.க.மே.து.ந.க.எண். அ3/3974/2023, நாள:29.07.2024-ன்படி குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைபடியுடன் ஒரு நாளைக்கு ஒரு பணியாளருக்கு ரூ.753/- ஊதியத்தின் அடிப்படையில் ஓராண்டு காலத்திற்கு 01.10.2025 முதல் 30.09.2026 வரை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடுபடுத்த அனுமதி வேண்டியும்,

2. தற்காலிகமாக பணியில் ஈடுபடுத்தப்படும் 147 நபர்களுக்கு நடப்பு நிதியாண்டில் 2025-26ல் ஓராண்டு காலத்திற்கு 01.10.2025 முதல் 30.09.2026 வரை ஆகும் ஊதிய செலவினத் தொகையான நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.753/- வீதம், 753 X 365 X 147 = ரூ. 4,04,02,215/- (ரூபாய் நான்கு கோடியே நான்கு இலட்சத்து இரண்டாயிரத்து இரு நூற்று பதினைந்து மட்டும்) வழங்க, கணக்கு குறியீடு எண்.30-32-02 (ம) கணக்கு தலைப்பு எண்.210-100-602ல், கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய, நிதி நிர்வாகப் பிரிவுக்கு அனுமதியும்,

3. சுய உதவிக் குழுக்களின் (SHG) மூலம் தினக்கூலி பணியாளர்களின் ஊதியம் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் வரும் நிதியாண்டுகளில் திருத்தியமைக்கப்படும் பொழுது அதனடிப்படையிலும் (ம) தொழிலாளர் நலன் மற்றும் திறன் பேம்பாடு (J1) துறை, அரசாணை 2(D) எண்:36, நாள்:16.06.2023-* பெருநகர சென்னை மாநகராட்சியில் அமல்படுத்தவும் மற்றும் அரசிதழில் குறிப்பிட்டுள்ளவாறு தினக்கூலி பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் Explanations || (1) ii-ன்படி முந்தைய ஆண்டின் சராசரி (Consumer Price Index) அடிப்படையில் அகவிலைப்படி உயர்த்தி ஏப்ரல் முதல் நாளிலிருந்து ஊதியம் வழங்கஅனுமதியும்,

4. மேற்கண்ட பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வழியாக 147 நபர்களை சுகாதாரப் பணியில் ஈடுபடுத்த ஓராண்டு காலத்திற்கு 01.10.2025 முதல் 30.09.2026 வரை தற்காலிக தினக்கூலி அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.149/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.490/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.6.ந.க.எண்.அ11/1452/2024**

**தீர்மான எண்: 1043/2025** **பொருள் எண்.28**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 6 (திரு.வி.க.நகர்) - கோட்டம் - 64 முதல் 78 வரை அண்டை வீட்டு குழுவின் கீழ் (SHG) சுகாதார களப்பணியில் பணி புரிந்து வரும் 95 சுகாதார களப்பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2025 உடன் முடிவடைகிறது-**

**02.10.2025 முதல் 01.10.2026 வரை ஓர் ஆண்டிற்கு சுகாதார களப்பணிகளை மேற்கொள்ள 95 எண்ணிக்கையிலான 6 குழு உறுப்பினர்களை தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்த மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -6 கோட்டங்கள் - 64 முதல் 78 வரையுள்ள பகுதிகளில் ஒவ்வொரு வீட்டில் உள்ள நீர்த் தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல் நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம் கொசுப்புழு தடுப்பு பணி மேற்கொண்டு கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்கன் குன்யா, யானைக்கால் மற்றும் மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்தவும், நீர் வழித்தடங்கள், மழைநீர்க் கால்வாய்கள், பக்க கால்வாய்களில் கொசு மருந்து தெளிக்கவும், புகை பரப்பும் பணி மேற்கொள்ளவும், நிரந்தர பணியாளர்களின் பற்றாகுறை காரணமாக கோட்டம் -64 முதல் 78 வரையிலான 15 கோட்டங்களுக்கு *01.10.2024* முதல் *30.09.2025* வரை சுகாதார களப்பணி *(Health Workers)* மேற்கொள்ள 95 எண்ணிக்கையிலான *SHG* குழு உறுப்பினர்கள் பணிபுரிய மன்றத் தீர்மான எண்.*97/2024*, நாள்.*26.09.2024*-ன்படி அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அப்பணிகாலம் *30.09.2025* அன்றுடன் முடிவடைகிறது. அப்பணியாளர்களுக்கு மாநகர அலுவலர் சுற்றறிக்கையின்படி தினக்கூலி நாள் ஒன்றுக்கு ரூ.*753/-* அடிப்படையில் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

மண்டலம்-*6*ல் மொத்தம் *84,455* வீடுகள் உள்ளன . இவ்வீடுகளில் உள்ள மேல்நிலைத் தொட்டிகள், கீழ்நிலைத் தொட்டிகள், மற்றும் கிணறுகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப் புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம் சுகாதார களப்பணி மேற்கொள்ள ***81*** எண்ணிக்கையிலான சுகாதார பணியாளர்களும் கோட்டங்கள் 70,71,72,73,74, மற்றும் 75ல் *15*-கி.மீ நீளமுள்ள நீர் வழித்தடத்தில் உள்ள குப்பைகள் மற்றும் செடிகளை அகற்றி மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள ***5*** பணியாளர்களும், மழைநீர்க் கால்வாய் மற்றும் பக்க கால்வாய் என மொத்தம் *140*.கி.மீ இவற்றில் மருந்து தெளிப்பு பணி மேற்கொள்ள ***4***

மருந்து தெளிக்கும் பணியாளர்களுக்கும் மற்றும் புகை மருந்து பரப்பும் பணி மேற்கொள்ள ***5*** பணியாளர்களும் ஆக மொத்தம் ***95*** எண்ணிக்கையிலான தற்காலிக பணியாளர்கள் மேலும் ஓராண்டு *02.10.2025* முதல் *01.10.2026* வரை சுகாதார களப்பணி மேற்கொள்ள தேவைப்படுகின்றது.

| அட்டவணை –*I* - சுகாதார களபணியாளர்களின் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| பணியாளர்களின் விவரம் | | | | | |
| கோட்டம் | சுகாதார பணியாளர் எண்ணிக்கை | செக்டார்களின் பணியாளர்களின் எண்ணிக்கை | மருந்து தெளிக்கும் பணியாளர்களின் எண்ணிக்கை | புகை மருந்து பரப்பு பணியாளர்களின் எண்ணிக்கை | பக்க கால்வாய்களில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை |
| 64 | 8 | 6 | - | 1 | 1 |
| 65 | 13 | 11 | 1 | - | 1 |
| 66 | 7 | 5 | 1 | 1 | - |
| 67 | 6 | 5 | - | - | 1 |
| 68 | 9 | 8 | - | 1 | - |
| 69 | 3 | 3 | - | - | - |
| 70 | 6 | 5 | 1 | - | - |
| 71 | 5 | 5 | - | - | - |
| 72 | 6 | 6 | - | - | - |
| 73 | 7 | 5 | - | 1 | 1 |
| 74 | 3 | 2 | - | - | 1 |
| 75 | 6 | 6 | - | - | - |
| 76 | 7 | 6 | 1 | - | - |
| 77 | 4 | 4 | - | - | - |
| 78 | 5 | 4 | - | 1 | - |
| **மொத்தம்** | 95 | 81 | 4 | 5 | 5 |

மேலும் இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி என்பதால் அவசரம் மற்றும் அவசியம் கருதி சுகாதார களப்பணிகளை அண்டை வீட்டு குழு உறுப்பினர்கள் *(SHG)* மூலம் மேற்கண்ட அளவில் நியமித்து பணி மேற்கொள்ள வேண்டியது அவசியம் ஆகிறது. மாநகர நல அலுவலர் அவர்களின், *11.10.2024* நாளிட்ட சுற்றறிக்கை அடிப்படையில் சுகாதார பணியாளர்களுக்கு *(Health Workers)* நாள் ஒன்றுக்கு ரூ.*753/-* என்ற அடிப்படையில் மண்டலம்-*6*ன் மூலம் *365* நாட்களுக்கு அண்டை வீட்டு குழுவின் கீழ் உறுப்பினர்களை சுகாதார கள பணியில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணி விவரம் | தேவைப்படும் சுகாதார கள பணியாளர்களின் எண்ணிக்கை | *29.07.2024* திடக்கழிவு மேலாண்மை துறை சுற்றறிக்கை படி தினக்கூலி நாள் ஒன்றுக்கு | தோராய செலவினம் |
|---|---|---|---|---|
| *1.* | கொசுப்புழு தடுப்பு பணி மருந்து தெளிப்புப் பணி புகைப்பரப்பும் பணி, நீர் வழித்தடப் பணிகள் | *95*-நபர்கள் | ரூ .753/- | ரூ.753 *x* 95 (பணியாளர்கள்) *x* 365 நாட்கள் ரூ. ***2,61,10,275/-*** |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் சுகாதார பணியாளர்களைக் கொசுப் புழு தடுப்பு பணி, மருந்து தெளிப்புப் பணி, புகை மருந்து தெளிப்புப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்–6ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த மாநகர நல அலுவலர் அவர்களின் சுற்றறிக்கை அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ.*753/-* வீதம் 95 எண்ணிக்கையிலான பணியாளர்களுக்கான ஒரு வருடத்திற்கான தோராய செலவு ரூ.*753 x 95* (பணியாளர்கள்) *x 365* (நாட்கள்) என ரூ.*2,61,10,275/-* (ரூபாய். இரண்டு கோடியே அறுபத்து ஒரு இலட்சத்து பத்து ஆயிரத்து இருநூற்று எழுபத்து ஐந்து மட்டும்) என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட 95 எண்ணிக்கையிலான அண்டை வீட்டு குழு மூலம் தற்காலிக சுகாதார பணியாளர்களின் அட்டவணை 1-ல் குறிபிட்டுள்ள பணியில் ஈடுபடுத்த அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுக

எனவே,

1. மண்டலம்-6, கோட்டம்-64 முதல் 78 வரை உள்ள தற்காலிக சுகாதார பணியாளர்களின் பணிக்காலம் 30.09.2025 அன்றுடன் முடிவடைந்து விடுவதால் 02.10.2025 முதல் 01.10.2026 வரை ஓராண்டு காலத்திற்கு சுகாதார கள பணியில் அண்டை வீட்டு குழு மூலம் பணியாளர்கள் ஈடுபடுத்தவும்.
2. தற்காலிக சுகாதார பணியாளர்களுக்கான ஊதியத்தை 365 நாட்களுக்கு மாநகர நல அலுவலர் அவர்களின் சுற்றறிக்கையின் படி நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி ரூ.753/- வீதம் 95 தற்காலிக பணியாளர்களுக்கு ஆகும் செலவினம் 365x95x 753 = ரூ.2,61,10,275/- (ரூபாய். இரண்டு கோடியே அறுபத்து ஒரு இலட்சத்து பத்து ஆயிரத்து இருநூற்று எழுபத்து ஐந்து மட்டும்) வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும்,
3. அண்டை வீட்டு குழு மூலம் சுகாதார களபணியில் ஈடுபட்டு வரும் பணியாளர்களை தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில் அன்னாரை பணியிலிருந்து நீக்கி மாற்று பணியாளர்களை மண்டல அலுவலர்-6 அவர்களின் அனுமதியுடன் சேர்க்கவும்.
4. அண்டை வீட்டு குழு மூலம் சுகாதார களபணியில் ஈடுபட்டு வரும் 95 பணியாளர்களில் ஒரு பணியாளர் நீண்ட காலமாக பணிக்கு வரவில்லை. அப்பணியாளருக்கு மாற்று பணியாளர் மண்டல அலுவலர்-6 அவர்களின் அனுமதியுடன் சேர்க்கவும்,
5. சுகாதார கள பணியில் ஈடுபடும் அண்டை வீட்டு குழு மூலம் தற்காலிக பணியாளர்களுக்கு பணி செய்த நாட்களுக்கு மட்டும் மண்டல நல அலுவலர்-6 அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் கணக்கிட்டு ஊதியம் வழங்கவும்,
6. இப்பணிக்கான செலவீன தொகையை (கணக்கு தலைப்பு எண் குறியீட்டு எண்: 30-32-02 கணக்கு குறியீட்டு எண்:210-10-06-02 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும், மண்டலம்-6 ல் சுகாதார பணியை மேற்கொள்ள அண்டை வீட்டு குழு மூலம் தற்காலிக சுகாதார பணியாளர்களுக்கு தினக்கூலி ரூ.753/- என வழங்கவும்.

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.157/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.488/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

<u>ம.அ.7.ந.க.எண்.எஸ்3/ 1198/2025</u>

**தீர்மான எண்: 1044/2025** **பொருள் எண்.29**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7 - அம்பத்தூர் - பகுதி-18 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அண்டை வீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 15.10.2025 உடன் முடிவடைகிறது - 413எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை கொண்டு 16.10.2025முதல் 15.04.2026 வரை (182 நாட்கள்) பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் செலவு ரூ.5,65,99,998/-க்கு மன்றத்தின் அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி- 18, வார்டு- 79 முதல் வார்டு 83 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.08சதுரகி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 14எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1638 எண்ணிக்கையிலான உட்புறசாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி-18இன் கீழ் உள்ள 79 முதல் 83 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2015ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 1,56,255. இருப்பினும், நகர மயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்குநாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்துவருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதி -18இல் வார்டு-79 முதல் 83 வரையுள்ள 5 வார்டுகளில் தோராயமாக 105மெட்ரிக் டன் குப்பைகள் தினந்தோறும் தூய்மை பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது.

இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர தூய்மை தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால், தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தினக்கூலி தூய்மைப் பணியாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் தூய்மை பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி - 18ல் (வார்டு - 79 முதல் 81 - வரை) போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால், இன்றைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப தூய்மை பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் அண்டை வீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் நியமிக்கப்பட்ட *Chennai EnviroSolution private Limited* அவர்களுக்கு வார்டு82, 83 மற்றும் 85இல் பணியாணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

பகுதி-18ல் 79, 80, 81, ஆகிய கோட்டங்களில் நிரந்தர தூய்மை பணியாளர்கள் எவரும் இல்லாத பட்சத்தில் அண்டை வீட்டுகுழுவின் வழியாக பணிபுரியும் 413எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை வைத்து பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்துவரும் பகுதி மற்றும் மக்கட்தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் தூய்மை பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதாலும் அதற்கேற்ப அண்டைவீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்றத் தீர்மான எண். 465/2025, நாள்.02.05.2025-ன்படி அண்டை வீட்டு குழுவின் வழியாக வார்டு-79,80,81ல் 413 பணியாளர்களை பணியமர்த்தி தூய்மை பணிகளை மேற்கொள்ள 16.04.2025 முதல் 15.10.2025 வரை(183நாட்கள்) ஆறு மாதகாலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது தூய்மை பணி நடைப்பெற்றுவருகிறது. பகுதி-18ல் கோட்டம்- 79 முதல் 81 வரை உள்ள கோட்டங்களில் 22அண்டைவீட்டு குழுவின் வழியாக இப்பணியாளர்களுக்கு தினக்கூலியானது மாதாமாதம் அண்டை வீட்டு குழுக்களின் வங்கி கணக்கிற்கு RTGS மூலமாக பணபரிவர்த்தனை செய்யப்பட்டு குழுக்களின் வங்கிகணக்கிலிருந்து அக்குழுவில் உள்ள ஒவ்வொரு பணியாளர்களுக்கும் தனித்தனியாக RTGS மூலமாக பணம்பட்டுவாடா செய்யப்பட்டு வரப்படுகிறது.

மண்டலம்-7, பகுதி - 18ல். அண்டை வீட்டு குழுவின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை வைத்து தொடர்ந்து 16.10.2025 முதல் 15.04.2026 வரை 182 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், பகுதி – 18 வார்டு – 79,80,81 ஆகிய மூன்று கோட்டங்களில் தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு பின்வரும் அண்டை வீட்டு குழுவின் வழியாக தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை 16.10.2025முதல் 15.04..2026வரை (182 நாட்களுக்கு) பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 413 தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள், தூய்மை பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-18க்கு, தேவை என கணக்கிட்டு 16.10.2025 முதல் 15.04.2026 வரை (182 நாட்களுக்கு) எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7இல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின், 29.07.2024 நாளிட்ட திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.753/- வீதம் 413 பணியாளர்களுக்கு 16.10.2025 முதல் 15.04.2026 வரை (182 நாட்களுக்கு) ஆகும் செலவு ரூ.5,65,99,998/- (ரூபாய்.ஐந்து கோடியே அறுபத்தைந்து இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றெட்டு மட்டும்) என ஆறு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது

| வ.எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 18 | 413 | ரூ.753 x 413 x 182 (நாட்கள்) = ரூ. 5,65,99,998/- |
| மொத்தம் | | | ரூ. 5,65,99,998/- |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7, பகுதி–18 (வார்டு-79 முதல் 83 வரை) 16.10.2025 முதல் 15.04.2026 வரை (182 நாட்களுக்கு) அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7ல் குப்பைகளை அகற்ற Chennai EnviroSolution private Limited மூலம் 3 வார்டுகளை எடுத்து (Takeover) தூய்மை பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை, எது முன்னர் வருகிறதோ (Whichever be earlier) என்ற அடிப்படையில் தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அண்டை வீட்டு குழுவின் வழியாக 413 எண்ணிக்கையிலான தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணியை மேற்கொள்ளவும்,

2. மேற்கண்ட 413 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.753/-வீதம், 16.10.2025 முதல் 15.04.2026 வரை 182 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.5,65,99,998/- (ரூபாய். ஐந்து கோடியே அறுபத்தைந்து இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றெட்டு மட்டும்)க்கு நிருவாக அனுமதி வேண்டியும்,

3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண் 210 –100 - 601 கீழ் நடப்பு நிதி ஆண்டிற்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதி ரூ.6,00,00,000/- (ரூபாய் ஆறு கோடி மட்டும்)இல் பணியை மேற்கொள்ளவும். நிதி ஒதுக்கீடு செய்வதற்கு நிர்வாக அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

“23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.158/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 491/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.7.ந.க.எண்.எஸ்2/ 1281/2025**

**தீர்மான எண்: 1045/2025** **பொருள் எண்.30**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-19 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அண்டை வீட்டு குழு (SHG) வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 15.10.2025 உடன் முடிவடைகிறது. - 485 எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை கொண்டு 16.10.2025 முதல் 15.04.2026 வரை (182 நாட்கள்) பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் செலவு ரூ.6,64,67,310/- க்கு மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி - 19, வார்டு – 84, 86 முதல் வார்டு 88 வரை உள்ள 4 வார்டுகளில் மொத்த பரப்பளவு 13.79 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 5 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 917 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி-19ன் கீழ் உள்ள 84, 86 முதல் 88 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,90,760 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 360 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் தூய்மை பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர தூய்மை தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால், தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் தூய்மை பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 19ல் (வார்டு – 84, 86 முதல் வார்டு 88 வரை) போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும், இன்றைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப தூய்மை பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution private Limited அவர்களுக்கு வார்டு 82, 83 மற்றும் 85ல் பணியாணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பகுதி-19ல் நிரந்தர தூய்மை பணியாளர்கள் எவரும் இல்லாத பட்சத்தில் அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணிபுரியும் 485 எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை வைத்து பணி மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் தூய்மை பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதாலும் அதற்கேற்ப அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்றத் தீர்மான எண்.466/2025, நாள்.30.10.2024-ன்படி, அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள் 485 பணியாளர்களை பணியமர்த்தி தூய்மை பணிகளை மேற்கொள்ள 16.04.2025 முதல் 15.10.2025 வரை (183 நாட்கள்) ஆறு மாத காலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது தூய்மை பணி நடைப்பெற்று வருகிறது. பகுதி-19ல் (வார்டு – 84, 86 முதல் வார்டு 88 வரை) உள்ள கோட்டங்களில் 26 அண்டை வீட்டு குழுவின் வழியாக இப்பணியாளர்களுக்கு தினக்கூலியானது மாதாமாதம் அண்டை வீட்டு குழு (SHG) களின் வங்கிகணக்கிற்கு RTGS மூலமாக பணபரிவர்த்தனை செய்யப்பட்டு குழுக்களின் வங்கி கணக்கிலிருந்து அக்குழுவில் உள்ள ஒவ்வொரு பணியாளர்களுக்கும் தனித்தனியாக RTGS மூலமாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வரப்படுகிறது.

மண்டலம்-7, பகுதி-19ல். அண்டை வீட்டு குழு (SHG) வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை வைத்து தொடர்ந்து 16.10.2025 முதல் 15.04.2026 வரை 182 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், பகுதி –19 ல்(வார்டு – 84, 86 முதல் வார்டு 88 வரை) தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை 16.10.2025 முதல் 15.04..2026 வரை (182 நாட்களுக்கு) பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 485 தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள், தூய்மை பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-19க்கு, தேவை என கணக்கிட்டு 16.10.2025 முதல் 15.04.2026 வரை (182 நாட்களுக்கு) எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில்

மண்டலம் 7இல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின், 29.07.2024 நாளிட்ட, திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.753/- வீதம் 485 பணியாளர்களுக்கு 16.10.2025 முதல் 15.04.2026 வரை (182 நாட்களுக்கு) ஆகும் செலவு ரூ.6,64,67,310/- (ரூபாய். ஆறு கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து முந்நூற்று பத்து மட்டும்)என ஆறு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பகுதி எண் | தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 19 | 485 | ரூ.753 x 485 x 182 (நாட்கள்) = ரூ. 6,64,67,310/- |
| மொத்தம் | | | ரூ. 6,64,67,310/- |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7,பகுதி–19 (வார்டு- 84, 86 முதல் வார்டு 88 வரை) 16.10.2025 முதல் 15.04.2026 வரை (182 நாட்களுக்கு) அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7ல் குப்பைகளை அகற்ற Chennai Enviro Solution private Limited மூலம் பகுதி -19ல் உள்ள 4 வார்டுகளை எடுத்து (Takeover) தூய்மை பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை, எது முன்னர் வருகிறதோ (Whichever be earlier) என்ற அடிப்படையில் தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக 485 எண்ணிக்கையிலான தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணியை மேற்கொள்ளவும்,
2. மேற்கண்ட 485 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.753/- வீதம், 16.10.2025 முதல் 15.04.2026 வரை 182 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.6,64,67,310/- (ரூபாய். ஆறு கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து முந்நூற்று பத்து மட்டும்)-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்.
3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40-41-03 கணக்கு தலைப்பு எண்-210–100-601 கீழ் நடப்பு நிதி ஆண்டிற்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதி ரூ.7,00,00,000/- கோடியில் பணியை மேற்கொள்ளவும், நிதி ஒதுக்கீடு செய்வதற்கு நிர்வாக அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது

“23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.159/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.492/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**<u>ம.அ.7.ந.க.எண்.எஸ்1/ 1212 /2025</u>**

**தீர்மான எண்: 1046/2025** **பொருள் எண்.31**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-20 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அண்டை வீட்டு குழு (SHG) வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களின் பணிக்காலம் 15.10.2025 உடன் முடிவடைகிறது. – 559 எண்ணிக்கை கொண்ட தூய்மை பணியாளர்களை கொண்டு 16.10.2025 முதல் 15.04.2026 வரை (182 நாட்கள்) பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் செலவு ரூ.7,66,08,714/-க்கு மன்றத்தின் அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி-20, வார்டு-89 முதல் வார்டு 93 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 13.08 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 16 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 884 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி-20ன் கீழ் உள்ள 89 முதல் 93 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 2,81,264 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 360 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் தூய்மை பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர தூய்மை தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால், தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் தூய்மை பணிகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 20ல் (வார்டு – 89 முதல் 93 – வரை) போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும், இன்றைய சூழ்நிலைகளுக்கு ஏற்ப தூய்மை பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி, திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution private Limited அவர்களுக்கு வார்டு 82, 83 மற்றும் 85ல் பணியாணை வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பகுதி-20ல் தற்சமயம் நிரந்தர தூய்மை பணியாளர்கள் மண்டலம்-6 லிருந்து 34 எண்ணிக்கை கொண்ட பணியாளர்கள் வரபெற்றுள்ளனர். இந்த எண்ணிக்கை போதுமானதாக இல்லாத பட்சத்தில் அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக 559 எண்ணிக்கை கொண்ட தற்காலிக தூய்மை பணியாளர்களை வைத்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் தூய்மை பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதாலும் அதற்கேற்ப அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

மன்றத் தீர்மான எண்.467/2025, நாள்.21.03.2025–ன்படி அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள் 559 பணியாளர்களை பணியமர்த்தி தூய்மை பணிகளை மேற்கொள்ள 16.04.2025 முதல் 15.10.2025 வரை (183 நாட்கள்) ஆறு மாத காலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது தூய்மை பணி நடைப்பெற்று வருகிறது. பகுதி-20ல் கோட்டம்-89 முதல் 93 வரை உள்ள கோட்டங்களில் 30 அண்டை வீட்டு குழுவின் வழியாக இப்பணியாளர்களுக்கு தினக்கூலியானது மாதாமாதம் அண்டை வீட்டு குழு(SHG)களின் வங்கிகணக்கிற்கு RTGS மூலமாக

பணபரிவர்த்தனை செய்யப்பட்டு குழுக்களின் வங்கி கணக்கிலிருந்து அக்குழுவில் உள்ள ஒவ்வொரு பணியாளர்களுக்கும் தனித்தனியாக *RTGS* மூலமாக பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வரப்படுகிறது.

மண்டலம்-*7*, பகுதி-*20*ல். அண்டை வீட்டு குழு*(SHG)*வின் வழியாக பணியமர்த்தப்பட்ட தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை வைத்து தொடர்ந்து *16.10.2025* முதல் *15.04.2026* வரை *182* நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், பகுதி - 20 ல் (வார்டு - 89 முதல் 93 வரை) தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட அண்டை வீட்டு குழு*(SHG)*வின் வழியாக தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை *16.10.2025* முதல் 15.*04.2026* வரை *(182* நாட்களுக்கு*)* பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் *559* தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்கள், தூய்மை பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-20க்கு, தேவை என கணக்கிட்டு *16.10.2025* முதல் 15.*04.2026* வரை *(182* நாட்களுக்கு*)* எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம் *7*ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின், *29.07.2024* நாளிட்ட திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.*753/-* வீதம் *559* பணியாளர்களுக்கு *16.10.2025* முதல் 15.*04.2026* வரை *(182* நாட்களுக்கு*)* ஆகும் செலவு ரூ.*7,66,08,714/-* *(*ரூபாய். ஏழு கோடியே அறுபத்தி ஆறு இலட்சத்து எட்டாயிரத்து எழுநூற்று பதிநான்கு மட்டும்*)* என ஆறு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ.எண் | பகுதி எண். | தூய்மை பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| *1* | *20* | *559* | ரூ.*753 x 559 x 182* (நாட்கள்*)* = ரூ. *7,66,08,714/-* |
| மொத்தம் | | | ரூ. *7,66,08,714/-* |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7, பகுதி –20 (வார்டு-89 முதல் 93 வரை) 16.10.2025 முதல் 15.04.2026 வரை (182 நாட்களுக்கு) அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7ல் குப்பைகளை அகற்ற Chennai Enviro Solution private Limited மூலம் பகுதி -20ல் உள்ள 5 வார்டுகளை எடுத்து (Takeover) தூய்மை பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை, எது முன்னர் வருகிறதோ (Whichever be earlier) என்ற அடிப்படையில் தூய்மை பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு அண்டை வீட்டு குழு(SHG)வின் வழியாக 559 எண்ணிக்கையிலான தற்காலிக தினக்கூலி தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணியை மேற்கொள்ளவும்,
2. மேற்கண்ட 559 தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.753/- வீதம், 16.10.2025 முதல் 15.04.2026 வரை 182 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.7,66,08,714/- (ரூபாய். ஏழு கோடியே அறுபத்தி ஆறு இலட்சத்து எட்டாயிரத்து எழுநூற்று பதிநான்கு மட்டும்)-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண். 210 –100 - 601 கீழ் நடப்பு நிதி ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு நிர்வாக அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.160/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.493/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.8.ந.க.எண்.சி1 / 7330 / 2025**

**தீர்மான எண்: 1047/2025** **பொருள் எண்.32**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-8 - கோட்டம்-94 முதல் 108 வரை தூய்மை பணிக்காக தற்காலிக தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழு மூலமாக பணிபுரியும் 90 தூய்மை பணியாளர்களுக்கு அக்டோபர்- 2025 முதல் மார்ச்-2026 வரை (03.10.2025 முதல் 31.03.2026 வரை) பணி தொடர்வதற்கு மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, கூடுதல் முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் *26.02.2024* மற்றும் *20.05.2024* நாளிட்ட குறிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் *11.03.2025* நாளிட்ட அனுமதி மற்றும் மன்றத் தீர்மான எண். *309/2025*, நாள்.*21.03.2025*-ன்படியும் பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*8*, கோட்டம்-*94* முதல் *108* வரை அமையப்பெற்ற இடங்களில் தூய்மை பணிகள் மேற்கொள்ள தற்காலிக தூய்மை பணியாளர்களை அண்டை வீட்டு குழுகளின் *(SHG)* மூலமாக ஏப்ரல் - *2025* முதல் *90* எண்ணிக்கை தற்காலிக தூய்மை பணியாளர்கள் நியமனம் செய்திட அனுமதிக்கப்பட்டு கடந்த ஏப்ரல் - *2025* முதல் செப்டம்பர் - *2025* வரை தூய்மை பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு தூய்மை பணிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது *90* தற்காலிக தூய்மை பணியாளர்களின் பணிக்கான மன்ற அனுமதி *30.09.2025* அன்றுடன் நிறைவடைவதால், தூய்மை பணியின் அவசியம் கருதி *01.10.2025* மற்றும் *02.10.2025* ஆகிய இரு தினங்கள் இடைக்கால பணிநிறுத்தம் செய்தும், *03.10.2025* முதல் *31.03.2026* வரை *(180* நாட்கள்*)* பணி தொடர்ச்சி வேண்டியும் மேற்குறிப்பிட்ட காலத்திற்கு தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.*753/-* என்ற அடிப்படையில் அக்டோபர் - *2025* முதல் மார்ச் - *2026 (03.10.2025* முதல் *31.03.2026* வரை*) 180* நாட்களுக்கு தேவையான *90 x 753 x 180 =* ரூ.*1,21,98,600/-* நிதி தேவைப்படுகிறது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் *10.07.2024* நாளிட்ட சுற்றறிக்கையின்படி (தி.க.மே.து.ந.க.எண்.அ*3 / 3974 / 2023)* தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.*753/-* என்ற அடிப்படையில் *180* நாட்களுக்கு தேவையான தோராய செலவீனம் *90 x 753 x 180 =* ரூ.*1,21,98,600/-*ஐ (ரூபாய் ஒரு கோடியே இருபத்து ஒன்று இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து அறுநூறு மட்டும்*)* கணக்கு குறியீட்டு எண்.*40-41-03*, கணக்கு தலைப்பு எண். *210 – 100-601* என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு வேண்டியுள்ளது.

மேலும், *90* தற்காலிக பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிதியாண்டில் ஊதியம் உயர்த்தி வழங்கும் பொழுது அதனடிப்படையில் தின கூலியினை உயர்த்தி வழங்கவும், வரும் காலங்களில் காலிப்பணியிடங்களை நிரந்தர பணியாளர்கள் மூலம் பணியமர்த்தும் பட்சத்தில் தற்காலிக பணியாளர்களை வெளியேற்றவும் அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1) மண்டலம்-8, கோட்டம்-94 முதல் 108 வரையில் தூய்மை பணி மேற்கொள்ள அண்டை வீட்டு குழுவின் (SHG) வாயிலாக 90 தற்காலிக தூய்மை பணியாளர்களை கொண்டு அக்டோபர் - 2025 முதல் மார்ச் - 2026 வரை (03.10.2025 முதல் 31.03.2026 வரை) 180 நாட்களுக்கு பணியமர்த்தி கொள்வதற்கும்,
2) இப்பணிக்கு தேவையான தோராய செலவீனம் 90 x 753 x 180 = ரூ.1,21,98,600/- ஆகும் இதற்கான கணக்கு குறியீட்டு எண்.40 – 41 – 03, கணக்கு தலைப்பு எண். 210 – 100 – 601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.151/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 475/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.8.ந.க.எண்.சி1 / 7329 / 2025**

**தீர்மான எண்: 1048/2025** **பொருள் எண்.33**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-8 - கோட்டம்-94 முதல் 108 வரை தூய்மை பணிக்காக தற்காலிக தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழு மூலமாக பணிபுரியும் 252 இரவு நேர தூய்மை பணியாளர்களுக்கு (BOV ஓட்டுநர்கள்) 03.11.2025 முதல் 30.04.2026 வரை பணி தொடர்வதற்கு மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின், *07.10.2021* நாளிட்ட நிர்வாக அனுமதி மற்றும் சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.*786/2021*-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-*8*, கோட்டம்-*94* முதல் *108* வரை அமையப்பெற்ற இடங்களில் இரவு நேர தூய்மை பணிகள் *(BOV* ஓட்டுநர்கள்*)* மேற்கொள்ள தற்காலிக தூய்மை பணியாளர்களை அண்டை வீட்டு குழு மூலமாக *08.11.2021* முதல் *252* எண்ணிக்கை தற்காலிக தூய்மை பணியாளர்கள் நியமனம் செய்திட அனுமதிக்கப்பட்டு கடந்த *08.11.2021* முதல் *31.10.2025* வரை பணிபுரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டு இரவு நேர தூய்மை பணிகள் *(BOV* ஓட்டுநர்கள்*)* மேற்கொண்டு வருகின்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின், *13.03.2025* நாளிட்ட நிர்வாக அனுமதி மற்றும் மன்ற தீர்மான எண்.*308 / 2025*, நாள்.*21.03.2025*ன்படி *252* தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு *(BOV* ஓட்டுநர்கள்*) 24.04.2025* மற்றும் *25.04.2025* ஆகிய இரு தினங்கள் இடைக்கால பணிநிறுத்தம் செய்தும் *26.04.2025* முதல் *31.10.2025* வரை *180* நாட்களுக்கு இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுடன் நிர்வாக அனுமதி பெறப்பட்டு இரவு நேர தூய்மை பணிகள் *(BOV* ஓட்டுநர்கள்*)* மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது இரவு நேர தற்காலிக தூய்மை பணியாளர்களின் *(BOV* ஓட்டுநர்கள்*)* பணிக்கான மன்ற அனுமதி *31.10.2025* அன்றுடன் நிறைவடைவதால், தூய்மை பணியின் அவசியம் கருதி *01.11.2025* மற்றும் *02.11.2025* ஆகிய இரு தினங்கள் இடைக்கால பணிநிறுத்தம் செய்தும், *03.11.2025* முதல் *30.04.2026* வரைக்கான *179* நாட்களுக்கு, தொடர்ச்சியாக பணியமர்த்த வேண்டியும் மேற்குறிப்பிட்ட காலத்திற்கு தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.*753/-* என்ற அடிப்படையில் *179* நாட்களுக்கு தேவையான *252 x 753 x 179* = ரூ.*3,39,66,324/-* நிதி தேவைப்படுகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, கூடுதல் தலைமை செயலர் / ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் *10.07.2024* நாளிட்ட சுற்றறிக்கையின்படி (தி.க.மே.து.ந.க.எண்.அ*3 / 3974 / 2023)* தற்காலிக தூய்மை

பணியாளர்களுக்கு தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.753/- என்ற அடிப்படையில் 179 நாட்களுக்கு தேவையான தோராய செலவீனம் 252 x 753 x 179 = ரூ.3,39,66,324/-ஐ (ரூபாய் மூன்று கோடியே முப்பத்து ஒன்பது இலட்சத்து அறுபத்து ஆறாயிரத்து முந்நூற்று இருபத்து நான்கு மட்டும்) கணக்கு குறியீட்டு எண்.40 - 41 - 03, கணக்கு தலைப்பு எண்.210 - 100 - 601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு வேண்டியுள்ளது.

எனவே,

1) மண்டலம்-8, கோட்டம்-94 முதல் 108 வரையில் இரவு நேர தூய்மை பணி மேற்கொள்ள அண்டை வீட்டு குழுவின் வாயிலாக (BOV ஓட்டுநர்களாக) 252 தற்காலிக தூய்மை பணியாளர்களை கொண்டு 03.11.2025 முதல் 30.04.2026 வரைக்கான 179 நாட்களுக்கு பணியமர்த்தி கொள்வதற்கும், (BOV வாகனம் இயக்க மட்டும்)
2) இப்பணிக்கு தேவையான தோராய செலவீனம் 252 x 753 x 179 = ரூ.3,39,66,324/- ஆகும் இதற்கான கணக்கு குறியீட்டு எண்.40 – 41 – 03, கணக்கு தலைப்பு எண். 210 – 100 – 601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.152/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.486/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.10.சு.து.ந.க.எண்.எச்2/573450/2024-25**

**தீர்மான எண்: 1049/2025** **பொருள் எண்.34**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-10 - பொது சுகாதாரப்பிரிவு - தற்காலிக தொழிலாளர்கள் அண்டைவீட்டு குழுக்கள் மூலம் 169 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்- 01.10.2025 முதல் 30.09.2026 வரை ஒரு வருட காலத்திற்கு தொடர்ந்து பணிபுரியவும் மற்றும் கூடுதலாக 4 பணியாளர்களை பணியமர்த்தி ஊதியம் வழங்க மன்றத்தின் அனுமதி.**

மன்றத் தீர்மான எண்.603/2023, நாள்:30.10.2023-ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பூச்சித் தடுப்பு துறையின் மூலமாக மண்டலம்-10ஐ சார்ந்த பகுதிகளில் உள்ள வீடுகளில் அமைக்கப்பட்டுள்ள நீர்தேக்கத் தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள் ஆகியவற்றில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுமருந்து தெளிக்கவும், கொசுக்களின் மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தவும், மழைநீர் வடிகால் மற்றும் கால்வாய்களில் புகை மருந்து அடிக்கும் பணி மற்றும் கொசு ஒழிப்பு சம்மந்தப்பட்ட இதர சுகாதார பணிகள், மழைக்கால அவசர பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ளவும், 157 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மன்ற தீர்மான எண்.468/2025, நாள்:30.04.2025-ன்படி அண்டைவீட்டு குழுக்கள் மூலம் கூடுதலாக 12 நபர்கள் 01.04.2025 முதல் 30.09.2025 வரை பணிபுரிய ஆணை பெறப்பட்டு, பணிபுரிந்து வருகின்றனர்.

மேலும், கோட்டம்-127ல் உள்ள விருகம்பாக்கம் கால்வாயில் மிதக்கும் பொருட்களை அகற்றி மற்றும் கொசுப்புழு ஒழிப்பு மருந்து தெளிப்பதற்காக -2- நபர்கள்,

கோட்டம்-139ல் உள்ள ஆர்.வி.நகர் கால்வாயில் மிதக்கும் பொருட்களை அகற்றி மற்றும் கொசுப் புழு ஒழிப்பு மருந்து தெளிக்கும் பணிக்காக -1- நபரும்,

கோட்டம்-134ல் வீடு வீடாக (4017 வீடுகள்) சென்று கொசுப்புழு ஒழிப்பு பணி மேற்கொள்வதற்காக ஏற்கனவே 8 பணியாளர்கள் இருந்த நிலையில் தற்போது பணியாளர்கள் 7 ஆக உள்ளதால் அதற்கென -1 நபரும், ஆக மொத்தம் கூடுதலாக 4 நபர்கள் தேவைப்படுவதால், அண்டை வீட்டுக்குழு மூலம் பணியமர்த்துவதற்கும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் இக்குழுவில் பணிபுரியும் உறுப்பினர்களுக்கு அரசாணை எண்.(2D) 36, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாடு (J1) துறை, நாள்.16.06.2023, 2023-24 ஆம் நிதி ஆண்டில் நிர்ணயித்ததன் அடிப்படையில் மன்ற தீர்மான எண்.350/2024, நாள்:27.09.2024-ன்படி குறைந்தபட்ச தினக்கூலியாக நாள்

ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ரூ.753/- (ரூபாய். எழுநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) என நிர்ணயம் செய்து மாதந்தோறும் ஊதியம் கணக்கிட்டு வழங்குவதற்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

இதனடிப்படையில் 2023-24ஆம் நிதி ஆண்டில் நிர்ணயித்த குறைந்தபட்ச தினக்கூலியாக நாள் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ரூ.753/- என நிர்ணயம் செய்யப்பட்டு அதன்படி ஊதியம் கணக்கிடப்பட்டுள்ளது.

ஆகவே, ஏற்கனவே அண்டைவீட்டு குழுக்கள் மூலம் பணிபுரிந்து வரும் பணியாளர்களை மீண்டும் ஒரு வருட காலத்திற்கு பணியில் ஈடுபடுத்த அனுமதி மற்றும் கூடுதலாக 4 நபர்களை பணியில் பணியமர்த்தவும் அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-10, பொது சுகாதாரப் பிரிவில் அண்டைவீட்டுக்குழுக்கள் மூலம் ஏற்கனவே உள்ள 169 நபர்களுக்கு ஓராண்டு காலத்திற்கு பணிபுரியவும் மற்றும் ஊதியம் வழங்க அனுமதியும்,
2. கோட்டம்-127, கோட்டம்-134 மற்றும் கோட்டம்-139ல் உள்ள அவசியப் பணிக்காக மொத்தம் 4 நபர்களை கொசு ஒழிப்பு பணிகளை தெய்வின்றி மேற்கொள்வதற்கு கூடுதலாக அண்டைவீட்டு குழுக்கள் மூலம் பணியமர்த்திக் கொள்வதற்கு அனுமதியும்,
3. அரசாணை எண்.(2D) 36, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாடு (J1) துறை நாள்.16.06.2023ன்படி, 2023-24 நிதியாண்டில் நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.753/- (ரூபாய். எழுநூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) என நிர்ணயம் செய்யவும், இதற்கான செலவீனத் தொகையாக ஒரு வருட காலத்திற்கு 169 மற்றும் கூடுதலாக தேவைப்படும் 4 நபர்கள் மொத்தம் 173 நபர்களுக்கு x ரூ.753x365 நாட்களுக்கு ரூ.4,75,48,185/-ஐ செலவீனத் தொகையாக மேற்கொள்வதற்கு அனுமதியும்,
4. 2025-2026 ஆம் நிதி ஆண்டில் தினக்கூலி அரசினால் உயர்த்தப்படும் பட்சத்தில், அதன்படி இப்பணியாளர்களுக்கு அத்தொகையை தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு கணக்கிட்டு வழங்குவதற்கும்,
5. சம்மந்தப்பட்ட கோட்ட சுகாதார ஆய்வாளர்/துப்புரவு அலுவலர் ஆகியோரின் மேற்பார்வையில் பணிகள் மேற்கொள்ளவும் இந்த உறுப்பினர்கள் பணி செய்த நாட்களுக்கு சம்பந்தப்பட்ட சுகாதார ஆய்வாளர் / துப்புரவு அலுவலர் அவர்களிடமிருந்து வருகைப் பதிவேடு பெற்று அதன் அடிப்படையில் அவர்களுக்கு பணிபுரிந்த நாட்களுக்கான தொகையை கணக்கிட்டு வழங்குவதற்கும்,

6. பணியாளர்களுக்கான ஊதியத்தை மண்டலம்-10, பொது சுகாதாரப் பிரிவின் மூலம் பிரிவு குறியீட்டு எண்.30-32-02, கணக்குத் தலைப்பு எண்.210-10-06-02 (Payment to Casual Health Works) என்ற கணக்கு தலைப்பில் மேற்கொள்வதற்கு அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட இனம் 2ல் கூடுதலாக 4 தற்காலிக பணியாளர்களை பணியில் அமர்த்துவதற்கு அனுமதி கோரிய குறிப்பில், இணை ஆணையார் (சுகாதாரம்) அவர்களின் 12.09.2025 நாளிட்ட மேற்குறிப்பில்,

***"May be Approved to the last year Numbers"* என தெரிவித்துள்ளார்.**

எனவே, மேற்கண்ட இனம்-2ஐ தவிர்த்து மற்ற இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.150/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.474/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.D1/9836/2024**

**தீர்மான எண்: 1050/2025** **பொருள் எண்.35**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை – தொழிற் பயிற்சி நிலையத்தில் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணி செய்ய மூன்று தற்காலிக பணியாளர்களுக்கு (watchman / security) அனுமதிக்கப்பட்டுள்ள தினக்கூலி சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆணையின்படி, ஒருநாள் ஊதியம் ரூ.535/- வீதம் இக்கல்வியாண்டில் உயர்த்தி வழங்க மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் மண்டலம்-9, கோட்டம்-120 லாயிட்ஸ் காலனியில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலையத்தில் சுமார் 250 மாணவர்களுக்கு ஆறு தொழிற் பாடப்பிரிவுகளில் NCVT பாடத்திட்ட முறையில் தொழிற் பயிற்சி அளித்து வருகின்றது.

தொழிற் பயிற்சி நிலையம் சுமார் 20 கிரவுண்ட நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இதில் 'அ' பிரிவு கட்டடம், 'ஆ' பிரிவு கட்டடம், புதிய பாடப் பிரிவு கட்டடம், மேல் தளம் மற்றும் லாரி செட் உள்ளன. தொழிற் பயிற்சி நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படும் ஆறு வகையான பாடப்பிரிவுக்கும் பாடத்திட்டத்தில் உள்ளபடி கருவிகள் மற்றும் உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளது. பயிற்சி மாணவர்களின் அன்றாட செய்முறை பயிற்சிக்கான நுகர் பொருட்கள் பண்டக காப்பகத்தில் இருப்பு வைக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. மோட்டார் மெக்கானிக் பாடப் பிரிவு பயிற்சிக்கு இலகுரக மற்றும் கனரக வாகனங்கள் தொழில் பயிற்சி நிலைய லாரி செட்டில் நிறுத்தப்பட்டு உள்ளது.

மேற்காணும் இப்பொருட்களின் பாதுகாப்பு மற்றும் மாணவர்களின் பாதுகாப்பு நிலை கருதி துணை ஆணையர் (கல்வி) அவர்களின் 01.08.2023 நாளிட்ட ஆணையின் படி தொழிற் பயிற்சி நிலையத்தில் மூன்று தற்காலிக பாதுகாவலர்களை காலை, பகல் மற்றும் இரவு பணிக்காக நியமிக்கப்பட்டது.

இவர்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 24.06.2024 நாளிட்ட செயல்முறை ஆணையின்படியும், இணை ஆணையர் (கல்வி) அவர்களின் 01.10.2024 நாளிட்ட ஆணையின்படியும், 2024-2025 ஆண்டுக்கான தினக்கூலி பட்டியலில் Watchman / security-க்கு அனுமதிக்கப்பட்டுள்ளபடி ஒரு நாள் ஊதியம் ரூபாய் 524/- ஜுலை 2024 முதல் மே 2025 வரை 11 மாதத்திற்கு ஊதியம் (தினக்கூலி ஊதியம் ரூ.524/- x 335 நாட்கள் x 3 நபர்கள்) மொத்தம் ரூ.526620/- வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெற வேண்டியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, இக்கல்வியாண்டில், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் *03.07.2025* நாளிட்ட செயல்முறை ஆணையின்படி *2025-2026* ஆண்டுக்கான தினக்கூலி பட்டியலில் *Watchman / security-* க்கு அனுமதிக்கப்பட்டுள்ளபடி ஒரு நாள் ஊதியம் ரூ.*535/-* வீதம் வழங்கி மூன்று தற்காலிக பாதுகாப்பு பணியாளர்களை *11* மாதங்களுக்கு (தினக்கூலி ஊதியம் *01.06.2025* முதல் *30.04.2026* வரை) ஆணை பெறப்பட்டு வழங்கப்படவுள்ளது. அதன் செலவீனத் தொகை (ரூ.*535/-x 334* நாட்கள் *x 3* நபர்கள்) ரூ.*5,36,070/-* ஆகும்.

எனவே,

1. தொழிற் பயிற்சி நிலையத்தில் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணி செய்ய மூன்று தற்காலிக பாதுகாப்பு பணியாளர்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2024-2025 ஆண்டுக்கான தின கூலி பட்டியலின்படி குறிப்பிட்டுள்ள Watchman / security-க்கு உள்ள ஒரு நாள் ஊதிய ரூ.524/- வீதம் ஜூலை 2024 முதல் மே 2025 வரை 11 மாதத்திற்கு ஊதியம் (தினக்கூலி ஊதியம் ரூ.524/- x 335 நாட்கள் x 3 நபர்கள்) மொத்தம் ரூ.5,26,620/- வழங்கியமைக்கு பின்னேற்பு அனுமதியும்,
2. தற்காலிக பாதுகாப்பு பணிக்கு ஊதியம் சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் 2025-2026 ஆண்டுக்கான தின கூலி பட்டியலில் குறிப்பிட்டுள்ள Watchman / security-கள், ஒரு நாள் ஊதியம் ரூ.535/- வீதம் வழங்கி மூன்று தற்காலிக பாதுகாப்பு பணியாளர்களை 11 மாதங்களுக்கு (தினக்கூலி ஊதியம் 01.06.2025 முதல் 30.04.2026 வரை) பணிக்கு வருகை புரியும் நாட்களை கணக்கிட்டு செலவீனத் தொகை (ரூ.535/-x 334 நாட்கள் x 3 நபர்கள்) ரூ.5,36,070/- ஊதியம் வழங்கவும்,
3. சென்னை மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய பாதுகாப்பு பணிக்கு ஆகும் செலவீனத்தை தொழிற்பயிற்சி நிலைய வரவு செலவு கணக்கு தலைப்பு எண். 220-110-313 –Security Expenses – Other Building - function code 808 - 202 ல் உள்ள கணக்கு தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> “ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 19.09.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2025 அன்று தீர்மான எண்.87/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று

நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.489/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**இ.பொது.ம.வா.ப.ந.க.எண்.சி1/247/ 2025**

**தீர்மான எண்: 1051/2025** **பொருள் எண்.36**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய வட்டாரம் - இயந்திர பொறியியல் துறை - மத்திய சென்னை வாகன பணிமனை - மண்டலம்- 6 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு 2025-26 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய - பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய மன்றத்தின் நிர்வாக அனுமதி.**

சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மான எண்.180/78, நாள்.26.02.78-ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரிப்பொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து 1978-79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய கால கட்டத்தில், தென்சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் (1 முதல் 10 வரை) அமைக்கப்பட்ட பின்னர், இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள், மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன, சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின் 2013 முதல் தென்

சென்னை, வடசென்னை மற்றும் மத்திய சென்னை என பிரிக்கப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியாக உருவெடுத்தப்பிறகு, மத்திய வட்டாரமாக மண்டலம்-6 முதல் 10 வரை பிரித்து அளிக்கப்பட்டது.

மத்திய வட்டாரம், இயந்திர பொறியியல் துறை, மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம்-6 முதல் 10 வரை உள்ள லாரி நிலையத்தில் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா. டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், முன்பளு தூக்கிகள், மின்துறை வாகனங்கள், பொகிலைன்கள், புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டர்கள் போன்ற வாகனங்கள் 256 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜெனரேட்டர் ஆகியவற்றிக்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இறைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

இயந்திர பொறியியல் துறையின் மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம் 6 லாரி நிலையத்தின் வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் புகை பரப்பும் வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம்-6 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்படுகின்றன. இந்த பங்க் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தாரால் நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து அல்லது மத்திய ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து தேவையான டீசல் 1060 கிலோ லிட்டர் கொள்முதல் செய்ய ஆணை பெறப்பட்டது.

தற்போது வரை மண்டலம் 6 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு வாங்கிய டீசல் பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு

| 2025-26 | கிலோ லிட்டர் |
|---|---|
| நிர்வாக அனுமதி ஆணை | 1060 |
| முன்கூட்டியே வரையப்பட்டது | 757 |
| இருப்பு | 303 |

மேலே குறிப்பிட்ட அட்டவணையின்படி, இருப்பு மொத்தம் டீசல் 303 KL கொள்முதல் செய்ய ரூ.2,78,69,881/- மட்டுமே உள்ளது. இவை வரவிருக்கும் நாட்களுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. இவை மீதம் இருக்கும் 7 மாதங்களுக்கு போதுமானதாக இல்லாத நிலை உள்ளது. எனவே, மண்டலம் 6 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2025-26 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய ஆணை வேண்டப்படுகின்றது.

| | |
|---|---|
| ஒரு மாதத்திற்கு மண்டலம்-6 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு சராசரியாக தேவைப்படும் அளவு | 150 kl<br>(தோராயமாக) |
| 7 மாதத்திற்கு தேவைப்படும் அளவு (A) | 1050 kl |
| மீதம் இருக்கும் (B) டீசல் அளவு | 303 kl |
| கூடுதலாக தேவைப்படும் டீசல் அளவு (A - B) | 747 kl |

இயந்திர பொறியியல் துறையின் மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம் 6 லாரி நிலையத்தின் வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் புகை பரப்பும் வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம்-6 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்படுகின்றன.

| நிறுவனங்களின் பெயர் | சேமிப்பு தொட்டியுள்ள இடம் | டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம் |
|---|---|---|
| பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் | மண்டலம் 6 லாரி நிலையம், பிளாக் எண். ப.எண்.340, சந்திர யோகி சமாதி சாலை, ஜமாலியா,<br>சென்னை - 600012 | மண்டலம்-6 லாரி நிலைய வாகனங்கள், உட்பட்ட புகைபரப்பும் வாகனம், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யேக வாகனங்களுக்கும் |

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 6 லாரி நிலையத்தில் இயங்கும் எரிபொருள் கிடங்கை பராமரிக்கும் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், டீசல் எரிபொருட்களின் விலை

விகிதத்தை தெரிவிக்குமாறு பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் கேட்டு கொள்ளப்பட்டது. இந் நிறுவனம் அளித்த விலைப்புள்ளி கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| நிறுவனம் | பொருள் விவரம் | 1 KL க்கான தொகை (அனைத்து வரிகள் உட்பட) | மொத்த தேவை கிலோ லிட்டர் (2025 -2026) ஆம் ஆண்டிற்கு |
|---|---|---|---|
| பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் | டீசல் | ரூ.91,985.12/-<br>(நாள் :21.08.2025) | 747 |
| மொத்தம் தொகை (அனைத்து வரிகள் உட்பட) | 747 கி.லி. x ரூ. 91,985.12 = ரூ. 6,87,12,884.64/- (or) ரூ. 6,87,12,885/- (ரூபாய் ஆறு கோடியே எண்பத்து ஏழு இலட்சத்து பன்னிரண்டாயிரத்து எண்ணூற்று எண்பத்தைந்து மட்டும்) (Round Off). | | |

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனை தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை வழங்கி வருவதால், இந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும், மண்டலம் 6 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2025-2026 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய தோராயமாக, 747 கிலோ லிட்டர் டீசலை பெறுவதற்கு மொத்த தொகையான ரூ.6,87,12,885/- (ரூபாய் ஆறு கோடியே எண்பத்து ஏழு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து எண்ணூற்று எண்பத்தைந்து மட்டும்) (Round Off). தேவைப்படுகின்றது. இச்செலவினம் 2025-26 ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40-41-09 கணக்கு எண்: 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் என்பதால், இவை பிணை வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் 6 லாரி நிலையத்தில் இயங்கும் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் எரி பொருள் கிடங்கு மூலம் தேவையான எரிபொருள், மேற்கண்ட மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து அவர்கள் அளித்த விலைப்புள்ளிகளின் படி, அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத் தீர்மான எண்.108 / 78 நாள். 26.02.1978 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.102, நாள்.07.08.2000ல் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்திர ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத் தீர்மான எண்.486/01, நாள்.18.09.2001.-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி, நடப்பு நிதியாண்டில் 2025-26 ஆம் ஆண்டிற்கு, மண்டலம் 6 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு தேவைப்படும் கூடுதல் டீசல் கொள்முதல் செய்திட மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய வட்டாரம், இயந்திரப் பொறியியல் துறை, மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம் – 6 லாரி நிலைய வாகனங்கள், மற்றும் புகைபரப்பும் வாகனம், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யேக வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம் 6 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட அனுமதி வேண்டியும்,
2. மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம்-6 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு தேவையானஎரிபொருள் 2025-26 ஆம் ஆண்டிற்கு கூடுதல் 747 கிலோலிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு மொத்த தொகையான ரூ.6,87,12,885/- (ரூபாய் ஆறு கோடியே எண்பத்து ஏழு இலட்சத்து

பன்னிரண்டாயிரத்து எண்ணூற்று எண்பத்தைந்து மட்டும்) செலவீனத்தில் அல்லது கொள்முதல் செய்யும் போது அமுலில் உள்ள விலைக்கு திருவாளர்கள். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து தேவைகேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

3. மண்டலம்-6 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) அவர்களின் ஆணை பெற்று பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு RTGS மூலம் முன்பணமாக செலுத்தி டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

4. பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் இந்திய அரசு நிறுவனங்கள் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்து, பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

5. இந்திய அரசு நிறுவனங்கள் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது RTGS மூலமாக அளிக்கவும்,

6. இதற்கான செலவினத்தை 2025-26 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40-41-09 - கணக்கு எண்:230-20-03-06-எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

7. ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல்செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.154/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.476/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**பூ.து.ந.க.எண்.பி2 / 1755 / 2025**

**தீர்மான எண்: 1052 / 2025** **பொருள் எண்.37**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-6, வார்டு-68 சிவ இளங்கோ சாலையில் உள்ள காலி நிலத்தில் எக்கோ பிளாக் மழைநீர் ஊடுருவல் தொட்டிகளைப் பயன்படுத்தி நடைபாதை, மின்விளக்குகளுடன் கூடிய பசுமை பூங்கா அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-16, வார்டு-68 சிவ இளங்கோ சாலையில் உள்ள காலி நிலத்தில் எக்கோ பிளாக் மழைநீர் ஊடுருவல் தொட்டிகளைப் பயன்படுத்தி நடைபாதை, மின்விளக்குகளுடன் கூடிய பசுமை பூங்கா அமைக்கும் பணிக்காக விரிவான திட்ட அறிக்கையின் (DPR) கீழ் குறிப்பிட்டுள்ள பணிக்கு 2024-2025 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் ரூ.3,45,00,000/-க்கு (ரூபாய் மூன்று கோடியே நாற்பத்தைந்து இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்து கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1. | பணியின் பெயர் | பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-16, வார்டு-68 சிவ இளங்கோ சாலையில் உள்ள காலி நிலத்தில் எக்கோ பிளாக் மழைநீர் ஊடுருவல் தொட்டிகளைப் பயன்படுத்தி நடைபாதை, மின்விளக்குகளுடன் கூடிய பசுமை பூங்கா அமைக்கும் பணி. |
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | . |
| 3. | தொழில்நுட்ப அனுமதியின் விவரம் | தலைமை பொறியாளர் (பூங்கா (ம) விளையாட்டுதிடல்) அவர்களின் தொழில்நுட்ப அனுமதி நாள். 12.09.2025 |

| | | |
|---|---|---|
| 4. | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | பூங்காத்துறை |
| 5. | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது. | *2024 - 25* ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி (மதிப்பீடு) |
| 6. | மதிப்பீட்டின் தொகை | ரூ.3,45,00,000/- |
| அ) | பணியின் மதிப்பு | ரூ.2,76,01,559.52/- |
| (ஆ) | சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ.49,68,280.71 /- |
| இ) | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ.2,76,015.60/- |
| (ஈ) | மற்ற எதிர்பாரா செலவு 2.5% | ரூ.6,88,089.58/- |
| (உ) | தரக் கட்டுபாடு செலவு 1 % | ரூ.2,76,015.60/- |
| (ஊ) | இதர செலவு 2.5% | ரூ.6,90,038.99/- |
| | மொத்தம் | ரூ.3,45,00,000/- |
| 7. | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | ஆம் |
| 8. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | - |
| 9. | நிதியின் தன்மை/ ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி/ கணக்கு குறியீட்டு எண் | மூலதன நிதி *2025-26* |
| 10. | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ.3,45,00,000/- |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-16, வார்டு-68 சிவ இளங்கோ சாலையில் உள்ள காலி நிலத்தில் எக்கோ பிளாக் மழைநீர் ஊடுருவல் தொட்டிகளைப் பயன்படுத்தி நடைபாதை, மின்விளக்குகளுடன் கூடிய பசுமை பூங்கா அமைக்கும் பணிக்காக விரிவான திட்ட அறிக்கையின் (DPR) கீழ் குறிப்பிட்டுள்ள பணிக்கு 2024-2025 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,45,00,000/க்கு நிர்வாக அனுமதியும்,

2. இப்பணிகளை பூங்காத்துறையின் மூலதன நிதியின் தலைப்பு எண்.412-400-200 கணக்கு குறியீட்டு எண்.60-61-00 கீழ் நிதி ஒதுக்கீடு பெற அனுமதியும்,

3. இப்பணியினை மண்டலம்-6ன் மூலம் மேற்கொள்ளவும் மற்றும் பூங்காத்துறையின் மூலம் பட்டிதீர்வு செய்வதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்பிக்கப்படுகிறது.

> "ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 19.09.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2025 அன்று தீர்மான எண்.88/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**ம.அ.14.ந.க.எண்.இ2/5026/2025**

**தீர்மான எண்: 1053/2025** **பொருள் எண்.38**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-14 - பகுதி-43, கோட்டம்-191 ஜல்லடியன்பேட்டை பகுதியில் உள்ள புது நகர் 5வது தெருவில் பல்நோக்கு உள்ளரங்க மைதானம் அமைக்கும் பணிக்கு 2024-2025 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-14, பகுதி-43, கோட்டம்-191 ஜல்லடியன்பேட்டை பகுதியில் உள்ள புது நகர் 5வது தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலிமனை அமைந்துள்ளது. இவ்விடத்தில் பொதுமக்களின் கோரிக்கை மனுவிற்கு இணங்க பல்நோக்கு உள்ளரங்க மைதானம் அமைக்க கோரி கோட்டம் 191வது மாமன்ற உறுப்பினர் அவர்களின் பரிந்துரை கடிதம் பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மண்டலம்-14, பகுதி-43, கோட்டம்-191 ஜல்லடியன்பேட்டை பகுதியில் உள்ள புது நகர் 5வது தெருவில் பல்நோக்கு உள்ளரங்க மைதானம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு உரிய அலுவலரின் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. கீழ்கண்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| S.No | Zone | Estimate No | Name of the work | Estimate Amount |
|---|---|---|---|---|
| 1 | 14 | NP/2025-26/0359 | Proposed construction of Multipurpose Indoor stadium at Pudhu Nagar 5th street in Div 191, Unit 43, Zone-14 | 3,00,00,000.00 |

எனவே,

1. மண்டலம்-14, பகுதி-43, கோட்டம்-191 ஜல்லடியன்பேட்டை பகுதியில் உள்ள புது நகர் 5வது தெருவில் பல்நோக்கு உள்ளரங்க மைதானம் அமைக்கும் பணிக்கு ரூ.3,00,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும் மற்றும் ஒப்பம் கோருவதற்கும்,
2. மேற்காணும் பணிக்குண்டான செலவீனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி, மூலதன நிதி, Function-60-62-00, கணக்கு குறியீடு எண்.412-400-100 (PlayGrounds) என்ற தலைப்பில் பட்டி தீர்வு செய்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் *19.09.2025* அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு *26.09.2025* அன்று தீர்மான எண்.*89/2025*ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று இதற்கு நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.பி1 / 0653 & 0584 / 2025**

**தீர்மான எண்: 1054/2025** **பொருள் எண்.39**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 09, கோட்டம் - 121, 122, 123, 124, 125 மற்றும் 126 அமைந்துள்ள மின்மாற்றிகளுக்கு View Cutter அமைக்கும் பணி மற்றும் மண்டலம் - 06, 07, 08 மற்றும் 10ல் உள்ள அங்கன்வாடிகளை மேம்படுத்தி புதுப்பித்து கட்டும் பணிகளுக்கு திருவாளர்.Thomas Iyadurai Infrastructure Pvt Ltd., அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | 1. மண்டலம் - 09, கோட்டம் - 121, 122, 123, 124, 125 மற்றும் 126 ல் அமைந்துள்ள மின்மாற்றிகளுக்கு View Cutter அமைக்கும் பணி.<br>2. மண்டலம் - 06, 07, 08 மற்றும் 10ல் உள்ள அங்கன்வாடிகளை மேம்படுத்தி புதுப்பித்து கட்டும் பணி. |

| | | |
|---|---|---|
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | 1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 11.03.2025, 26.03.2025.<br>2. மன்ற தீர்மானம் எண் : 318/2025, நாள் : 21.03.2025. |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 06, 07, 08, 09 மற்றும் 10. |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | <u>மதிப்பீட்டின் தொகை</u> | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 5,49,56,000.00 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 98,92,080.00 |
| | (இ) த.நா.க.தொ.ந..வா 1% | ரூ. 5,49,560.00 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 5,49,560.00 |
| | (உ) மின்சார செலவு | ரூ. 90,000.00 |
| | (ஊ) எதிர்பாரா செலவு | ரூ. 9,32,800.00 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 6,69,70,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 27.03.2025.<br>2. தினகரன் 28.03.2025.<br>3. டெக்கன் க்ரானிக்கல் 28.03.2025. |
| 7 | ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 15.04.2025 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | Anganwadi Cenre<br>(20 - 28 - 00 / 412 - 403 - 005)<br>SFC (State Finance Commission)<br>(412 - 102 - 306) |

| | | |
|---|---|---|
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | நான்கு (e-Tender) இணையதளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 16.04.2025 அன்று நான்கு ஒப்பங்கள் பெறப்பட்டன. திருவாளர். *Pearl Engineers Construction Co-Operative Society.,* மற்றும் திருவாளர். *C.V.T Enterprises.,* அவர்கள் தொழில் நுட்ப தகுதியில்லாமையால் நிராகரிக்கப்பட்டார்கள். மற்ற ஒப்பந்ததாரர்கள் ஒப்ப நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர்கள் என்று அறியப்பட்டது. அதன் விவரம் பின் வருமாறு :

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு 2024-2025 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | Thomas Iyadurai Infrastructure Pvt Ltd | 5,49,56,000.00 | 5,69,28,920.40 | (+) 3.59% அதிகம் |
| 2 | Gajalakshmi Construction | 5,49,56,000.00 | 6,15,50,720.00 | (+) 12.00% அதிகம் |

இவ்வொப்பத்தில் திருவாளர். *Thomas Iyadurai Infrastructure Pvt Ltd.,* அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் L1 ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு :

| வ. எண் | மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம் | L1 ஒப்பந்ததாரர் **2024-2025**ஆம் ஆண்டு **SOR**-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| 1 | முதற் கட்ட விலை குறைப்பு<br>நாள்.12.05.2025 | ரூ. 5,69,23,424.80 (+) 3.58 % அதிகம் |
| 2 | இரண்டாம் கட்ட விலை குறைப்பு<br>நாள்.13.05.2025 | ரூ. 5,69,17,929.20 (+) 3.57 % அதிகம் |
| 3 | மூன்றாம் கட்ட விலை குறைப்பு<br>நாள். 16.05.2025 | ரூ. 5,65,99,184.40 (+) 2.99 % அதிகம் |

இதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 09, கோட்டம் - 121, 122, 123, 124, 125 மற்றும் 126ல் அமைந்துள்ள மின்மாற்றிகளுக்கு View Cutter அமைக்கும் பணி மற்றும் மண்டலம் - 06, 07, 08 மற்றும் 10ல் உள்ள அங்கன்வாடிகளை மேம்படுத்தி புதுப்பித்து கட்டும் பணிகளுக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+) 2.99 % அதிகம், ஒப்பத் தொகை ரூ.5,65,99,184.40 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,01,87,853.19ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.6,67,87,038.00-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது

| வ. எண். | மதிப்பீட்டின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய்) (A) | தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+) 2.99 % சேர்த்து (ரூபாய்) (B) |
|---|---|---|---|
| 1 | **(அ) கட்டுமான பணி செலவு** | ரூ. 5,49,56,000.00 | ரூ. 5,65,99,184.40 |
| 2 | **(ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18%** | ரூ. 98,92,080.00 | ரூ. 1,01,87,853.19 |

| | | | |
|---|---|---|---|
| 3 | (இ) த.நா.க.தொ.ந..வா 1% | ரூ. 5,49,560.00 | ரூ. 5,49,560.00 |
| 4 | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 5,49,560.00 | ரூ. 5,49,560.00 |
| 5 | (உ) மின்சார செலவு | ரூ. 90,000.00 | ரூ. 90,000.00 |
| 6 | (ஊ) எதிர்பாரா செலவு | ரூ. 9,32,800.00 | ரூ. 9,32,800.00 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 6,69,70,000.00 | ரூ. 6,89,08,956.00 |
| கூடுதல் தொகை (B- A) | | | ரூ. 19,38,956.00 |

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+) 2.99%, 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.6,89,08,956.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.6,89,08,956.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மண்டலம் - 09, கோட்டம் - 121, 122, 123, 124, 125 மற்றும் 126ல் அமைந்துள்ள மின்மாற்றிகளுக்கு View Cutter அமைக்கும் பணி மற்றும் மண்டலம் - 06, 07, 08 மற்றும் 10ல் உள்ள அங்கன்வாடிகளை மேம்படுத்தி புதுப்பித்து கட்டும் பணிகளுக்காக 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)2.99% அதிகம், ஒப்பத் தொகை ரூ.5,65,99,184.40 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.1,01,87,853.19ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.6,67,87,038.00-க்கு (ரூபாய் ஆறு கோடியே அறுபத்து ஏழு இலட்சத்து எண்பத்து ஏழாயிரத்து முப்பத்து எட்டு மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர்.Thomas Iyadurai Infrastructure Pvt Ltd., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,
3. மண்டலம் - 09, கோட்டம் - 121, 122, 123, 124, 125 மற்றும் 126ல் அமைந்துள்ள மின்மாற்றிகளுக்கு View Cutter அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டுத்தொகையான ரூ.2,63,69,108.00-யை SFC (State Finance Commission) (412 - 102 - 306) நிதியில் மேற்கொள்ளவும்,
4. மண்டலம் - 06, 07, 08 மற்றும் 10ல் உள்ள அங்கன்வாடிகளை மேம்படுத்தி புதுப்பித்து கட்டும் பணிக்கான மதிப்பீட்டுத்தொகையான ரூ.4,25,39,848.00-யை Anganwadi Centre (20 - 28 - 00 / 412 - 400 - 406) நிதியில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.563/2025, நாள்.24.09.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.482/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.பி1/ 1508 &1465/ 2025**

**தீர்மான எண்: 1055/2025** **பொருள் எண்.40**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம் - 11, வார்டு - 149, பிருந்தாவன் நகர் மயானபூமியில் புதிய நீரூற்று (Water Fountain) மற்றும் இதர மேம்படுத்தும் பணிகள் மற்றும் வார்டு - 150, போரூர் டோல் பிளாஸா சர்வீஸ் ரோட்டில் முதல்வர் படைப்பகம் (CM Spaces) கட்டடம் கட்டும் பணிகளுக்காக திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | 1. மண்டலம் - 11, வார்டு - 149, பிருந்தாவன் நகர் மயானபூமியில் புதிய நீரூற்று (Water Fountain) மற்றும் இதர மேம்படுத்தும் பணிகள்.<br>2. மண்டலம் - 11, வார்டு - 150, போரூர் டோல் பிளாஸா சர்வீஸ் ரோட்டில் முதல்வர் படைப்பகம் (CM Spaces) கட்டடம் கட்டும் பணி |

| | | |
|---|---|---|
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | 1. ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள் : 22.05.2025, 16.06.2025.<br>2. மன்ற தீர்மானம் எண் : 780 / 2025, நாள் : 30.06.2025. |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 11. |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி. |
| 5 | <u>மதிப்பீட்டின் தொகை</u> | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 4,15,01,943.09 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 74,70,349.76 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 4,15,019.43 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 3,73,600.00 |
| | (உ) கலந்தாலோசகர் கட்டணம் 2.00% | ரூ. 7,50,000.00 |
| | (ஊ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 9,39,087.73 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ. 5,14,50,000.00 |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 03.07.2025.<br>2. முரசொலி 03.07.2025.<br>3. டெக்கன் க்ரானிக்கல் 03.07.2025. |
| 7 | ஒப்பப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 21.07.2025 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | HEALTH DEPARTMENT BUILDINGS<br>( 20 - 28 - 00 / 412 - 400 - 301 )<br>MUTHALVAR PADAIPPAGAM<br>( 20 - 28 - 00 / 412 - 403 - 012 ) |

| | | |
|---|---|---|
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15/30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | ஒன்று (e-Tender) ஒப்பப்படிவம் இணையதளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது. |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு *22.07.2025* அன்று ஒரு ஒப்பம் பெறப்பட்டன. அதன் விவரம் பின் வருமாறு

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திருவாளர்கள் | பணியின் அலுவலக மதிப்பு ***2024-2025*** (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | ***2024-2025***ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | RTI Foundation | 4,15,01,943.09 | 4,15,35,144.64 | (+) 0.08 % அதிகம் |

இவ்வொப்பத்தில் திருவாளர். *RTI Foundation.*, அவர்கள் குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஆவார். இவ்வொப்பந்ததாரரிடம் மின்னணு மூலம் விலைக்குறைப்பு கோரப்பட்டதில் *L1* ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து ஒப்ப புள்ளியினை அளித்துள்ளார். விவரம் பின்வருமாறு :

| வ. எண் | மின்னணு விலைக்குறைப்பு அளித்த விவரம் | *L1* ஒப்பந்ததாரர் *2024-2025*ஆம் ஆண்டு *SOR*-ன்படி அளித்துள்ள ஒப்பத்தொகை மற்றும் ஒப்பப்புள்ளி விவரம் |
|---|---|---|
| *1* | முதற் கட்ட விலை குறைப்பு நாள்.*09.08.2025* | ரூ. *4,15,35,144.64 (+) 0.08 %* அதிகம் |
| *2* | இரண்டாம் கட்ட விலை குறைப்பு நாள்.*09.08.2025* | ரூ. *4,15,35,144.64 (+) 0.08 %* அதிகம் |

இதன்படி, மேற்கண்ட பணிகளுக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)0.08% அதிகம், ஒப்பத் தொகை ரூ.4,15,35,144.64 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.74,76,326.03ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.4,90,11,471.00-க்கு ஒப்பம் வழங்கப்பட வேண்டும்.

இப்பணிகளுக்கு 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி கோரப்பட்ட ஒப்பப்புள்ளிக்கு செலவீனத்தொகை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண். | மதிப்பீட்டின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய்) (A) | தற்போதைய மதிப்பீட்டுக்கு கூடுதல் தொகை விவரம் (+) 0.08% சேர்த்து (ரூபாய்) (B) |
|---|---|---|---|
| 1 | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 4,15,01,943.09 | ரூ. 4,15,35,144.64 |
| 2 | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 74,70,349.76 | ரூ. 74,76,326.03 |
| 3 | (இ) த.நா.க.தொ. ந.வா.1% | ரூ. 4,15,019.43 | ரூ. 4,15,019.43 |
| 4 | (ஈ) தரக்கட்டுப்பாடு 1% | ரூ. 3,73,600.00 | ரூ. 3,73,600.00 |
| 5 | (உ) கலந்தாலோசகர் கட்டணம் 2.00% | ரூ. 7,50,000.00 | ரூ. 7,50,000.00 |
| 6 | (ஊ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 9,39,087.73 | ரூ. 9,39,087.73 |
| | மொத்தம் (Rounded Off) | ரூ.5,14,50,000.00 | ரூ. 5,14,89,178.00 |
| கூடுதல் தொகை (B- A) | | | ரூ. 39,178.00 |

மேலும், இவ்வொப்பத்திற்கு பணி மதிப்புத்தொகையை விட (+) 0.08%, 2024-25ஆம் ஆண்டின் விலை விகிதத்தின்படி அதிக ஒப்பப்புள்ளி அளித்துள்ளதால் மொத்த செலவீனத்தொகை ரூ.5,14,89,178.00-க்கு திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டியுள்ளது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டு தொகையான ரூ.5,14,89,178.00-க்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்காக 2024-2025ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி பணிமதிப்பு தொகையை விட (+)0.08% அதிகம், ஒப்பத் தொகை ரூ.4,15,35,144.64 மற்றும் 18% சரக்கு மற்றும் சேவை வரி ரூ.74,76,326.03ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.4,90,11,471.00-க்கு (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூறு இலட்சத்து பதினோராயிரத்து நானூற்று எழுபத்து ஒன்று மட்டும்) ஒப்பத்தினை L1 ஒப்பந்ததாரர் திருவாளர். RTI Foundation., அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,
3. இப்பணிக்கான செலவீனத்தினை கணக்கு குறியீட்டு எண் : HEALTH DEPARTMENT BUILDINGS (20-28-00 / 412-400-301) மற்றும் MUTHALVAR PADAIPPAGAM(20-28-00/412-403-012) நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மூலமாக நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் இனம் 1ற்கு மட்டும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது

“24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.564/2025, நாள்.24.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது".

“26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.483/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

******

**ம.அ.11நக.எண்.E3/558649/2025**

**தீர்மான எண்: 1056/2025** **பொருள் எண்.41**

**பெருநகர சென்னை மாநகராட்சி - உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ்**

**மண்டலம் 11, கோட்டம்-152 , வளசரவாக்கம், அம்பேத்கர் சாலையில் சமூக நலக்கூடம் கட்டும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

கீழ்குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | வார்டு | மதிப்பீட்டு எண். | பணியின் பெயர் (ம) பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சங்கள்) |
|---|---|---|---|---|
| 1. | 152 | NL/2025-26/ | பெருநகர சென்னை மாநகராட்சி - உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் மண்டலம் 11 - பகுதி 33, கோட்டம்-152ல் வளசரவாக்கம், அம்பேத்கர் சாலையில் சமூக நலக்கூடம் கட்டும் பணி . | ரூ. 760.00 |
| | மொத்தம் | | | ரூ. 760.00 |

| | | |
|---|---|---|
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | செயற்பொறியாளர் - ம11 |
| 3 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம்-11 |
| 4 | சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி | கட்டடத்துறை |
| 5 | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும் தேதி | தலைமை பொறியாளர் (பொது) அவர்களின் ஆணை எண். ,நாள் : |

| | | |
|---|---|---|
| 6 | வார்டு குழு தீர்மான எண். மற்றும் தேதி | 11வது மண்டல வார்டு குழுவின் பரிந்துரையினை எதிர் நோக்கி சமர்ப்பிக்கப்படுகிறது. |
| 7 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024 -2025 ஆம் ஆண்டு |
| 8 | மதிப்பீடு தொகை | |
| | அ) பணியின் செலவீனம் | ரூ 6,11,30,233 . 49 |
| | ஆ) சரக்கு (ம) சேவை வரி (18%) | ரூ 1,10,03,442 . 03 |
| | இ) தமிழ்நாடு கட்டுமானதொழிலாளர் நலவாரிய நிதி (1%) | ரூ 6,11,302 . 33 |
| | ஈ) வடிவமைப்பு மற்றும் ஆலோசனை கட்டணங்கள் (2.5%) | ரூ 18,03,341 .89 |
| | உ) மற்ற எதிர்பாரா செலவு | ரூ 14,51,680.26 |
| | இ) இடமாற்றம் செலவு | ------------------ |
| | மொத்தம் | ரூ 7,60,00,000.00 |
| 9 | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு அல்லது ஓரு மீட்டருக்கு ஆகும் செலவு | -. |
| 10 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 11 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் தீர்மான எண். மற்றும் நாள் | 11வது மண்டல வார்டு குழுவின் பரிந்துரையினை எதிர் நோக்கி சமர்ப்பிக்கப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 12 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | புதிய பணி |
| 13 | நிதியின் மூலத்தன்மை | *202107*/மூலதன நிதி |
| | அ) வரவு செலவு ஒதுக்கீடு | ரூ. |
| | ஆ) மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | ரூ. |
| | இ) மீதமுள்ள நிதி (அ - ஆ) | ரூ. |
| | ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்குதேவைப்படும் நிதி. | ரூ.7,60,00,000.00 |
| | உ) மீதமுள்ள தொகை | ரூ. |

எனவே,

1. மண்டலம்-11,பகுதி 33, கோட்டம்-152 வளசரவாக்கம், அம்பேத்கர் சாலையில் சமூக நலக்கூடம் கட்டும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.7,60,00,000/-க்கு (ரூபாய் ஏழு கோடியே அறுபது இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதியும்,
2. மேற்கண்ட பணிக்கு கட்டடத் துறை தலைமையிடம் மூலம் ஒப்பம் கோரவும், மூலதன நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யவும்,
3. மேற்கண்ட சமுதாய நலக்கூடம் கட்டும் இடத்தின் வகைப்பாட்டினை ருத்ரபூமி என்கிற வகைப்பாட்டிலிருந்து நத்தம் என்ற வகைப்பாட்டிற்கு மாற்றம் செய்ய சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆணை பெறப்பட்ட உடன் சமுதாய நலக்கூடம் கட்டும் பணி மேற்கொள்ளவும்,

**மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.**

"24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.555/2025, நாள்.24.09.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.478/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம். மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி.ச.பாரதி அவர்கள்.

**திருமதி.ச.பாரதி**

வளசரவாக்கம் அம்பேத்கர் சாலையில் சமூக நலக் கூடம் கட்டும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெறும் நோக்கில் பொருள் எண் 41 மாமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதற்காக எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

வண்ணார் பகுதி, சமூக நலக்கூடம் அமைக்க திட்டமிடப்பட்ட இடமாக இருந்த போதிலும், தற்போது அது ருத்ரபூமியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த 45 ஆண்டுகளாக அந்த நிலம் தனியார் ஆக்கிரமிப்பில் இருந்தது. ஆனால், ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் அந்த இடம் மீட்கப்பட்டாலும், இதுவரை நில வகை மாற்றம் நடைபெறவில்லை. அந்த ருத்ரபூமி தற்போது பயன்படுத்தப்படாத நிலமாகவே உள்ளது. இதுவரை எரிப்பு அல்லது புதைப்பு சம்பந்தமான எந்த நிகழ்வும் அந்த இடத்தில் நடைபெறவில்லை. வளசரவாக்கம் மக்களின் 50 ஆண்டுகால கனவான சமுதாய நலக்கூடம் அமைப்பதற்கான ஒரே இடம் இதுவாகும். 151, 152 மற்றும் 149 ஆகிய வார்டுகளின் மக்கள் பூர்வீக குடிகள். அந்த இடத்தில் ஒரு சமூக நலக்கூடம் அமைக்க வேண்டும் என்பது

தான் அவர்களின் ஒரே கோரிக்கை. நில வகைப்பாடு மாற்றத்திற்கான கோரிக்கை கடிதம் மார்ச் மாதமே அளிக்கப்பட்டது. ஆனால் இதுவரை எந்த பதிலும் வழங்கப்படவில்லை. மழைக்காலம் மற்றும் வரவிருக்கும் தேர்தல் காரணமாக தேர்தல் நடத்தை விதிகள் (Code of Conduct) அமல்படுத்தப்படும். இதனால் திட்டம் தள்ளிப் போகும் நிலைமை ஏற்படும். நில வகை மாற்றம் ஆறு மாத காலத்தில் சாத்தியமானது என்பதை கருத்தில் கொண்டு, அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

**திரு. வே. ராஜன்**

சுமார் நூறு ஆண்டுகளாக ஒரு பீர் நிறுவனம் 13,000 சதுர அடி பரப்பளவுடைய நிலத்தை ஆக்கிரமித்து வைத்திருந்தது. இந்த நிலம், கிராம மக்கள், சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாமன்ற உறுப்பினர் திருமதி ச. பாரதி ஆகியோரின் உறுதியான முயற்சியால் மீட்கப்பட்டது. மீட்கப்பட்ட நிலம் தற்போது பயன்பாட்டில் இல்லை, ஏனெனில் அதன் நில வகைப்பாடு மாற்றம் இன்னும் செய்யப்படவில்லை. நிலத்தின் பயன்பாட்டிற்கான நிதி ஒதுக்கீடு மற்றும் மன்ற தீர்மானம் ஆகியவை ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளன. இந்நிலத்தின் வகைப்பாடு மாற்றம், ஆணையரின் நேரடி நடவடிக்கையின் மூலம் மட்டுமே சாத்தியமாகும். இந்த நிலம் தொடர்பான வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு நிர்வாகத்திடம் உள்ளது. நில வகைப்பாடு மாற்றம் செய்யப்படாமல் தாமதிக்கப்படுமானால், ரூ.30 கோடி மதிப்புடைய இந்த நிலம் மீண்டும் தனியார் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகும் அபாயம் மிகுந்துள்ளது.

**ஆணையர்**

தற்போது மதிப்பீடு செய்யப்பட்டு வேலி அமைக்கப்படும். பின்னர் சுற்றுச்சுவர் அமைக்கப்படும். இதுபோன்று ஐந்து அல்லது ஆறு வகைப்பாடுகள் உள்ளன. வகைப்பாட்டைப் பொருத்தவரை இது மயானம் என்பதால் மிகுந்த கவனத்துடன் அணுக வேண்டும். அதனை நத்தமாக மாற்றவோ அல்லது வேறு வகைப்படுத்தலாக மாற்றவோ வேண்டும். இவ்வகைப்பாட்டை மாற்ற தமிழ்நாடு

அரசுக்கே அதிகாரம் உள்ளது. மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்படும். CLA / அரசு பரிசீலனை செய்து, ஒரு மாதத்திற்குள் நிலுவையில் உள்ள அனைத்து வகைப்பாடுகளும் முடிவுக்கு கொண்டு வரப்படும்.

**திரு. வே. ராஜன்**

நன்றி.

**திருமதி ச. பாரதி**

திராவிட மாடல் ஆட்சி காலத்தில் இந்த இடத்தை மீட்டு, சமுதாய நலக் கூடம் அமைத்தால் நற்பெயர் ஏற்படும்.

**மாண்புமிகு மேயர்**

தீர்மானத்தை ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**VKM/615/2025-ADMIN(ENGINEERING)-E5**

**தீர்மான எண்: 1057/2025** **பொருள் எண்.42**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 11, வார்டு 143ல் கூவம் ஆற்றின் கரையோரம் தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் யூனியன் சாலையினை தார் சாலையாக மாற்றி (மாதா கோயில் தெரு 5வது குறுக்கு தெரு முதல் மேம்பாலம் சாய்வு வரை) அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11க்கு உட்பட்ட வார்டு 143ல் உள்ள கூவம் ஆற்றின் ஓரம் உள்ள யூனியன் சாலையில் (மாதா கோயில் தெரு 5வது குறுக்கு தெரு முதல் மேம்பாலம் சாய்வு வரை) மழைக்காலத்தில் ஆற்றின் மழைநீர் மிகுதியால் வெள்ள நீர் 143 வது வட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் வெள்ள நீர் சூழும் நிலை கடந்த வடகிழக்கு பருவமழையின்போது ஏற்பட்ட காரணத்தினால் வெள்ள நீர் அகற்ற மிகுந்த சிரமம் ஏற்பட்ட நிலையில் அப்பகுதியினை மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்களின் தலைமையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனப்படையில் அப்பகுதியில் அமைந்துள்ள யூனியன் சாலையினை அகலப்படுத்தி அச்சாலையினை தார் சாலையாக மாற்றி அமைக்கவும் மற்றும் கரையினை உயர்த்தி *(Abutting)* அமைத்து சுவர் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி அப்பகுதியினை ஆய்வு செய்து *2024-2025*ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி ரூ.*6.00* கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. மேற்கண்ட வார்டு 143ல் உள்ள கூவம் ஆற்றின் கரையோரம் தடுப்பு சுவர் (Abutting) அமைத்தல் மற்றும் யூனியன் சாலையினை தார் சாலையாக மாற்றி (மாதா கோயில் தெரு 5வது குறுக்கு தெரு முதல் மேம்பாலம் சாய்வு வரை) அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையான ரூ.6.00 கோடிக்கு நிர்வாக அனுமதியும்,
2. மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகையான ரூ.6.00 கோடி தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதியும்,
3. கூவம் ஆற்றின் கரையோரம் தடுப்பு சுவர் (Abutting) அமைத்தல் மற்றும் யூனியன் சாலையினை தார் சாலையாக மாற்றி (மாதா கோயில் தெரு 5வது குறுக்கு தெரு முதல் மேம்பாலம் சாய்வு வரை) அமைக்கும் பணியினை பேருந்து சாலைகள் துறை மூலம் ஒப்பங்கள் கோரி பணியினை மேற்கொள்ள அனுமதியும்,
4. மேற்கண்ட செலவினத்தொகையான ரூ.6.00 கோடியினை மூலதன கணக்கு தலைப்பு எண்.412403000 Other Misc. மூலம் மேற்கொள்ள அனுமதியும்,
5. மேற்படி செலவினத்தொகையான ரூ.6.00கோடியை அதற்கான பேருந்து சாலைகள் துறைக்கான மூலதன கணக்கு தலைப்பு எண்.412403000ல் ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரையிலான இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**“24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.569 /2025, நாள். 24.09.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".**

**“26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.484/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”**

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**VKM/614/2025-ADMIN(ENGINEERING)-E5**

**தீர்மான எண்: 1058/2025** **பொருள் எண்.43**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் 11, வார்டு 143ல் கூவம் ஆற்றின் கரையோரம் தடுப்பு சுவர் அமைத்தல் மற்றும் யூனியன் சாலையினை தார் சாலையாக மாற்றி அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 11க்கு உட்பட்ட வார்டு 143ல் உள்ள கூவம் ஆற்றின் ஓரம் உள்ள யூனியன் சாலையில் (மாதா கோயில் நகரி 5வது குறுக்கு தெரு முதல் மயானபூமி வரை மற்றும் நாகாத்தம்மன் கோயில் முதல் மாதா கோயில் நகர் 5வது குறுக்கு தெரு வரை) மழைக்காலத்தில் ஆற்றின் மழைநீர் மிகுதியால் வெள்ள நீர் 143வது வட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் வெள்ள நீர் சூழும் நிலை கடந்த வடகிழக்கு பருவமழையின்போது ஏற்பட்ட காரணத்தினால் வெள்ள நீர் அகற்ற மிகுந்த சிரமம் ஏற்பட்ட நிலையில் அப்பகுதியினை மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் அவர்களின் தலைமையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனப்படையில் அப்பகுதியில் அமைந்துள்ள யூனியன் சாலையினை அகலப்படுத்தி அச்சாலையினை தார் சாலையாக மாற்றி அமைக்கவும் மற்றும் கரையினை உயர்த்தி *(Abutting)* அமைத்து சுவர் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. அதன்படி அப்பகுதியினை ஆய்வு செய்து 2024-2025ஆம் ஆண்டு அலுவலக விலைப்படி ரூ.6.50 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம்-11 வார்டு 143ல் கூவம் ஆற்றின் கரையினை ஒட்டி உள்ள யூனியன் சாலையினை தார் சாலையாக மாற்றுதல் மற்றும் கரையினை உயர்த்தி (Abutting) அமைத்து சுவர் அமைக்கும் பணிக்காக(மாதா கோயில் நகரி 5வது குறுக்கு தெரு முதல் மயானபூமி வரை மற்றும் நாகாத்தம்மன் கோயில் முதல் மாதா கோயில் நகர் 5வது

குறுக்கு தெரு வரை) தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையான ரூ.6.50கோடிக்கு நிர்வாக அனுமதியும்,

2. மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகையான ரூ.6.50 கோடி தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதியும்,
3. யூனியன் சாலையினை அகலப்படுத்தி அச்சாலையினை தார் சாலையாக மாற்றி அமைக்கவும் மற்றும் கரையினை உயர்த்தி (Abutting) அமைத்து சுவர் அமைக்கும் பணியினை பேருந்து சாலைகள் துறை மூலம் ஒப்பங்கள் கோரி பணியினை மேற்கொள்ள அனுமதியும்,
4. மேற்கண்ட செலவினத்தொகையான ரூ.6.50 கோடியினை மூலதன கணக்கு தலைப்பு எண்.412403000 Other Misc. மூலம் மேற்கொள்ள அனுமதியும்,
5. மேற்படி செலவினத்தொகையான ரூ.6.50கோடியை அதற்கான பேருந்து சாலைகள் துறைக்கான மூலதன கணக்கு தலைப்பு எண்.412403000ல் ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரையிலான இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.570/2025, நாள்.24.09.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.485/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

<u>தி.க.மே.ந.க.எண்.அ7 / 5591 / 2025</u>

**தீர்மான எண்: 1059/2025** **பொருள் எண்.44**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு - மண்டலம் -14, வார்டு – 188ல் தாம்பரம் - வேளச்சேரி பிரதான சாலையில் பழைய குப்பை கொட்டும் வளாகம் பள்ளிக்கரணையில் 30 மெ.டன் திறனுடைய, புதிய மெகா பிளாஸ்டிக் பேலிங் மையம் (கிழக்கு பக்கம்) அமைப்பதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு நாளைக்கு சராசரியாக 6150 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகிறது. இதில் ஒரு நாளைக்கு சுமார் 3200 மெட்ரிக் டன் ஈரக்கழிவுகளும், 2450 மெட்ரிக் டன் உலர் கழிவுகளும் மற்றும் 500 மெட்ரிக் டன் செயலாக்கம் செய்ய இயலாத கழிவுகளும் (Inert) அடங்கும். மேற்கண்ட, திடக்கழிவுகள் செயலாக்கம் மற்றும் மறுசுழற்சிக்கு பின்னர் மீதம் உள்ள திடக்கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை விதி 2016-ஐ பின்பற்றும் வகையில், அனைத்து மண்டலங்களிலும் ஒரு நாளைக்கு 735 மெட்ரிக் டன் வடிவமைப்பு திறன் கொண்ட ஈரக்கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும் கூடங்கள் (MCC), இயற்கை எரிவாயு (Bio -gas) ஆலைகள், எரியூட்டும் கலன்கள் (Incinerators), பொருட்கள் மீட்பு மையங்கள் (MRF) மற்றும் பொருட்கள் வளமீட்பு வசதி (RRC), 3 இடங்களில் தலா 10 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பேலிங் மையங்கள் போன்ற பல்வேறு பரவலாக்கப்பட்ட செயலாக்க வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. சோழிங்கநல்லூர், கோயம்பேடு மற்றும் மாதவரம் ஆகிய 3 இடங்களில் தலா 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 5 உயிரி-எரிவாயு (Bio-CNG) ஆலைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் மாதவரத்தில் 50 மெட்ரிக் டன் திறன் கொண்ட இரண்டு எண்ணிக்கையில் காற்று புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் கூடங்கள் (Windrow) சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட 3 எண்ணிக்கையிலான பேலிங் மையங்களுக்கு மண்டலம் 1 முதல் 15 வரை சேகரிக்கப்படும் பயன்படுத்த இயலாத நெகிழி கழிவுகள் கொண்டு சேர்க்கப்படுகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில், நாள் ஒன்றுக்கு உருவாகும் 6150 மெட்ரிக் டன் திடக்கழிவுகளில் சுமார் 1168 மெட்ரிக் டன் (19%) கழிவுகள் நெகிழி கழிவுகள் ஆகும். இதில் 160 மெட்ரிக் டன் நெகிழி கழிவுகள் வள மீட்பு / பொருட்கள் மீட்பு மையங்களில் இருந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மை பணியாளர்கள் மூலம் விற்கப்பட்டு அதன் மூலம் வரும் வருவாயை தூய்மை

பணியாளர்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது, மேலும் நாள் ஒன்றுக்கு 30 மெட்ரிக் டன் நெகிழி கழிவுகள் பேலிங் மையங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கு சிப்பமாக்கப்பட்டு சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பப்படுகிறது. மீதமுள்ள 978 மெட்ரிக் டன் நெகிழி கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களுக்கு அனுப்பப்படுகிறது,

பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் நெகிழி கழிவுகளை கொட்டுவதை தவிர்க்கும் பொருட்டு, 2025 – 2026ஆம் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு எண் 49ல், மண்டலத்துக்கு ஒரு பிளாஸ்டிக் பேலிங் மையம் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக நடந்த ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அனைத்து மண்டலங்களிலும் பிளாஸ்டிக் பேலிங் மையங்கள் அமைவதில் உள்ள சிக்கல் மற்றும் பிரச்சனைகளை விளக்கினார். மேலும் தீ விபத்துகள் மற்றும் பொது மக்களின் புகார்கள் எழ வாய்ப்பு இருப்பதால், வடக்கு மற்றும் தெற்கு வட்டாரத்தில் ஒரு மெகா பிளாஸ்டிக் பேலிங் மையத்தை அமைக்க பரிந்துரைத்தார். இதன் தொடர்ச்சியாக திருவாளர்கள் வெர்னிகுலர் பில்டிங் சொலுஷன்ஸ் (OPC) பிரைவேட் லிமிடெட் அவர்கள் திட்ட ஆலோசராக நியமிக்கப்பட்டு மெகா பிளாஸ்டிக் பேலிங் மையம் அமைப்பதற்காக திட்ட அறிக்கை பெறப்பட்டது.

மேற்கண்ட திட்ட அறிக்கையின் அடிப்படையில் தெற்கு வட்டாரத்தின் கீழ் உள்ள மண்டலம்-14, பகுதி-42, வார்டு-188ல் தாம்பரம் – வேளச்சேரி பிரதான சாலை பள்ளிக்கரணையில் உள்ள பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் மேற்கண்ட மெகா பிளாஸ்டிக் பேலிங் மையத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு மொத்தம் 4670 ச.மீ. பரப்பளவில் மண்டல அலுவலர்-14 அவர்கள் மூலம் வரைபடத்துடன் கூடிய கடிதம் திடக்கழிவு மேலாண்மை துறையால் பெறப்பட்டது.

மேற்கண்ட மண்டல அலுவலர்-14 அவர்களின் கடிதத்தின் அடிப்படையில் மண்டலம் 9 முதல் 15 வரை சேகரிக்கப்படும் உலர் கழிவுகளான நெகிழி கழிவுகள் குப்பைக் கிடங்கிற்குச் செல்வதை குறைக்கும் வகையில், மண்டலம் – 14, பகுதி -42, வார்டு – 188ல், தாம்பரம் – வேளச்சேரி பிரதான சாலை பழைய குப்பை கொட்டும் வளாகம் பள்ளிக்கரணையில் உள்ள 30 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மெகா பிளாஸ்டிக் பேலிங் மையம்(கிழக்கு பக்கம்) 3006 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைக்க 2025-26 ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படி திட்ட மதிப்பீடு ரூ. 7,70,00,000/-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. (இதில் பெருந்தொகையான Steel Truss Fabrication என்ற இனம் 2025-26 ஆம் ஆண்டு விலைப்பட்டியலில் விடுபட்ட காரணத்தால் 2024-25 ஆம் ஆண்டு விலைப்பட்டியலின் படி 1 கிலோவிற்கு ரூ. 205.49 வீதம் 92,453 கிலோவிற்கு தொகை ரூ.1,89,98,167 /- Lumpsum (L.S)ல் சேர்க்கப்பட்டுள்ளது).

இந்த மெகா பிளாஸ்டிக் பேலிங் மையத்தில் (கிழக்கு பக்கம்) கீழ்கண்ட வசதிகள் அமைக்கப்பட உள்ளன

1. *G.I. Sheet* மேற்கூரையுடன் கூடிய கட்டிடம்
2. நிர்வாக அலுவலக கட்டிடம்.
3. மின்சார அறை
4. பணியாளர்களுக்கான வருகை பதிவறை, உணவு அருந்தும் அறை, உடை மாற்றும் அறை மற்றும் கழிவறை.
5. பாதுகாவலர் அறை மற்றும் கண்காணிப்பு கோபுரம் .
6. *CCTV* கண்காணிப்பு கேமரா வசதிகள்
7. தண்ணீர் மற்றும் கழிவுநீர் வசதிகள்

எனவே,

1. மண்டலம்–14, பகுதி-42, வார்டு–188ல், தாம்பரம் - வேளச்சேரி பிரதான சாலை பள்ளிக்கரணையில் உள்ள பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் மொத்தமுள்ள 4670 ச.மீ பரப்பளவில் 3006 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் 30 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மெகா பிளாஸ்டிக் பேலிங் மையம் (கிழக்கு பக்கம்) அமையயிருப்பதால் மெகா பிளாஸ்டிக் பேலிங் மையத்திற்கு தேவைப்படும் வசதிகளான G.I. Sheet மேற்கூரையுடன் கூடிய கட்டிடம், நிர்வாக அலுவலக கட்டிடம், மின்சார அறை, பணியாளர்களுக்கான வருகை பதிவறை, உணவு அருந்தும் அறை, உடை மாற்றும் அறை, கழிவறை, பாதுகாவலர் அறை, கண்காணிப்பு கோபுரம், CCTV கண்காணிப்பு கேமரா வசதிகள், தண்ணீர் மற்றும் கழிவுநீர் வசதிகள் அமைப்பதற்காக 2025–26 ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ-7,70,00,000/-க்கு (ரூபாய் ஏழு கோடியே எழுபது இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,

   (இதில் பெருந்தொகையான Steel Truss Fabrication என்ற இனம் 2025–26 ஆம் ஆண்டு விலைப்பட்டியலில் விடுபட்ட காரணத்தால் 2024–25 ஆம் ஆண்டு விலைப்பட்டியலின் படி 1 கிலோவிற்கு ரூ. 205.49 வீதம் 92,453 கிலோவிற்கு தொகை ரூ.1,89,98,167/– Lumpsum (L.S)ல் சேர்க்கப்பட்டுள்ளது).

2. இப்பணிக்கு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோருவதற்கு அனுமதியும்,
3. இப்பணிக்கான செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை துறையின் கணக்கு தலைப்பு எண்.412-40-05-08 (SWM Department Buildings) கீழ் நிதி ஒதுக்கி பணியினை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.155/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 477/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

<u>ம.அ.1.ந.க.எண்.பி2/003911/2025</u>

**தீர்மான எண்: 1060/2025** **பொருள் எண்.45**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-1, வார்டு-09க்குட்பட்ட பட்டினத்தார் கோவில் தெருவில் உள்ள அம்மா உணவக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1, பகுதி-2, வார்டு-09க்குட்பட்ட பட்டினத்தார் கோவில் தெருவில் சிதிலமடைந்த நிலையில் உள்ள மீன் மற்றும் காய்கறி அங்காடியினை இடித்துவிட்டு புதியதாக அங்காடி கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அவ்விடத்தில் புதியதாக கட்டப்பட்டு வரும் அங்காடி முன்புற பகுதியில் அம்மா உணவகம் இயங்கி வருகிறது. இப்பகுதியானது முகப்பில் அமைந்துள்ளதால், முன்புறம் முகப்பில் பொது மக்கள் நுழைவதற்கு போதுமான இடம் இல்லாத காரணத்தினால் அங்கு இயங்கிவரும் அம்மா உணவகத்தினை மாற்றி அமைக்கவும் தற்போதுள்ள பழைய அம்மா உணவகத்தினை இடிக்குமாறு ஆணையர் அவர்களால் கள ஆய்வின் போது அறிவுறுத்தப்பட்டது அதன் விவரம் பின்வருமாறு

<u>பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1-பகுதி-2 - வார்டு09க்குட்பட்ட</u>

<u>பட்டினத்தார் கோவில் தெருவில் உள்ள அம்மா உணவகம் கட்டிடத்தின் விவரங்கள்</u>

| வ.எண் | வார்டு 9 | மண்டலம்-1 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-1, பகுதி-2, வார்டு-09க்குட்பட்ட பட்டினத்தார் கோவில் தெருவில் உள்ள அம்மா உணவக கட்டிடம். |
| 2. | அந்தகட்டிடம் எப்போது கட்டப்பட்டது? | 2013 ஆம் ஆண்டு பெருநகர சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்டது. |
| 3. | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரை தளம் மட்டும் 948.15 சதுரஅடி |
| 4. | அந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின்பரப்பளவுஎவ்வளவு? | 948.15 சதுரஅடி |
| 5. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 147599.67 |
| 6. | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | பயன்பாட்டில் உள்ளது. மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது . |
| 7. | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | மார்க்கெட்டில் கூடுதல் கடைகள் கட்ட இடம் தேவைப்படுகிறது. |
| 8. | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம்? | அம்மா உணவகம் பின்புறம் உள்ள மீன் மற்றும் காய்கனி அங்காடியினை இடித்து அகற்றி விட்டு புதிதாக மீன் மற்றும் காய்கனி அங்காடி கட்டப்பட்டு வருகிறது மார்க்கெட் முன்புறம் முகப்புக்கும் பொது மக்கள் நுழைவதற்கு போதுமான இடம் இல்லாத காரணத்தினால் அங்கு இயங்கி வரும் அம்மா உணவகத்தினை |

| | | |
|---|---|---|
| | | மாற்றி அமைக்கவும் அதனால் தற்போது உள்ள அம்மா உணவகத்தினை இடிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| 9. | வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள் | பின்னர் பெறப்படும் |
| 10 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தவர் யார்? | மண்டல அலுவலர், மண்டலம்-1 அவர்கள் |

எனவே, மண்டலம்-1, பகுதி-2, வார்டு-09க்குட்பட்ட சிதிலமடைந்த நிலையில் உள்ள மீன் மற்றும் காய்கறி அங்காடியினை இடித்துவிட்டு புதிதாக அங்காடி கட்டும் பணி நடைபெற்று வருகிறது. அப்பகுதியில் மார்க்கெட் முன்புறம் அமைந்துள்ள அம்மா உணவகத்தினை மாற்று இடத்திற்கு மாற்ற வேண்டியும் மற்றும் பழைய அம்மா உணவகத்தினை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.574/2025, நாள்.24.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது. "

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.5.நக.எண்.1995359/2025**

**தீர்மான எண்: 1061/2025** **பொருள் எண்.46**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-5, வார்டு-61, எழும்பூர், சந்தோஷ் நகரில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மிகவும் பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.**

மண்டலம்-5, பகுதி-14, வார்டு-61 க்குட்பட்ட எழும்பூர், சந்தோஷ் நகரில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டிடத்தினை இடிப்பதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | மண்டலம் - 5 | வார்டு எண். 61 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | அங்கன்வாடி கட்டிடம் |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | இக்கட்டிடம் 2000 ஆம் ஆண்டு கட்டப்பட்டது |
| 3 | அந்த கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரைத்தளம் - 148.80 ச.மீ |
| 4 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 14,698.51/- |
| 5 | கட்டிடம் இடிப்பதற்கு காரணம் | இக்கட்டிடம் மிகவும் பழுதடைந்து, சிதிலமடைந்த நிலையில் பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. |
| 6 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | இக்கட்டிடத்தை இடித்து விட்டு அந்த இடத்தில் மாண்புமிகு எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் 2024-25 ஆம் ஆண்டு நிதியிலிருந்து புதியதாக அங்கன்வாடி மற்றும் உடற்பயிற்சி கூடம் கட்டிடம் கட்டப்பட உள்ளது. |
| 7 | கட்டிடம் இடிப்பதற்கு பரிந்துரை செய்தது | மண்டல அலுவலர்-5 |

| | | |
|---|---|---|
| | யார்? | |
| 8 | வார்டு குழு (பரிந்துரை) தீர்மான எண்.(ம) நாள்: | எண்.31,நாள் : 22.04.2025 |

இந்நிலையில், இவ்விடத்தில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தினை இடித்து விட்டு அதே இடத்தில் மாண்புமிகு எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தனது 2024-25 ஆம் ஆண்டு நிதியிலிருந்து புதியதாக அங்கன்வாடி மற்றும் உடற்பயிற்சி கூடம் கட்டிடம் கட்ட ரூ.45.50 இலட்சம் ஒதுக்கியுள்ளார்கள்.

எனவே, மண்டலம்-5, பகுதி-14, வார்டு-61 க்குட்பட்ட எழும்பூர், சந்தோஷ் நகரில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டிடத்தினை இடித்து அகற்ற, நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.573/2025, நாள். 24.09.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>ம.அ.15.ந.க.எண். பி1 / 4929 / 2025</u>**

**தீர்மான எண்: 1062/2025** **பொருள் எண்.47**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 15, கோட்டம் –200ல் TNUHDB 5வது அவென்யூவில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் பழுதடைந்த ‘L’ Block கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநராட்சி, மண்டலம் - 15, பகுதி 45, கோட்டம் 200ல் TNUHDB 5வது அவென்யூவில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் பழுதடைந்த ‘L’ Block கட்டிடத்தை இடித்து அகற்ற மண்டலம்-15ன் வார்டு குழு கூட்டத்தில் தீர்மான எண் 305 நாள் 09.04.2025ன்படி நிறைவேற்றப்பட்டுள்ளது

இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்களின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | வார்டு - 200 | மண்டலம் - 15 |
|---|---|---|
| 1 | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | TNUHDB 5வது அவென்யூவில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளி ‘L’ Block கட்டிடம். |
| 2 | அந்த கட்டிடம் எப்போது கட்டப்பட்டது | 2005ல் முந்தைய செம்மஞ்சேரி ஊராட்சியால் கட்டப்பட்டது |
| 3 | அந்த கட்டிடங்களின் பரப்பளவு தளம் வாரியாக எவ்வளவு? | தரைதளம் 3164 சதுர அடி |
| 4 | அந்த கட்டிடங்கள் அமைந்துள்ள இடத்தின் பரப் பளவு எவ்வளவு? | இடத்தின் பரப்பளவு 3164 சதுர அடி |
| 5 | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ஏதுமில்லை |
| 6 | அந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா? | ஆம் பயன்பாட்டில் உள்ளது |

| | | |
|---|---|---|
| 7 | அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது? | 20 வகுப்பறைகள் கொண்ட பள்ளி கட்டிடம் கட்டப்பட உள்ளது |
| 8 | கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | பழுதடைந்த நிலையில் உள்ளதால் இடிக்க வேண்டியது அவசியமாகிறது |
| 9 | கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார்? | 200வது வார்டு மாமன்ற உறுப்பினர் |

எனவே, மண்டலம் –15, பகுதி 45, கோட்டம் 200ல் TNUHDB 5வது அவென்யூவில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் பழுதடைந்த ‘L’ Block கட்டிடத்தை இடித்து அகற்ற நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.572 /2025, நாள். 24.09.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**க.து.ந.க.எண்.அ1 / 3813 / 2025**

**தீர்மான எண்: 1063/2025** **பொருள் எண்.48**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - 2025-2026ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின்படி 2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தி பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்வதற்கு உடற்கல்வி ஆசிரியர்களை பணியமர்த்துவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது - உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ஊதியம் உயர்த்தி வழங்குவதற்கு அனுமதி.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2025-2026ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பு எண்.5ல் பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் இயங்கும் 69 நடுநிலைப்பள்ளிகள், 72 உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தி பல்வேறு போட்டிகளில் கலந்து கொள்ளவும் கோப்பைகளை வெல்லவும் அவர்களுக்கு பயிற்சி அளித்து தயார்படுத்தும் விதமாக தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்கள் நடுநிலைப்பள்ளிகளுக்கு மாதம் ரூ.15,000/- உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளுக்கு மாதம் ரூ.18,000/- என்ற வகையில், மொத்தம் 141 உடற்கல்வி ஆசிரியர்கள் பணியமர்த்தப்படுவார்கள். இதற்கென ரூ.2.34/- கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அறிவிப்பினை செயல்படுத்துவதற்கு மன்றத்தீர்மானம் எண்.474/2025, நாள்.30.04.2025ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டு சென்னை நடுநிலை, உயர்நிலை (ம) மேல்நிலைப்பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்கள் ஜுன் 2025 முதல் பணியமர்த்தப்பட்டு ஜுன் 2025 முதல் ஆகஸ்ட் 2025 வரை ஊதியம் வழங்கப்பட்டது. ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்ட விவரம் கீழ்வருமாறு:

| வ.எண். | பதவியின் பெயர் | ஆசிரியர்களின் எண்ணிக்கை | பள்ளிகளின் விவரம் | ஊதியத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | உடற்கல்வி ஆசிரியர்கள் (P.E.T. Teacher) | 141 | CMS | 15,000 |
| 2 | | | CHS & CHSS | 18,000 |

தற்போது, 15.09.2025 அன்று நடைபெற்ற மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு குறித்த கலந்தாய்வு கூட்டத்தில் சென்னைப் பள்ளிகளில் பணியமர்த்தப்பட்ட தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்களுக்கு அறிவிப்பின்படி நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியமான சென்னை நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் B.P.Ed. பயின்ற உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ரூ.15,000/- ஊதியம் வழங்கப்பட்ட நிலையில் தற்போது, ரூ.20,000/- ஊதியம் உயர்த்தி வழங்குமாறும் மற்றும் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் M.P.Ed. பயின்ற உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ரூ.18,000/- ஊதியம் வழங்கப்பட்ட நிலையில் தற்போது, ரூ.25,000/- ஊதியம் உயர்த்தி வழங்குமாறும் மாண்புமிகு மேயர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, 2025-2026 ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு செப்டம்பர் 2025 ஆம் மாதம் முதல் மார்ச் 2026 வரை ஊதியம் வழங்குவதற்கான தொகை விவரம் கீழ்வருமாறு:

| S.No. | Designation | School Details | No. of Staff | Per Month Salary Rs. | Total Month (Sept. 2025 to March 2026) | Total Amount |
|---|---|---|---|---|---|---|
| 1 | P.E.T. Teachers | CMS | 69 | 20,000 | 7 | 96,60,000 |
| 2 | | CHS & CHSS | 72 | 25,000 | 7 | 1,26,00,000 |
| Total | | | 141 | | | 2,22,60,000 |

எனவே,

1. மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு குறித்த கலந்தாய்வு கூட்டத்தில் சென்னைப் பள்ளிகளில் பணியமர்த்தப்பட்ட தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்களுக்கு அறிவிப்பின்படி நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியமான சென்னை நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் B.P.Ed. பயின்ற உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ரூ.15,000/- ஊதியம் வழங்கப்பட்ட நிலையில் தற்போது, ரூ.20,000/- ஊதியம் உயர்த்தி வழங்குவதற்கும் மற்றும் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் M.P.Ed. பயின்ற உடற்கல்வி ஆசிரியர்களுக்கு ரூ.18,000/- ஊதியம் வழங்கப்பட்ட நிலையில் தற்போது, ரூ.25,000/- ஊதியம் உயர்த்தி வழங்குவதற்கு அனுமதியும்,
2. மேற்குறிப்பிட்ட தற்காலிக உடற்கல்வி ஆசிரியர்களுக்கு செப்டம்பர் 2025 ஆம் மாதம் முதல் மார்ச் 2026 ஆம் மாதம் வரை (7 மாதங்களுக்கு) ஊதியம் வழங்குவதற்கான செலவினத் தொகையான ரூ.2,22,60,000/- (ரூபாய் இரண்டு கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) கணக்கு குறியீட்டு எண்.80-82-01, 230-11-

02-02 (கல்விச் செலவினங்கள்) என்கிற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 19.09.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2025 அன்று தீர்மான எண்.92/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 500/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**க.து.ந.க.எண்.அ1 / 4457 / 2025**

**தீர்மான எண்: 1064/2025** **பொருள் எண்.49**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - 2025-2026ஆம் கல்வியாண்டில் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்களின் வாயிலாக தற்காலிக அலுவலக உதவியாளர்கள் 2025 ஜுன் மற்றும் ஜுலை மாதங்கள் பணிபுரிந்தமைக்கான ஊதியம் வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி மற்றும் ஆகஸ்ட் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை (9 மாதங்களுக்கு) பணியமர்த்துவதற்கும் மற்றும் அவர்களுக்கான ஊதியம் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் 206 தொடக்கப்பள்ளிகள், 130 நடுநிலைப்பள்ளிகள், 46 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 35 மேல்நிலைப்பள்ளிகள் என 417 பள்ளிகள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை எளிய மக்களின் குழந்தைகள் கல்வி பயின்று வருகின்றனர். பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் ஆண்டுதோறும் மாணவர்களின் சேர்க்கை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்தப்படுகின்ற சிறப்புத் திட்டங்களால் அதிகரித்துக் கொண்டு வருகிறது.

மேற்குறிப்பிட்ட சென்னைப் பள்ளிகளில் அலுவலக பணிகளை மேற்கொள்வதற்காக 2024-2025ஆம் கல்வியாண்டில் ஆணையர் அவர்களின் 24.09.2024 நாளிட்ட அனுமதியும் மற்றும் மன்றத்தின் அனுமதியும் பெறப்பட்டு 77 தற்காலிக அலுவலக உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்டு, நாள் ஒன்றுக்கு ரூ.499/- ஊதியம் என நிர்ணயம் செய்யப்பட்டு 26 நாட்களுக்கு ரூ.12,974/- ஊதியம் வழங்கப்பட்டது.

தற்போது, 2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அலுவலக பணிகளை மேற்கொள்வதற்காக 77 தற்காலிக அலுவலக உதவியாளர்களுக்கு பணியின் அவசியம் கருதி ஜுன் 2025 மற்றும் ஜுலை 2025 ஆம் மாதங்கள் பணியமர்த்தப்பட்டு துணை ஆணையர்(வ(ம) நிதி) அவர்களின் 12.08.2025 நாளிட்ட அனுமதி பெறப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டது. தற்போது, சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை, Proc.No.C2/16317/2021, நாள். 13.08.2025ன் படி நாள் ஒன்றுக்கு ரூ.510/- ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு 26 நாட்களுக்கு ரூ.13,260/- ஊதியம் நிர்ணயம் செய்து பணியமர்த்துவது அவசியமாகிறது.

| வ.எண். | பதவியின் பெயர் | தேவைப்படும் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தற்காலிக அலுவலக உதவியாளர்கள் | 77 |

| வ. எண் | பதவியின் பெயர் | பணியாளர்களின் எண்ணிக்கை | மாத ஊதியம் | பணிபுரிய வேண்டிய கால அளவு(ஆகஸ்ட் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை) | மொத்த ஊதியம் (கலம் எண். 3 x 4 x 5) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | அலுவலக உதவியாளர் | 77 | ரூ.13,260/- | 9 மாதங்கள் | 91,89,180 |

2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் அலுவலகம் சார்ந்த பணிகளினை மேற்கொள்வதற்கு பணியின் அவசியம் கருதி தற்காலிக அலுவலக உதவியாளர்கள் ஜுன் 2025 மற்றும் ஜுலை 2025 ஆம் மாதங்கள் பணியமர்த்தப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெறுவதற்கும் மற்றும் ஆகஸ்ட் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை (9 மாதங்கள்) பணியமர்த்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. 2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அலுவலக பணிகளை மேற்கொள்வதற்காக 77 தற்காலிக அலுவலக உதவியாளர்களை பணியின் அவசியம் கருதி ஜுன் 2025 மற்றும் ஜுலை 2025 ஆம் மாதங்கள் பணியமர்த்தப்பட்டு கடந்த ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட ஊதியமான நாள் ஒன்றுக்கு ரூ.499/- ஊதியம் வழங்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்,
2. 77 தற்காலிக அலுவலக உதவியாளர்களை ஆகஸ்ட் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை (9 மாதங்கள்) அந்தந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் மூலம் பணியமர்த்துவதற்கு அனுமதியும்,

3. மேற்குறிப்பிட்ட 77 தற்காலிக அலுவலக உதவியாளர்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை, Proc.No. C2/16317/2021, நாள்.13.08.2025ன் படி நாள் ஒன்றுக்கு ரூ.510/- ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு 26 நாட்களுக்கு ரூ.13,260/- ஊதியம் வழங்குவதற்கு அனுமதியும்,
4. மேற்குறிப்பிட்ட தற்காலிக அலுவலக உதவியாளர்களை ஆகஸ்ட் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை (9 மாதங்கள்) ஊதியம் வழங்குவதற்கான செலவினத் தொகையான ரூ.91,89,180/- னை (ரூபாய் தொண்ணூற்று ஒரு இலட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து நூற்று எண்பது மட்டும்) கணக்கு குறியீடு எண். 80-82-01, 230-11-02-02 (கல்வி செலவினங்கள்) என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் மேற்கொள்வதற்கு அனுமதியும்,
5. மேற்குறிப்பிட்ட தற்காலிக அலுவலக உதவியாளர்களுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு வழங்கப்படுகிறது. அதனடிப்படையில் இனிவரும் காலங்களில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைக்கிணங்க ஊதிய நிர்ணயம் செய்வதற்கு துணை ஆணையர்(கல்வி) அவர்களின் ஒப்புதல் பெற்று ஊதியம் உயர்த்துவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 19.09.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2025 அன்று தீர்மான எண்.93/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

“26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 501/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

**********

**க.து.ந.க.எண்.அ1/11425/2025**

**தீர்மான எண்: 1065/2025** **பொருள் எண்.50**

**பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - 2024-2025ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி ஏற்படுத்திய ஆசிரியர்களை ஊக்குவிக்கும் விதமாக 2025-2026ஆம் கல்வியாண்டில் திருச்சி - IIM, NITT மற்றும் கொடைக்கானல் International School ஆகிய இடங்களுக்கு கல்வி சுற்றுலா அழைத்துச் செல்வதற்கும் மற்றும் அதற்கான செலவினத் தொகையினை முன்பணம் பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதி.**

மாண்புமிகு மேயர் அவர்களின் 2023-2024ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பு எண். 13ன் படி சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி ஏற்படுத்திய ஆசிரியர்களை விடுமுறை நாட்களில், கல்விச் சுற்றுலாவாக நாட்டின் முதன்மையான கல்வி நிறுவனங்களுக்கு (எ.கா. ஐஐடி-மெட்ராஸ், ஐஐஎம்-பெங்களூர், டெல்லி பல்கலைக்கழகம்) அழைத்துச் செல்லப்படுவர். இதற்காக ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக மார்ச் மற்றும் ஏப்ரல் 2023ல் சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி ஏற்படுத்திய ஆசிரியர்களை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, 2024-2025ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி ஏற்படுத்திய ஆசிரியர்களை 2025-2026ஆம் கல்வியாண்டில் விடுமுறை நாட்களில், திருச்சி - IIM மற்றும் NITT ஆகிய இடங்களுக்கு கல்விச்

சுற்றுலாவாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலமாக அழைத்துச் செல்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட சுற்றுலா அழைத்துச் செல்வதற்கு ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் சுற்றுலா அழைத்துச் செல்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழத்தின் விலைப்புள்ளியில் 3 நாட்கள் சுற்றுலா அழைத்துச் செல்வதற்கு ஆகும் செலவினமாக ரூ.38,72,820/- என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின்படி 100% தேர்ச்சி ஏற்படுத்திய ஆசிரியர்களை சுற்றுலா அழைத்துச் செல்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 20 இலட்சம் நிதியை விட கூடுதல் நிதியாக ரூ. 20 இலட்சம் ஒதுக்கீடு பெறுவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. 2024-2025 ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் 100% தேர்ச்சி ஏற்படுத்திய ஆசிரியர்களை ஊக்குவிக்கும் விதமாக 2025-2026ஆம் கல்வியாண்டில் திருச்சி – IIM, NITT மற்றும் கொடைக்கானல் International School ஆகிய இடங்களுக்கு கல்வி சுற்றுலா அழைத்துச் செல்வதற்கு அனுமதியும்,
2. மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பின்படி 100% தேர்ச்சி ஏற்படுத்திய ஆசிரியர்களை சுற்றுலா அழைத்துச் செல்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ.20 இலட்சம் நிதியை விட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழத்தின் விலைப்புள்ளியின் அடிப்படையில் கூடுதலாக ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு பெறுவதற்கும்,
3. மேற்குறிப்பிட்ட சுற்றுலா அழைத்துச் செல்வதற்கான செலவினத் தொகையான ரூ.38,72,820/- (ரூபாய் முப்பத்து எட்டு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து எண்ணூற்று இருபது மட்டும்) முன்பணமாக கல்வி அலுவலர் அவர்களின் பெயரில் கணக்கு குறியீட்டு எண். 80-82-01, 460-50-01-19 என்ற முன்பணக் குறியீட்டில் RTGS மூலமாக பெறுவதற்கு அனுமதியும்,
4. மேற்குறிப்பிட்ட முன்பணத் தொகையினை கணக்கு குறியீட்டு எண். 80-82-01, 230-11-02-02 கல்வி செலவினங்கள் என்ற நிதி ஒதுக்கீட்டில் நேர் செய்வதற்கு தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 19.09.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2025 அன்று தீர்மான எண்.94/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 502/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>க.து.ந.க.எண்.அ1/6638/2025</u>**

**தீர்மான எண்: 1066/2025** **பொருள் எண்.51**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - கல்வித்துறை - சென்னை தொடக்க / நடுநிலை / உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக்கட்டிடம், உட்கட்டமைப்பு மற்றும் பள்ளிகளில் உள்ள பொருட்களை பாதுகாப்பதற்கான தேவைகளை அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியரே மேற்கொள்வதற்கு பள்ளி மேலாண்மைக் குழுவின் (SMC) மூலம் தற்காலிக பாதுகாவலர்கள் பணியமர்த்துவதற்கும் - 2025-2026ஆம் கல்வியாண்டில் ஆகஸ்ட் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை (9 மாதங்களுக்கு) ஊதியம் வழங்குவதற்கும் அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் கீழ் *206* தொடக்கப்பள்ளிகள், *130* நடுநிலைப்பள்ளிகள், *46* உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் *35* மேல்நிலைப்பள்ளிகள் என மொத்தம் *417* பள்ளிகள் இயங்கி வருகின்றன. அனைத்து பள்ளிகளிலும் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு,

பள்ளிக்கட்டிடம் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்புப் பொருட்களின் பாதுகாப்பு கருதி பகல் மற்றும் இரவு நேரப் பாதுகாப்பு வழங்கப்படுவது அவசியமாகும்.

தற்போது, 2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் நலன் கருதி பள்ளிப் பாதுகாப்பிற்காக பாதுகாவலர்கள் நியமிப்பதற்கு மன்றத்தீர்மான எண்.799, 800, 801/2025, நாள்.30.06.2025ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், சென்னை தொடக்க, நடுநிலை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் மாணவ/மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளிக் கட்டிடம் மற்றும் பள்ளிகளின் உட்கட்டமைப்புப் பொருட்களின் பாதுகாப்பு கருதி பகல் மற்றும் இரவு நேரப் பாதுகாப்பு வழங்குவதற்கு பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலமாக கீழ்கண்டுள்ள அட்டவணையில் உள்ளவாறு ஏற்கனவே பணிபுரிந்த தற்காலிக பாதுகாவலர்களை பணியமர்த்துவது அவசியமாகிறது.

| வ. எண் | விவரம் | பாதுகாவலர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் | 376 |
| 2 | சென்னை உயர் மற்றும் /மேல்நிலைப்பள்ளிகள் | 173 |
| மொத்தம் | | 549 |

மேற்குறிப்பிட்ட தற்காலிக பாதுகாவலர்களுக்கு ஆகஸ்ட் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் அவர்களுக்கான ஊதியமாக ரூ.12,000/- என ஊதியம் நிர்ணயம் செய்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

தற்காலிக பாதுகாவலர்களுக்கு ஆகஸ்ட் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை (9 மாதங்களுக்கான) ஊதியம் வழங்கப்பட வேண்டிய விவரம்

| வ. எண். | பள்ளிகளின் விவரம் | பணியாளர்களின் எண்ணிக்கை | ஒரு மாதத்திற்கான ஊதியம் | ஆகஸ்ட் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | சென்னை தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் | 376 | 12,000 | 9 | 4,06,08,000 |
| 2 | சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் | 173 | 12,000 | 9 | 1,86,84,000 |
| | மொத்தம் | 549 | | | 5,92,92,000 |

மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி 2025-2026 ஆம் கல்வியாண்டில் 549 தற்காலிக பாதுகாவலர்களுக்கு ஆகஸ்ட் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை (9 மாதங்களுக்கு) பள்ளி மேலாண்மைக்குழுவின் மூலம் பணியமர்த்தப்பட்டு ரூ.5,92,92,000/- தொகையில் ஊதியம் வழங்குவதற்கு தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் வாயிலாக வழங்குவதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. 2025-2026ஆம் கல்வியாண்டில் சென்னைப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களின் பாதுகாப்பு, பள்ளி சார் உட்கட்டமைப்பு பொருட்களின் பாதுகாப்புத் தேவைகளை சந்தித்திட மாணவ / மாணவியர்களின் நலனுக்காக பள்ளியின் தலைமையாசிரியரே நேரடியாக 549 தற்காலிக பாதுகாவலர்களை பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் பணியமர்த்தி பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆகஸ்ட் 2025 முதல் ஏப்ரல் 2026 வரை (9 மாதங்களுக்கு) மேற்கொள்ள அனுமதியும்,
2. இப்பணியை மேற்கொள்வதற்காக பள்ளியின் தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்க அனுமதியும்,
3. இச்செலவினங்களுக்காக ரூ.5,92,92,000/ (ரூபாய் ஐந்து கோடியே தொண்ணூற்று இரண்டு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரம் மட்டும்) வழங்க அனுமதியும்,
4. இத்தொகையை தொடக்க/ நடுநிலைப் பள்ளிகளுக்கு கணக்கு குறியீட்டு எண்.80-82-06, 220-11-03-11 Security Expenses என்ற நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் பெறுவதற்கும் மற்றும் உயர்நிலை / மேல்நிலைப்

பள்ளிகளுக்கு கணக்கு குறியீடு எண்.80-82-01, 220-11-03-12 Security Expenses என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்வதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் கூட்டம் 19.09.2025 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு 26.09.2025 அன்று தீர்மான எண்.95/2025ன்படி நிலைக்குழு (கல்வி, பூங்கா (ம) விளையாட்டு திடல்)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மையான உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 503/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

******

**ம.அ.10.வ.து.ந.க.எண் ஆர்1 / 439 / 2025**

**தீர்மான எண்: 1067/2025** **பொருள் எண்.52**

**பெருநகர சென்னை மாநகராட்சி- மண்டலம்- 10 வருவாய் துறை - கோட்டம்-140, பன்னீர் செல்வம் நகர், பால்மோர் தெரு மேற்கு மாம்பலம், சென்னை-33 என்ற முகவரியில் அமைந்துள்ள பல்நோக்கு மைய கட்டிடம் புனரமைக்கப்பட்டது - சமுதாய நலக்கூடமாக மாற்றம் செய்து வாடகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வார்டு-140 பகுதி-30 பன்னீர் செல்வம் நகர், பால்மோர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை-600033ல் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் 2011 ஆம் ஆண்டில் கட்டப்பட்ட கட்டடம் பல்நோக்கு மைய கட்டிடம் ஆக பயன்படுத்தப்பட்டு வந்தது. இக்கட்டடம் சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக புனரமைக்கப்பட்டது.

இந்த பல்நோக்கு மைய கட்டிடத்தினை சமுதாய நலகூடமாக மாற்றம் செய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர மாமன்ற உறுப்பினர் கோட்டம் 140 அவர்கள் 18.02.2025 அன்று வார்டுகுழு கூட்டத்தில் கோரிக்கை அளித்ததின் அடிப்படையில், மண்டலம் 10 வார்டு குழு தீர்மானம் எண்.32, நாள். 12.05.2025 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேற்குறிப்பிட்ட கட்டடமானது, 150 பேர் அமரக்கூடிய வகையில் தரைதளம் 1776 சதுர அடி மற்றும் முதல்தளம் 1776 சதுர அடி கொண்ட கட்டடமாகும்

இக்கட்டடத்திற்கு குடியிருப்பு அல்லாத பகுதி என்ற வகையில் சதுரஅடிக்கு 7.50 (BSR RATE) அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி சொத்துவரி மதிப்பில் கீழ்க்கண்டவாறு வாடகை நிர்ணயம் செய்யலாம்

**கணக்கீட்டுத்தாள்**

| **வ.எண்.** | **தளம்** | **சதுர அடி** | **உபயோகத்தன்மை** |
|---|---|---|---|
| 1 | தரைத்தளம் | 1776 சதுர அடி | திருமண நிகழ்ச்சி செய்யும் இடம் (மணமக்கள் அறைகளுடன்) |
| 2 | முதல் தளம் | 1776 சதுர அடி | உணவருந்தும் இடம் |
| மொத்தம் | | 3552 சதுர அடி | |

கட்டடத்தின் மொத்த பரப்பளவு – 3552 சதுர அடி x 7.50 Non Residential (Bsr Rate) x 12 **= ரூ.7992/-** (Rounded off) **ரூ.8000/-** ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள்

ஒருநாள் வாடகை = ரூ.8000/- (Rounded off) (சேவைவரி தனியே)

அரைநாள் வாடகை = ரூ.4000/- (Rounded off) (சேவைவரி தனியே)

முன்வைப்புத் தொகை ரூ.5,000/- என நிர்ணயம் செய்யலாம்

வார்டு குழு தீர்மானத்தில், மண்டலம்-10, கோட்டம்-140, பன்னீர் செல்வம் நகர், பால்மோர் தெரு, மேற்கு மாம்பலம் என்ற முகவரியில் அமைந்துள்ள பல்நோக்கு மைய கட்டிடத்தினை சமுதாய நல கூடமாக மாற்றம் செய்தும், முழுநாள் வாடகை ரூ.8000/- (எட்டாயிரம் ரூபாய்), GST தனியே அரைநாள் வாடகை ரூ.4000/- (நான்காயிரம் ரூபாய்) GST தனியே மற்றும் முன்வைப்பு தொகை ரூ.5000/- நிர்ணயம் செய்து வார்டு குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது.

இதனை தொடர்ந்து, மேற்கண்ட முகவரியில் அமைந்துள்ள பல்நோக்கு கட்டடத்தை பொது மக்கள் பயன்பாட்டிற்கு

1. சமுதாய நலக் கூடமாக பயன்படுத்திடவும்
2. இதற்கு ஒரு நாள் வாடகை ரூ.8000/- ம் (GST தனியே) அரை நாள் வாடகை ரூ.4000/- ம் (GST தனியே) முன்வைப்புத் தொகை ரூ.5000/- நிர்ணயம் செய்திடலாம்.

எனவே, மண்டலம்-10 வார்டு-140 அமைந்துள்ள கட்டடத்தை சமுதாய நலகூடமாக பொது மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்கவும், ஒரு நாள் வாடகை ரூ.8000/- ம் (GST தனியே) அரை நாள் வாடகை ரூ.4000/- ம் (GST தனியே) முன்வைப்புத் தொகை ரூ.5000/- நிர்ணயம் செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.494/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ6/1730/2025**

**தீர்மான எண்: 1068/2025** **பொருள் எண்.53**

**பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - மண்டலம் -7 பகுதி- 19 கோட்டம்- 84 தந்தை பெரியார் நகரில் புதியதாக கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடம் பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கொரட்டூர் III-B (02FB038NT) நியாயவிலைக்கடைக்கு ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி.**

செயற் பொறியாளர், மண்டல அலுவலர்-7 அவர்களின் 11.07.2025 கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்- 7 பகுதி- 19 கோட்டம்- 84 உட்பட்ட கொரட்டூர் தந்தை பெரியார் நகரில் 84-வது வார்டு மாமன்ற உறுப்பினர் மூலம் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்பட்டு புதியதாக 462.8 சதுர அடி கொண்ட பல்நோக்கு கட்டிடமானது பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் கட்டப்பட்டுள்ளது என்றும்,

கொரட்டூர் ஸ்டேஷன் சாலையில் அமைந்துள்ள கொரட்டூர் III-B (02FB038NT) நியாய விலைக்கடையில் 1250 குடும்ப அட்டைதாரர்கள் ரேஷன் பொருட்கள் வாங்கி பயன்பெற்று வருகிறார்கள் என்றும், இந்நியாய விலைக் கடையை 462.8 சதுர அடியில் புதியதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு மையக் கட்டிடத்தில் இயங்குவதற்கு ஒதுக்கீடு செய்து அதற்கான வாடகை தொகையினை நிர்ணயம் செய்து தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது என்றும், மேலும், மண்டலம் -7 பகுதி- 19 கோட்டம்- 84 உட்பட்ட தந்தை பெரியார் நகரில்- 84வது மாமன்ற உறுப்பினர் மூலம் நமக்கு நாமே திட்டத்தின் கீழ்

நிதிவழங்கப்பட்டு புதியதாக கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தில் 462.8 சதுரடியை பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கொரட்டூர் ஸ்டேஷன் சாலையில் அமைந்துள்ள கொரட்டூர் III-B (02FB038NT) நியாயவிலைக்கடையை இடமாற்றம் செய்திட மேற்படி கட்டிடத்தினை புலத்தணிக்கை செய்து வரைபடத்துடன் கூடிய விரிவான அறிக்கை அனுப்புமாறு இவ்வலுவலக 19.08.2025 நாளிட்ட கடிதம் மூலம் துணை ஆட்சியர்/நி.ம.உ.து, மத்திய வட்டார அலுவலகம் அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

துணை ஆட்சியர்/நி.ம.உ.து, மத்திய வட்டார அலுவலகம் அவர்களின் 08.09.2025 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7 பகுதி-19 கோட்டம்- 84 உட்பட்ட தந்தை பெரியார் நகரில் 84வது மாமன்ற உறுப்பினர் மூலம் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் நிதி வழங்கப்பட்டு புதியதாக கட்டப்பட்ட பல்நோக்கு கட்டிடத்தில் 462.8 சதுரடியை பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின் கொரட்டூர் ஸ்டேஷன் சாலையில் அமைந்துள்ள கொரட்டூர் III-B (02FB038NT) நியாயவிலைக் கடையை இடமாற்றம் செய்திட மேற்படி கட்டிடத்தினை புலத்தணிக்கை செய்து வரைபடத்துடன் கூடிய விரிவான அறிக்கையினை கோரப்பட்டுள்ளது என்றும்,

அதனடிப்படையில் இவ்வலுவலக துணை ஆட்சியர் (நிமஉது), தனி வட்டாட்சியர் (நிமஉது), உரிமம் பெற்ற நில அளவையாளர் மற்றும் உதவி பொறியாளர்/வார்டு-84 ஆகியோர்களுடன் 28.08.2025 அன்று கூட்டுப்புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டதில்.

மேற்கண்ட புலமானது வருவாய் ஆவணங்களில் கீழ்கண்டவாறு உள்ளது.

| | |
|---|---|
| மாவட்டம் | சென்னை |
| வட்டம் | அம்பத்தூர் |
| நகரம் | அம்பத்தூர் |
| பிளாக் எண் | 65 |
| நகர புல எண் | 2 |
| வகைபாடு | ரயத்துவாரி மனை |
| பரப்பளவு | 2321 சதுர மீட்டர் |

| | |
|---|---|
| அடங்கல் | இன்டஸ்டிரியல் எஸ்டேட் |
| பயன்பாடு | காலி |

நான்கு பக்க எல்லைகள்.

| | |
|---|---|
| வடக்கு | எம்.ஜி.ஆர் தெரு |
| தெற்கு | பிளாக் எண்.65, T.S.No.2pt |
| கிழக்கு | பிளாக் எண்.65, T.S.No.2pt |
| மேற்கு | பிளாக் எண்.65, T.S.No.2pt |

மேற்காணும் புலத்தினை கள ஆய்வு செய்ததில் புலத்தில் தற்பொழுது புதியதாக கட்டப்பட்டுள்ள பல்நோக்கு கட்டிடமானது உபயோகமின்றி மூடிய நிலையில் உள்ளது. இக்கட்டிடத்தின் மொத்த பரப்பளவு 463 சதுர அடி ஆகும். மேலும் இக்கட்டிடம் கட்டப்பட்ட புலமானது வருவாய் ஆவணங்களில் இன்டஸ்டிரியல் எஸ்டேட் எனவும், தற்பொழுது தமிழ்நாடு நகர்புற மேம்பாட்டு வாரியத்தின் கட்டுபாட்டில் உள்ளதாகவும் அதனால் மாநகராட்சி சார்பில் பல்நோக்கு கட்டிடம் கட்ட வாரியத்திடமிருந்து தடையின்மை சான்று பெறப்பட்டு கட்டப்பட்டுள்ளது. மேலும், ஸ்டேஷன் சாலையில் அமைந்துள்ள கொரட்டூர் III-B (02FB038NT) நியாயவிலைக்கடையை மேற்காணும் பல்நோக்கு கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்ய மண்டல அலுவலரின் கருத்துருவின்படி மேல்நடவடிக்கை தொடரலாம் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கொரட்டூர் ஸ்டேஷன் சாலையில் அமைந்துள்ள III-B (02FB038NT) நியாயவிலைக்கடையை சென்னை மாவட்டம், அம்பத்தூர் வட்டம் மற்றும் கிராமம், பிளாக் எண்.65, நகர புல எண்.2 விஸ்தீரணம் 2321 சதுர மீட்டர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம் -7 பகுதி- 19 கோட்டம்-84 தந்தை பெரியார் நகரில், உள்ள பல்நோக்கு கட்டிடத்தில் பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை இயங்குவதற்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பரிந்துரைக்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-7, பகுதி- 19 கோட்டம்-84 தந்தை பெரியார் நகரில், உள்ள பல்நோக்கு கட்டிடத்தில் பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை இயங்குவதற்கு

463 சதுரடி கட்டிடத்திற்கு மாத வாடகை ரூ.2,778/- + GST 18% ரூ.500/- ஆக மொத்தம் ரூ.3,278/- (ரூ.2,778/-ன் தொகையை 12 மாதத்திற்கு முன்பணமாக ரூ.33,336/-) செலுத்த வேண்டும் என்றும்,

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 பிரிவு 316ன்படி மூன்றாண்டு காலத்திற்கு மட்டுமே ஒதுக்கீடு பொருந்தும் என்றும்,

கட்டிடங்களில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்றுதான் செய்ய வேண்டும் என்றும்,

மாத வாடகையினை ஒவ்வொரு மாதமும் மாதத்தின் 5ஆம் தேதிக்குள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும் என்றும்,

பின்வரும் காலங்களில் மாநகராட்சிக்கு தேவை ஏற்படின் உடனடியாக மூன்று மாதத்திற்குள் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுடன்

மேற்படி, கொரட்டூர் ஸ்டேஷன் சாலையில் அமைந்துள்ள III-B (02FB038NT) நியாயவிலைக்கடையை சென்னை மாவட்டம், அம்பத்தூர் வட்டம் மற்றும் கிராமம், பிளாக் எண்.65, நகர புல எண்.2 விஸ்தீணரம் 2321 சதுர மீட்டர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மண்டலம் -7 பகுதி- 19 கோட்டம்-84 தந்தை பெரியார் நகரில், உள்ள பல்நோக்கு கட்டிடத்தில் 463 சதுரடி கட்டிடத்தினை பூங்கா நகர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை இயங்குவதற்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 495/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது.”**

******

<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ1/2182/2025</u>

**தீர்மான எண்: 1069/2025** **பொருள் எண்.54**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - திரு. M.K. மோகன், அண்ணாநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், அவர்கள் மண்டலம் – 8, வார்டு – 102, செனாய் நகரில் உள்ள வீட்டுவசதி வாரிய குடியிருப்புக்கு சொந்தமான விளையாட்டு திடலுக்கு "பாவேந்தர் பாரதிதாசன்" என பெயரினை சூட்ட மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு அரசாணை வேண்டி கடிதம் அனுப்பப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.</u>**

திரு. *M.K.* மோகன், அண்ணாநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், மற்றும் திருமதி. *K.* ராணி ரவிச்சந்திரன், *102*-வது வார்டு, மாமன்ற உறுப்பினர், நகரமைப்பு நிலைக்குழு உறுப்பினர் ஆகியோர் ஆணையர் அலுவலகத்தில் அளித்துள்ள *18.09.2025* நாளிட்ட மனுவில் செனாய் நகரில் உள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புக்கு சொந்தமான விளையாட்டு திடலுக்கு **"பாவேந்தர் பாரதிதாசன்"** பெயரை வைக்க வேண்டும் என தொகுதியை சார்ந்தவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள் என்றும், அதன் அடிப்படையில் தங்களுடைய பரிந்துரையை ஏற்று அந்த விளையாட்டு திடலுக்கு **"பாவேந்தர் பாரதிதாசன் "** பெயரை வைத்திட வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

அரசாணை (நிலை) எண்.*98*, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.*6*) துறை, நாள்.*11.07.2022*-ல், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட) நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு சொந்தமான இடங்களில் உள்ள சாலைகள், கட்டடங்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள் போன்றவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது தொடர்பான முன்மொழிவுகளை முதன்மைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநர் / பேரூராட்சிகளின் ஆணையாளர் ஆகியோர் வழியாக அரசிற்கு அனுப்பப்பட வேண்டும் எனவும், அரசின் அனுமதி பெற்ற பின்னரே நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சொத்துக்களுக்கு பெயரிடுவது மற்றும் பெயர் மாற்றம் குறித்த தீர்மானங்கள் சம்பந்தப்பட்ட மன்றங்கள் / மாமன்றங்களில் ஒப்புதலுக்கு வைக்கப்பட வேண்டும் என அனைத்து மாநகராட்சிகள் (பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட), நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு அறிவுறுத்தி அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-08, வார்டு-102 அண்ணாநகர் தொகுதிக்குட்பட்ட செனாய் நகரில் உள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புக்கு சொந்தமான விளையாட்டுத் திடலுக்கு **“பாவேந்தர் பாரதிதாசன்”** என பெயர் சூட்ட மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு அரசாணை வேண்டி அரசு முதன்மைச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு இவ்வலுவலக 18.09.2025 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

எனவே, மண்டலம்-08, வார்டு -102 அண்ணாநகர் தொகுதிக்குட்பட்ட செனாய் நகரில் உள்ள வீட்டு வசதி வாரிய குடியிருப்புக்கு சொந்தமான விளையாட்டு திடலுக்கு **“பாவேந்தர் பாரதிதாசன்”** என பெயர் சூட்ட நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.496/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது.”**

**********

**ம.அ.3.ந.க.எண்.சு1/6031/2025**

**தீர்மான எண்: 1070/2025** **பொருள் எண்.55**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-3 (மாதவரம்) கோட்டம்-23 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் சுகாதார களப்பணியினை மேற்கொள்ள (SHG) அண்டை வீட்டு குழு மூலம் பணி புரிந்து வந்த 123 சுகாதார களப்பணியாளர்களின் (Sector Health Workers) பணிக்காலம் 26.09.2025 அன்று முடிவடைகிறது - மேலும் 29.09.2025 முதல் 28.09.2026 வரை ஓர் ஆண்டிற்கு சுகாதார களப்பணிகளை (SHG) அண்டை வீட்டு குழு மூலம் மேற்கொள்ள 11 குழு கொண்ட 123 எண்ணிக்கையிலான உறுப்பினர்களை தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்துவதற்கு மன்றத்தின் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-3 கோட்டங்கள் 23 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் ஒவ்வொரு வீட்டில் உள்ள நீர்த் தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல் நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப்புழு வளர்ச்சி ஏற்படா வண்ணம் கொசுப்புழு தடுப்பு பணி மேற்கொண்டு கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்கன் குன்யா, யானைக்கால் மற்றும் மூளைக் காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்தவும், நீர் வழித்தடங்கள், மழைநீர்க் கால்வாய்கள், பக்க கால்வாய்களில் கொசு மருந்து தெளிக்கவும், புகைப்பரப்பும் பணி மேற்கொள்ளவும், நிரந்தர பணியாளர்களின் பற்றாக்குறை காரணமாக கோட்டம்-23 முதல் 33 வரையிலான 11 கோட்டங்களுக்கு 27.09.2024 முதல் 26.09.2025 வரை சுகாதார களப்பணி (Sector Health Workers) மேற்கொள்ள 123 எண்ணிக்கையிலான (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்கள் பணி புரிய மன்றத் தீர்மான எண்.363/2024, நாள்.27.09.2024ல் தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

மண்டலம்-3ல் மொத்தம் 58,613 வீடுகள் உள்ளன. இவ்வீடுகளில் உள்ள மேல்நிலைத் தொட்டிகள், கீழ்நிலைத் தொட்டிகள், மற்றும் கிணறுகளில் தேங்கியுள்ள நீரில் கொசுப் புழு வளர்ச்சி ஏற்படாவண்ணம் சுகாதார களப்பணி மேற்கொள்ள 90 எண்ணிக்கையிலான சுகாதார களப்பணியாளர்கள் (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களும் கோட்டங்கள் 29, 30, 31 மற்றும் 32ல் 12.6 கி.மீ நீளமுள்ள நீர் வழித்தடத்தில் உள்ள குப்பைகள் மற்றும் செடிகளை அகற்றி மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள 7 (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களும் மழைநீர்க் கால்வாய் மற்றும் பக்க கால்வாய் என மொத்தம் 108.6 கி.மீ இவற்றில் மருந்து தெளிப்பு பணி மேற்கொள்ள 15 (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களும், புகை மருந்து பரப்பும் பணி மேற்கொள்ள 11 குழு கொண்ட 123 எண்ணிக்கையிலான (SHG) அண்டை வீட்டு குழு பணியாளர்கள் சுகாதார களப்பணி மேற்கொள்ள தேவைப்படுகின்றது.

| சுகாதார களப் பணியாளர்களின் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| கோட்டம் | சுகாதார கள பணியாளர் எண்ணிக்கை | பணியாளர்களின் விவரம் | | | |
| | | செக்டார்களின் எண்ணிக்கை | மருந்து தெளிக்கும் பணியாளர்களின் எண்ணிக்கை | புகை மருந்து பரப்பு பணியாளர் களின் எண்ணிக்கை | பக்க கால்வாய்களில் பணிபுரியும் பணியாளர் களின் எண்ணிக்கை |
| 23 | 12 | 10 | 1 | 1 | 0 |
| 24 | 7 | 4 | 2 | 1 | 0 |
| 25 | 11 | 8 | 2 | 1 | 0 |
| 26 | 8 | 6 | 1 | 1 | 0 |
| 27 | 9 | 7 | 1 | 1 | 0 |
| 28 | 9 | 6 | 2 | 1 | 0 |
| 29 | 15 | 10 | 2 | 1 | 2 |
| 30 | 14 | 10 | 1 | 1 | 2 |
| 31 | 10 | 6 | 1 | 1 | 2 |
| 32 | 20 | 16 | 2 | 2 | 0 |
| 33 | 8 | 6 | 1 | 1 | 0 |
| மொத்தம் | 123 | 89 | 16 | 12 | 6 |

இளநிலை பூச்சியிலாளர் மண்டலம்-3 அவர்களின், 25.08.2025 நாளிட்ட குறிப்பில், மண்டலம்-3ல் சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள ஏற்கனவே கோட்டம் வாரியாக உள்ள அதே எண்ணிக்கை அளவில் 11 குழு கொண்ட 123 எண்ணிக்கையிலான (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களைக் கொண்டு சுகாதாரப் பணிகளை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி என்பதால் அவசரம் மற்றும் அவசியம் கருதி சுகாதார களப்பணிகளை (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்கள் மூலம் மேற்கண்ட அளவில் நியமித்து சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. ஆணையர் அவர்களின், 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில், ஒரு சுகாதார களப் பணியாளருக்கு (Sector Health Workers) நாள் ஒன்றுக்கு ரூ.753/- என்ற அடிப்படையில், மண்டலம்-3ல் (SHG) அண்டை வீட்டு குழுக்கள் அமைத்து

அதன் மூலம் 365 நாட்களுக்கு குழு உறுப்பினர்களை சுகாதார கள பணியில் ஈடுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணி விவரம் | தேவைப்படும் அண்டை வீட்டு குழு (SHG) சுகாதார கள பணியாளர்களின் எண்ணிக்கை | 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் தினக்கூலி நாள் ஒன்றுக்கு | தோராயமாக செலவினம் |
|---|---|---|---|---|
| 1 | கொசுப்புழு தடுப்பு பணி, மருந்து தெளிப்புப் பணி, புகைப்பரப்பும் பணி, நீர் வழித்தடப் பணிகள் | 123 | ரூ. 753/- | ரூ.753 x 123 (பணியாளர்கள்) x 365 நாட்கள்<br>= ரூ.3,38,05,935/- |

இதனைத் தொடர்ந்து, எதிர்வரும் காலங்களில் (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களை கொண்டு கொசுப் புழு தடுப்புப் பணி, மருந்து தெளிக்கும் பணி, புகை மருந்து பரப்பும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில், மண்டலம்-3ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் 29.07.2024 நாளிட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில், நாள் ஒன்றுக்கு ரூ.753/- வீதம் 123 எண்ணிக்கையிலான (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களுக்கு ஆகும் தோராய செலவு ரூ.753 x 123 (பணியாளர்கள்) x 365 (நாட்கள்) என ஓர் ஆண்டிற்கு ரூ.3,38,05,935/- (ரூபாய் மூன்று கோடியே முப்பத்தெட்டு இலட்சத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தைந்து மட்டும்) என்று கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட 123 எண்ணிக்கையிலான (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களை சுகாதார கள பணியில் ஈடுபடுத்த அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. அண்டை வீட்டு குழு (SHG) பணியாளர்களின் பணிக்காலம் 26.09.2025 அன்றுடன் முடிவடைய உள்ளதால் 29.09.2025 முதல் 28.09.2026 வரை ஓராண்டு காலத்திற்கு (SHG) 123 எண்ணிக்கையிலான அண்டை வீட்டு குழு உறுப்பினர்களைக் கொண்டு சுகாதார களப் பணியில் ஈடுபடுத்தவும்,
2. சுகாதார களப்பணி (SHG) அண்டை வீட்டு குழு உறுப்பினர்களின் ஊதியத்தை 365 நாட்களுக்கு 29.07.2024 நாளிட்ட ஆணையர் அவர்களின் சுற்றறிக்கையின் அடிப்படையில், தினக்கூலி ரூ.753/- வீதம் 123 குழு உறுப்பினர்களுக்கு 365

நாட்களுக்கு வழங்குவதற்கு ஆகும் செலவினம் (ரூ.753 X 123 X 365 =) ரூ.3,38,05,935/- (ரூபாய் மூன்று கோடியே முப்பத்தெட்டு இலட்சத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தைந்து மட்டும்) வழங்குவதற்கு நிர்வாக அனுமதியும்,

3. சுகாதார களப் பணியில் ஈடுபடும் அண்டை வீட்டு குழு (SHG) உறுப்பினரை பணிக்கு வர தவறும்பட்சத்தில் அன்னாரை பணியிலிருந்து நீக்கி மாற்று பணியாளரை ஆணையர் அவரகளின் அனுமதியுடன் சேர்க்கவும்,

4. சுகாதார கள பணியில் ஈடுபடும் அண்டை வீட்டு குழு உறுப்பினர்கள்(SHG) பணி செய்த நாட்களுக்கு மண்டல நல அலுவலர் அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் கணக்கிட்டு குழு உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்கவும்,

5. இப்பணிக்கான செலவின தொகையை (கணக்கு தலைப்பு எண்குறியீட்டு எண்.30-32-02 (ANTI MOSQUITO OPERATION), கணக்கு குறியீட்டு எண்.210-10-06-02 (PAYMENT TO CASUAL STAFF-HEALTH WORKS) என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 5 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.161/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 497/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.4.ந.க.எண்.பி3 / 3672 / 2025**

**தீர்மான எண்: 1071/2025** **பொருள் எண்.56**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் – 4, வார்டு – 38ல் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் பின்புறம் உள்ள லூப் ப்ளான்ட் ரோடு, IOC நிறுவனத்தின் எதிரில் மற்றும் CISF குடியிருப்பு அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலி நிலத்தில் Block No. 65, 66 , Survey No.3860ல் இந்து, கிறிஸ்துவர் மற்றும் இஸ்லாமியர்களுக்கான மயான பூமி அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாகஅனுமதி.**

மண்டல 4வது மண்டல வார்டு குழு தலைவர் அவர்கள் மண்டலம் - 4, வார்டு - 38ல் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் பின்புறம் உள்ள லூப் ப்ளான்ட் ரோடு , IOC நிறுவனத்தின் எதிரில் மற்றும் CISF குடியிருப்பு அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் வார்டு-38, 41, 47ல் வசிக்கின்ற பொது மக்களின் நலன் கருதி இந்து, கிறிஸ்துவர் மற்றும் இஸ்லாமியர்களுக்கான மயான பூமி அமைத்து தருமாறு, மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு துணை முதல்வர், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களுக்கு கடிதம் அளித்துள்ளார்கள்.

அதன் அடிப்படையில் மண்டலம் - 4, வார்டு - 38ல் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் பின்புறம் உள்ள லூப் ப்ளான்ட் ரோடு, IOC நிறுவனத்தின் எதிரில் மற்றும் CISF குடியிருப்பு அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலி நிலத்தில் Block No. 65, 66 , Survey No.3860ல் வார்டு-38, 41, 47ல் வசிக்கின்ற பொது மக்களின் நலன் கருதி இந்து, கிறிஸ்துவர் மற்றும் இஸ்லாமியர்களுக்கான மயான பூமி அமைக்கும் பணிக்காக 2024 - 2025 ஆம் ஆண்டிற்கான அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் கீழ்கண்டவாறு மதிப்பீடுதயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | வார்டு எண். | பணியின்விவரம் | மதிப்பீடுதொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 38 | மண்டலம் - 4 - வார்டு - 38ல் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் பின்புறம் உள்ள லூப் ப்ளான்ட் ரோடு , IOC நிறுவனத்தின் எதிரில் மற்றும் CISF குடியிருப்பு அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலி நிலத்தில் Block No. 65, | 9,80,00,000/- |

| | | | |
|---|---|---|---|
| | | 66, Survey No.3860ல் இந்து, கிறிஸ்துவர் மற்றும் இஸ்லாமியர்களுக்கான மயான பூமி அமைக்கும் பணி | |

| | | |
|---|---|---|
| 1 | பரிந்துரை செய்தவரின் விவரம் | ஆணையாளர் |
| 2 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம் - 4 |
| 3 | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி செயல்முறை ஆணை எண். மற்றும்தேதி | தலைமை பொறியாளர் (கட்டடம்) T.S.No : |
| 4 | மதிப்பீடு எந்தவருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2024-2025 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டது. |
| 5 | **மதிப்பீட்டின் தொகை** | ரூ. 9,80,00,000.00 |
| | அ) கட்டுமான பணி செலவினம் | ரூ. 7,65,83,576.40 |
| | ஆ) மற்றைய எதிர்பாரா செலவு 2.5% | ரூ. 4,99,708.32 |
| | இ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் பொதுநலவாரிய நிதி 1% | ரூ. 7,65,835.76 |
| | ஈ) ஜி.எஸ்.டி.வரி 18% | ரூ. 1,37,85,043.75 |
| | உ) தரக்கட்டுபாடுசெலவு 1% | ரூ. 7,65,835.76 |
| | ஊ) எரியூட்டு உபகரணங்கள் | ரூ. 50,00,000.00 |
| | எ) மின்சாரம் மற்றும் பிற இனங்கள் | ரூ. 6,00,000.00 |
| | **மொத்தம்** | **ரூ.** 9,80,00,000.00 |
| 6 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா? | ஆம் |

| | | |
|---|---|---|
| 7 | நிதியின் மூலத்தன்மை | மூலதனநிதி |
| 8 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும்நிதி | ரூ. 9,80,00,000.00 |

எனவே,

1. மண்டலம் – 4, வார்டு – 38ல் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் பின்புறம் உள்ள லூப் ப்ளான்ட் ரோடு , IOC நிறுவனத்தின் எதிரில் மற்றும் CISF குடியிருப்பு அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலி நிலத்தில் Block No. 65, 66, Survey No.3860ல் இந்து, கிறிஸ்துவர் மற்றும் இஸ்லாமியர்களுக்கான மயான பூமி அமைக்கும் பணிக்காக ரூ.9,80,00,000/-க்கு நிர்வாக அனுமதியும்,
2. இப்பணி மேற்கொள்ள மூலதன நிதியில் நிதி பெற்று கட்டிடத்துறை மூலமாக ஒப்பம் கோரி மண்டலம்-4ன் மூலமாக பணியினை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.575/2025, நாள். 24.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

“26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 504/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம். மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. உ.கணேசன் (எ) நேதாஜி உ.கணேசன் அவர்கள்.

**திரு. உ.கணேசன் (எ) நேதாஜி உ.கணேசன்**

மண்டலம் – 4, வார்டு – 38 கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தின் பின்புறம் உள்ள லூப் ப்ளான்ட் ரோடு , IOC நிறுவனத்தின் எதிரில் மற்றும் CISF குடியிருப்பு அருகில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான காலி நிலத்தில் Block No. 65, 66 , Survey No.3860ல் இந்து, கிறிஸ்துவர் மற்றும் இஸ்லாமியர்கள் ஆகியோருக்கான மயான பூமி அமைக்கும் பணிக்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதற்கான நிர்வாக அனுமதி வேண்டி இப்பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. என்னுடைய கோரிக்கையை ஏற்று, இப்பொருளை மாமன்றத்தில் சமர்ப்பித்ததற்காக மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் ஆகியோர்களுக்கு, வார்டு மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியினை இத்தருணத்தில் தெரிவித்து கொள்கிறேன். மேலும், சுடுகாடு மற்றும் இடுகாடு பணிகளை விரைவில் தொடங்கி நிறைவேற்றி தருமாறு அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

**மாண்புமிகு மேயர்**

தீர்மானத்தை ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**ம.அ.5.ந.க.எண்.இ1/RPM/138/2025**

**தீர்மான எண்: 1072/2025** **பொருள் எண்.57**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5, வார்டு-56 & 57 Supplying and Placing of CNC MS Sheet to Transformer (Phase 2) at Various Street பணிக்காக - 2025-26ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பணியின் பெயர்:

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 1 | 56 & 57 | மண்டலம் - 5, பகுதி-13, வார்டு-56 & 57 Supplying and Placing of CNC MS Sheet to Transformer (Phase 2) at Various Street பணி. | ரூ. 1,66,59,000.00 |

| | | |
|---|---|---|
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | மண்டல அலுவலர் |
| 3. | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம்-5 |
| 4. | சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி | மண்டல அலுவலர்-5 |
| 5. | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி | மேற்பார்வை பொறியாளர் வடக்கு) T.S.No. dtd. |
| 6. | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப் பட்டியலின்படி தயாரிக்கப்பட்டது | 2025- 2026 |
| 7. | அ) பணியின் செலவினம் | ரூ. 1,37,11,509.12 |
| | ஆ)மேலானமேற்பார்வை செலவினம் 10.0% | ரூ. ----------- |
| | இ) CMWSSB | ரூ. ------------ |

| | | |
|---|---|---|
| | ஈ) தரக் கட்டுப்பாடு செலவு 1.0% | ரூ. ------------ |
| | உ) மற்ற எதிர்பாரா செலவு 2.50% | ரூ 3,42,304.15 |
| | ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதி 1% | ரூ. 1,11,947.12 |
| | எ) ஜி.எஸ்.டி வரி 18% | ரூ 24,68,071.64 |
| | மொத்தம் | ரூ. 1,66,59,000.00 |
| 8. | மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலை பகுதியா அதன் அளவு குறிப்பிடவும் | பொருந்தாது |
| 9. | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | பொருந்தாது |
| 10. | வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா? | ------- |
| 11. | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் | மண்டல வார்டு குழு தீர்மானம் பின்னர் பெறப்படும் |
| 12. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | பொருந்தாது |
| 13. | நிதியின் மூலத்தன்மை | வருவாய் நிதி |
| | பிரிவு கணக்கு எண் | 202107/………………… |
| | அ) 2025-2026 ஆம் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீடு | ரூ.----- |
| | ஆ)மதிப்பீடுகளுக்குஇதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | ரூ.----- |
| | இ) மீதமுள்ள நிதி (அ-ஆ) | ரூ.----- |
| | ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ1,66,59,000.00 |

எனவே, மண்டலம் - 5, பகுதி-13, வார்டு - 56 & 57 Supplying and Placing of CNC MS Sheet to Transformer (Phase 2) at Various Street பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,66,59,000.00க்கு மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

**********

**ம.அ.5.ந.க.எண்.இ1/ Div-60/ 37/2025**

**தீர்மான எண்: 1073/2025** **பொருள் எண்.58**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5, வார்டு-55 & 60 Supplying and Placing of CNC MS Sheet to Transformer at Various Street in Dn - 55 & 60, Unit - 13, Zone – 5 அமைக்கும் பணிக்கு 2025-26ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பணியின் பெயர் : Supplying and Placing of CNC MS Sheet to Transformer at Various Street in Dn - 55 & 60, Unit - 13, Zone – 5 அமைக்கும் பணி.

| வ. எண் | வார்டு எண் | மதிப்பீடு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 55 | 15119. | Supplying and Placing of CNC MS Sheet to Transformer at Various Street in Dn - 55 & 60, Unit - 13, Zone – 5 அமைக்கும் பணி | ரூ. 168.61/- |
| | | | மொத்தம் | ரூ. 168.61/- |

| | | |
|---|---|---|
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | மண்டல அலுவலர் |
| 3. | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம்-5 |
| 4. | சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி | மண்டல அலுவலர்-5 |
| 5. | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி | மேற்பார்வை பொறியாளர் (வடக்கு) |
| 6. | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்டது | 2025-2026 ஆம் ஆண்டு |
| 7. | அ) பணியின் செலவினம் | ரூ. 1,38,77,677.41 |
| | ஆ) மேலான மேற்பார்வை செலவினம் 10.0% | – |
| | இ) சிறு மேற்பார்வை செலவு 2.50% | – |
| | ஈ) தரக்கட்டுப்பாடு செலவு 1.0% | ரூ. 1,06,158.33 |
| | உ) மற்ற எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 3,46,563.89 |
| | ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரிய நிதி 1% | ரூ. 1,38,776.77 |
| | எ) ஜி.எஸ்.டி.வரி 18% | ரூ. 24,97,981.93 |
| | மொத்தம் | ரூ. 1,68,61,000.00 |
| 8. | மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலை பகுதியா அதன் அளவு குறிப்பிடவும் | பொருந்தாது |
| 9. | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | பொருந்தாது |
| 10. | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 11. | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் | வார்டு குழு தீர்மானம் பின்னர் பெறப்படும் |

| | | |
|---|---|---|
| 12. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | பொருந்தாது |
| 13. | நிதியின் மூலத்தன்மை | மூலதன நிதி |
| | பிரிவு கணக்கு எண் | |
| | அ)2024-2025 ஆம் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீடு | ரூ. |
| | ஆ)மதிப்பீடுகளுக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | ரூ. |
| | இ) மீதமுள்ள நிதி (அ-ஆ) | ரூ. |
| | ஈ)இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 1,68,61,000.00 |

எனவே, மண்டலம்-5, பகுதி-13, வார்டு – 55 & 60 ல் Supplying and Placing of CNC MS Sheet to Transformer at Various Street பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.1,68,61,000.00/-க்கு மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**ம.அ.5.ந.க.எண்.இ1/ RPM/ 139/2025**

**தீர்மான எண்: 1074/2025** **பொருள் எண்.59**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம் - 5, வார்டு-54 & 59 Supplying and Placing of CNC MS Sheet to Transformer (Phase 2) at Various Street பணிக்காக 2025-26ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பணியின் பெயர்:

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 1 | 54 & 59 | மண்டலம் - 5, பகுதி-13, வார்டு-54 & 59 Supplying and Placing of CNC MS Sheet to Transformer (Phase 2) at Various Street பணி. | ரூ. 1,44,60,000.00 |

| | | |
|---|---|---|
| 2. | பரிந்துரை செய்தவரின் விவரம் | மண்டல அலுவலர் |
| 3. | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | மண்டலம்-5 |
| 4. | சம்மந்தப்பட்ட துறையால் அனுமதி | மண்டல அலுவலர்-5 |
| 5. | தொழில்நுட்ப ஒப்புதல் அளித்த அதிகாரி | மேற்பார்வை பொறியாளர் வடக்கு) T.S.No. dtd. |
| 6. | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப் பட்டியலின்படி தயாரிக்கப்பட்டது | 2025- 2026 ஆம் ஆண்டு |
| 7. | அ) பணியின் செலவினம் | ரூ. 1,19,06,216.2 |
| | ஆ)மேலானமேற்பார்வை செலவினம் 10.0% | ரூ. ----------- |
| | இ) CMWSSB | ரூ. ----------- |
| | ஈ) தரக் கட்டுப்பாடு செலவு 1.0% | ரூ. ----------- |

| | | |
|---|---|---|
| | உ) மற்ற எதிர்பாரா செலவு 2.50% | ரூ 2,91,602.72 |
| | ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய நிதி 1% | ரூ. 1,19,062.16 |
| | எ) ஜி.எஸ்.டி வரி 18% | ரூ 21,43,118.92 |
| | மொத்தம் | ரூ. 1,44,60,000.00 |
| 8. | மழைநீர் வடிகால்வாய் கட்டுவது நடைபாதை பகுதியா அல்லது சாலை பகுதியா அதன் அளவு குறிப்பிடவும் | பொருந்தாது |
| 9. | ஒரு சதுர மீட்டருக்கு ஆகும் செலவு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | பொருந்தாது |
| 10. | வரைப்படம் வைக்கப்பட்டுள்ளதா? | ------- |
| 11. | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்த குழுவின் பெயர் | மண்டல வார்டு குழு தீர்மானம் பின்னர் பெறப்படும் |
| 12. | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | பொருந்தாது |
| 13. | நிதியின் மூலத்தன்மை | வருவாய் நிதி |
| | பிரிவு கணக்கு எண் | 202107/..................... |
| | அ) 2025-2026 ஆம் ஆண்டு வரவு செலவு ஒதுக்கீடு | ரூ.----- |
| | ஆ)மதிப்பீடுகளுக்குஇதுவரை ஒதுக்கப்பட்ட நிதி | ரூ.----- |
| | இ) மீதமுள்ள நிதி (அ-ஆ) | ரூ.----- |
| | ஈ) இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ1,44,60,000.00 |

எனவே, மண்டலம் - 5, பகுதி-13, வார்டு-54 & 59 Supplying and Placing of CNC MS Sheet to Transformer (Phase 2) at Various Street பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத்

தொகை ரூ.1,44,60,000.00க்கு மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**இ.பொ.து.ம.வா.ப.ந.க.எண். சி1/161/2025**

**தீர்மான எண்: 1075/2025** **பொருள் எண்.60**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய வாகன பணிமனை - இயந்திர பொறியியல் துறை - மண்டலம்-6 லாரி நிலையத்தில் உள்ள வாகனங்கள் இயக்குவதற்கும் 55 எண்ணிக்கையிலான தனியார் ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் 180 நாட்களுக்கு பணியமர்த்த ஆணையர் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டது - மண்டலம்- 6 ன் துப்புரவு பணிகள் தனியார்மயமாக்கப்பட்ட நிலையில் 23 எண்ணிக்கையிலான ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் 360 நாட்களுக்கு துப்புரவு பணிகள் இல்லாத வாகனங்கள் இயக்குவதற்கு தனியார் ஓட்டுநர்களை பணியமர்த்த திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

பெருநகர சென்னை மாநகராட்சி. இயந்திர பொறியியல் துறை, மத்திய வட்டாரத்திற்குட்பட்ட மண்டலம்-6 முதல் 10 வரை உள்ள லாரி நிலையங்களில் துப்புரவு, கட்டிடகழிவுகள், சுகாதாரத்துறை, பூங்கா துறை மற்றும் இன்னபிற பணிகளை மேற்கொள்ள மொத்தம் 256 கனரக, இலகுரக வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை பராமரிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் வாகனங்கள் மூன்று வேளைகளிலும் இயக்க துறை சார்ந்த ஓட்டுநர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதையொட்டி தேவைக்கேற்ப அந்தந்த மண்டல லாரி நிலையங்களுக்கு ஒப்பந்ததாரர் மூலம் ஓட்டுநர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி மண்டலம்-6 லாரி நிலையத்தில் துப்புரவு, கட்டிடகழிவுகள், சுகாதாரத்துறை மற்றும்

இன்னபிற பணிகளை மேற்கொள்ள ஓட்டுநர் பற்றாக்குறைகளை களைய 47 (34 + 13) எண்ணிக்கையிலான தனியார் ஓட்டுநர்கள் பணியமர்த்தப்பட்டனர். இந்த ஆணை வரும் 15.09.2025 மற்றும் 29.10.2025 அன்றுடன் முடிவு பெறுகிறது.

மண்டலம் 6 லாரி நிலையத்தில் ஏற்படும் ஓட்டுநர்களின் பற்றாக்குறையை பூர்த்தி செய்ய 55 எண்ணிக்கையிலான ஓட்டுநர்களை 180 நாட்களுக்கு பணியமர்த்த ஆணையர் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. இந்நிலையில் மண்டலம் 6 தனியார் மயமாக்கப்பட்டதனை தொடர்ந்து தேவைப்படும் ஓட்டுநர்களின் எண்ணிக்கை 55 – ல் இருந்து 23 ஆக குறைக்கப்பட்டு துப்புரவு பணிகள் அல்லாத வாகனங்களை இயக்குவதற்கு 360 நாட்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் தனியார் ஓட்டுநர்கள் பணியமர்த்தப்பட வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இதன் அடிப்படையில் காலை, மதியம் மற்றும் இரவு வேளைகளில் ஏற்கனவே அனுப்பப்பட்டுக் கொண்டிருந்த வாகனங்களின் அடிப்படையிலும், அயல் பணிகள் செய்வதற்காகவும் சேர்த்து மொத்தம் 60 ஓட்டுநர்கள் ஒரு நாளைக்கு தேவைப்படுகின்றனர். இந்நிலையில் தற்போது மண்டலம் 6 லாரி நிலையத்தில் 54 எண்ணிக்கையிலான நிரந்தர ஓட்டுநர்கள் உள்ளனர். இதில் நியமிக்கப்பட்ட வாகனத்தை இயக்குவதற்கான 51 நிரந்தர ஓட்டுநர்களும், இந்த மாத இறுதியில் (செப்டம்பர் 2025) 3 எண்ணிக்கையிலான ஓட்டுநர்கள் பணி ஓய்வு பெறுகின்றனர். மேலும், நிரந்தர ஓட்டுநர்கள் அனுமதிக்கப்பட்ட வார விடுப்பு, தற்செயல் விடுப்பு, ஈட்டிய விடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பில் செல்லும்போது அவ்விடத்தில் தற்காலிக மாற்று ஓட்டுநர்களை பணிக்கு அமர்த்த வேண்டி உள்ளது. எனவே இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு மண்டலம்-6 லாரி நிலையத்திற்கு தேவையான ஓட்டுநர்களை கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| GREATER CHENNAI CORPORATION | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| MECHANICAL ENGINEERING DEPARTMENT (CENTRAL REGION) | | | | | | | | |
| ZONE - 6 LORRY STATION NON CONSERVANCY VEHICLE MARCHOUT & DRIVERS DETAILS AFTER PRIVITIZATION | | | | | | | | |
| SL. NO | TYPE OF VEHICLES | AM SHIFT | PM SHIFT | NIGHT SHIFT | TOTAL | GCC | Hiring | Total |
| 1 | HMV Tipper (Garden garbage/ Mixed waste/Hycanith) | 8 | 4 | 4 | 16 | 16 | 0 | 16 |
| 2 | LMV Tipper (Cocunt waste/wooden waste) | 1 | 0 | 0 | 1 | 1 | 0 | 1 |
| 3 | Cattle Catcher | 1 | 1 | 0 | 2 | 2 | 0 | 2 |
| 4 | Dog Van (Street Catching & ABC | 2 | 2 | 0 | 4 | 4 | 0 | 4 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Center) | | | | | | | |
| 5 | Amma Unavagam (Zone 6 to 10) | 1 | 1 | 0 | 2 | 2 | 0 | 2 |
| 6 | CNG LMV Mini Truck (Veg Source Seg) | 1 | 0 | 0 | 1 | 1 | 0 | 1 |
| 7 | HMV Water Tanker (Road side parks/ Center median) | 2 | 1 | 0 | 3 | 3 | 0 | 3 |
| 8 | Hmv Water Tanker (CNG) Bus shelter & Footpath cleaning | 1 | 0 | 1 | 2 | 2 | 0 | 2 |
| 9 | Inspection Vehicle Jeep (AC, EE 1, EE 2, AHO, ZHO) | 5 | 5 | 2 | 12 | 6 | 6 | 12 |
| 10 | Ambulance | 2 | 2 | 0 | 4 | 1 | 3 | 4 |
| 11 | Other Departmental & Zonal Jeep (Inspection Jeep) | 7 | 0 | 0 | 7 | 7 | 0 | 7 |
| | SUB TOTAL | 31 | 16 | 7 | 54 | 45 | 9 | 54 |
| 12 | Brake Down | 1 | 1 | 1 | 3 | 3 | 0 | 3 |
| 13 | Parking Duty | 0 | 1 | 1 | 2 | 2 | 0 | 2 |
| 14 | Purchase for Stores | 0 | 1 | 0 | 1 | 1 | 0 | 1 |
| | OVER ALL TOTAL | 32 | 19 | 9 | 60 | 51 | 9 | 60 |

| ZONE - 6 LORRY STATION - DRIVER REQUIREMENT DETAILS | | |
|---|---|---|
| A | Permanent Driver Posting of Vehicles | 51 |
| B | Balance ( Hiring drivers ) | 9 |
| C | Total 3 shifts requirement drivers | 60 |
| | | |
| D | Total Permanent Drivers | 54 |
| E | Permanent drivers weekly Off (C/7) (54/7) | 8 |
| F | Permanent drivers Eligible Leave (54X0.10) | 6 |
| G | Total Requirement Drivers for 3 shifts (D+E+F) | 68 |

| | | |
|---|---|---|
| H | No of Permanent Driver Available | 54 |
| I | Requirement of Hiring Driver (G - H) | 14 |
| J | Total Hiring requirement drivers (B + I ) | 23 |

மேற்கண்ட கணக்கீட்டின்படி, மண்டலம்-6 லாரி நிலையத்தில் அனைத்து பணிகளையும் தொய்வில்லாமல் மேற்கொள்ள கூடுதலாக 23 ஓட்டுநர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் தற்போது மேற்கண்ட ஓட்டுநர்கள் தேவையை பூர்த்தி செய்ய நிரந்த ஓட்டுநர்கள் இல்லாத நிலையில் தற்காலிக ஓட்டுநர்களை தமிழக அரசின் பொதுப்பணி துறையின் 2024-25 விலைவிவர பட்டியலின்படி குறைந்தபட்ச ஊதியத்தின் அடிப்படையில் மின்னனு ஒப்பம் கோரி பணி அமர்த்தலாம் என கருதப்படுகின்றது. இந்நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணி அமர்த்தப்படவுள்ள தனியார் ஓட்டுநர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதியம் கீழ்வருமாறு:

| Rate of Schedule of PWD for the year 2024-25 | | | Administrative Charges (5%) (Rs.) | Total (Rs.) | GST 18% (Rs.) | Rate per day per driver |
|---|---|---|---|---|---|---|
| Basic rate per day per driver (Rs.) | Additional wages for Chennai City (10%) (Rs.) | Total (Rs.) | | | | Grand Total (Rs.) |
| A | B | C | D | E | F | G |
| A | (A x 10%) | (A+B) | (C x 5%) | (C+D) | (E x 18%) | (E+F) |
| 902 | 90.2 | 992.2 | 49.61 | 1,041.81 | 187.53 | 1,229.34 |

Rate of Schedule of PWD for the year 2024-25

Rate per day per driver : Rs.1,229.34/-

Rate per day for 23 drivers (1,229.34x 23) : Rs.28,274.82/-

Rate for 23 drivers for 360 days (1,229.34x 23 x 360) : Rs.1,01,78,935.2/- or

. Rs.1,01,79,000/-

எனவே, 23 எண்ணிகையிலான ஓட்டுநர்களுக்கு நாளொன்றுக்கு ஆகும் செலவீனம் ரூ.28,274.82/- ஆகும். அதன்படி 360 நாட்களுக்கு 23 ஓட்டுநர்களுக்கு ஆகும் தோராய மொத்த செலவீனம் ரூ.1,01,79,000/- (ரூபாய் ஒரு கோடியே ஒரு இலட்சத்து எழுபத்து ஒன்பதாயிரம் மட்டும்) (சரக்கு மற்றும்

சேவை வரி 18% உட்பட) இச்செலவீனம் 2025 - 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40-41-09 – கணக்கு எண். 230-800-400 "Hire Charges" என்னும் தலைப்பின் கீழ் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே,

1. 55 தற்காலிக ஓட்டுநர்களை 180 நாட்களுக்கு பணியமர்த்த ஆணையர் மற்றும் மாண்புமிகு மேயர் அவர்களிடம் பெற்ற நிர்வாக அனுமதிக்கு பதிலாக தற்போது துப்புரவு பணிகள் தனியார் மயமாக்களால், குறைக்கப்பட்ட 23 எண்ணிக்கையிலான ஓட்டுநர்களை 360 நாட்களுக்கு துப்புரவு பணிகள் இல்லாத வாகனங்களை இயக்குவதற்கு மின்னணு ஒப்பம் கோர திருத்தப்பட்ட அனுமதி வேண்டியும்,
2. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, மத்திய வட்டாரம், மண்டலம்-6 லாரி நிலையத்தில் இயக்கப்படும் கனரக / இலகுரக காம்பாக்டர் வாகனங்கள் மற்றும் இன்ன பிற வாகனங்களையும் 360 நாட்களுக்கு இயக்குதல் பணிகளை காலை / மதியம் / இரவு வேளைகளில் மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் 23 எண்ணிகையிலான தற்காலிக ஓட்டுநர்களை நாளொன்றுக்கு ஒரு ஓட்டுநருக்கு ரூ.1,229.34/- (சரக்கு மற்றும் சேவை வரி 18%உட்பட) வீதம் 23 ஓட்டுநர்களுக்கு 360 நாட்களுக்கு (Rs. 1229.34/- x 23 Drivers x 360 Days) ரூ.1,01,79,000/- (ரூபாய் ஒரு கோடியே ஒரு இலட்சத்து எழுபத்து ஒன்பதாயிரம் மட்டும்) (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) செலவீனத்தில் மின்னணு ஒப்பம் கோரி தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர் மூலம் பணி மேற்கொள்ள அனுமதியும்,
3. ரூ.1,01,79,000/- (ரூபாய் ஒரு கோடியே ஒரு இலட்சத்து எழுபத்து ஒன்பதாயிரம் மட்டும்) (சரக்கு மற்றும் சேவை வரி 18% உட்பட) இச்செலவீனத்தினை மத்திய மண்டலத்தின் (Central Region) கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மத்திய வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் .40-41-09 மற்றும் கணக்கு தலைப்பு எண் 230-800-400 "Hire Charges" என்னும் தலைப்பின்கீழ் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

**<u>இ.பொது.ம.வா.ப.ந.க.எண்.சி1/248/2025</u>**

**தீர்மான எண்: 1076/2025** **பொருள் எண்.61**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மத்திய சென்னை வாகன பணிமனை - மண்டலம்- 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு 2025-26 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய - இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் எண்.*180/78*, நாள்.*26.02.78* ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரிப்பொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து *1978-79* ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய கால கட்டத்தில், தென்சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் *(1* முதல் *10* வரை*)* அமைக்கப்பட்ட பின்னர், இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள், மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன. சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பின் *2013* முதல் தென் சென்னை, வடசென்னை மற்றும் மத்திய சென்னை என பிரிக்கப்பட்டன. பெருநகர சென்னை மாநகராட்சியாக உருவெடுத்தப்பிறகு, மத்திய வட்டாரமாக மண்டலம்-*6* முதல் *10* வரை பிரித்து அளிக்கப்பட்டது.

இயந்திர பொறியியல் துறை, மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கி வரும் மண்டலம்-*6* முதல் *10* வரை உள்ள லாரி நிலையத்தில் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், முன்பளு தூக்கிகள், மின்துறை வாகனங்கள், பொகிலைன்கள், புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டர்கள் போன்ற வாகனங்கள் *256* எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேலும் மின்வெட்டின் காரணமாக

மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜென்ரேட்டர் ஆகியவற்றிற்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இறைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

அதன்படி, மொத்த கொள்முதல் விலை சந்தை விலைக்கு சமமாக குறையும் வரை மத்திய ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலையில் எரிபொருள் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் *16.05.2024* முதல் மொத்த கொள்முதல் விலை சந்தை விலையை காட்டிலும் குறைந்துள்ளதால், அன்றிலிருந்து மொத்த கொள்முதல் விலையில் நேரடியாக *M/s.* இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் இடம் கொள்முதல் செய்யப்படுகிறது.

இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து அல்லது மத்திய ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து தேவையான டீசல் *1060* கிலோ லிட்டர் கொள்முதல் செய்ய ரூ.*9,79,07,960/-* (ரூபாய் ஒன்பது கோடியே எழுபத்து ஒன்பது இலட்சத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) ஆணை பெறப்பட்டது.

தற்போது வரை மண்டலம் *8* லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு வாங்கிய டீசல் பெறப்பட்ட விவரங்கள் பின்வருமாறு

| *2025-26* | தொகை (ரூ) | கிலோ லிட்டர் |
|---|---|---|
| நிர்வாக அனுமதி ஆணை | *9,79,07,960.00* | *1060* |
| முன்கூட்டியே வரையப்பட்டது | *4,98,75,281.00* | *540* |
| இருப்பு | *4,80,32,679.00* | *520* |

மேலே குறிப்பிட்ட அட்டவணையின்படி, இருப்பு மொத்தம் டீசல் *520KL* கொள்முதல் செய்ய ரூ.*4,80,32,679/-* மட்டுமே உள்ளது. இவை வரவிருக்கும் நாட்களுக்கு பயன்படுத்தப்பட உள்ளது. இவை மீதம் இருக்கும் *7* மாதங்களுக்கு போதுமானதாக இல்லாத நிலை உள்ளது. எனவே, மண்டலம் *8* லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு *2025-26* ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய ஆணை வேண்டப்படுகின்றது.

| | |
|---|---|
| ஒரு மாதத்திற்கு மண்டலம் – 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்கிற்கு சராசரியாக தேவைப்படும் அளவு | 150 kl |
| 7 மாதத்திற்கு தேவைப்படும் அளவு (A) | 1050 kl |
| தற்பொழுதுள்ள தொகை | 4,80,32,679 |
| மீதம் இருக்கும் தொகையில் (B) டீசல் அளவு | 520 kl |
| கூடுதலாக தேவைப்படும் டீசல் அளவு (A - B) | 530 kl |

இயந்திர பொறியியல் துறை, மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கி வரும், மண்டலம்-7, 8 லாரி நிலைய வாகனங்கள், மற்றும் மண்டலம் – 7 முதல் 10 வரைக்கு உட்பட்ட புகைபரப்பும், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யேக வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்பட்டு வருகின்றது.

| நிறுவனங்களின் பெயர் | சேமிப்பு தொட்டியுள்ள இடம் | டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம் |
|---|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் | மண்டலம் 8 லாரி நிலையம், எண்.5C, ப்ரூவரி சாலை, செனாய் நகர், சென்னை – 600 030 | மண்டலம் 8 லாரி நிலைய வாகனங்கள், மண்டலம்-7 முதல் 10 வரைக்கு உட்பட்ட புகைபரப்பும் வாகனம், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், மற்றும் சிறப்பு பிரத்யேக வாகனங்களுக்கும் |

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 8 லாரி நிலையத்தில் இயங்கும் எரிபொருள் கிடங்கை பராமரிக்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், டீசல் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவனம் அளித்த விலைப்புள்ளி கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

| நிறுவனம் | பொருள் விவரம் | 1 KL க்கான தொகை (அனைத்து வரிகள் உட்பட) | மொத்த தேவை கிலோ லிட்டர் (2025-2026) ஆம் ஆண்டிற்கு |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் | டீசல் | ரூ.92,363<br>(நாள் :23.08.2025) | 530 |
| மொத்தம் தொகை (அனைத்து வரிகள் உட்பட) | 530 கி.லி. X ரூ.92,363 = ரூ.4,89,52,390/- (ரூபாய் நான்கு கோடியே எண்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து முந்நூற்று தொண்ணூறு மட்டும்) | | |

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனை தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை வழங்கி வருவதால், இந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும், மண்டலம் 8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2025-2026 ஆம் ஆண்டிற்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய தோராயமாக, 530 கிலோ லிட்டர் டீசலை பெறுவதற்கு மொத்த தொகையான ரூ.4,89,52,390/- (ரூபாய் நான்கு கோடியே எண்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து முந்நூற்று தொண்ணூறு மட்டும்) தேவைப்படுகின்றது. இச்செலவினம் 2025-26 ஆம் ஆண்டிற்கு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை 40-41-09 - கணக்கு எண்.: 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் என்பதால், இவை பிணை வைப்புத்தொகை மற்றும் பாதுகாப்பு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் எரி பொருள் கிடங்கு மூலம் தேவையான எரிபொருள், மேற்கண்ட மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து அவர்கள் அளித்த விலைப்புள்ளிகளின் படி, அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.180/78 நாள்.26.02.1978 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண்.102 நாள்,07.08.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும்

இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்திர ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/01, நாள்.18.09.2001-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி, நடப்பு நிதியாண்டில் 2025-26 ஆம் ஆண்டிற்கு, மண்டலம் 8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு தேவைப்படும் கூடுதல் டீசல் கொள்முதல் செய்திட மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய வட்டாரம், இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம்-7, 8, 9 மற்றும் 10 லாரி நிலையங்களின் வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் புகை பரப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்ப அனுமதியும்,

2. மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையானஎரிபொருள் 2025-26 ஆம் ஆண்டிற்கு கூடுதல் 530 கிலோலிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு மொத்த தொகையான ரூ.4,89,52,390/- (ரூபாய் நான்கு கோடியே எண்பத்து ஒன்பது இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து முந்நூற்று தொண்ணூறு மட்டும்) செலவீனத்தில் அல்லது கொள்முதல் செய்யும் போது அமுலில் உள்ள விலைக்கு திருவாளர்கள். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து தேவைகேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

3. மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது மேற்பார்வை பொறியாளர் (மத்தியம்) அவர்களின் ஆணை பெற்று இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு RTGS மூலம் முன்பணமாக காசோலை செலுத்தி டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,

4. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் இந்திய அரசு நிறுவனங்கள் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்து, பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

5. இந்திய அரசு நிறுவனங்கள் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது *RTGS* மூலமாக அளிக்கவும்,

6. இதற்கான செலவீனத்தை *2025-2026* ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மத்திய வாகன பணிமனை *40-41-09–* கணக்கு எண். *230-20- 03-06* எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

7. ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல்செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மூலமாக நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.164/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது”

“26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.506/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

**ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.**

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**
**********

**அ.து.ந.க.எண்.அ3/1171/2025**

**தீர்மான எண்: 1077/2025** **பொருள் எண்.62**

**பெருநகர சென்னை மாநகராட்சி - அரங்கத்துறை - மண்டலம்-14, கோட்டம்-181 ஏ.ஜி.எஸ் காலனி முதல் பிரதான சாலையில் (ECR) புதிய உள்ளரங்க இறகுபந்து திடல் அமைக்கும் பணி - 2025-2026ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.**

மண்டலம்-14, கோட்டம்-181 ஏ.ஜி.எஸ் காலனி முதல் பிரதான சாலையில் (ECR) புதிய உள்ளரங்க இறகுபந்து திடல் அமைக்கும் பணிக்காக 2025-26 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1,99,80,000/-க்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டது.

அதனடிப்படையில், மண்டலம்-14, கோட்டம்-181 ஏ.ஜி.எஸ் காலனி முதல் பிரதான சாலையில் (ECR) புதிய உள்ளரங்க இறகுபந்து திடல் அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு உரிய அலுவலரின் தொழிநுட்ப அனுமதி பெறப்பட்டது.

கீழ்கண்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது

| Sl.No | Dn.no | Estimate No | Name of the work | Estimate Amount |
|---|---|---|---|---|
| 1 | 181 | NP/2025-26/6754 | Proposed Construction of Indoor Badminton Court at AGS Colony, 2nd main road (ECR) in Dn-181, Zone-14 | 1,99,80,000/- |

எனவே,

1. மண்டலம்-14, கோட்டம்-181 ஏ.ஜி.எஸ் காலனி முதல் பிரதான சாலையில் (ECR) புதிய உள்ளரங்க இறகுபந்து திடல் அமைக்கும் பணிக்கு ரூ.1,99,80,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டியும் மற்றும் மின்னணு ஒப்பம் கோருவதற்கும்,
2. மேற்காணும் பணிகளுக்குண்டான செலவீனங்களை பெருநகர சென்னை மாநகராட்சி, மூலதனநிதி, Function-60-62-00, கணக்கு குறியீடு எண்.412-400-100 (Play Grounds) என்ற தலைப்பில் பட்டி தீர்வு செய்வதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, மாண்புமிகு மேயர் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."**

******

**<u>தி.க.மே.ந.க.எண்.அ7 / 4076 / 2025</u>**

**தீர்மான எண்: 1078/2025** **பொருள் எண்.63**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு - மண்டலம் -2, பகுதி – 05, வார்டு – 22ல் 50 மெ.டன் திறனுடைய புதிய பேலிங் மையத்தை அமைக்க அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு நாளைக்கு சராசரியாக *6150* மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகிறது. இதில் ஒரு நாளைக்கு சுமார் *3200* மெட்ரிக் டன் ஈரக்கழிவுகளும், *2450* மெட்ரிக் டன் உலர் கழிவுகளும் மற்றும் 500 மெட்ரிக் டன் செயலாக்கம் செய்ய இயலாத கழிவுகளும் *(Inert)* அடங்கும். மேற்கண்ட, திடக்கழிவுகள் செயலாக்கம் மற்றும் மறுசுழற்சிக்கு பின்னர் மீதம் உள்ள திடக்கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை விதி 2016-ஐ பின்பற்றும் வகையில், அனைத்து மண்டலங்களிலும் ஒரு நாளைக்கு *735* மெட்ரிக் டன் வடிவமைப்பு திறன் கொண்ட ஈரக்கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும் கூடங்கள் *(MCC)*, இயற்கை எரிவாயு *(Bio -gas)* ஆலைகள், எரியூட்டும் கலன்கள் *(Incinerators)*, பொருட்கள் மீட்பு மையங்கள் *(MRF)* மற்றும் பொருட்கள் வளமீட்பு வசதி *(RRC)*, *3* இடங்களில் தலா *10* மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பேலிங் மையங்கள் போன்ற பல்வேறு பரவலாக்கப்பட்ட செயலாக்க வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. சோழிங்கநல்லூர், கோயம்பேடு மற்றும் மாதவரம் ஆகிய 3 இடங்களில் தலா 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 5 உயிரி-எரிவாயு *(Bio-CNG)* ஆலைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் மாதவரத்தில் *50* மெட்ரிக் டன் திறன் கொண்ட இரண்டு எண்ணிக்கையில் காற்று புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் கூடங்கள் *(Windrow)* சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட *3* எண்ணிக்கையிலான பேலிங் மையங்களுக்கு மண்டலம் 1 முதல் *15* வரை சேகரிக்கப்படும் பயன்படுத்த இயலாத நெகிழி கழிவுகள் கொண்டு சேர்க்கப்படுகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில், நாள் ஒன்றுக்கு உருவாகும் *6150* மெட்ரிக் டன் திடக்கழிவுகளில் சுமார் *1168* மெட்ரிக் டன்*(19%)* கழிவுகள் நெகிழி கழிவுகள் ஆகும். இதில் *160* மெட்ரிக் டன் நெகிழி கழிவுகள் வள மீட்பு / பொருட்கள் மீட்பு மையங்களில் இருந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மை பணியாளர்கள் மூலம் விற்கப்பட்டு அதன் மூலம் வரும் வருவாயை தூய்மை பணியாளர்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது, மேலும் நாள் ஒன்றுக்கு *30* மெட்ரிக் டன் நெகிழி கழிவுகள் பேலிங் மையங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கு சிப்பமாக்கப்பட்டு சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பப்படுகிறது. மீதமுள்ள *978* மெட்ரிக் டன் நெகிழி கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களுக்கு அனுப்படுகிறது,

பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் நெகிழி கழிவுகளை கொட்டுவதை தவிர்க்கும் பொருட்டு, *2025 – 2026*ஆம் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு எண் *49*ல், மண்டலத்துக்கு ஒரு பேலிங் மையங்கள் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது, இதன் தொடர்ச்சியாக நடந்த ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அனைத்து மண்டலங்களிலும் பேலிங் மையங்கள் அமைவதில் உள்ள சிக்கல் மற்றும் பிரச்சனைகளை விளக்கினார். மேலும் தீ விபத்துகள் மற்றும் பொது மக்களின் புகார்கள் எழ வாய்ப்பு இருப்பதால், வடக்கு மற்றும் தெற்கு வட்டாரத்தில் ஒரு மெகா பேலிங் மையத்தை அமைக்க பரிந்துரைத்தார். அதன்படி வடக்கு வட்டாரத்தின்

கீழ் உள்ள மண்டலம் – 2, பகுதி -05, வார்டு – 22ல், சின்ன சேக்காடு பகுதி வேலு தெருவில் எண்-72ல் சுமார் $3025m^2$ (32549 sq.ft) பரப்பளவு கொண்ட இடத்தை பேலிங் மையம் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக திருவாளர்கள் வெர்னிகுலர் பில்டிங் சொலுஷன்ஸ் (OPC) பிரைவேட் லிமிட்டெட் அவர்கள் திட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டு பேலிங் மையம் அமைப்பதற்காக திட்ட அறிக்கை பெறப்பட்டது.

மேற்கண்ட திட்ட அறிக்கையின் அடிப்படையில், மண்டலம் 1 முதல் 8 வரை சேகரிக்கப்படும் உலர் கழிவுகளான நெகிழி கழிவுகள் குப்பைக் கிடங்கிற்குச் செல்வதை குறைக்கும் வகையில், மண்டலம் – 2, பகுதி -05, வார்டு – 22ல், சின்ன சேக்காடு பகுதியில் 50 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பேலிங் மையம் அமைக்க திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் பேலிங் மையத்திற்கு தேவையான கீழ்கண்ட வசதிகள் அமைக்கப்பட உள்ளன

1. பேலிங் மையத்தில் நெகிழி கழிவுகளை சேமித்து வைப்பதற்கும், சிப்பம் கட்டப்பட்ட நெகிழி கழிவுகளை சேமித்து வைப்பதற்கும் தேவையான சிமெண்ட் கான்கிரிட் தளம்.
2. செயலாக்கத்திற்கு தேவையான இயந்திரங்களை அமைப்பதற்கு G.I.ஷீட் மேற்கூரையுடன் கூடிய கட்டிடம்.

எனவே, மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை 2025-26 அறிவிப்பு எண் 49ன் ஒரு பகுதியாக, மண்டலம்–2, பகுதி-05, வார்டு–22ல், சின்ன சேக்காடு பகுதி வேலு தெருவில் எண்-72ல் சுமார் $3025m^2$ (32549 sq.ft) பரப்பளவு கொண்ட இடத்தில் பேலிங் மையத்தில் தலா 10 மெட்ரிக் டன் திறன் கொண்ட 5 பேலிங் இயந்திரங்களை அமைப்பதற்கு தேவைப்படும் கான்கிரீட் தளம், G.I.ஷீட் மேற்கூரையுடன் கூடிய கட்டிடம் அமைப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5,50,00,000/- (ரூபாய். ஐந்து கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்)க்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.162/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 498/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**திக.மே.ந.க.எண்.அ7/5592/2025**

**தீர்மான எண்: 1079/2025** **பொருள் எண்.64**

**பெருநகர சென்னை மாநகராட்சி - திடக்கழிவு மேலாண்மை துறை - மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு - மண்டலம் -14, பகுதி – 42, வார்டு – 188ல் தாம்பரம் - வேளச்சேரி பிரதான சாலையில் பழைய குப்பை கொட்டும் வளாகம் பள்ளிக்கரணையில் 20 மெ.டன் திறனுடைய புதிய மெகா பிளாஸ்டிக் பேலிங் மையம் (மேற்கு பக்கம்) அமைப்பதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒரு நாளைக்கு சராசரியாக *6150* மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகிறது. இதில் ஒரு நாளைக்கு சுமார் *3200* மெட்ரிக் டன் ஈரக்கழிவுகளும், *2450* மெட்ரிக் டன் உலர் கழிவுகளும் மற்றும் 500 மெட்ரிக் டன் செயலாக்கம் செய்ய இயலாத கழிவுகளும் *(Inert)* அடங்கும். மேற்கண்ட, திடக்கழிவுகள் செயலாக்கம் மற்றும் மறுசுழற்சிக்கு பின்னர் மீதம் உ'ள்ள திடக்கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் கொட்டப்பட்டு வருகிறது.

திடக்கழிவு மேலாண்மை விதி 2016-ஐ பின்பற்றும் வகையில், அனைத்து மண்டலங்களிலும் ஒரு நாளைக்கு *735* மெட்ரிக் டன் வடிவமைப்பு திறன் கொண்ட ஈரக்கழிவுகளிலிருந்து உரம் தயாரிக்கும் கூடங்கள் *(MCC)*, இயற்கை எரிவாயு *(Bio -gas)* ஆலைகள், எரியூட்டும் கலன்கள் *(Incinerators)*, பொருட்கள் மீட்பு மையங்கள் *(MRF)* மற்றும் பொருட்கள் வளமீட்பு வசதி *(RRC)*, *3* இடங்களில் தலா *10* மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட பேலிங் மையங்கள் போன்ற பல்வேறு பரவலாக்கப்பட்ட செயலாக்க

வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. சோழிங்கநல்லூர், கோயம்பேடு மற்றும் மாதவரம் ஆகிய 3 இடங்களில் தலா 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 5 உயிரி-எரிவாயு *(Bio-CNG)* ஆலைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் மாதவரத்தில் 50 மெட்ரிக் டன் திறன் கொண்ட இரண்டு எண்ணிக்கையில் காற்று புகும் வகையில் பதனம் செய்யும் உரம் தயாரிக்கும் கூடங்கள் *(Windrow)* சிறந்த முறையில் செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட *3* எண்ணிக்கையிலான பேலிங் மையங்களுக்கு மண்டலம் 1 முதல் *15* வரை சேகரிக்கப்படும் பயன்படுத்த இயலாத நெகிழி கழிவுகள் கொண்டு சேர்க்கப்படுகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியில், நாள் ஒன்றுக்கு உருவாகும் *6150* மெட்ரிக் டன் திடக்கழிவுகளில் சுமார் *1168* மெட்ரிக் டன்*(19%)* கழிவுகள் நெகிழி கழிவுகள் ஆகும். இதில் *160* மெட்ரிக் டன் நெகிழி கழிவுகள் வள மீட்பு / பொருட்கள் மீட்பு மையங்களில் இருந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மை பணியாளர்கள் மூலம் விற்கப்பட்டு அதன் மூலம் வரும் வருவாயை தூய்மை பணியாளர்களுக்கு பிரித்து வழங்கப்படுகிறது, மேலும் நாள் ஒன்றுக்கு *30* மெட்ரிக் டன் நெகிழி கழிவுகள் பேலிங் மையங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கு சிப்பமாக்கப்பட்டு சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்பப்படுகிறது. மீதமுள்ள *978* மெட்ரிக் டன் நெகிழி கழிவுகள் பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களுக்கு அனுப்படுகிறது,

பெருங்குடி மற்றும் கொடுங்கையூரில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களில் நெகிழி கழிவுகளை கொட்டுவதை தவிர்க்கும் பொருட்டு, *2025 – 2026*ஆம் நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு மேயர் அவர்களின் அறிவிப்பு எண் *49*ல், மண்டலத்துக்கு ஒரு பிளாஸ்டிக் பேலிங் மையங்கள் அமைக்க அறிவிப்பு வெளியிடப்பட்டது, இதன் தொடர்ச்சியாக நடந்த ஆணையர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அனைத்து மண்டலங்களிலும் பிளாஸ்டிக் பேலிங் மையங்கள் அமைவதில் உள்ள சிக்கல் மற்றும் பிரச்சனைகளை விளக்கினார். மேலும் தீ விபத்துகள் மற்றும் பொது மக்களின் புகார்கள் எழ வாய்ப்பு இருப்பதால், வடக்கு மற்றும் தெற்கு வட்டாரத்தில் ஒரு மெகா பேலிங் மையத்தை அமைக்க பரிந்துரைத்தார். இதன் தொடர்ச்சியாக திருவாளர்கள் வெர்னிகுலர் பில்டிங் சொலுஷன்ஸ் *(OPC)* பிரைவேட் லிமிட்டெட் அவர்கள் திட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டு மெகா பிளாஸ்டிக் பேலிங் மையம் அமைப்பதற்காக திட்ட அறிக்கை பெறப்பட்டது.

மேற்கண்ட திட்ட அறிக்கையின் அடிப்படையில் தெற்கு வட்டாரத்தின் கீழ் உள்ள மண்டலம்-*14*, பகுதி-*42*, வார்டு-*188*ல் தாம்பரம் – வேளச்சேரி பிரதான சாலை பள்ளிக்கரணையில் உள்ள பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் மேற்கண்ட மெகா பிளாஸ்டிக் பேலிங் மையத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு

மொத்தம் 4670 ச.மீ. பரப்பளவில் மண்டல அலுவலர் -14 அவர்கள் மூலம் வரைபடத்துடன் கூடிய கடிதம் திடக்கழிவு மேலாண்மை துறையால் பெறப்பட்டது.

மேற்கண்ட மண்டல அலுவலர்-14 அவர்களின் கடிதத்தின் அடிப்படையில் மண்டலம் 9 முதல் 15 வரை சேகரிக்கப்படும் உலர் கழிவுகளான நெகிழி கழிவுகள் குப்பைக் கிடங்கிற்குச் செல்வதை குறைக்கும் வகையில், மண்டலம் - 14, பகுதி-42, வார்டு - 188ல், தாம்பரம் - வேளச்சேரி பிரதான சாலை பழைய குப்பை கொட்டும் வளாகம் பள்ளிக்கரணையில் 20 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மெகா பிளாஸ்டிக் பேலிங் மையம் (மேற்கு பக்கம்) 1664 ச.மீ பரப்பளவு இடத்தில் அமைக்க 2025-26 ஆம் ஆண்டு விலைப்படியலின்படி திட்ட மதிப்பீடு ரூ. 6,80,00,000 /-க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. (இதில் பெருந்தொகையான Steel Truss Fabrication என்ற இனம் 2025-26 ஆம் ஆண்டு விலைப்பட்டியலில் விடுபட்ட காரணத்தால் 2024-25 ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படி 1 கிலோவிற்கு ரூ. 205.49 வீதம் 82,249 கிலோவிற்கு தொகை ரூ.1,69,01,347 /- Lumpsum (L.S) ல் சேர்க்கப்பட்டுள்ளது).

இதில் மெகா பிளாஸ்டிக் பேலிங் மையத்தில் (மேற்கு பக்கம்) கீழ்கண்ட வசதிகள் அமைக்கப்பட உள்ளன

1. G.I. Sheet மேற்கூரையுடன் கூடிய கட்டிடம்
2. தீ விபத்து தடுப்பு வசதிகள்
3. சாலை வசதிகள்

எனவே,

1. மண்டலம்–14, பகுதி-42, வார்டு–188ல், தாம்பரம் - வேளச்சேரி பிரதான சாலை பள்ளிக்கரணையில் உள்ள பழைய குப்பை கொட்டும் வளாகத்தில் மொத்தமுள்ள 4670 ச.மீ பரப்பளவில் 1664 ச.மீ பரப்பளவு கொண்ட இடத்தில் 20 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மெகா பேலிங் மையம் (மேற்கு பக்கம்) அமையயிருப்பதால் மெகா பேலிங் மையத்திற்கு தேவைப்படும் வசதிகளான G.I. Sheet மேற்கூரையுடன் கூடிய கட்டிடம், தீ விபத்து தடுப்பு வசதிகள் மற்றும் சாலை வசதிகள் அமைப்பதற்காக 2025-2026 ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ-6,80,00,000 /– (ரூபாய் ஆறு கோடியே எண்பது இலட்சம் மட்டும்) க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்

(இதில் பெருந்தொகையான Steel Truss Fabrication என்ற இனம் 2025–26 ஆம் ஆண்டு விலைப்பட்டியலில் விடுபட்ட காரணத்தால் 2024–25 ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படி 1

கிலோவிற்கு ரூ.205.49 வீதம் 82,249 கிலோவிற்கு தொகை ரூ. 1,69,01,347/– Lumpsum (L.S) ல் சேர்க்கப்பட்டுள்ளது).

2. இப்பணிக்கு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோருவதற்கு அனுமதியும்,
3. இப்பணிக்கான செலவினத்தினை திடக்கழிவு மேலாண்மை துறையின் கணக்கு தலைப்பு எண்.412-40-05-08 (SWM Department Buildings) கீழ் நிதி ஒதுக்கி பணியினை மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.163/2025, நாள்.23.09.2025-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 499/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."**

**********

**<u>க.து.ந.க.எண்.பி1/2640/2025</u>**

**தீர்மான எண்: 1080/2025** **பொருள் எண்.65**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை - மண்டலம்-13, வார்டு-170, கோட்டூர்புரம் சித்ரா நகரில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளியில் New Integrated Acadamic Block கட்டும் பணிக்காக தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்ட விவரம் மன்றத்தின் பதிவிற்கு.</u>**

மண்டலம்-13, வார்டு-170, கோட்டூர்புரம் சித்ரா நகரில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளியில் *New Integrated Acadamic Block* கட்டும் பணியினை மேற்கொள்ள வேண்டி 2025-2026 திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-13, வார்டு-170, கோட்டூர்புரம் சித்ரா நகரில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளியில் New Integrated Acadamic Block கட்டும் பணி. |
| 2 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 13. |
| 3 | **<u>மதிப்பீட்டின் தொகை விவரம்</u>** | |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 4,06,14,108.00 |
| | (ஆ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 73,10,539.44 |
| | (இ) த.நா.க.தொ. ந.வா. 1% | ரூ. 4,06,141.08 |
| | (ஈ) எதிர்பாரா செலவு 2.50% | ரூ. 7,84,211.00 |
| | **மொத்தம்** (Rounded Off) | ரூ. 4,91,15,000.00 |

| | | |
|---|---|---|
| 4 | நிதியின் தன்மை | Primary School<br>(20 - 28 - 00 / 412 - 400 - 401) |
| 5 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. 4,91,15,000.00 |

எனவே,

1. மேற்கண்டுள்ள பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.4,91,15,000/- (ரூபாய் நான்கு கோடியே தொண்ணூற்றொரு இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும்,

2. மேற்கண்டுள்ள பணிக்கு ஏற்படும் செலவீனத்தை கணக்கு குறியீட்டு எண் : Primary School (20 - 28 - 00 / 412 - 400 - 401) நிதியில் ஒதுக்கீடு அளிக்கவும்,
3. இதற்கான ஒப்பத்தை கட்டடத்துறையின் மூலம் கோருவதற்கும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மூலமாக நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் அனுமதி வேண்டியும் மற்றும் மன்றத்தின் பதிவிற்காகவும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“24.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.576 /2025, நாள். 24.09.2025 -ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) அனுமதி வேண்டி மற்றும் மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது".

“ 26.09.2025 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 505/2025, நாள்.26.09.2025ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) அனுமதி அளித்து மன்றத்தின் பதிவிற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.”

**மாண்புமிகு மேயர்**

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

**“இதனை மன்றம் பதிவு செய்கின்றது.”**

**********

இத்துடன் இன்றைய கூட்டம் முடிவடைகிறது. அடுத்த கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் நேரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**(அவையில் நாட்டுப் பண் பாடப்பட்டது)**

கூட்டம் முடிவுற்ற நேரம்: 12 மணி 50 நிமிடம்.